வெளியீடு 4-1-1984] [Issued 4-1-1984

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

செவ்வாய்கிழமை, ஏப்ரல் 26, 1983—தொகுதி LP எண். 3
Tuesday the April 26th 1983 Volume LP No.3

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
Legislative Assembly Department Fort St. George
Madras-600 009.

விலை ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 Paise

2999

T.N.C.H. Debates

Official Report

Vol LP No. 3

26, April 1983

V211,31 N83
N83-51.3;1
136048

V2II,31 N83
N83:51.3;1
136048
சென்னை-600 008.

26-4-1983.

உள்ளடக்கம்.

| | பக்கங்கள். |
|---|---|
| **1. வினாக்கள்—விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 249—277 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் | 277 |
| **2. தகவல் கோரல்—** | |
| (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் .. .. | 277—278 |
| (ஆ) கிருஷ்ணா நதி நீர் ஒப்பந்தம் பற்றிய அறிக்கை வைத்தல்.. .. | 278 |
| (இ) உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெறும் நடவடிக்கைக் குறிப்புகள் .. | 278—279 |
| (ஈ) நுழைவு வரி சட்டமுன்வடிவு ஆய்வு செய்தல் .. .. | 279—280 |
| (உ) கொள்கை பற்றிய முடிவுகளை அறிவித்தல் .. .. | 280—281 |
| **3. உரிமைப் பிரச்சினை—** | |
| மேலவை உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி மீது தீர்ப்பு .. .. | 281—282 |
| **4. ஒத்திவைப்புத் தீர்மானம்—** | |
| வட சென்னைப் பகுதியில் திருட்டு பயம் பெருகியுள்ளது .. .. | 282—288 |
| **5. அறிவிப்புகள்—** | |
| (அ) நிதி ஒதுக்க சட்டமுன்வடிவுகள், 1983 | 288 |
| (ஆ) தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் பல்வேறு விதித் துறைகள் சட்டமுன்வடிவு 1982 (ஆ.இ.) .. .. | 310—311 |
| (இ) மதிப்பீட்டுக் குழு, பொது கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, சட்ட விதிகள் ஆய்வுக் குழு ஆகியவற்றுக்கு உறுப்பினர்கள் தேர்தல் .. | 368—369 |

கையில், மத்திய அரசாங்கத்தின் அனுமதிக்காக காத்து இருக்கிறதென்று சொல்லப்பட்டது. மத்திய அரசு அனுமதி ஏதேனும் கிடைத்துள்ளதா? இல்லையெனில், அதைப் பெறுவதற்கான வகையில் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 35 மெகாவாட் மின்சாரம் உற்பத்தித்திறன் கொண்டதாக அமைக்கப்பட்டு, இந்திய அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டது. இந்திய அரசு சில தொழில்நுட்பக் காரணங்களைக்கூறி அதை ஏற்க இயலாது என்று திருப்பி அனுப்பி விட்டது. ஆகவே, மீண்டும் அந்தத் திட்டத்தை மாற்றி 25 மெகாவாட் உற்பத்தி செய்கின்ற வகையில் மின்சார வாரியம் அந்தத் திட்டத்தைத் தயாரித்துக்கொண்டு இருக்கிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய மாநிலத்தில் இருக்கும் கடுமையான மின்சாரப் பற்றாக்குறை காரணமாக, இப்படிப்பட்ட சிறுசிறு திட்டங்களை அமல்படுத்துவது மிகமிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கும், இந்தத் திட்டத்தை விரைவில் அமல்படுத்துவதற்கும் மத்திய அரசை அணுகி, மத்திய அரசை நிர்ப்பந்தப்படுத்தி, அதற்கான நடவடிக்கைகளை விரைவில் எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே இப்படிப்பட்ட திட்டத்தை இந்திய அரசு பரிசீலித்தது. மின் உற்பத்தி செலவு அதிகமாகும் என்று கருத்து தெரிவித்து, அதைத் திருப்பி அனுப்பியது. இப்போது நாம் போட்டு இருக்கும் திட்டம் மின் உற்பத்திச் செலவு குறைவாக இருக்கும் அளவிற்குப் போட்டிருக்கிறோம். ஆகவே, இந்திய அரசு அனுமதி தரும் என்று எதிர்பார்க்கலாம்.

திரு. டி. மணி: பேரவைத் தலைவரவர்களே, இந்த பரணி ஆறு மின் திட்டம் மைய அரசின் குறுக்கீட்டின் காரணமாக காலம் கடந்து, மீண்டும் நம்முடைய அரசு அதற்கு மாற்றுத் திட்டம் தயாரித்து அனுப்பியிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்தத் திட்டத்தை இந்த நிதியாண்டிலேயே மத்திய அரசுக்கு அனுப்பி இந்த நிதியாண்டிலேயே அதற்கு ஒப்புதல் பெற்று, அங்கே மின் உற்பத்தியைத் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் இப்போது தயாரிக்கப்பட்டு வருகிறது. இதற்காக 17½ கோடி ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் 7½ கோடி யூனிட் மின்சாரம் கிடைக்கும். இந்த ஆண்டே இத்திட்டத்தை அனுப்புவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க மின்வாரியம் முயற்சிக்கும்.



2999

கொவடி கிராமத்தில் கூடுதல் டிரான்ஸ்பார்மர் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 864—திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி கொவடி கிராமத்தில் கூடுதலாக ஒரு டிரான்ஸ்பார்மர் அமைக்க அரசிடம் செயல் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே இருக்கும் டிரான்ஸ்பார்மர் மிகவும் பழையதாகவும் மோசமானதாகவும் இருப்பதால், அடிக்கடி ரிப்பேராகிக்கொண்டு இருப்பதால், அதையும் ரிப்பேர் செய்து புதிதாக அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தற்போதுள்ள 100 கே. வி. ஏ. மின்மாற்றி போதுமானது. ஆகையால் கூடுதல் மின்மாற்றி அமைக்கவேண்டிய நிலை இல்லை.

பாரதியார் பற்றி திரைப்படம் தயாரக்கும் திட்டம்.

*வினா எண் 865—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி—அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பாரதியார் பற்றி திரைப்படம் தயாரிக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவினையொட்டி மகாகவி பாரதியாரின் வாழ்க்கைவரலாற்றினை முழுநீளத்திரைப்படமாகத் தயாரிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, நமது தமிழ்க் கவிஞர் பாரதியார் தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் உலகப் புகழ் பெற்றிருக்கிற காரணத்தால் ஆங்கிலத்தில்கூட பாரதியார் திரைப்படம் தயாரிக்கப்படுமா? அது மட்டுமல்ல. அட்டன்பரோ தயாரித்த காந்தி படத்தில் காந்தியாக நடித்த கிங்ஸ்லி என்பவரை பாரதியாராக நடிக்கவைக்கஅரசு ஏற்பாடு செய்யுமா?

[1983 ஏப்ரல் 26

இந்தப் படத் தயாரிப்பை தமிழக முதலமைச்சர் மற்றும் செய்தி அறநிலையத்துறை அமைச்சர் ஆகியோரின் மேற்பார்வையில் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவரவர்களே, தமிழிலேதான் தயாரிக்கப்படுவதாக ஒரு கருத்துரு பரிசீலனையில் உள்ளது. தமிழிலே தயாரிக்கப்பட்ட பிறகுதான் மற்ற மொழிகளில் தயாரிக்க இயலுமா என்று பரிசீலிக்க வேண்டும். காந்தி படத்தை தயாரித்தவரைக் கொண்டு தயாரிக்கவும் காந்தி படத்திலே நடித்தவரைக் கொண்டு பாரதியாராக நடிக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றால் அந்த அளவுக்கு கோடிக் கணக்கான ரூபாய் முதலீடு செய்ய நம்மிடம் நிதி வசதி இல்லை. மேலும் பாரதியாரைப் பொறுத்தவரையில் அவருடைய திரைப் படத்தைத் தயாரிக்க தமிழ்நாட்டிலே திறமை மிக்கவர்கள் இருக்கிறார்கள். குறிப்பாக இந்தப் படம் உருவாக்கப்படுகிற நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே மேற்பார்வையிடுகிற பொறுப்பை ஏற்றுக்கொள்வதாக சட்டமன்ற மேலவையிலே அறிவித்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். மேலும் காந்தி படத்தில் காந்தியாக நடித்தவர் பாரதியாராக நடிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார்கள். எந்த வேடம் யாருக்குப் பொருத்தமாக அமையும் என்பதைக் கண்டுபிடித்து நடிக்க வைக்கவேண்டும். காந்தியாக நடித்தவரே பாரதியாராக நடிக்க பாரதி வேடம் போட்டால் அவர் காந்தியாகத்தான் தோற்றமளிப்பார். ஆகவே, அந்தக் கருத்து எல்லாம் ஏற்றுக்கொள்கிற கருத்து அல்ல.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவரவர்களே, பாரதியாருடைய சீடன் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் ''மகாகவி'' என்ற பெயரில் ஒரு படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டு, அதற்கான திரைக்கதை, வசனம் பாடல்களை எல்லாம் எழுதி வைத்திருந்ததாக பாரதிதாசன் பற்றி ஆராய்ச்சி செய்த டாக்டர் இளங்கோ, பி.எச்டி. அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதைப் பின்பற்றி பாரதியார் படம் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவரவர்களே, பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தன்னுடைய இறுதி காலத்தில் ''மகாகவி'' பாரதியாருடைய வாழ்க்கை வரலாற்றை திரைப்படமாக எடுப்பதற்கு முயற்சி செய்தார் என்றும் அதற்கு திரைக்கதை, வசனம், பாடல்களை எழுதி வைத்திருந்தார் என்றும் அரசுக்கு இதுவரையில் ஒரு தகவல் வரவில்லை. அந்த திரைக்கதை, வசனம் போன்ற அந்தத் தொகுப்புகள் யாரிடத்திலே இருக்கிறது என்ற விவரமும் அரசுக்கு இதுவரையில் வரவில்லை. அதுபற்றி விசாரிக்குமாறு கேட்டுக்கொண்டிருக்கிறோம். இப்படி விசாரித்து, ஒருவேளை கிடைக்குமென்று இருந்தாலும் இன்றைய சூழ்நிலையை ஒட்டி அதை எடுக்க இயலுமா என்று உறுதியாகக் கூற இயலாது. அப்படி பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் உருவாக்கிய அந்தத் தொகுப்பு இருக்குமானால், அது கிடைக்குமானால், அதையும் அரசு பரிசீலிக்கும்.



1983 ஏப்ரல் 26]

**திரு. என். எஸ்.வி.சித்தன்:** தலைவரவர்களே, பாரதியாருடைய திரைப்படம் எடுப்பதைப்போல பாரதியாருடைய கவிதைகள், கட்டுரைகளை மலிவு விலையிலே அச்சிட்டு வெளியிட வேண்டுமென்ற முடிவை பாரதியார் நூற்றாண்டு விழாக் குழு எடுத்ததாக அறிகிறேன். அவருடைய கவிதைகள், கட்டுரைகளெல்லாம் இல்லந்தோறும் இருக்கவேண்டியவை. ஆகவே, இதுபற்றி விரைவிலே முடிவு செய்து, பாரதியாருடைய கவிதைகள், கட்டுரைகள் முதலியவற்றை சாதாரண மக்களும் வாங்கிப் படிக்க வசதியாக இருக்கும் வகையில் மலிவு விலையில் அச்சிட்டு வெளியிட அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவரவர்களே, மகாகவி பாரதியாருடைய கவிதைகள், உரைநடைகளை எல்லாம் நூல் வடிவிலே கொண்டுவருவதற்காகவும், பல்வேறு மொழிகளிலே அவற்றை வெளியிடுவதற்காகவும் பாரதியார் நூற்றாண்டு விழாக்குழு பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் பொறுப்பிலே அது ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. தமிழ் பல்கலைக்கழகத்தின் சார்பிலே பாரதியார் கவிதைகள், கட்டுரைகள் தொகுக்கும் பணி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பல்கலைக்கழகம் அந்தப் பணியை விரைவிலே முடிக்க இருக்கிறது.

(முற்பகல் 9—10)

**திரு. எம். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதியாருடைய சீடராக இருந்த பாரதிதாசன் அவர்கள் காதலுக்கு வழிவிட்டு கருவின் கதவை சாத்துவோம்' என்று குடும்பநலத் திட்டத்தைப் பற்றிப்பாடலாக பாடியிருக்கிறார்கள். அவருடைய வரலாற்றையும், பாரதியாருடைய வரலாற்றோடு சேர்த்து இந்தப் படம் தயாரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மகாகவி பாரதியாருடைய வரலாற்றைப் படம் எடுக்கிற நேரத்தில், அவருடைய வாழ்க்கையிலே முக்கியமான இடம் பெற்றிருந்தவர்கள் எல்லாம் இயற்கையாகவே அந்தக் கதைக்குள்ளே இடம் பெறுவார்கள். ஆனால் பாரதிதாசனுடைய வாழ்க்கை என்பது தனியாக ஒரு வரலாற்றுப் படம் எடுக்கிற அளவுக்கு சுவைமிக்க வாழ்க்கையாகும். ஆகவே, அவருடைய வாழ்க்கையை பாரதியாருடைய வாழ்க்கையோடு இணைக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

**திரு என். வரதராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவி பாரதிக்கு திரைப்படம் எடுப்பது என்பது மிக முக்கியமான ஒன்று. காந்தியாருடைய படத்தை நாம் பார்க்கிறபோது அதிலே தென்னகத்திலே இருந்த பல தலைவர்களுடைய படங்களைச் சேர்த்துக் காட்டவில்லை என்ற வருத்தம்

எல்லோருக்கும் இருக்கிறது. ஆகவே, அப்படி இல்லாமல் பாரதியாருடைய படத்தை எடுக்கிறபோது முழு அளவிலே எல்லா கருத்துக்களையும் உள்ளடக்கி, பொது வாழ்க்கையிலே ஈடுபட்டு இருக்கிற அறிஞர்கள், பேரறிஞர்கள் போன்றோரைக் கலந்து பேசி, அடிப்படைக் கருத்துக்களை உருவாக்கிக்கொண்டு அதற்குப் பிறகு அந்தப் படத்தை எடுக்க அரசு முன்வருமா? காலந்தாழ்த்தாமல் விரைவிலே எடுக்கவும் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தலைவர்களுடைய வாழ்க்கை பற்றிய திரைப்படங்களை எடுக்கிறபோது இதுபோன்ற பிரச்னைகளும் எழுவது தவிர்க்க முடியாததாக அமைந்துவிடுகிறது. ஒரு மிகச் சிறந்தத் தலைவர்—நீண்ட காலம் வாழ்ந்த அவருடைய வாழ்க்கையில் பல முக்கியமான தலைவர்கள் இடம் பெற்றிருப்பார்கள். எல்லோரையுமே அதிலே காட்டி படம் எடுப்பது என்பது இயலாத ஒன்று. அப்படி ஒரு வேளை எடுத்தாலும் சுவைமிக்க திரைப்படமாக அது அமையாது. ஒரு டாக்குமெண்டரியைப் போன்ற, பல கருத்துக்களை வெளியிடுகின்ற ஒரு படமாகத்தான் அது அமையும். அப்படி இருந்தாலும்கூட மிக முக்கியமான சில தலைவர்கள் பற்றி, அவருடைய வாழ்க்கையிலே பங்குப் பெற்றவர்கள் என்கிற வகையில். அவர்களுடைய குணசித்திரங்கள் அந்த வரலாற்றில் முக்கிய பங்கு வகிக்கிற காரணத்தால், அவர்கள் இடம் பெறும் வகையில் படங்கள் எடுக்கிற நேரத்தில் அடிப்படையான சில உண்மைகளை விட்டு விடாமல் எடுக்கப்பட வேண்டுமென்பது நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற, ஏற்றுக் கொள்ளவேண்டிய ஒரு அடிப்படைக் கருத்தாகும். அந்த வகையில் பாரதியாருடைய படம் எடுக்கிறப்போது, இவைகள் முக்கியமாகக் கவனிக்கப்படும்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காந்தி படத்தைப் பற்றிப்பேசியிருக்கிறார்கள். அந்தப் படத்தைப் பற்றிய கருத்தைத் தெரிவிப்பது நல்லது என்று கருதுகிறேன். அட்டன்பரோ அவர்கள் தயாரித்து வெளியிட்டு இருக்கிற, காந்தி படம் ஒரு மிகச் சிறந்த பாராட்டுக்குரிய, பாராட்டத்தக்க படம். அதிலே ஒரு சதவீதம் கூட மாறுபட்ட கருத்து யாருக்கும் கிடையாது. ஆனால் இந்த நாட்டுக்கு விடுதலை வாங்கி தந்த மகாத்மா காந்தியடிகளுடைய வரலாற்றுப்படம் ஒன்று எடுத்திருக்கிறேன் என்று அட்டன்பரோ அவர்கள் தெரிவித்து, அதை இந்திய அரசும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் அதில், இந்தியாவுக்கு விடுதலை வாங்கித் தந்த காந்தியடிகளை காட்டுகிற நேரத்தில், இந்தியாவினுடைய மேற்குப் பகுதி காட்டப்படுகிறது; வடக்குப் பகுதி காட்டப்படுகிறது; கிழக்குப் பகுதி காட்டப்படுகிறது; ஆனால் தெற்குப் பகுதி என்ற ஒன்றே இந்தியாவிலே இல்லை என்பதுபோல காந்தி படம் அமைந்திருக்கிறது. இந்தியா என்றால் காந்தி, காந்தி என்றால் இந்தியா என்று உலகத்திற்கு



சொல்கிற படத்தில் மிக முக்கியமாக தெற்குப் பகுதியை, தென் இந்தியாவை — அந்தப் படத்திலே இருந்து நீக்கி விட்டார்களா அல்லது அதிலே வரக்கூடாது என்று ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டார்களா என்று தெரியவில்லை.

அது அட்டன்பரோவிற்கு தெரியவில்லை என்றாலும், அந்தக் கதையை ஏற்றுக்கொண்ட இந்திய சர்க்கார் இதை எப்படி அனுமதித்தார்கள் என்பதுதான் புரியவில்லை. பல தலைவர்கள் இதிலே விடுபட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அதற்குள்ளே நான் நுழையவில்லை. எல்லாத் தலைவர்களையும் காட்டமுடியாது என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் தென்—ஆப்பிரிக்காவில் காந்தியாரைப் பார்க்கிறபோது மேற்கு நாட்டு உடையிலே இருக்கிறார்கள். இந்தியாவுக்கு வருகிறபோது குஜராத்தி உடையிலே பார்க்கிறோம். அதற்குப் பிறகு உலகத்திலே எந்த விடுதலை தலைவனும் இல்லாத அளவுக்கு மிக எளிமையான ஒரு உடையை அணிந்து காட்சியளிக்கிறார். அது தான் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சிறப்புப் பற்ற பகுதி. அந்த உடையை அவர் அணிந்த இடம், தெற்குப் பகுதியிலே—தென்னிந்தியாவிலே மதுரைக்குஅலிகிலே உள்ள ஒரு ஊரிலே-அந்த ஊரிலே நேராக, உள்ள சில நிலைமைகளைப் பார்த்து விட்டுத் தான் அந்த உடையையே அவர் ஏற்றார். அந்த சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சிகூட விடுபட்டு விட்டது. அந்த நிகழ்ச்சி இடம் பெற்றிருந்தால் கூட துரதிருஷ்டவசமான தெற்குப் பகுதி, அந்தப் படத்திலே இடம் பெற்றிருக்கும் ஏனோ இடம் பெறாமல் செய்திருக்கிறார்கள்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு அமர கவி பாரதியாருடைய வாழ்க்கை வரலாற்றை திரைப்படமாக எடுப்பதைக் குறித்து அவருடைய நூற்றாண்டு விழாவிலே திட்டம் இட்டது குறித்து மிக விளக்கமாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே சமயத்தில் காந்தி படத்தைக் குறிப்பிட்டு, சுதந்திரம் கேட்ட நேரத்திலே இருந்த நிலைமையைச் சொன்னார்கள் அப்படிப் பட்ட நிலைமையை துரதிருஷ்டவசமாக, சென்சார் போர்டிலே செய்தார்களா? அல்லது அதிகாரிகள் அப்படி செய்தார்களா? ஏன் இந்த நிலைமை என்று உண்மையிலேயே தெரியாத அவல நிலைமையைத் தான் அது உருவாக்கியிருக்கிறது. நான் அது குறித்து கடிதம் ஒன்றைக்கூட பாரதப் பிரதமர் அவர்களுக்கு எழுதியிருக்கிறேன். அதை ஒரு தனிப்பட்ட கம்பெனி ஒரு மேல் நாட்டினர் எடுத்தாலும் கூட சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காந்தி படத்திலே அம்பேத்காரையும், பூனா ஒப்பந்தம் போன்ற நிலமைகூட கைவிடப்பட்டது வருந்தத்தக்க காட்சி. அதற்கு மக்களும் எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடிய நிலமை இருக்கிறது. நான் இதை ஒரு உதாரணமாகச் சொல்கிறேன். நேதாஜி போன்ற பெரியவர்கள்கூட விடப்பட்டு இருக்கிறார்கள்; அதுவும் ஒரு பாவமான காரியம். எப்படி

இருப்பினும் தமிழகத்தில் இந்த அரசு இவ்வளவு நல்ல ஒரு காரியத்தை செய்கிறபோது மறைந்த பெரியவர் அமர கவி பாரதியார் அவர்கள் சிதம்பரத்திலே சகஜாநந்தருடைய நந்தனார் மடத்திலே தங்கி சகஜாநந்த ஸ்வாமி அவர்களை மாணவராக ஏற்று தமிழும் சமஸ்கிருதமும் செல்லுகின்ற ஒரு பெரும் வாய்ப்பினை செய்தது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நிச்சயமாகத் தெரிந்து இருக்கமுடியும். அந்தமாதிரி நிலைமை எல்லாம் வருகிறபோது மட்டும் அல்ல, அமர கவி பாரதியார் பெண்கள் அடிமை, தீண்டாமை ஒழிப்பு, தொழிலாளர்களை எப்படி எல்லாம் காபந்து செய்யவேண்டும், எதற்காக அவர்கள் உண்டு கொழுத்து வாழக்கூடாது என்ற ஒரு பெரும் தத்துவத்தை எல்லாம் காரல் மார்க்ஸ் சொல்லியதைப் போல் சொன்ன பெரிய முக்கியமான இடங்களை எல்லாம் நமது அரசு கவனத்தில்கொண்டு கண்காணித்து நம்முடைய அமைச்சர் அவர்கள்சொன்னதைப்போல விடுபடாதநிலைமையை உருவாக்குவதற்கு அரசு முயற்சி எடுக்கவேண்டும் என்பதோடு மட்டுமல்ல, வருங்காலத்தில் நாம் எடுத்துக்காட்டாக தென்னாத்திலே நமது அரசுஎடுக்கின்ற படத்திலே இந்தத்தவறு இல்லாத ஒருநிலைமையை உருவாக்குவதற்கு அரசு முன்பரிசீலனை செய்து எடுப்பதற்கு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக கவி பாரதியார் என்பவர் இன்றைக்கு நாம் எல்லாம் அறிந்து இருக்கிற ஒரு குறுகிய வட்டத்திற்குள் அடங்கக்கூடிய ஒரு விடுதலை இயக்கத்திற்கு மாத்திரம் பாடிய கவிஞர் அல்ல. இந்த நூற்றாண்டில் தோன்றிய ஒரு மிகச்சிறந்த புரட்சி வாதி அவர். அவர் தொடாத சமுதாயக் கருத்துக்களே கிடையாது. அவரைப்போல் தமிழுக்காக வாதாடிய கவிஞர்களை இதற்கு முன்னாலேயும் பார்த்தது இல்லை. இதற்கு பின்னாலேயும் பார்த்தது இல்லை. அவர்போல் பெண்கள் விடுதலைக்காக. ஜாதி ஒழிப்பிற்காக, தீண்டாமை ஒழிப்பிற்காக இப்படிப்பட்ட எல்லாவிதமான சமுதாய சீர்திருத்தங்களை புரட்சிக் கருத்துக்களாகச் சொல்வதற்கு முதன் முதலில் இந்த நூற்றாண்டில் தோன்றிய ஒரு மாபெரும் புரட்சிக் கவிஞன் மகாகவி பாரதி. அதனால்தான் அவருடைய வாழ்க்கை வரலாற்றை திரைப் படமாக உருவாக்குகிற பொறுப்பை இந்தத் திரைப்படத்துறையிலேயே இந்தியாவிலேயே ஈடும் இணையும் அற்ற ஒரு மிகச்சிறந்த நடிகராக மாத்திரம் அன்றி மிகச்சிறந்த தயாரிப்பாளராகவும் மிகச்சிறந்த இயக்குநராகவும் பெருமை பெற்றிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தங்களுடைய இவ்வளவு அலுவல்களுக்கிடையேயும் இந்தப்படத்தைத் தயாரிக்கிற பொறுப்பை தாம் மேற்பார்வையிடுவதாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே மகாகவி பாரதியார் அவர்கள் திரைப்படம் உருவாக்கப் பெற்று இந்த நாட்டுக்குத் திரையிடுகின்ற ஒரு நிலைமை வருகிற போது இந்த நாட்டில் என்றைக்கும் அழியாமல் பாதுகாக்கப் படவேண்டிய, தமிழகத்தில் தோன்றிய ஒரு மாபெரும் மனிதனுடைய, புரட்சிக் கவிஞருடைய வரலாற்றை இந்தியத் துணைக் கண்டம் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பாக அமையும்.



ஒண்ணுபுரம் கோயிலில் நடந்த சிலை திருட்டு

*வினா எண் 866—திரு இல. பலராமன்: மாண்புமிகு செய்தி—அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக் விடையளிப்பாரா—:

(அ) வடாற்காடு மாவட்டம் ஒண்ணுபுரம் கோயிலில் சிலை திருட்டு நடந்தது உண்மையா?

(ஆ) இதன் மதிப்பு யாது?

(இ) இச் சிலை மீட்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ), (ஆ) மற்றும் (இ) வடாற்காடு மாவட்டம் ஒண்ணுபுரம் அருள்மிகு இராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் திருக்கோயிலில் 28-6—81 அன்று இரவு அம்மன் சிலை மற்றும் சில பொருட்கள் களவாடப்பட்டன. திருடப்பட்ட இச்சிலை பின்னர் உடைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பு சுமார் ரூ. 7,000 ஆகும்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக எத்தனை நபர் கைது செய்யப்பட்டார்கள்? அங்கு கைது செய்யப்பட்டது மட்டும் அல்ல. அதில் சம்பந்தப்பட்டவர்கள்கூட சிலர் செல்வாக்கு மிகுந்தவர்களாக அவர்கள் விசாரணையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு கூட முயற்சி செய்து ஆனால் அதிகாரி மிக கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னதால் அவரை மாற்றவேண்டும் என்ற நிலைமை உருவாகியிருப்பதாகக் கேள்விப்படுகிறோம். அதில் எவ்வளவு உண்மை இருக்கிறது? இது சம்பந்தமாக அரசு நல்ல வழி கண்டுபிடித்து உதவி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்தச் சிலையைப் பொறுத்தவரையில் 28—6—81 அன்றே இதை களவாடிச் சென்றுவிட்டார்கள். 29—6—81 அன்று காவல் நிலையத்தில் புகார் செய்யப் பட்டிருக்கிறது. இதற்கு பிறகு 7 பேரை குற்றவாளிகள் என்று அவர்கள் கண்டுபிடித்து அதிலே 3 பேரை கைது செய்து இருக்கிறார்கள். 4 பேர் தலைமறைவாக இருக்கிறார்கள். மூவரிலே ஒருவர் இப்போது காலமாகிவிட்டார் என்று தகவல் இருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் தருகிற தகவல் கொஞ்சம் அதிர்ச்சி தருவதாக இருக்கிறது. இதுவரை எங்களுக்கு அப்படிப்பட்ட புகாரும் வரவில்லை, குற்றவாளிகளை மறைக்க வேண்டிய முயற்சியில் அல்லது மறைக்கிற முயற்சியில் யாரும் ஈடுபட்டதாக அரசுக்கு தகவல் இல்லை. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைத் தகவலாக வைத்துக்கொண்டு அப்படி ஏதாவது நடைபெற்று இருக்குமானால் அதற்கு தீவிர நடவடிக்கை எடுக்க முறை முற்படும். இந்த நேரத்தில் நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

இப்படி நீண்டகாலமாக 7 குற்றவாளிகள்—அதிலே ஈடுபட்ட 3 பேர்களைப் பிடித்துவிட்டோம், 4 பேர்களை இன்னும் பிடிக்க முடியவில்லை என்று அங்கே குற்றப் பதிவு செய்யாத நிலைமையிலே வைத்துக்கொண்டிருப்பதைக் கருதி நம்முடைய அறநிலையத் துறை முன்னாலே பாரமங்கலத்திலே நடைபெற்ற சிலைத் திருட்டு, அதன் தொடர்பான கொலை வழக்கிலே சில குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை, நீண்டகாலமாக வழக்குமன்றத்திற்குப் போகாமல் வைத்திருந்தார்கள். அப்போது நான் அந்த காவல்துறை உயர் அதிகாரிகளிடத்தில் இவ்வளவு முக்கியமான கொலை நடந்திருக்கிற ஒரு வழக்கில் யாராவது ஒருவர் இருவர் பிடிபடவில்லையென்றால் பிடிபட்டவர்கள் மீதாவது உடனடியாக வழக்குத் தொடருங்கள் என்ற நல்ல நோக்கத்தில் குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டுமென்ற நோக்கத்திலே சொன்னேன், ஆனால் ஒரு நாடாளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர் நாடாளுமன்றத்திலே மத்திய அமைச்சருக்கு அறநிலையத் துறை அமைச்சர் குற்றவாளிகளை விட்டுவிட வேண்டுமென்ற எண்ணத்தில் உடனடியாக சார்ஜ் ஷீட் போடச் சொல்லியிருக்கிறார் என்று அங்கே புகார் செய்து அங்கே இருக்கிற அமைச்சர் உடனே இங்கே உங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் சொல்கிறாரே இதற்கு என்ன கூறுகிறீர்கள் என்று மாநில அரசைக் கேட்டு நாங்கள் அதற்கு விளக்கம் அளிக்கவேண்டிய நிலைமையிலே இருக்கிறோம். ஆனால் இங்கே மாண்புமிகு உறுப்பினர் இப்போது போடப்பட்டிருக்கிற வழக்கில் குற்றவாளிகள் தப்பித்துக்கொள்கிறார்களா அதற்கு யாராவது உடந்தையாக இருக்கிறார்களா என்று கேட்கிறார்கள், முன்னாலே போனால் கடிக்கிறார்கள், பின்னாலே போனால் உதைக்கிறார்கள். இதற்கு இடையில் மாட்டிக்கொண்டு நாங்கள் ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிறோம்.

திரு. டி. எஸ். எம். பக்கீர் முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கோயில்களில் சிலை திருட்டுகள் அதிகமாக நடக்கின்றன என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். கோயில்களில் இருக்கக்கூடிய சிலைகளை பாதுகாப்புடன் வைத்திருக்கவும், விலைமதிக்கமுடியாத ஐம்பொன் சிலைகளையெல்லாம் நல்ல முறையிலே பாதுகாப்பாக வைப்பதற்கும் அமைச்சர் அவர்கள் சமீபத்திலே உத்தரவிட்டிருக்கிறார்கள் என்று நான் அறிந்தேன். மேலும் இதற்காக தனிப்படையாக வைத்து விலைமதிக்கமுடியாத இந்த சிலைகளைப் பாதுகாக்க வேண்டும். வெளிநாடுகளுக்குச் செல்கின்றன என்பதை நாம் பார்க்கிறோம். சமீபத்திலே டெலிவிஷனிலே வெளிநாட்டினர் இந்த சிலைகளை வாங்குவதற்கு வருகிறார்கள் என்றும் இந்த விலைமதிக்கமுடியாத சிலைகளை வெளிநாட்டிற்குக் கொண்டு செல்கிறார்கள் என்பதால் வெளிநாட்டினர் மீது மிகவும் கண்காணிப்பாக இருக்கவேண்டுமென்றும் செய்தி வந்ததை பத்திரிகையிலே நாம் பார்த்தோம். ஆகவே மேலும் இப்படி விலைமதிக்க முடியாத சிலைகள் உள்ள கோயில்களிலே பாதுகாப்பு அதிகமாக ஏற்படுத்துவதற்கு ஆவன செய்யப்படுமா?



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, இந்த ஆலயத்தைப் பொறுத்தவரையில் இது ஒரு கிராம ஆலயம், இதற்கு என்று அறங்காவலர்கள் கிடையாது, அங்கே பரம்பரை அறங்காவலர் என்று ஒருவர் தன்னைக் கூறிக்கொண்டு அவர் பாதுகாத்துக்கொண்டு வருவதாகத் தெரிகிறது. அதன் வருமானமே 366 ரூபாய்தான் ஆண்டுக்கு. அதனாலே இப்படிப்பட்ட சூழ்நிலை இருந்திருக்கிறது என்று அறநிலையத் துறையினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு இப்போது அதற்கு பாதுகாப்பிற்காக கதவுகள், பூட்டுகள் போடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. சமீப காலத்திலே சிலை திருட்டுகள் அதிகமாக நடைபெறுகின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள், அதிலே கொஞ்சம் திருத்திக்கொள்ள வேண்டும். நீண்டகாலமாக சிலைதிருட்டுகள் நடந்தன. சமீப காலமாகத்தான் இவைகள் எல்லாம் கண்டு பிடிக்கப்பட்டு மக்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப் படுகிறது. அதுதான் இன்றைக்குள்ள புதிய நிலைமை, மாற்றமுள்ள நிலைமை. அதேநேரத்திலே இந்தத் திருட்டுகளை எல்லாம் கண்டுபிடிப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே காவல்துறை மானியத்திற்கு பதில் அளிக்கிற நேரத்திலே இதற்கு என்று விசேஷ காவல்துறை பிரிவையே அமைக்கப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். மிகத் தீவிரமான முயற்சிகளை காவல் துறையும் அறநிலையத் துறையும் இப்போது எடுத்துக்கொண்டிருக்கின்றன. அதன் காரணமாகத்தான் சிலைதிருட்டு போன உடனே தெரிந்து விடுகிறது. முன்னாலே, சிவபுரம் நடராஜர் சிலை திருடுபோன போது பத்து பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு வெள்ளைக்காரன் உங்கள் நாட்டுச் சிலை எங்கள் நாட்டிலே இருக்கிறது என்று சொன்னான், அதற்குப் பிறகு தான் இங்கே சிலை திருடுபோன கதையே நமக்குத் தெரிந்தது.

பெரியார் நூற்றாண்டு விழா வல்லுநர் குழு.

*வினா எண் 867—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு செய்தி—அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தந்தை பெரியார் வரலாற்றுத் தொகுப்பு வெளியீட்டுக் குழு தனது பணியை முடித்துவிட்டதா?

(ஆ) அக்குழு இதுவரை என்னென்ன நூல்களை வெளியிட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) இல்லை.

(ஆ) 'பெரியார் புரட்சி மொழிகள்' என்னும் நூலினை 'பெரியார் நூற்றாண்டு விழா வல்லுநர் குழு' தயாரித்துள்ளது. அதனை அரசு வெளியிட்டுள்ளது.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, தந்தை பெரியார் வரலாற்றுத் தொகுப்பு வெளியீட்டுக் குழுவில் யார் யார் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்? தந்தை பெரியார் அவர்களைப்பற்றித் தமிழில் மட்டுமல்ல, மற்ற மொழிகளிலும் நூல்கள் வெளியிட ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி இந்த நூல்களை வெளியிடுவதற்கு அமைக்கப்பெற்றிருக்கிற குழுவில் நமது மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் தலைவராக இருக்கிறார்கள். முன்னாள் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு துணைத் தலைவர் ஆவார். பல்கலைக் கழக துணைவேந்தர் திரு சிட்டிபாபு அவர்கள் உறுப்பினர். நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஜனார்த்தனன் அவர்கள் உறுப்பினர். மேலவை உறுப்பினர் டாக்டர் இரா. ஜனார்த்தனன் அவர்கள் உறுப்பினர். இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை திரு. நன்னன் அவர்கள் உறுப்பினர். திருவாரூர் கே. தங்கராசு அவர்கள் உறுப்பினர். திரு. எம். இராஜகோபாலன், ஓய்வுபெற்ற மாவட்டப் பதிவாளர், உறுப்பினர். திரு. கணேசன் அவர்கள் உறுப்பினர். திரு. எஸ். நல்லரசு, சிறப்பு அலுவலர், செயலாளராக இருக்கிறார். முதலில் தமிழில் நாம் தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுத் தொகுப்பையும் இந்த நூல்களையெல்லாம் வெளியிட்டதற்குப் பிறகு வேறு மொழிகளில் வெளியிடுவது பற்றி அந்தக் குழு பரிசீலிக்கும்.

திரு. கோவைத்தம்பி : தலைவர் அவர்களே, திராவிட இனத்தின் உணர்வுகளை இந்திய உபகண்டத்திற்கு எடுத்து வைத்து பெருமை சேர்த்துவைத்த தந்தை பெரியார் அவர்களின் வரலாற்றுத் தொகுப்பு நூற்களை வெளியிடுவதோடு அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை திரைப்படம் எடுக்க அரசாங்கம் முன்வருமா என அறியவிரும்புகிறேன். இந்த வரலாற்றுத் தொகுப்பு நூல்களை வெளியிடும்போது கோடிக் கணக்கான ரூபாய் வைத்திருக்கிற தந்தை பெரியார் அறக்கட்டளை ஏதாவது அரசாங்கத்திற்கு உதவி செய்கிறதா? அப்படி அரசாங்கத்திற்கு உதவி செய்யவில்லை என்று சொன்னால் வரலாற்றுத் தொகுப்புகளை வெளியிடும்போது தந்தை பெரியார் அறக்கட்டளை உதவி செய்யுமாறு அரசாங்கம் வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, திரைப்படம் எடுப்பது என்பது அவ்வளவு சாதாரண காரியமல்ல. ஆகவே எல்லாத் தலைவர்களுடைய வாழ்க்கையையும் திரைப்படம் எடுக்கலாமா என்று கேட்டுக்கொண்டிருந்தால் அரசாங்கத்திற்கு அதற்கு சரியான பதில் அளிக்க இயலாது. நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு கேள்வியைக் கேட்டார்கள்.



தந்தை பெரியார் அவர்கள் தேடிய கோடிக்கணக்கான ரூபாய் சொத்துக்களை வைத்திருக்கிற அந்த அறக்கட்டளை இந்த முயற்சிக்கு உதவுமா என்று. அவர்களின் உதவி இல்லையானாலும் பரவாயில்லை. இப்படிப்பட்ட முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிற இந்த அரசுக்கு உபத்திரவம் தராமலாவதிருந்தால் அதுவே மிகப் பெரிது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்கள் வாழ்நாள் முழுவதும் தாடியுடன் இருந்தார்கள், அவர்கள் வெண்தாடி வேந்தர் என்று அழைக்கப் பட்டார்கள். ஆனால் அவர் ஏன் தாடி வளர்த்தார் என்பது இதுவரையில் யாருக்கும் புரியாத திராக இருக்கிறது. அவர் ஏன் தாடி வளர்த்தார் என்பது அவரது வரலாற்று நூலில் ஆராய்ந்து தெரிவிக்கப்படுமா என அறியவிரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சி நூலை மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் ஆராய்ந்து எழுதினால் அது நாட்டுக்குப் பயன் உள்ளதாக அமையும்.

### தொண்டியைச் சுற்றுலா மையம் ஆக்கும் திட்டம்.

*வினா எண் 868—திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொண்டியை சுற்றுலா மையம் ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது ஆக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

### கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் நிவாரணம் கோரி வந்துள்ள மனுக்கள்.

*வினா எண் 869—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் நிவாரணம் கோரியுள்ள மனுக்களை விரைவாக விசாரித்து முடிக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

[1983 ஏப்ரல் 26

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: கடன் நிவாரணம் கோரி வரும் கடனாளிகளுக்குச் சாத்தியப்பட்ட அனைத்து உதவிகளையும் புரியும்படியும், விரைந்து வருமானச் சான்றிதழ் வழங்கவும், படிவங்களைப் பூர்த்தி செய்வதற்கும் பிரமாண வாக்கு மூலங்களில் அலுவலர்கள் கையெழுத்துப் பெறவும் உதவும்படி அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் அறிவுறுத்தப் பட்டுள்ளனர். கடன் நிவாரணச் சட்டத்தை அமுல்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றம் குறித்து ஒவ்வொரு மாதமும் எல்லா மாவட்டங்களிலிருந்தும் விவரங்கள் பெறப்பட்டு தனி ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் ஆய்வு செய்யப்பட்டு குறைகள் மற்றும் மந்த நிலைமைகள் இருந்தால் அவை, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகுந்த அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. அமுல்படுத்துவதில் ஏற்படும் குறைகள், புகார்கள் பற்றிய மனுக்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்கப்பட்டு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, கடன் நிவாரணச் சட்டத்தின்கீழ் தாசில்தாரிடம் விண்ணப்பித்து வழக்கு நடக்கும்போது சிவில் நீதிமன்றங்களில் அது சம்பந்தமாக வழக்கு நடக்கக்கூடாது என்று விதியிருந்தும்கூட சிவில் நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெறுகின்றன. எனவே கடன் நிவாரணம் கோருகிறவர்கள் தாசில்தார் அலுவலகத்திற்கும் நடக்க வேண்டியிருக்கிறது, சிவில் நீதிமன்றங்களிலும் வழக்குகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இந்த நிலையைப் போக்க அரசு ஏதாவது நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறதா?

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கடன் பெற்றவர்கள் கடன் நிவாரண சட்டத்தினுடைய பலனை உணர்ந்து அவர்கள் சிவில் நீதிமன்றங்களுக்குச் செல்லாமல் தாசில்தாரிடம் நேரடியாகச் செல்கிறபோது இந்தப் பலன் அவர்களுக்குக் கிட்டுகிறது. ஆனால் அண்மையில் உயர்நீதி மன்றத்தைப் பொறுத்தவரையில் கடன் நிவாரண ஆக்ட் 10/80 என்று சொல்லப்படுகிற 198' ஆம் ஆண்டு சட்டத்தில் மூன்றாவது பிரிவில் கடனைப் பெறுகிற கடனாளிகள், அவர்கள் வாங்குகிற கடன் the debt may be secured cr unsecured எனத் தெளிவாக கூறப்பட்டிருந்தும் கூட unsecured debt will not include promissory note என்ற முறையிலே உயர்நீதிமன்றம் ஒரு முடிவைச் செய்து, பிராமிசரி நோட் என்று வருகிறபோது அதற்குச சிவில் நீதிமன்றங்களுக்குச் செல்லலாம் என்று ஒரு தீர்ப்பை வழங்கிவிட்ட காரணத்தால் பிராமிசரி நோட் சம்பந்தப்பட்ட கடன்கள் சிவில் நீதிமன்றங்களுக்குச் செல்கின்றன. ஆனாலும் கூட அதையும் மாற்றி அரசு தற்போது மேல்முறையீடு செய் திருக்கிறது.



1983 ஏப்ரல் 26]

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு பாலசுப்பிரமணியன் அவர்கள் கூறியதைப் போல பிராமிசரி நோட்டுகள் பூராவும் தாசில்தார் அலுவலகங்களில் விசாரிக்காமல் சிவில் கோர்ட்டுகளுக்கு அனுப்புகிறார்கள். எங்கே அனுப்பினாலும் அனுப்பட்டும், அதுகுறித்து கவலையில்லை. 4,800 ரூபாய் வருமானத்திற்குக் கீழே உள்ளவர்களுக்குக் கடன் தள்ளுபடி என்று சொல்லப்படுகிறது. இந்த வருமானத்தை நிரூபிக்கவேண்டிய பொறுப்பைக் கடன் வாங்கியவர்களிடம் இல்லாமல் கடன் கொடுத்தவர்களிடம் ஒப்படைக்கக்கூடிய முறையில் திருத்தம் செய்தால், 4800 ரூபாய் வருமானத்திற்கு அவர்கள் ஆதாரங்களோடு நிரூபிக்கக்கூடிய அந்த ஏற்பாட்டை அவர்கள் செய்யமுடியாமல் பல கடன் நிவாரணங்கள் பெற முடியும். இப்போது கடன் நிவாரணம் கேட்கிற மனுதான் தள்ளுபடியாகிறதே தவிர கடன் தள்ளுபடி ஆவதில்லை என்பதை அமைச்சர் அவர்கள் உணர்ந்து இந்தத் திருத்தத்தைச் சீக்கிரம் கொண்டு வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த சட்டங்களில் அந்த பர்டனைப் பொறுத்தவரையில், கடனைப் பெற்றவர்களுக்கு இருக்கவேண்டு மென்று இருந்து, அதிலே நடைமுறைச் சிக்கல்களை உணர்ந்து தான் இந்த மாற்றத்தை புதிய சட்டத்திலே கொண்டு வந்தார்கள். ஆனாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப் போல 4,800 ரூபாய்க்குக் குறைந்த வருமானத்தை உடையவர்கள் அல்லது 10 ஏக்கர் அன்-இரிகேட்டட் லேண்ட் உடையவர்கள் அல்லது 5 ஏக்கர்கள் இரிகேட்டட் லேண்ட் உடையவர்கள் என்ற விதிகளுக்கு உள்ளிட்டு தாங்கள் இருக்கிறோமென்று நிரூபிப்பதில் பல பிரச்னைகள் எழுவதால், தாசில்தார்களுக்கு ஏற்கெனவே அந்தந்த வட்டத்திலே அதிகப்படியான வேலைப் பளு இருப்பதால், விரைந்து இந்த நல்ல பணியை முடிக்க அவர்களுக்குப் போதிய அவகாசமில்லை என்பதால், அண்மையில் இந்தச் சட்டத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிக்க ஒரு மசோதா கொண்டு வந்தபோது, அரசினுடைய கொள்கையைத் தெளிவுபடுத்தியிருக்கிறோம். அந்தக் கொள்கையின் அடிப் படையிலே வழக்கறிஞர்கள் மற்றும் அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களும் உள்ளடங்கிய கண்காணிப்புக் குழு ஒன்று அந்த அதிகாரிக்கு உதவியாக அமைக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டு மல்லாமல் அந்த அதிகாரி கூட முழு நேரமும் இந்தப் பணியைச் செய்ய ஒரு தனிப்பட்ட அதிகாரியை டெபுட் செய்ய வேண்டுமென்ற முடிவை அரசு எடுத்திருக்கிறது. இது ஈடேறுகிறபோது மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிற அந்தக் குறைகள் எல்லாம் கடன் பெற்றவர்களுக்கு அறவே தீர்ந்து விடும் என்று அரசு நம்புகிறது.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, செக்யூர்ட் லோனிற்கு மட்டும் சென்னை உயர்நீதிமன்றம் ஒரு தீர்ப்பை அளித்திருப்பதாகவும், அதில் சட்டத் திருத்தம் கொண்டு வருவதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த அவையில் பேசிய கடன் நிவாரணச் சட்டத்தில் no suit shall be entertained என்று இருப்பதால் சிவில் நீதிமன்றங்களில் வழக்கை விசாரிப்பது தவறில்லை என்று ஜஸ்டிஸ் ரத்னம் அவர்கள் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறார்களா ? ஆம் என்றால் அதையொட்டி அந்தத் தீர்ப்பிலே சொல்லப்பட்டிருப்பதைப் போல no suit shall be instituted என்று திருத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதனையொட்டி சம்பந்தப்பட்ட சட்டங்களைத் திருத்த அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, செக்யூர்ட் லோனிற்குத் தீர்ப்பு உயர்நீதிமன்றம் வழங்கவில்லை. மாறாக promissory note need not be treated as unsecured loan என்ற முறையிலே ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அதற்கு திருத்தமல்ல, மேல்முறையீடு என்று அரசு ஏற்பாட்டைச் செய்திருக்கிறது என்று சொன்னேன்.

**திரு. ப. வெங்கடசுப்பிரமணியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தில் பேமிலிக்கு டெஃபனிஷன் கொடுத்திருப்பது முறையாக இல்லை. அதிலே ஜாயின்ட் பேமிலியை இன்க்லூட் செய்கிற அளவிற்கு மாற்ற அரசு திருத்தம் கொண்டு வர முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கடன்பட்டவர்களுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை சாதகமாக அமையாது என்பதால் அதை அரசு ஏற்காது.

### 1981 மற்றும் 1982 செப்டம்பர் முடிய தமிழ்நாடு சிறைகளில் இறந்த கைதிகள் எண்ணிக்கை.

*வினா எண். 870—**திரு. கு. ரமணி :** மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981-ம் வருடத்தில் தமிழ்நாட்டில் உள்ள சிறைகளில் நடைபெற்றுள்ள கைதிகள் சாவு எத்தனை ?

(ஆ) 1982-ம் வருடம் ஜனவரி முதல் செப்டம்பர் மாதம் முடிய தமிழ்நாடு சிறைகளில் நடைபெற்றுள்ள கைதிகள் சாவு எத்தனை ?

(இ) மேற்கண்ட சாவுகளில் தற்கொலைகள், கலவரங்களில் இறந்தவர்கள் முறையே எத்தனை ?



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) 67

(ஆ) 38

(இ) தற்கொலைகள் .. 10
கலவரங்களில் இறந்தவர்கள் .. இல்லை. கலவரங்கள் நடக்கவில்லை.

### பாலமேட்டில் ஆரம்பச் சுகாதார நிலையம் ஆரம்பிக்கும் திட்டம்.

*வினா எண். 871—**திரு. ஏ. சந்திரசேகரன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதியிலுள்ள பாலமேட்டில் ஆரம்பச் சுகாதார நிலையம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது சோழவந்தான் தொகுதியிலே பாலமேட்டில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கவேண்டுமென்பது அந்தப் பகுதியிலே சொல்லப்படுகிற ஒரு நீண்ட நாள் கோரிக்கை. அருகிலே நிறைய கிராமங்கள் இருக்கிற காரணத்தாலே, மதுரைக்குச் சற்றுத் தொலைவிலே இந்தக் கிராமம் இருக்கிற காரணத்தாலே, அங்கே ஆரம்பச் சுகாதார நிலையம் ஆரம்பிக்க எல்லா காரணங்களும் இருப்பதாலே, அரசு இனியாவது பரிசீலனை செய்து, தொடங்குவதற்கு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு சித்தன் அவர்கள் அந்தத் தொகுதியைச் சரியான வகையிலே பார்த்திருக்க மாட்டார் என்று கருதுகிறேன். ஏனென்றால், 17-2-1983 அன்று ஒரு மருந்தகத்தை நாம் அங்கே துவக்கியிருக்கிறோம். அது மட்டுமல்லாமல், அருகிலே அலங்காநல்லூரிலே ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

[1988 ஏப்ரல் 26

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதியில் பாலமேட்டில் ஒரு மருந்தகம் ஆரம்பித்ததற்காக என்னுடைய நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், அதே தொகுதியிலே நிறைய கிராமங்கள் இருக்கிற காரணத்தாலே அங்கே ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைப்பதற்கு—அரசு உத்தரவின் பேரில் ஏற்கனவே மதுரை மாவட்டத்தில் ரூ. 10,000 பணம் கட்டி 6 ஏக்கர் நிலம் இனாமாக வாங்கிக் கொடுத்துள்ளனர். அது மட்டுமல்ல, மதுரை மாவட்டம் மட்டப்பாறையில், அரசு சுகாதார நிலையம் ஆரம்பித்து நடத்துவதற்கு இனாமாகக் கட்டிடம் வழங்கியிருந்தும், இதுவரையிலே, மதுரை மாவட்டத்திலே நடத்தப்படாமல் இருக்கிறதே, காலதாமதம் ஆக என்ன காரணம்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரியும், மாண்புமிகு உறுப்பினர் மதுரை மாவட்டம் மட்டப்பாறையைப் பற்றிக் கேட்பார்கள் என்று. இது சோழவந்தான் தொகுதி பாலமேட்டுப் பகுதி. அந்த இடத்திலே ஒரு அருமையான மருந்தகத்தைத் துவங்கியிருக்கிறோம். நல்ல அறுவை சிகிச்சை நிபுணர், ஆர்த்தோபீடிக் டாக்டர் நடராஜன் தலைமையிலே ஒரு அருமையான மருந்தகத்தைத் திறந்து வைத்திருக்கிறோம். நன்றாகச் செயல்பட்டு வருகிறது. அதிலே புற நோயாளிகளுடைய எண்ணிக்கையைப் பார்த்த பிறகு, தேவையான சூழ்நிலை இருக்குமானால், ஆரம்பச் சுகாதார நிலையத்தை அங்கே துவக்க முடியுமா என்பதைப் பற்றி சிந்திக்கலாம்.

**அரசுத் துறை செயற்கை அவயவங்கள் நிலையத்தில் பணிபுரியும் உயர் அதிகாரிகள்.**

*வினா எண். 872—திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுத்துறை செயற்கை அவயவங்கள் நிலையத்தில் பணிபுரியும் உயர் அதிகாரிகள் தனியார் பயிற்சிப்பள்ளி நடத்துவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அதை அரசே செயல்படுத்த முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) அரசுத் துறை செயற்கை அவயவங்கள் நிலையத்தில் பணிபுரியும் உயர் அதிகாரிகள் தனியார் பயிற்சிப்பள்ளி எதுவும் நடத்தவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் செயற்கை அவயவங்கள் செய்யப்படுகின்ற பயிற்சிப் பள்ளிகளைத் தனியார்கள் அதிகம் நடத்தவில்லையென்று



1983 ஏப்ரல் 26]

அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு இந்தப் பயிற்சிப் பள்ளியை நம்முடைய அரசாங்கம் நடத்துகிறதா? இல்லையென்றால், இவைகளை, இனிமேலாவது நடத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்தில் ஏற்கனவே இரண்டு பயிற்சிப் பள்ளிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. School of Physiotherapy and School of prosthetic orthotic என்றும் இரண்டு பயிற்சிப் பள்ளிகளை அங்கே நடத்திக்கொண்டு வருகிறோம். அந்தப் பயிற்சிப் பள்ளிகளை அரசாங்கத்தின் சார்பாக நடத்தி வருகிறோம். கே.கே. நகர் மருத்துவமனையிலே Artificial Limb Centre என்ற மருத்துவமனையில் அது செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

திரு. மு. அப்பாதுரை: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செயற்கை அவயவங்கள் தங்களுக்கு வேண்டுமென்று மனு செய்பவர்களுக்கு மிக நீண்ட நெடிய காலம் கிடைக்கவில்லையென்பது அரசுக்குத் தெரியுமா? அதனால், ஆப்பரேஷன் செய்த பிறகு செயற்கை அவயவங்கள் பொருத்தப்பட முடியாத சூழ்நிலையிருக்கிறது என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறதே, ஆகவே அந்தக் குறைபாட்டைத் தவிர்த்து, உடனடியாக இந்த அவயவங்கள் கிடைக்க அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செயற்கை உறுப்புகள் செய்து தரக்கூடிய இந்த நிலையம் இந்தியாவிலேயே முதலாவது இடத்தில் இருக்கிறது. 4 ஆண்டுகளுக்கு முன்பாக, 8 மாதங்களுக்குப் பிறகு தான் அவயவங்கள் artificial limbs கிடைக்கக்கூடிய வாய்ப்பிருந்தது. இப்பொழுது ஒன்றரை மாதத்திலிருந்து இரண்டு மாதங்களுக்குள் என்று குறைத்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு நல்ல செய்தியாகத் தர விரும்புகிறேன்.

(முற்பகல் 9.40)

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக இந்த மருத்துவத்துறையில் மக்களுக்கு மறு வாழ்வு அளிக்க வேண்டுமென்ற அடிப்படையில் பணியாற்றுகின்றவர்களுக்குச் சம்பளத்தைக் கொஞ்சம் அதிகப்படுத்தி தனியாரோடு எந்தவிதமான தொடர்பும் கொள்ளக்கூடாது என்று சட்டம் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செயற்கை அவயவங்களுக்கும் சம்பளத்திற்கும் சம்பந்தமில்லை.

சித்த மருத்துவப் பிரிவுக்குத் தேவையான மருந்துகள்

*வினா எண் 873 திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சித்த மருத்துவப் பிரிவுக்குத் தேவையான மருந்துகள் தற்சமயம் எங்கே வாங்கப்படுகின்றன?

(ஆ) தரமான மருந்துகளைத் தனியார் செய்யும் தனியார் கம்பெனிகளில் வாங்குவதற்கு அரசு முன் வருமா

மாண்புமிகு டாக்டர் எச்.வி.ஹண்டே: (அ) அரசு சித்த மருத்துவப் பிரிவுகளுக்குத் தேவையான மருந்துகளில் பெரும்பான்மையானவை (1) சென்னையில் உள்ள அடையாறு இந்திய மருத்துவர்கள் கூட்டுறவு மருந்தகத்திலிருந்தும், IMCOPS (2) மொத்த மருந்து வாங்கும் நிதி ஒதுக்கீட்டில் 25 விழுக்காடுகள் வரை தஞ்சை ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பில் உள்ள மத்திய மருந்து செய் நிலையத்திலிருந்தும் Panchayat Union central (pharmacy Thanjavur (3) சிறிதளவு அதாவது ஆண்டொன்றுக்கு ரூ.1,000 அல்லது மருந்து வாங்கும் நிதி ஒதுக்கீட்டில் 10 விழுக்காடுகள் இதில் எது குறைவோ அது என்ற வகையில் தேவக்கோட்டையில் உள்ள மரகதம் கம்பெனி என்ற தனியார் நிறுவனத்திலிருந்தும் வாங்கப்படுகின்றன.

(ஆ) 12 தனியார் கம்பெனிகளிடமிருந்து தற்காலிமாக இரண்டு ஆண்டுகளுக்கு மருந்துகள் வாங்க அண்மையில் அரசால் உத்தரவிடப்பட்டுள்ளது.

திரு. எம் .சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சித்த வைத்திய மருந்துகளை வாங்குவதற்கு ஒவ்வொரு ஆண்டும் அரசாங்கம் எவ்வளவு பணத்தை ஒதுக்கிச் செலவு செய்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1978—79-இல் 9.7 இலட்சம் ரூபாய் 1979—80-ல் 9.71 இலட்சம் ரூபாய். 1980—81-ல் 11.70 இலட்சம் ரூபாய். இந்த ஆண்டு முழுமையாக நமக்குக் கணக்கு வரவில்லை. டிசம்பர் 31 ஆம் தேதி வரையில் ரூ.7.55 இலட்சம்.

திரு. ஆர். டி. கோபாலன் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தனியாரிடமிருந்து மருந்து வாங்குவதாகத் தெரிவித்தார்கள். தனியாரிடம் வாங்கும் மருந்துகள் நல்ல தரம் உள்ள மருந்துகள்தானா என்று ஏதாவது சோதனை செய்து வாங்குவதற்கு ஏதேனும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, Sidha Science Develpment Committee என்ற ஒரு குழுவை நாம் நியமித்திருக்கிறோம்; அது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கக்கூடிய ஒரு Statutory Committee. அந்தக் கமிட்டியில் இருக்கக்கூடிய சித்த வல்லுநர்கள் எந்தெந்தத் தனியார் மருந்து கம்பெனிகள் இந்த மருந்துகளைக் கொடுப்பதற்குத் தகுதி பெற்றவர்கள் என்று தீர்மானித்து அவர்களினுடைய பரிந்துரையின் மேல் நாம் இந்த 12 கம்பெனிகளை எடுத்திருக்கிறோம். அதிலும்கூட, அப்பொழுதைக்கப்பொழுது இந்த மருந்தைப் பரிசோதனை செய்து சரியான தரம் உள்ள மருந்துகளாக இருக்கின்றனவா என்று பார்த்து அதற்குப் பிறகு வாங்குவதற்கு அவர்கள் நமக்கு வாய்ப்பு கொடுக்கிறார்கள்; அனுமதி கொடுக்கிறார்கள்.

திரு. மு. ஜான் வின்சென்ட்: பேரவைத் தலைவரவர்களே, பாளையங்கோட்டையில் சித்த மருத்துவமனை சிறப்பாக நடைபெற்று வருகிறது. அங்கே கண்ணாடி அறையில் சில பச்சை மூலிகைகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அங்கே கூடுமான வரையில் அதிகமான பச்சை மூலிகைகளைப் பாதுகாக்கின்ற அளவிற்கு அந்தக் கண்ணாடி அறையை விஸ்தரிப்பு செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டர்க்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த யோசனை நிச்சயமாக ஆராயப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் காலியாக உள்ள தலைமை மருத்துவப் பணியிடங்கள்

*வினா எண் 874 திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரியில் பல துறைகளின் தலைமை மருத்துவர்கள் பணியிடம் காலியாக உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பணியாளர்களை நிரப்ப அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே: (அ) தற்போது செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் மூன்று தலைமை மருத்துவர் பணியிடங்கள் காலியாக உள்ளன.

(ஆ) அவற்றை நிரப்புவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது போன்ற மருத்துவப் பணியாளர்களின் காலியிடங்களை நிரப்புவதற்கு அரசு என்ன நடவடிக்கைகளைப் பொதுவாக எடுத்து வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[1983 ஏப்ரல் 26

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொதுவான ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். பொதுவாக நாம் என்ன செய்கிறோம் என்றால் சர்வீஸ் கமிஷனுக்கு தேர்வாணைக் குழுவிற்கு—பரிந்துரை செய்கிறோம். எத்தனை வேகன்சிகள் இருக்கின்றன என்று சொல்கிறோம். இப்பொழுது இந்த ஆண்டு ஆயிரம் வேகன்சிகள் இருக்கின்றன என்று நாம் சொல்லியிருக்கிறோம். அந்த ஆயிரம் வேகன்சிகளை நிரப்புவதற்காக அவர்கள் நமக்கு ஒரு பட்டியலை அவர்களாகவே தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். அது என்னவாகிறது என்றால், சிலபேர் போய்ச் சேருவதில்லை; உடனடியாக நாம் அவர்களைப் பட்டியலிருந்து நீக்கி விடுகிறோம். அதைச் சென்ற ஆண்டுதான் முதன்முறையாகச் செய்திருக்கிறோம். இந்த ஆண்டு, அதற்குப் பிறகு நாம் என்ன சொல்லியிருக்கிறோம் என்றால், 500 பேர்களை வெயிட்டிங் லிஸ்டிலே கொடுத்து விடுங்கள் என்று சொல்லியிருக்கிறோம். ஏனென்றால் நமக்கு அப்பொழுதைக்கப்பொழுது காலியிடங்கள் ஏற்படுகின்ற நேரத்தில் மீண்டும் தேர்வாணைக் குழுவிற்கு அது சென்று அவர்கள் இன்னொரு பட்டியலைத் தயார் செய்து அனுப்புவது என்றால் கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் ஒன்பது மாதங்கள் ஆகிவிடும். எனவேதான் வெயிட்டிங் லிஸ்டைக் கொடுத்து விடுங்கள் என்று நாம் இந்த ஆண்டு சொல்லியிருக்கிறோம். அந்த வெயிட்டிங் லிஸ்டைக் கொடுத்து விட்டார்களானால் இந்தப் பிரச்னை தீர்க்கப்படும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுபோன்ற மருத்துவப் பணி காலி இடங்களை நிரப்ப அரசு தனக்குள்ள அதிகாரத்தை வைத்துக்கொண்டு உடனடியாக சர்வீஸ் கமிஷனுக்குச் செல்லாமல், நேரடியாக நியமனம் செய்ய வழிவகை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே தற்போது இருக்கக்கூடிய அந்த விதிமுறைகளில், இது இயலாத காரியம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, பல மருத்துவ மனைகளிலே பல துறைகளின் தலைமை மருத்துவர்கள் நியமிக்கப்படாமல் இருக்கின்றனர். ஏற்கனவே இரண்டு மாதங்களுக்கு முன் நான் மதுரைக்குச் சென்றிருந்தேன். மதுரையிலுள்ள கண் மருத்துவப் பிரிவு தலைமை மருத்துவர் 'ரிடையர்' ஆகிவிட்டார். ஓராண்டுக் காலமாக நிரப்பப்படாமல் இருக்கிறது. இப்படி பல துறைகளிலே நியமிக்கப்படாமல் இருக்கிற காரணத்தினாலே நோயாளிகள் அவர்களுக்கு வேண்டிய சிகிச்சையைப் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. காலாகாலத்தில் இந்த இடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



1983 ஏப்ரல் 26]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, துரிதமான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறோம் என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். மதுரையிலே இருக்கக் கூடிய கண் சிகிச்சைப் பிரிவைப் பொறுத்தவரையில், இப்போது மிகச் செம்மையாக செயலாற்றிக்கொண்டு வருகிறது. மொபைல் அப்தால்மிக் டீமைப் பாக்கின்ற நேரத்திலே, மதுரை டீம் தான் முதலிடத்தைப் பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் கே. பி இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தேர்வாணைக் குழுவின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் கூட, அந்த மருத்துவர்கள் கிராமப்புறங்களிலே பணியாற்றுவதற்குத் தயங்கி, அங்கே போய் சேராமல் இருக்கிறார்கள். அதனால் பல இடங்களில் அந்தப் பதவிகள் காலியாக இருக்கின்றன. அந்தத் தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கு போய்ச் சேராமல் இருக்கின்ற மருத்துவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, தேர்வாணைக் குழுப் பட்டியலிலிருந்து அவர்களை விலக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, இந்த ஆண்டு தயவு தாட்சண்யம் இல்லாமல் 130 டாக்டர்களை, அந்தத் தேர்வாணைக் குழுப் பட்டியலிலிருந்து நீக்கி இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## கும்பகோணம் நகரில் யானைக்கால் வியாதி பெருகுவதைத் தடுக்கும் திட்டம்

*வினா எண். 875 திரு. இ. எஸ் எம். பக்கீர் முகமது: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் நகரில் கொசு தொல்லையினால் யானைக்கால் வியாதி பெருகுவதைத் தடுக்க புதிய தடுப்பு முறை ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) இதற்காக நகராட்சிக்குக் கூடுதல் நிதி மானியமாக வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) கும்பகோணம் நகரில் யானைக்கால் நோயைக் கட்டுப்படுத்த தேசியயானைக்கால் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு கட்டுப்பாட்டுப் பிரிவு 1957-ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. நந்நகரில் யானைக்கால் சிகிச்சைப் பிரிவுகள் இரண்டு செயல்பட்டு வருகின்றன. புதிய திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

[1983 ஏப்ரல் 26

(ஆ) கும்பகோணம் நகரில் இயங்கும் யானைக்கால் கட்டுப்பாட்டு பிரிவிற்கும் இரண்டு சிகிச்சைப் பிரிவிற்கும் ஆன செலவினத்தை அரசு மேற்கொள்கிறது. மேலும் நகராட்சியால் மேற்கொள்ளப்படும் கொசு ஒழிப்புத் திட்டத்திற்குத் தேவையான மருந்துகளை அரசு இலவசமாக வழங்குகிறது. எனவே கூடுதலாக நகராட்சிக்கு மானியம் அளிக்கும் திட்டம் ஏதும் இல்லை.

திரு. இ. எஸ் எம். பக்கீர் முகமது: தலைவரவர்களே, மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் இப்படிப்பட்ட ஒரு விளக்கத்தைத் தந்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கொசுக்கள் நிறைந்தது கும்பகோணம் என்று சொல்வார்கள். அது மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும் தெரியும். தண்ணீர் அதிகமாகத் தேங்கக்கூடிய பகுதிகளில் யானைக்கால் நோய் அதிக அளவில் இருக்கிறது. அந்த இடங்களில் தனி அதிகாரிகளை இன்னும் அதிகமாக்கினால், இப்படிப்பட்ட வியாதிகளைக் குணப்படுத்தமுடியும். ஏழை எளிய மக்கள் இருக்கக் கூடிய இடங்களிலே தண்ணீர் அதிகமாகத் தேங்கிக்கொண்டிருக்கிறது. நம்முடைய அரசு மருத்துவமனைகளில் யானைக்கால் நோயை ஒழிக்க அறுவை சிகிச்சையை மேற்கொள்ளலாம். ஏனென்றால், தனியார் இடத்தில் சென்றால், டாக்டர்கள் ஆயிரக்கணக்கான ரூபாய் கேட்கிறார்கள். ஆகவே அரசு மருத்துவமனையிலே கும்பகோணம் போன்ற முக்கியமான நகரங்களிலே, இப்படிப்பட்ட ஒரு தனிப் பிரிவை அரசு ஆரம்பிக்க உத்தேசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச் வி. ஹண்டே தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும். சென்ற 4,5 ஆண்டுகளாக எப்படிச் செயல்பட்டுவருகிறோம் என்பது பற்றி. 1977-ல் புரட்சித் தலைவர் பொறுப்பேற்றுக்கொள்கிற நேரத்தில், மைக்ரோ ஃபைலேரியாரேட் 4.20%, 1982-ல் 2,60% டிசீஸ் ரேட் — 1977-ல் 1.20%; 1982—ல் 0.1%

அதே மாதிரி எண்டமஸி ரேட் 1977—ல் 5.40% 1982-ல் 2.70% இப்படி நாம் என்ன செய்கிறோம் என்றால் —
For the anti mosquito work in Kumbakonam the town is divided into 4 six days, blocks and each day block is sub divided into sub blocks so as to cover the whole municipali areas within a week

(முற்பகல் 9.50)

இந்த வகையிலே சின்னச் சின்னப் பிரிவுகளாக ஏற்படுத்தி, அந்த இடத்திலே இன்டென்சிவ்வாக நாம் தீவிரமாக செயலாற்றிக் கொண்டு வருகிறோம். அந்தக் காரியத்தின் மூலமாக இந்த அளவிற்கு வேகமாக அந்த வியாதியை நாம் கட்டுப்படுத்தி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



1983 ஏப்ரல் 26]

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 அமைப்புகளாகப் பிரித்திருக்கிறார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இதிலே ஒரு பிளாக்கிலே தான் இந்தப் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுகிறது என்று நான் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுக்கு மனு மூலமாகத் தெரிவித்திருக்கிறேன். இன்னும் இருக்கின்ற 5 பிளாக்குகளிலே பாதாள சாக்கடைத் திட்டத்தின் மூலமாக அங்கே தேங்கியிருக்கக் கூடிய தண்ணீரைப் போக்கி விட்டால் நிச்சயமாக அந்தக் கொசுக்களை ஒழிப்பதோடு அந்தப் பகுதியை நல்ல முறையிலே வைத்துக்கொள்ளலாம். ஆகையினாலே பக்கத்தில் அமர்ந்திருக்கிற உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களும், நமது நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் ஒருங்கிணைந்து இந்த திட்டத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களிடம் ஒரு கோரிக்கையை நான் கொடுத்திருக்கிறேன். அவர்கள் இந்த ஆண்டிலே அதைக் கவனிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் —உருவாக்கி, கும்பகோணத்திலே இப்படி நீண்டகாலமாக நமது அரசு எவ்வளவு முயற்சி எடுத்துக்கொண்டாலும்கூட இப்படிப்பட்டவைகளின் மூலமாக ஏழை எளியவர்கள் மிகவும் அவதிப்படுகின்றார்கள். ஆகையினாலே நமது அரசு சீக்கிரத்திலே இந்த திட்டத்தை நல்ல முறையிலே அமைத்துத் தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, National Filarial Control Unit மூலமாக Large size MLO, Batex Abrate etc. மருந்துகளை எல்லாம் நாம் இலவசமாகக் கொடுத்துக்கொண்டு வருகிறோம். எந்த அளவிற்குத் தேவைப்படுகிறதோ அந்த அளவிற்கு நாம் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அதிலே எந்தவிதமான தட்டுப்பாடும் கிடையாது. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களும் நானும் இணைந்து, இந்த திட்டத்தைச் செயலாற்றிக்கொண்டிருக்கிறோம்.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணத்தில் இந்த தேசிய யானைக்கால் நோய் தடுப்பு அலுவலகம் இருக்கிறது. அது சரியான முறையிலே செயல்படவில்லை. அங்கே கேட்டால் இந்தத் தடுப்புகான எண்ணெய்கள், மருந்துகள் மிகவும் குறைந்த அளவிலே வழங்கப்படுகிறது என்ற காரணத்தைச் சொல்கிறார்கள். வாரம் ஒரு முறை மருந்து தெளிப்பதற்கு மாறாக மாதம் ஒருமுறை தான் தற்போது தெளிக்கிறார்கள். அரசு திட்டமிடுகிறபடி இந்த நோயைத் தடுப்பதற்காக கூடுதலாக அங்கே மருந்துகள் தெளிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அதேசமயத்தில் ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கும் இந்நோய் இருக்கிறதா என்று பார்த்து அவர்களுக்கு, தடுப்புச் சிகிச்சை அளிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் நகரத்திலே உள்ளவர்களுக்கு நாம் இப்படிப்பட்ட பீதியை உண்டாக்கத் தேவையில்லை. நான் ஏற்கனவே சொன்னதைப் போல 1.2% ஆக இருந்த டிஸீஸ் ரேட்

இன்றைக்கு. 1% ஆக குறைக்கப்பட்டிருக்கிறது. அங்கே இருக்கக் கூடிய பிரச்னை மருந்துகளினுடைய தட்டுப்பாடு அல்ல. சில மருந்து களுக்கு அந்தக் கொசுக்கள் ரெசிஸ்டென்ஸ் டெவலப் செய்து கொள் கிறது. அந்த மருந்தைத் தெளித்தாலும்கூட அந்தக் கொசுக்களுக்கு எந்தவிதமான பயன் இல்லாமல் கொசுக்களை ஒழிக்க முடியாமல் இருக்கிற காரணத்தால் நான்-ரெசிஸ்டன்ஸ் ட்ரெயின்ஸ் என்று பார்க்கவேண்டியிருக்கிறது. அதிலே தான் இந்த நேசனல் மைலேரியா புரோகிராம் செய்பவர்கள் இடத்திலே சொல்லியிருக் கிறோம். அதற்கு ஒரு ஆராய்ச்சிசெய்து வேறு எந்த மருந்து களையாவது காம்பைன் செய்து 2, 3 மருந்துகளை சேர்த்துப் போட்டால் இந்தக் கொசுக்களை ஒழிக்க முடியுமா என்று அவர் களும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், நாம் பெரிய அளவிலே அதைக் கட்டுப்படுத்தி வருகிறோம்.

திரு. த. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கும்பகோணம் யானைக் கால் தடுப்பு நோய்க்காக எடுத்துவருகிற நடவடிக்கைகளை நான் பாராட்டுகிறேன். தமிழகத்திலே கும்பகோணத்திலேதான் யானைக்கால் நோய் அதிகமாக இருக்கிற பகுதி என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். எனவே தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் யானைக்கால் நோய் அறுவைச் சிகிச்சைப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? அப்படி அங்கே அறுவைச் சிகிச்சை பிரிவு ஏற்படுத்தி நவீன கருவிகளை வழங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே இந்த நோய்க்கான அறுவைச் சிகிச்சையைப் பொறுத்தவரையில் 2 இடங்களில்தான் செய்து கொண்டு வருகிறார்கள். ஒரு இடம் பம்பாய் நகரம். இன்னொரு இடம் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி. அங்கே மிகச் சீரிய முறை யிலே அது நடத்துகொண்டு வருகிறது.

### தமிழ்நாட்டில் 'சிகாம்' நிறுவனம் ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 876—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தொழில் துறையில் மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ளது போல் ஒரு நிறுவனத்தை (Sicom) தமிழ்நாட்டில் நிறுவும் எண்ணம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) & (ஆ) மகாராஷ் டிராவில் உள்ள State Industrial Corporation of Maharashtra 'சிகாம்' நிறுவனம் அம்மாநிலத்தின் ஏஜென்சியாக கூட்டுத்துறை/ பொதுத்துறையில் தொழிற்சாலைகளை உருவாக்குவதிலும் மற்றும் நிதி உதவி அளிக்கும் பணிகளிலும் ஈடுபட்டு வருகிறது. மேற்கண்ட பணிகளை இம்மாநிலத்தில் இரண்டு நிறுவனங்கள் அதாவது தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனமும் (Tidco) மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் செய்து வருகின்றன. இந்த நிலையில் மாற்றம் தேவையில்லை எனக் கருதப்படுகிறது.

### தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் மூலம் இயங்கி வரும் சர்க்கரை ஆலைகள்.

*வினா எண். 877—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் (Sugar Corporation) மூலம் எத்தனை சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன?

(ஆ) எத்தனை ஆலைகள் நிறுவப்பட்டு இருக்கின்றன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:

(அ) இரண்டு — (1) அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, குருங்குளம், தஞ்சாவூர் மாவட்டம் மற்றும்

(2) ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை, எரையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

(ஆ) ஒன்று — தென்னாற்காடு மாவட்டம், உளுந்தூர் பேட்டை வட்டம், பெரியசெவலை கிராமத்தில் உள்ள செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை.

திரு. எம். சின்னசாமி: தலைவர் அவர்களே, இப்போது சுகர் கார்ப்பரேஷன் மூலமாக பொதுத்துறை அல்லது கூட்டுறவுத் துறையில் எத்தனை சர்க்கரை ஆலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன? புதிய சர்க்கரை ஆலைகள் ஏதேனும் தமிழகத்தில் துவங்க, தமிழக அரசு மத்திய அரசுக்கு எழுதி அனுமதி கேட்டு, அங்கே தேங்கிக் கிடக்கும் மனுக்களின் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுத்துறையில் மூன்று ஏற்கனவே சொன்னமாதிரி அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, குருங்குளம், மற்றும் ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை, எரையூர் ஆகிய

இரண்டு ஆலைகள் இயங்கிவருகின்றன. இப்போது புதிதாக ஆரம்பிக்க இருப்பது செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை, பெரிய செவலை கிராமம். கூட்டுறவுத் துறையில் திருத்தணியில் சுமார் 10 கோடி செலவில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மயிலாடுதுறையில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்க உரிமம் கோரி, அது மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

புதிய சர்க்கரை ஆலை அமைக்க 5 மனுக்கள் பெறப்பட்டு, அவை மத்திய அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றன. அதிலே ஒன்று, பொன்னி சுகர்ஸ். அதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது. மீதமுள்ள நான்கும் மத்திய அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. எம். சின்னசாமி: தலைவர் அவர்களே, நான்கு சர்க்கரை ஆலைகள் மத்திய அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். அந்த ஆலைகள் எவையெவை என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில், மயிலாடுதுறை சர்க்கரை ஆலையும், தனியார் துறையில் நான்கு சர்க்கரை ஆலைகளும் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, பொதுத் துறையில் சிபார்சு செய்துள்ள 5 சர்க்கரை ஆலைகளை, சர்க்கரை கழகத்தின் மூலமாகவேஆரம்பிக்க ஏதேனும் பரிசீலனை செய்யப் பட்டதா?அவர்களால் முடியாது என்று சொன்னபிறகு,கூட்டுறவுத் துறையில் பரிசீலிக்கப்பட்டதா? அவர்களாலும் முடியாது என்று சொன்ன பிறகுதான் தனியார் துறையில் ஆரம்பிக்க மைய அரசுக்கு சிபார்சு செய்யப்பட்டதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, 5 மனுக்கள் பொதுத் துறையில் அனுப்பப்பட்டு இருப்பதாக நான் சொல்லவில்லை. கூட்டுறவுத் துறையில் ஒன்று (மயிலாடு துறையில் ஆரம்பிப்பது), மீதம் உள்ள நான்கு மனுக்கள் மைய அரசின் பரிசீலனையில் இருப்பது, தனியார் துறையில் வருவது இங்கேயிருந்து பரிசீலனை செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளன. அரசு கொடுத்து இருக்கும் கொள்கை முடிவின் காரணமாக கூட்டுறவுத் துறையில் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 3 சர்க்கரை ஆலைகள் ஆரம்பிக்க இருக்கிறோம். 1. திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை. 2. தஞ்சை மாவட்டம், மயிலாடு துறை சர்க்கரை ஆலை. 3. இன்னொன்று எங்கே ஆரம்பிக் கலாம் என்று ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.



மற்ற மாநிலங்களில் தனியார் சர்க்கரை ஆலைகள் துவங்க வருகிறபோது அனுமதி வழங்குகிறார்கள். தனியார்களை ஊக்குவித்து மத்திய அரசும் உரிமங்களை வழங்குகிறது. எல்லா மாநிலங்களிலும் இப்படி உரிமங்கள் வழங்கப்பட்டு இருப்பதால் நம்முடைய மாநிலத்திலும் அதற்கேற்ப முடிவு செய்து, தனியார்களை சர்க்கரை ஆலைகளை ஆரம்பிக்க ஊக்குவிக்க அரசு பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது.

திரு. தி. அன்பழகன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு சுகர் கார்ப்பரேஷன் மூலம் நடைபெறும் சர்க்கரை ஆலைகளில் எத்தனை சர்க்கரை ஆலைகள் இலாபத்தில் இயங்குகின்றன, எத்தனை நஷ்டத்தில் இயங்குகின்றன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே பொதுத்துறையிலே அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை 1980–81–ல் 2 கோடியும் ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை 1980–81–ல் $1\frac{1}{4}$ கோடியும், மற்ற சர்க்கரை ஆலைகள் சென்ற ஆண்டைப் பொறுத்தவரையிலும் — எல்லா கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும் இலாபத்திலே இயங்கி இருக்கின்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

(......உடுக்குறியிடாத வினாக்களையும் விடைகளையும் தனி இணைப்பில்......ம் பக்கங்களில் காண்க. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகளின் (ஆ) பிரிவில் இனம்......ஆக வைக்கப் பெற்றுள்ளது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும் ]

(முற்பகல் 10–00)

## 2. தகவல் கோரல்.

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. இ. சட்டநாத கரையாளர்: தலைவரவர்களே, கழிந்த வெள்ளிக்கிழமை தென்காசியில் ஒரு மசூதியின் பேரால் வழங்கப் பட்ட தின்பண்டம் காரணமாக 300க்கு மேற்பட்ட குழந்தைகள், பெண்கள், பெரியவர்கள் பாதிக்கப்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. விஷம் கலந்த

உணவு உட்கொண்டதால் இப்படி நிகழ்ந்தது என்று சந்தேகிக்கப் படுகிறது. அதற்கான மூல காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை. பெரிய அளவில் மக்களைப் பாதித்திருக்கிற காரணத்தால் ஒரு பதட்டமான நிலை தென்காசி நகரில் ஏற்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுபற்றி ஏற்கெனவே நீங்கள் தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள். அதை எடுத்துக்கொள்ளும் வரையில் பொறுத்துக்கொள்ள வேண்டும். இப்போது அதைப் பற்றி எழுப்ப வேண்டாம்.

(ஆ) கிருஷ்ணா நதிநீர் ஒப்பந்தம் பற்றிய அறிக்கை வைத்தல்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, நேற்றைக்கு முன்தினம் நம்முடைய பேரவைத் தலைவரவர்கள் ஒரு தீர்ப்பின் மூலம் கிருஷ்ணா நதி நீர் ஒப்பந்தம் பற்றிய அறிக்கை அவையில் வைக்கப்படும் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவா: இன்றைக்கு அதை வைக்கப் போகிறார்கள்; இன்னும் சிறிது நேரத்தில் வந்துவிடும்.

திரு. என். ஏ. பூங்காவனம்: தலைவரவர்களே, கடந்த 9 மாத காலமாக தமிழ்நாட்டிலுள்ள 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட பீடித் தொழிலாளர்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்:: பீடித் தொழிலாளர்கள் பிரச்சனை பற்றி கன்சிலியேஷனுக்குப் போங்கள, பேச்சுவார்த் தையில் கலந்துகொள்ளுங்கள். சட்டமன்றத்தில் 5 நிமிடத்தில் பேசித் தீர்க்கக்கூடிய பிரச்சனை அல்ல இது.

திரு. கே. ஆர். சுந்தரம்: இதுபற்றி கவன ஈர்ப்பு கொடுத் திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்பு கொடுத்திருந் தால் பரிசீலனை செய்து, முறைப்படி எடுத்துக்கொள்ளப்படும்.

(இ) உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெறும் நடவடிக்கைக் குறிப்புகள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவரவர்களே, கடந்த மூன்று ஆண்டு காலமாக ஸ்டேஷனரி அண்டு பிரிண்டிங் துறையிலிருந்து நம்முடைய சட்டமன்ற நிகழ்ச்சிகள் பற்றிய புத்தகங்களா மற்றும் கெசட் எனக்கு வரவில்லை. நான் இந்த மன்றத்தின் நிகழ்ச்சிகளிலே கலந்துகொள்கிறேன். மாண்புமிகு





முதலமைச்சர் அவர்களும் இப்போது இங்கே இருக்கிற காரணத் தால் சொல்கிறேன். இதுவரையில் சட்டமன்ற நிகழ்ச்சிகளை வெளியிடுகின்ற புத்தகங்கள் எனக்கு வரவில்லை. அதற்கு மாறாக எம். எல். ஏ.க்கு அனுப்பக்கூடிய புத்தகங்கள்தான் வந்து கொண்டிருக்கின்றன. அதற்கு என்ன காரணம் என்று தெரிய வில்லை. நான் இதுபற்றி பல கடிதங்கள் எழுதிவிட்டேன். சட்டப்பேரவை நிகழ்ச்சிகள் அடங்கிய புத்தகங்கள் மற்றும் கெசட் அனைத்தும் எனக்கு வழங்கப்பட வேண்டும். அதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரியான முகவரி மற்றுமுள்ள விவரங்களை நீங்கள் எழுதிக் கொடுங்கள். உங்களுக்குக் கிடைக் காததற்கு என்ன காரணம் என்று விசாரிக்கிறேன். நடவடிக்கைக் குறிப்புகள் கிடைக்க ஏற்பாடு செய்கிறேன்.

(ஈ) நுழைவு வரி சட்ட முன்வடிவு ஆய்வு செய்தல்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, இன்றைய நிகழ்ச்சி நிரலில் நுழைவு வரி மசோதா இடம் பெற்றிருக்கிறது. ஆனால் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதி களுக்கு எதிராக இதிலே சட்டப்பிரிவுகள் இருக்கின்றன. அதுபற்றி ஒரு உரிமை மீறல் பிரச்சனை கொடுத்திருக்கிறேன் அமைச்சர் எஸ். டி. எஸ். அவர்கள்மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நுழைவு வரிச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்ட நிலையிலேயே எல்லா எதிர்க் கட்சித் தலைவர்களும் பேசி, அறிமுகம் செய்யப்பட்டிருக் கிறது. இப்போது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது. ஆய்வுக்கு வரும்போது நீங்கள் பேசலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: பட்ஜெட்டில் சொன்னதற்கு மாறாக—பியாண்டு தி ஸ்கோப் ஆஃப் தி பட்ஜெட்—சட்டம் வருகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல் கிறார்கள். அதுதான் இதில் இருக்கிற பிரச்சனை. நீங்கள் வேண்டுமானால் அறையில் உட்கார்ந்து பரிசீலனை செய்யுங்கள். பட்ஜெட்டில் சொன்னதற்கு மாறாக ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டுவருவது முறைதானா என்பதை ஆராய்ந்து பார்த்து, அதற்குப் பிறகு சரி என்று உங்களுக்குத் தோன்றினால் நாளைய நிகழ்ச்சியில்கூட சேர்த்துக் கொள்ளலாம்.

திரு. அ. ரகுமான்கான்: இன்று காலை 8—0 மணிக்கே நான் உரிமை மீறல் பிரச்சனை கொடுத்திருக்கிறேன். இந்த மசோதாவை இன்ட்ரட்யூஸ் செய்யக்கூடாது என்று கொடுத்திருக் கிறேன். இது கன்டெம்ட் ஆஃப் தி ஹவுஸ் என்பதால் கொடுத் திருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, நுழைவு வரி பற்றிய சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது. இன்றைக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிற சூழ்நிலையில் இருக்கிறது. அறிமுக நிலையிலேயே கருத்துக்கள் சொல்லப்பட்டு, அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டு, அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் போது விவாதங்கள் வரும். வரவு-செலவுத் திட்டத்தின்போது சில உறுதிமொழிகள் கொடுக்கப்பட்டன. சட்ட முன்வடிவு பற்றிய விவாதம் வருகிறபோது அந்த உறுதி மொழிகளுக்கு ஏற்ப அரசுத் தரப்பில் இருந்து திருத்தங்கள் வரும். அந்த திருத்தங்களினால் கொடுக்கப்பட்ட வாக்குறுதி காப்பாற்றப்படும். அந்த வகையில் திருத்தங்கள் கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்;** திருத்தங்கள் கொண்டு வருவதாக இருந்தால், உரிமைப் பிரச்னையை வலியுறுத்தவேண்டிய அவசியம் இல்லை. ஆனால்....

2. கொள்கை பற்றிய முடிவுகளை அறிவித்தல்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய மேலான கவனத்திற்கு ஒன்றை நான் அவசரமாக கொண்டுவர விரும்புகிறேன். சட்டமன்றம் நடந்துக் கொண்டிருக்கும்போது அரசாங்கம் சம்பந்தப்பட்ட முக்கிய கொள்கை விஷயங்களை வெளியிலே சொல்லக் கூடாது என்பது ஒன்று. நமது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அரசாங்க மருத்துவமனைகளில் பணிபுரிகிற டாக்டர்கள் தனியாக பிராக்டீஸ் பண்ணுவதைத் தடை செய்யக் கூடிய சட்டத்தைக் கொண்டு வரப்போவதாகவும், அதையெல்லாம் தடை பண்ணி போராடப் போவதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதை கவர்னர் உரையிலே கூறியிருக்கலாம்; பட்ஜெட்டிலேயும் சொல்லியிருக்கலாம் அல்லது டிமாண்ட் வந்தபோதாவது சொல்லியிருக்கலாம். ஆனால் இந்த மாமன்றம் நடந்துக் கொண்டிருக்கும்போது, அதுவும் முடியும் தருவாயில் இருக்கும்போது, இதுபோன்ற வெளி அறிவிப்பை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ளலாமா என்பது ஒன்று. இன்னொன்று; Another entirely different point. இந்த மாமன்றம் முடியப் போகிறது, மண்டல் கமிஷன் பற்றி தனிநபர் விவாதம் வேண்டும் என்று கேட்டிருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கொண்டு வந்த தனிநபர் விவாதம் எடுத்துக்கொள்ளப்பட்டு, நீண்டநேரம் விவாதிக்கப்பெற்றது. இதை ஏன் எடுத்துக் கொள்ளவில்லை....





மாண்புமிகு பேரவைத் தலைவர்: தற்போது தனி நபர் தீர்மானமே எடுத்துக் கொள்ளப் பெறவில்லை. அதனால் மண்டல் கமிஷன் குறித்த தங்களது விவாதமும் எடுத்துக் கொள்ளப்பெறவில்லை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் கூறிய பிரச்னை சில பத்திரிக்கைகளில் தவறாக வந்திருக்கிறது. தினத்தந்தியிலேதான் சரியாகப் போட்டிருக்கிறார்கள், அவர்கள்தான் என்னை வந்துக் கேட்டார்கள், இப்படி சில மருத்துவமனைகளில் உள்ள அதிகாரிகள் தனியாக பணம் வாங்குவதாக கேள்விப்படுகிறோமே என்ன செய்வது என்று கேட்டார்கள். அதற்கு, நடவடிக்கை எடுப்போம் என்று சொன்னேன். பிறகு, அவர்கள் பிரைவேட் பிராக்டீஸ் செய்வதை தடை செய்யப்போகிறீர்களா என்று கேட்டார்கள், அதற்கு திட்டவட்டமான முடிவு இன்னும் எடுக்கவில்லை. அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது என்று சொன்னேன். அதை தினத்தந்தியில் தெளிவாகப் போட்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் எந்த விதமான கவலையும் படத் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

3. உரிமைப் பிரச்சினை

மேலவை உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி மீது—தீர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வி. பி. பாலசுப்பிரமணியம், திரு. ஜே. சி. டி பிரபாகரன் மற்றும் டாக்டர் கே. சௌரிராஜன் ஆகியோர் 25–3–1983 அன்று மேலவை உறுப்பினர் மாண்புமிகு திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் மீது அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினைக்கான முன்னறிவிப்பு கொடுத்தார்கள். இதுபற்றி பேரவையில் 5–4–1983 அன்று திரு. வி. பி. பாலசுப்பிரமணியம் அவர்களும், டாக்டர் கே. சௌரிராஜன் அவர்களும் எவ்வாறு பேரவையின் உரிமையை திரு. வீராசாமி அவர்கள் மீறி இருக்கிறார்கள், எவ்வாறு இப்பேரவையை அவமதித்து இருக்கிறார்கள் என்பதற்கான காரணங்களைக் காட்டியிருக்கிறார்கள்.

இதன்மீது தீர்ப்பு பின்னர் வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தேன்.

இதுபற்றி மேலும் ஆய்ந்தபோது திரு. வீராசாமி அவர்கள் இவ் அவையில் பேசிய உறுப்பினர் மீது அவ்வாறு அவர் பேசியது தவறு, அதற்காக அவர் வகிக்கும் பதவியிலிருந்து விலக்கப்பட வேண்டும் என்று உயர்நீதி மன்றத்தில் கொடு

துள்ள மனு இப்பேரவையில் ஒரு உறுப்பினர் பேசிய பேச்சின் மீது அவரை அச்சுறுத்தும் வகையில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்பதில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்க இயலாது. அவ்வாறு எடுக்கப்படும் நடவடிக்கை மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்பொழுது கூட பேரவை உரிமைகளை மீறியதாகவும் பேரவையை அவமதிப்பதாகவும் அமையும்.

திரு. ஆற்காடு வீராசாமி எடுத்த நடவடிக்கை மேலவையில் அவரது செய்கையாக இல்லாவிட்டாலும் கூட, அவர் மேலவை உறுப்பினர் என்று இருப்பதால், இரு அவைகளுக்கும் இடையே உள்ள நல் உறவுகளை கருத்தில் கொண்டு இப்பிரச்சினை மீது அவ்வவையே அந்த உறுப்பினர் அந்த அவைக்கு இழைத்த உரிமை மீறல் செயலாக எடுத்துக் கொண்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்படி அந்த அவைக்குச் செய்தி அனுப்பி வைக்கலாம். அல்லது மேலவை இப்பொருள் மேலவைக்கு சம்பந்தப்பட்டதில்லை, பேரவையே மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம் என்ற கருத்தினை பேரவைக்குத் தெரிவிக்கலாம்,

எனவே, அவையின் அனுமதியுடன் இப்பிரச்சினை குறித்த செய்தியை மேலவைத் தலைவருக்கு அனுப்பி மேலவையின கருத்தினைப பெற்று இப்பேரவைக்குத் திரும்ப செய்தி வந்த பின் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கலாம்.

ஆகவே, இப் பிரச்சினை குறித்து நான் மேலவைத் தலைவருக்கு மேற்கூறியவாறு செய்தி அனுப்பி வைக்கிறேன் என்பதைப் பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்

### வட சென்னைப் பகுதியில் திருட்டுப் பயம் பெருகியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் சு. பாலன் சோ. அழகர்சாமி, பொ. உத்திராபதி, இரா. கருப்பையா, பெ. சு. திருவேங்கடம், கெ. சொக்கலிங்கம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர், ''சென்னையை அடுத்த அம்பத்தூர், ஆவடி, கொரட்டூர், சோழவரம் ஆகிய பகுதிகளில் கடந்த ஒரு வார காலமாக தொடர்ந்தாற்போல் இரவு நேரங்களில் வீடு புகுந்து கொள்ளையடிப்பதும், பெண்களின் கழுத்தில் இருந்து நகைகளைப் பறிப்பதும் ஆக ஒரு கும்பல் ஈடுபட்டு வருகிறது. ஆறுமுகம் என்பவர் கொலை செய்யப்பட்டுள்ளார். இதனால் அந்தப் பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர்.



இது எப்படி அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10—10)

திரு. சு. பாலன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கடந்த பல நாட்களாக சென்னையை அடுத்த அம்பத்தூர் பகுதியிலே இரவு நேரங்களிலே கொள்ளைக்காரர்கள் அங்கு வசதிபடைத்தவர்கள் வீடானாலும் சரி ஏழை வாழ்கிற எளியவர்கள் வீடானாலும் சரி இரவு நேரங்களில் புகுந்து அங்கே இருக்கிற தாய்மார்கள் அணிந்து இருக்கிற நகைகளை இரவு நேரங்களிலே தூங்குபவர்கள் மீது கழட்டுவதும் மயக்கப் பொடியைத் தூவி அவர்கள் அணிந்து இருக்கிற நகைகளை கொள்ளை அடித்துச் செல்வதும் தடுப்பவர்களைத் தாக்குவதும் இப்படிப்பட்ட சம்பவங்கள் தொடர்ந்து அந்தப் பகுதியில் நடந்து கொண்டு வருகிறது. அம்பத்தூர் பகுதியை அடுத்த சோழவரம் என்ற பகுதியில் சந்திரா என்பவர் குடும்பம் வசித்து வருகிறது. கடந்த 21ம் தேதி அன்று இரவு அந்தக் குடும்பத்தில் உள்ள 4 குழந்தைகளும், கணவனும், மனைவியும் தூங்கிக் கொண்டு இருந்திருக்கிறார்கள். ஆனால் தண்ணைய தினம் வெயில் காலமாக இருப்பதால் வெளியில் இருக்கிற கதவை திறந்து வைத்துக்கொண்டு தூங்கிக்கொண்டு இருக்கிற போது கொள்ளைக்காரர்கள் அன்று இரவு புகுந்து இருக்கிற சந்திரா கழுத்தில் அணிந்து இருக்கிற நகைகளை கழட்டி இருக்கிறார்கள். அந்த நேரத்தில் அந்த அம்மையார் விழித்துக் கொண்டு திருடன், திருடன் என்று கத்தியிருக்கிறார்கள். ஆனால் அதைக் கேட்டு தூங்கிக்கொண்டு இருந்த கணவன் ஆறுமுகம் என்பவர் அந்தத் திருடர்களை துரத்திக் கொண்டு சென்று இருக்கிறார்கள். அப்படி துரத்திச் சென்ற ஆறுமுகத்தை திருடர் என்று நடுவில் மடக்கி அவரை கொலை செய்து இருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அது மட்டும் அல்ல, ஆவடி காமராஜ் நகரில் வசிக்கும் காய்கறி வியாபாரி வர்கீஸ் என்பவர் வீட்டில் புகுந்து, அந்தக் குடும்பத்தில் உள்ளவர்கள் இரவு நேரத்தில் படுத்துக் கொண்டு இருந்த நேரத்தில் ஒரு வகையான பொடியைத் தூவி அவர்களுக்கு மயக்க மருந்தைக் கொடுத்து அந்தக் குடும்பத்தில் உள்ள அத்தனை நகைகளையும் கொள்ளை அடித்து இருக்கிறார்கள்.

அடுத்து, ஆவடியிலுள்ள க்ளோத்திங் பேக்டரியில் வேலை செய்கிற ஒருவருடைய வீட்டிலும் இதேமாதிரி பொடியைத் தூவி அந்தக் குடும்பத்தில் உள்ள நகைகளையும் மற்றவைகளையும் கொள்ளை அடித்து இருக்கிறார்கள்.

அது மட்டும் அல்ல, சொரட்டூர் வட்டு வசதி காலனியில் வசிக்கிற ராமதாஸ் என்பவர் வீட்டில் அவர்கள் தூங்குகிறபோது ஆண்கள், பெண்கள் மீது மயக்கப் பொடியைத் தூவி ஏறக்குறைய 25 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பொருள்களை கொள்ளை அடித்து இருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, வில்லிவாக்கம் ராஜமங்கலம் என்ற பகுதியில் அடிக்கடி இப்படிப்பட்ட கொள்ளைக்காரர்கள் அங்கே புகுந்து கொள்ளை அடிப்பதும், பெண்கள் கழுத்தில் இருக்கிற நகைகளை எல்லாம் திருடிச் செல்வதும் முறையாக நடந்து வருகிற காரணத்தினால் அந்த ராஜமங்கலத்தில் பொதுமக்கள் இன்றையதினம் அவர்களே ஒரு பாதுகாப்புக் கமிட்டியை அமைத்து இரவு நேரங்களில் ரோந்து வருகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது அந்தப் பகுதியில் உள்ளவர்கள் எப்படி பீதி அடைந்து இருக்கிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்கிறபோது இன்று நமக்கெல்லாம் மன வேதனையாக இருக்கிறது. எனக்குத் தெரிந்தவரையில் ஏறக்குறைய 15, 16 ஆண்டுகளுக்கு முன்னால் சென்னையைச் சுற்றி இப்படி ஒரு பெரிய கும்பல் இரவு நேரங்களில் தூங்குகிற நேரத்தில் இப்படிப்பட்டவகையில் கொள்ளை அடித்து இருக்கிறார்கள். அந்தக் கொள்ளைகள் எப்படி நடந்தன என்றால் பெரிய பெரிய ஜட்ஜ்கள் வீட்டிலும், போலீஸ் அதிகாரிகள் வீட்டிலும் கொள்ளை அடிக்கப்பட்டிருக்கிறது. இப்படி யார் யார் பெரியவர்களாக பணக்காரர்களாக இருக்கிறார்களோ அவர்கள் வீட்டில் எல்லாம் கொள்ளை அடிக்கப்பட்டு நீண்ட காலமாக அவைகள் கண்டுபிடிக்கப் படாமல் போலீசார் அதற்கு தீவிரமான நடவடிக்கை எடுத்து அதன் பிறகு அது கண்டுபிடிக்கப்பட்டு அன்றைய னம் அவர்களுக்கு எல்லாம் சிறைச்சாலை தண்டனை அளிக்கப்பட்டது. அந்த நேரத்தில் நாங்கள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒரு போராட்டத்தில் கலந்து கொள்ற நேரத்தில் மத்திய சிறையில் நாங்கள் எல்லாம் அவர்களை சந்திக்கிற நேரத்திலே அவர்கள் சொன்ன கருத்துக்களை பார்க்கிறபோது அவர்கள் திருடிய அந்த வழிகளைச் சொன்ன போது அது மிக பயங்கரமாக இருந்தது. ஆனால் அதே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இன்றையதினம் அவர்கள் எல்லாம் மிகவும் வயதானவர்களாக இருப்பார்கள். ஆனால் அதே குடும்பத்தைச் சேர்ந்த அவர்களுடைய பிள்ளைகள் இத்தகைய காரியத்தில் ஈடுபட்டு வருவதாகத் தெரிகிறது. போலீஸாருடைய அறிக்கையில் பார்க்கிறபோது இன்றையதினம் தெலுங்கு பேசுகிற குறவர் தான் இப்படிப்பட்ட நிலையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்களே தவிர இதுவரையில் அதைத் தடுத்து நிறுத்துவதற்காக அப்படி ஈடுபடுகிறவர்களை கண்டுபிடிப்பதற்காக போலீஸார் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. ஆகவே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன் இன்றையதினம் அந்தப் பகுதியில் இரவு நேரங்களில் அந்த மக்கள் தூங்காமல் விழித்துக்கொண்டு இருக்கிறார்கள். எந்த நேரத்தில் எந்தக் கொள்ளைக்காரன் வருவானோ .. எந்தக் குடும்பத்தைத் தாக்குவா



னோ, எந்த பெண்டு பிள்ளைகளை சாகடிப்பானோ என்ற அச்சத்தில் இன்றைய தினம் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதைப்பார்க்கிறபோது, இதை நீண்டகாலமாக வளரவிட்டால் இன்னும் சென்னையில் பல பகுதிகளுக்கு இது பரவும் நிலை இருக்கிற காரணத்தால் மாண்புமிகு தலைவர் அவர்களை நான் விரும்பி வேண்டி கேட்டுக்கொள்கிறேன். போலீஸார் இதுகுறித்து தீவிரமாக நடவடிக்கை எடுத்து எவ்வளவுசீக்கிரமாக இந்தக் கும்பலை கண்டுபிடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக கண்டுபிடித்து இப்படிப்பட்ட கொலை, கொள்ளைகளை தடுப்பதற்கு வழிவகைகளை செய்வதற்கு இந்த சபையை ஒத்திவைத்து இதுகுறித்து விவாதிக்கவேண்டும் என்று நான் விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்,

*திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலன் அவர்கள் கூறியதுமாதிரி சென்னை நகரத்திலே சமீபகாலமாக தொடர்ந்து இப்படிப்பட்ட கொள்ளைகளும் அதைத் தடுக்கக் கூடியவர்கள் கொலை செய்யப்படுவதுமான சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. 21 ஆம் தேதி நடந்த சம்பவம் அந்தக் குடும்பத்திலே உள்ள தலைவனைக் கொலைசெய்து விட்டு மனைவியினுடைய நகைகளைப் பறித்துச் சென்றிருப்பதை பற்றியெல்லாம் நாம் பத்திரிகையிலே பார்த்தோம். இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. பயம் இல்லாமல் வாழமுடியும் என்ற ஒரு நிலைக்கு ஒரு சவால் போன்று இந்தச் சம்பவங்கள் நடைபெற்று இருக்கின்றன? இதற்கு என்ன காரணம்? காவல்துறை திறமைக்குறைவாக இருக்கிறதா அல்லது யாரையும் கண்டுபிடிக்கமுடியாமல் இருக்கிறதா என்று தெரியவில்லை. காவல் துறை திறமையற்றது என்றோ அல்லது கண்டுபிடிக்கமுடியாத நிலையில் உள்ளது என்றோ நினைக்கவில்லை. கொள்ளைகளை நடத்தக் கூடிய கும்பல் வழக்கிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கும் போலீஸ் மூலமாக எந்தவிதமான தொந்தரவும் அவர்களுக்கு வராத அளவுக்கும் யாராவது பாதுகாப்பு கொடுக்கிறார்களா, அதற்கு பேக்கிரவுண்ட் வேறு ஏதாவது இருக்கிறதா என்பதையெல்லாம் நாம் ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. சென்னை நகரத்திலே இப்படி தொடர்ந்து மோசமான நிலை இருக்கிறது. ஆள் இல்லாத வீடுகளிலே புகுந்து நகைகளை கொள்ளையடித்துக்கொண்டு போவதும் அல்லது ஆள் இருந்தால் அவர்களைத் தாக்கி கொலை செய்துவிட்டு கொள்ளையடித்துக் கொண்டு போவதுமான சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் பத்திரிகைகளிலே பார்க்கிறோம். காவல் துறையே இதிலே கண்டும் காணாததுபோல நடந்து கொள்கிறதோ என்ற சந்தேகம் எழுந்திருக்கிறது. பயமில்லாம மக்கள் வாழக்கூடிய நிலைமையை ஏற்படுத்த பலவிதமான ஏற்பாடுகள் செய்யவேண்டியது அவசியமாகும். இந்தச் சம்பவங்களுக்குண்டான காரணங்களை காவல் துறை

கண்டுபிடிப்பதிலே அசட்டையாக இருக்கிறது என்று நினைக்கிறேன். ஆனால் இந்த நகரத்திலே யார் யார் என்ன குற்றங்களைச் செய்வார்கள் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். பல குற்றங்களைக் கண்டுபிடித்த காவல்துறை, கண்டுபிடிக்க முடியாத குற்றங்களைக் கூட துப்புத்துலக்கிக் கண்டுபிடித்திருக்கிற காவல்துறை இப்படிப்பட்ட சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன, இதற்கு ஏதாவது பேக்கிரவுண்ட் இருக்கிறதா என்பதைக் கண்டுபிடிக்கமுடியும். நகரத்திலே மக்கள் பயமில்லாமல் நிம்மதியாக இருக்கக்கூடிய முறையிலே பாதுகாப்பு கொடுக்கக்கூடிய ஏற்பாடுகளைப்பற்றி யெல்லாம் தீவிரமாகப் பேசி முடிவு எடுப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக அண்மைக் காலத்திலே சென்னையிலேயும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலேயும் பல இடங்களிலே சில சமூக விரோதிகள் திடீரென்று வீட்டிலே படுத்துத்தூங்குகின்ற மக்களைத் தாக்கி சாமான்களையும் நகைகளையும் கொள்ளையடிக்கக்கூடிய சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அண்மையிலே நடந்த சம்பவம்பற்றி எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் எடுத்துத் தெரிவித்திருப்பதால் நான் அதைப்பேசிநேரத்தை வீணாக்க விரும்பவில்லை. இரண்டு தினங்களுக்கு முன்னாலே வீட்டிலேயிருந்து யூரின்போக வெளியே வந்த பெண்ணைக் கற்பழித்து அங்கே இருந்த பொருட்களை எல்லாம் களவாடக்கூடிய சம்பவம் ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றிருக்கிறபோது போலீஸினுடைய நிலைமை என்ன என்பதைப்பற்றி விரிவாக விவாதிக்கவேண்டும். போலீஸ் இப்படிப்பட்ட சம்பவங்களிலே விசேஷ கவனம் செலுத்தியிருந்தால் இவைகளையெல்லாம் தடுத்திருக்கமுடியும். அப்படி விசேஷ கவனம் அதிகமாக போலீஸ் செலுத்தவில்லையென்பதால்தான் இன்றைக்கு அதிகப்படியான முறையிலே இப்படிப்பட்ட சம்பவங்கள் வளர்ந்து கொண்டே இருக்கின்றன. இந்தச் சம்பவங்கள் நீடிக்கக்கூடிய போக்கும் இருக்கிறது. அண்மையிலே நம்முடைய ஹாஸ்டலிலே ஒரு திருடனைப் பிடித்துக்கொடுத்தபிறகு கூட அவர்கள் இவன் நம் ஆளப்பா என்று சொல்லி அவனை முதுகிலே தட்டிக் கொடுத்து போகச் சொல்லி விட்டார்கள். இப்படிப்பட்ட அபாயகரமான போக்குகள் இருப்பதால் அவைகளைத் தடுப்பதற்கும் அவைகளையெல்லாம் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கக்கூடிய முறையிலே மக்களிடம் உள்ள பீதியைப் போக்குவதற்காக விவாதித்து நடவடிக்கை எடுப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





(முற்பகல் 10-20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அவையை ஒத்திவைக்க வேண்டுமென்கிற ஒரு பிரச்சினையைக் கொண்டு வந்து, ஏன் ஒத்திவைக்க வேண்டுமென்பதற்கு காரணங்களைக் கூறுகிறபோது ஆவடி, அம்பத்தூர் பகுதிகளில் ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையை இங்கே சுட்டிக்காட்டினார்கள். 18-4-83 அன்று அதிகாலை 3.00 மணி சுமாருக்கு அம்பத்தூர் காவல் நிலைய எல்லைக்குள் உள்ள சோழபுரம் பகுதியில் திரு ஆறுமுகம் என்பவர் வீட்டில் முன்புற அறையில் சன்னல் கம்பிகளை அகற்ற அடையாளம் தெரியாத நான்கு குற்றவாளிகள் முயற்சி செய்தனர். திரு. ஆறுமுகம், அவருடைய மனைவி சந்திரா, அவரது குழந்தைகள் வீட்டின் பின் அறையில் கதவுகளை திறந்து வைத்தவாறு தூங்கிக்கொண்டிருந்தனர். குற்றவாளிகள் வீட்டிற்குள் நுழைந்து பூஜை அறையில் வைக்கப்பட்டிருந்த மர பீரோவைத் திறந்து ரூபாய் 700-ஐ களவாடினார்கள். அத்துடன் திருமதி சந்திரா அவர்களது கழுத்திலிருந்த ஐந்து பவுன் தங்கச் சங்கிலியை பறித்துக்கொண்டு, அவர்களால் திறக்கப்பட்ட முன் கதவு வழியாக தப்பித்துச் சென்றனர். திருமதி சந்திரா அவர்கள் எழுப்பிய கூச்சலைக் கேட்டு அவரது கணவர் ஆறுமுகம் குற்றவாளிகளை துரத்திச் சென்று அவர்களில் ஒருவரை வீதியின் ஒரு முனையில் பிடித்தார். ஆனால் குற்றவாளி திரு ஆறுமுகத்தின் வலது தொடையின் முன்பக்கத்தில் கூர்மையான ஆயுதத்தால் தாக்கிவிட்டு தப்பி விட்டார். அங்கே இருந்தவர்கள் முயற்சித்தும் குற்றவாளிகளை பிடிக்கமுடியவில்லை. குற்றவாளிகள் தப்பி ஓடுகின்றபோது அவர்களைப் பிடிக்க எத்தனித்த திரு. வேதாசலம் என்பவரையும் அவரது சகோதரர் திரு கங்காதரன் என்பவரையும் தாக்கி விட்டுச் சென்றார்கள். அவர்களுக்கு காயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. காயமடைந்த திரு. ஆறுமுகம் ஒரு வாடகைக் காரில் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்டார். திருமதி சந்திரா அவர்கள் கொடுத்த புகாரின் மீது 18-4-83 அன்று காலை 3.45 மணிக்கு அம்பத்தூர் காவல் நிலையத்தில் குற்ற எண் 139/83 இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 397-ன் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. உடனடியாக சிகிச்சை மேற்கொள்ளப்பட்டும் திரு. ஆறுமுகம் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 18-4-83 அன்று காலை 9.40 மணிக்கு இறந்துவிட்டார். பிறகு வழக்கு இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 302, 380-ன் கீழ் மாற்றப் பட்டது. திரு. ஆறுமுகம் பாடியிலே உள்ள சுந்தரம் கிளேட்டன் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார். அந்தப் பகுதியிலே வேறு இரண்டு வீடுகளில் சன்னல் கம்பிகளை அகற்றியும், ஒரு வீட்டிலே திருடவும் முயற்சிகள் நடந்துள்ளன. இந்த வழக்கிலே துப்புத் துலக்க துப்பறியும் நாய் ரீட்டா சம்பவம் நடந்த [illegible] செல்லப்பட்டது. [illegible]

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1983 ஏப்ரல் 26

வரையில் எதுவும் கிடைக்கவில்லை. கை ரேகை நிபுணர்கள், அறிவியல் உதவியாளர், காவல்துறை நிழல்படம் எடுப்பவர் ஆகியோர் ஸ்தலத்திற்கு சென்றார்கள். வெளி ரேகை ஒன்று கிடைத்து அது ஒப்பு நோக்கப்பட்டு வருகிறது. செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரின் உத்தரவின் கீழ் ஒரு காவல் ஆய்வாளர், இரண்டு சார்—ஆய்வாளர்கள், ஒரு தலைமைக் காவலர், ஏழு காவலர்கள் இதற்காக தனிப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். தொழிலாக நடத்தும் கூட்டமாக இது இருக்கலாமென்று கருத படுகிறது, குற்றவாளிகளைக் கண்டறிய மூன்று தனிக் குழுக்களும் செயல்பட்டு வருகின்றன. குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதியிலே தேவையான பந்தோபஸ்து ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. குற்றவாளிகளை பிடிக்கும் முயற்சியிலே தீரத்தைக் காட்டிய திரு. ஆறுமுகத்தின் குடும்பத்திற்கு தகுந்த உதவியளிக்கும் யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளது. இப்போது அந்தப் பகுதியில் எந்தவிதமான பதட்டநிலையும் இல்லை. நிலைமை இப்போது அமைதியாக இருக்கிறது. போதுமான அளவிற்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இந்த வழக்குகள் பற்றி புலன் விசாரணை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதனால் இதுகுறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டிய அவசியமில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்க தேவை இல்லை யென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 5. அறிவிப்புகள்

### (அ) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவுகள் 1983

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு:—

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையிலே கீழ்க்கண்ட சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்று பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பியனுப்பப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றிருக்கிறது.

(1) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 32/1983):

(2) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 33/1983).



1983 ஏப்ரல் 26]

### 6. கிருஷ்ணா நதிநீர் ஒப்பந்தம் பற்றிய அறிக்கை அளித்தல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் 106-வது விதியின் கீழ் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் பேரவைக்கு ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா நதியிலிருந்து சென்னை நகருக்கு குடி தண்ணீர் கொண்டு வருவது சம்பந்தமான உடன்படிக்கை பற்றியும், அது பற்றிய பல்வேறு கருத்துக்களைப் பற்றியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை வைப்பதாகச் சொன்னார்கள், மாண்புமிகு முதலமைச்சரின் சார்பாக இந்த அறிக்கையை அவையில் படிக்கிறேன். இதனுடைய படிகள் விரைவிலே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, வழங்கப்பட இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொண்டு, இந்த அறிக்கையை நான் படிக்கிறேன்.

கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி.எம்.சி. தண்ணீரை சென்னைக்கு குடிநீர் வசதிக்காகக் கொண்டுவருவதில் ஆந்திர அரசுக்கும், தமிழக அரசுக்கும் இடையே ஓர் இறுதி ஒப்பந்தம் 18—4—1983 அன்று ஏற்பட்டுள்ளதென்பதை முன்பே இந்த அவையில் அறிவித்தேன். இந்த அவையிலுள்ளவர்களும், சென்னை நகர மக்களும், தமிழக மக்களனைவரும் மகிழ்வடையும் இந்த ஒப்பந்தம் ஒரு வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டதும், வரலாற்றுச் சிறப்புடையதுமாகும். நானும், ஆந்திர முதலமைச்சரும் கையொப்பமிட்ட இந்த ஒப்பந்தம் ஒரு நூறாண்டு கால முயற்சியின் முத்தாய்ப்பாகும். யார் யார் எப்படியெல்லாம் இந்த நல்ல திட்டத்திற்கு முயற்சி செய்தார்கள், உதவினார்கள் என்பதையெல்லாம் மீண்டும் நன்றியோடு நினைவு கூறும் வகையில் அந்த நிகழ்ச்சிகளைச் சுருக்கமாக உங்கள் முன்பு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

2. சென்னை நகருக்குக் குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்ய கிருஷ்ணா நதியிலிருந்து நீர் வழங்கும் திட்டம் பற்றி முதன்முதலாகக் கருத்தை வெளியிட்ட பெருமை கர்னல் எல்லிஸ் என்ற ஆங்கிலேயரைச் சாரும். 1881 ஆம் ஆண்டில் அவரால் இந்தத் திட்டம் முறையாக வகுக்கப்பட்டது. கிருஷ்ணா நதியை பெண்ணாற்றுடன் இணைத்து வழிநெடுகிலும் நீர்ப்பாசன வசதி ஏற்படுத்துவதையும், சென்னை நகருக்கு குடிநீர் வழங்குவதையும் இத்திட்டம் முக்கிய அம்சங்களாகக் கொண்டிருந்தது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால் செங்கல்பட்டு, தன்னாற்காடு மாவட்டங்கள் கூடுதலான பாசனவசதி பெற்றிருக்கும். ஆனால், ஆங்கிலேய அரசாங்கம் அப்போது இதைப்பற்றி நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. பிறகு, 1947-ல் சென்னை மாகாண அரசு ஒரு முழுமையான திட்டத்தைத் தயார் செய்து மத்திய அரசுக்கு

கிருஷ்ணா நதிநீர் ஒப்பந்தம் பற்றிய அறிக்கை.

சமர்ப்பித்தது. இதுதான் கிருஷ்ணா—பெண்ணாறு திட்டம் என்பதாகும். இத்திட்டம் செயல்படுத்தப் பட்டிருந்தால் தற்போதைய ஆந்திர மாநிலத்தில் பிற்பட்ட பகுதிகளாகிய இராயலசீமா, மேற்கு கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர், நெல்லூர் ஆகிய மாவட்டங்களிலும், தமிழ்நாட்டில் செங்கல்பட்டு மாவட்டத்திலும் மொத்தமாக 36 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பயனடைந்திருக்கும். இது தவிர, இத்திட்டத்தின் மூலம் சென்னை நகருக்கும் தேவையான குடிநீர் கிடைத்திருக்கும். ஆனால் அதுவும் நிறைவேறவில்லை.

3. கர்நாடகம், மகாராஷ்டிரம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கிடையே கிருஷ்ணா நதிநீர்ப் பங்கீடு குறித்து பிரச்சினைகள் ஏற்பட்டன. 1951-ல் கிருஷ்ணா நதிநீர்ப் பங்கீடு பற்றி மத்திய திட்டக்குழு ஒரு முடிவை அறிவித்தது. அதில், தமிழ்நாட்டின் பாசனத் தேவைகளும், சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையும் இடம்பெற்றிருந்தன. இருப்பினும் இந்த முடிவை மற்ற மாநிலங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. பின்னர், மத்திய அரசால் 1953—ல் கிருஷ்ணா, கோதாவரி ஆகிய ஆறுகளைப் பயன்படுத்தும் திட்டங்களைப் பரிசீலிப்பதற்காக நியமிக்கப்பட்ட, 'கோஸ்லா கமிட்டி' கொடுத்த அறிக்கையில், சென்னை நகரக் குடிநீர்த்திட்டமும் அடங்கியிருந்தது. 1956-க்குப் பிறகு மத்திய அரசு, கிருஷ்ணா, கோதாவரி நதிகளில் கிடைக்கும் நீரைப் பற்றி ஆராய குல்ஹாத்தி கமிஷனை நியமித்தது. தமிழ்நாடு அரசு, இக்கமிஷன் முன்னால் தனது பாசன மற்றும் குடிநீர்த் தேவைகளைப் பற்றி விளக்கியுள்ளது. இக்கமிஷனின் அறிக்கையில் கிருஷ்ணா ஆற்றில் கட்டப்பட்டுவரும் நாகார்ஜுன சாகர் நீர்த்தேக்கத்திலிருந்து சென்னைக்கு ஒரு கால்வாய் அமைத்து 15 டி.எம்.சி. நீர் சென்னைக்கு குடிநீர்த் தேவைக்காகக் கொடுக்கவேண்டுமென்று பரிந்துரைத்தது.

4. 1963ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 23ஆம் தேதியன்று மத்திய அரசின் பாசன அமைச்சர் திரு. ஹபீஸ் முகம்மது இப்ராஹிம் அவர்கள் மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களும் சென்னை நகரின் குடிநீருக்காக ஆண்டொன்றுக்கு தலா 5 டி.எம்.சி. தண்ணீர் தரச் சம்மதித்துள்ளதாக நாடாளுமன்றத்தில் அறிவித்தார். இந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக 1965ஆம் வருடம் பெண்ணாற்றில் சோமசீலா நீர்த்தேக்கம் கட்டுவது பற்றித் திட்டமிடும்போது சோமசீலா திட்டத்திலிருந்து சென்னைக்கு முதலில் 5 டி.எம்.சி. தண்ணீரைக் கொடுக்கவேண்டும் என்றும், பிறகு கிருஷ்ணா ஆற்றிலிருந்து பெண்ணாற்றுக்கு இணைப்பு ஏற்படும்போது மீதமுள்ள 10 டி.எம்.சி. தண்ணீரைக் கொடுக்க வேண்டும் என்றும் தமிழக அரசு கேட்டுக் கொண்டதை அன்றைய ஆந்திர அரசு ஏற்றுக் கொண்டது. ஆந்திர மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. [illegible] சுப்பாரெட்டி அவர்கள் தமிழக முதலமைச்சர் பெருந்தலைவர் திரு. காமராஜர் அவர்களுக்கு 25—4—1965 நாளிட்ட கடிதம் மூலம் இதனைத் தெரிவித்திருந்தார். அதன்பின் இது



பற்றி அதிகாரிகள் மட்டத்தில் ஓரிரு முறை பேச்சுவார்த்தை நடந்தும் பலனேதுமில்லை. அப்போது ஆந்திராவைத் தவிர்த்து மற்ற மாநிலங்களுடன் சென்னை குடிநீர்த்தேவை பற்றி பேசப் பட்டதாகத் தெரியவில்லை. 15—11—1967 அன்று சென்னை நகருக்கு 15 டி.எம்.சி. தண்ணீர் கொடுப்பதற்கான ஏற்பாடு களைத் துரிதப்படுத்தும்படி மைய அரசின் பாசனத்துறைச் செயலாளருக்கு ஒரு கடிதம் தமிழக அரசிடமிருந்து அனுப்பப் பட்டது.

(முற்பகல் 10—30)

5. கிருஷ்ணா நதி பாயும் மாநிலங்களான மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிடையே அந்த நதியின் நீரைப் பங்கீடு செய்து கொள்வது சம்பந்தமான பிரச்சினை நடுவர் மன்றத்துக்கு விடப்பட்டிருப்பதாக 1968 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் செய்திகள் வந்தன. 10—4—1969 அன்று இந்தப் பிரச்சினை நடுவர் மன்றத்துக்கு விடப்பட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. இந்த நடுவர் மன்றம் கிருஷ்ணா நதிநீரை அது பாயும் மாநிலங்களான மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிடையே எவ்வளவு அளவுக்குப் பிரித்துக்கொள்ளவேண்டும் என்பதை முடிவு செய்வதற்காகவே நியமிக்கப்பட்டதால் கிருஷ்ணா நதி பாயாத மாநிலமான தமிழ்நாடு அந்தப் பிரச்சினையில் சம்பந்தப் படவில்லையென்றும், ஆகவே தமிழ்நாடு அதில் ஒரு வாதியாக (Party) கருதப்படமுடியாது என்றும், எனவே அந்த நடுவர் மன்றத்தின் முன் தமிழ்நாட்டின் சார்பாக தமிழக அரசு தன்னை சேர்த்துக்கொள்ளும்படி கேட்க வேண்டியதில்லை யென்றும் அன்றைய முதல்வர் திரு. கருணாநிதி அவர்களின் தலைமையில் இருந்த அரசு முடிவு செய்தது. சென்னை நகரத்திற்கு 15 டி.எம்.சி. தண்ணீர் தருவது பற்றிய கோரிக்கையை நடுவர் மன்றத்தின் முன் எழுப்ப வேண்டிய அவசியம் இல்லையென்றும், அதற்குப் பதிலாக ஏற்கெனவே (1963-ல்) ஆந்திரா, மகாராஷ்டிரம், கர்நாடகம் ஆகிய மூன்று மாநிலங்களும் 15 டி.எம்.சி. தண்ணீர் சென்னைக்குத் தருவது பற்றி ஒப்புக் கொண்டதை அப்படியே தொடர்ந்து நீடிக்க ஏற்பாடு செய்யும்படியும் [illegible] கேற்ப சம்பந்தப்பட்ட மாநிலங்கள் சென்னைக்கு தண்ணீர் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யும்படியும் மைய அரசுக்கு கடிதம் எழுதுவதே போதும் என்றும் 26—10—1969 [illegible] முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவுகளின்படி [illegible] 1969 அன்று மைய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டது. [illegible] கிருஷ்ணா நதி தமிழ்நாட்டில் பாயாததால் [illegible] சென்னை நகருக்கான குடிநீர்த்தேவையை கிருஷ்ணா நதிநீர் [illegible] பிரச்சினையாக எழுப்புவதற்கு அடிப்படை இல்லை [illegible] எனவே தமிழ்நாடு அந்தப் பிரச்சினையில் [illegible] என்றும் [illegible] ஒரு [illegible] செய்யப்பட்டது.

6. 1951-ல் மத்திய திட்டக்குழு கிருஷ்ணா நதியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டுவருவதை கிருஷ்ணா நதிநீர்ப் பயன்படுத்தும் திட்டங்களில் ஒன்றாகக் குறிப்பிட்டது; 1953 இல் நியமிக்கப்பட்ட 'கோஸ்லா கமிட்டி' சென்னை நகரக் குடிநீர்த் திட்டத்தை பரிந்துரைத்தது; 1956இல் நியமிக்கப்பட்ட குல்ஹாத்தி கமிஷன் கிருஷ்ணா நதியிலிருந்து சென்னைக்கு குடிநீர் கொண்டுவரும் திட்டத்தை வலியுறுத்தி சென்னைக்குக் குடிநீர் கொண்டுவருவதற்கான பல திட்டங்களில், கிருஷ்ணா திட்டம் தான் மிகவும் சிறப்பானது எனக் குறிப்பிட்டது. இப்படியெல்லாம் நடந்திருந்தும் 1969இல் கிருஷ்ணா நதிநீர்ப் பிரச்சினைக்கு நடுவர் மன்றம் நியமிக்கப்பட்டபோது மட்டும் ஏன் இந்தப் பிரச்சினையை அதன்முன் கொண்டுபோக வேண்டிய அவசியம் இல்லை என முடிவு செய்யப்பட்டது எனத் தெரியவில்லை. தவறான ஆலோசனையின்மீது எடுக்கப்பட்ட இந்த முடிவு கிருஷ்ணா நதி நீரைச் சென்னைககுக் கொண்டு வருவதற்கான ஒப்பந்தம் ஏற்படுவதில் உண்டான கால தாமதத்திற்கு ஒரு முக்கியமான காரணம் எனக்கூறலாம்.

7. 1969 இல் இவ்வாறு முடிவு செய்யப்பட்ட பின் 1972 வரை சென்னைக்குக் கிருஷ்ணா நீர் கொண்டு வருவதுபற்றி அன்றைய தமிழக அரசால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

8. அதன்பின், 11—3—1972 அன்றுதான் அப்போதைய முதலமைச்சர் திரு கருணாநிதி அவர்களால் மத்திய அரசின் நீர்ப் பாசனத்துறை அமைச்சருக்கும் (டாக்டர் கே.எல்.ராவ்) மத்திய அரசின் திட்ட அமைச்சருக்கும் திரு. சி. சுப்பிரமணியம்) நிலைமையை விளக்கி ஆந்திர, கர்நாடக, மகராஷ்டிர மாநிலங்கள் ஏற்கெனவே ஒப்புக்கொண்டபடி கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி.எம்.சி. தண்ணீரைச் சென்னைக்குக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யும்படி அன்றைய தமிழக அரசால் கடிதம் எழுதப்பட்டது. இந்தக் கடிதத்தில் சென்னை நகரத்துக்கு அப்போது நாளொன்றுக்கு 37 மில்லியன் காலன் தண்ணீர் கிடைப்பதாகவும் 2001—வது ஆண்டில் 105 மில்லியன் காலன் தண்ணீர் தேவைப்படும் என்றும் வீராணம் திட்டத்தின் மூலம் 40 மில்லியன் காலன் தண்ணீர் கிடைக்குமென்றும் எனவே எதிர்காலத் தேவையை உத்தேசித்து விரைவில் கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி.எம்.சி. தண்ணீரை சென்னைக்குக் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்யும்படியும் கூறப்பட்டிருந்தது. அப்போதைய மைய திட்ட அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களிடம் இருந்து வந்த 16-4-1972 நாளிட்ட கடிதத்தில் சோமசிலா நீர்த்தேக்கத்தில் இருந்து 5 டி.எம்.சி. தண்ணீரைக் கொண்டு வருவது பற்றி ஆந்திர மாநில முதலமைச்சரோடு பேச்சு வார்த்தை நடத்தும் படியும், அதற்கு தன்னாலான உதவியைச் செய்வதாகவும், கிருஷ்ணா நதி நீர்ப் பிரச்சினை ஏற்கெனவே நடுவர் மன்றத்திடம் விடப்பட்டுள்ளதால் கிருஷ்ணா நதியிலிருந்து சென்னைக்கு தண்ணீர் கொண்டுவருவது பற்றி தமிழக அரசை நடுவர் மன்றத்



தோடு நேரடியாகவோ அல்லது ஆந்திர மாநிலத்தின் மூலமாகவோ
அணுகும்படியும் தெரிவித்திருந்தார். அன்றைய மைய நீர்ப்
பாசனத்துறை அமைச்சர் டாக்டர் கே.எல். ராவ் அவர்கள் தனது
4—4—1972 நாளிட்ட கடிதத்தில் கிருஷ்ணா நதிநீர்ப் பிரச்சினை
நடுவர் மன்றத்தின் முன் இருப்பதால், நடுவர் மன்றத் தீர்ப்பு
கிடைத்த பின்னர் சென்னைக்கு குடிநீர் கொண்டுவருவது பற்றி
மைய அரசு சம்பந்தப்பட்ட மாநில அரசுகளோடு தொடர்பு
கொள்வதுதான் முறையாக இருக்குமென்று கருத்து தெரிவித்
தார். திரு. சி. சுப்பிரமணியம் அவர்களின் பதிலிலிருந்து நடுவர்
மன்றத்திடம் தொடக்கத்திலேயே அதாவது 1969—லேயே தமிழ்
நாட்டை ஒரு வாதியாக்கிக்கொண்டு விவாதத்தில் கலந்து
கொண்டிருப்பின் கிருஷ்ணா நதிநீரைச் சென்னைக்குக் கொண்டு
வரும் பிரச்சினை நமக்குச் சாதகமாக முடிவாக்கப்பட்டிருக்கலாம்
என்று எண்ணவும் இடமளிக்கிறது. திரு. கே. எல். ராவ் அவர்
களின் கடிதமும்கூட இந்தக் கருத்தை உறுதிபடுத்துவதாகக்
கொள்ளலாம்.

திரு. என். இட்டப்பா : அறிக்கையாக இதை அவையிலேயே
வைத்துவிடலாமே. இதைப் படிப்பதற்காக இவ்வளவு நேரம்
எடுத்துக்கொள்ளவேண்டுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 9. இந்தக்
கடிதங்கள் கிடைத்தபின் கிருஷ்ணா நதி நீர்ப் பிரச்சினை
சம்பந்தப்பட்ட நடுவர் மன்றத்தில் தமிழ்நாடு ஒரு வாதியாக
ஆஜராக வேண்டிய அவசியம் இல்லையென்று ஏற்கெனவே
எடுத்த முடிவை மறுபரிசீலனை செய்து பாதிக்கப்
பட்ட மாநிலம் என்ற முறையில் தமிழ்நாட்டின் கோரிக்கையை
நடுவர் மன்றத்திடம் விடும்படி மைய அரசுக்கு வேண்டுகோள்
விடுத்து கடிதம் எழுதலாமென்று முடிவு செய்யப்பட்டு
21—8—1973 அன்று கடிதம் எழுதப்பட்டது. இந்த முடிவி
லிருந்து, முன்பு (1969-ல்) தன்னை நடுவர் மன்றத்தின் முன்பு ஒரு
வாதியாக சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளாததும்,
ஒதுங்கியிருந்ததும், ஒரு தவறான கொள்கை முடிவு என்பது தெளி
வாகிறது. மேலே குறிப்பிட்ட தமிழக அரசின் கடிதத்துக்கு
அப்போதைய மைய பாசனத்துறை அமைச்சர் திரு. கே. சி. பந்த்
அவர்கள் எழுதிய 31-1-1974ஆம் நாளிட்ட பதில் கடிதத்தில்
கிருஷ்ணா நதிநீர்ப் பிரச்சினை பற்றி நியமிக்கப்பட்ட நடுவர்
மன்றத்தின் முன் சென்னை நகரக் குடிநீர்ப் பிரச்சினையை
விடுவதற்கு நடைமுறை சாத்தியமில்லை. நடுவர் மன்றம் தனது
பணியினை முடித்து தீர்ப்பளிக்கும் நிலையில் இருப்பதால்
கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரம் மாநில
முதலமைச்சர்களை தங்கள் பங்கிலிருந்து மொத்தம் 15
டி.எம்.சி. தண்ணீரை சென்னைக் குடிநீருக்குத் தரும்படி
தான் கேட்டுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

10. 1973-ல் எடுத்த முடிவை 1969-லேயே எடுத்து செயல்
படுத்தியிருந்தால் ஒருவேளை இந்நேரம் கிருஷ்ணா நதிநீர்த்
திட்டப் பணிகள் முடிக்கப்பட்டிருக்கும் என்று கூடச்
சொல்லலாம். திட்டச் செலவும் குறைவாக இருந்திருக்கும்.

11. இதற்கிடையில் 1972 அக்டோபர் மாதம் சோமசிலா நீர்த்தேக்கத் திட்டத்துக்கு மைய அரசின் ஒப்புதல் பெறப் பட்டதாகத் தெரியவந்தது. ஆனால், ஏற்கெனவே ஒப்புக் கொண்ட 5 டி.எம்.சி. தண்ணீரைப் பெறுவது சம்பந்தமாக தமிழக அரசு ஆந்திர அரசோடு உடனே தொடர்பு கொள்ள வில்லை. மாறாக 14–7–1974 அன்றுதான் அன்றைய தமிழக முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் ஆந்திர முதல்வர் அவர்களுக்கு 20 மாதங்களுக்குப் பிறகு ஆந்திரத்தின் பங்காக 5 டி.எம்.சி. தண்ணீரை சோமசிலா நீர்த்தேக்கத்திலிருந்து சென்னை நகருக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அன்றைய ஆந்திர முதல்வர் திரு. வெங்கல்ராவ் அவர்கள் 7–8–1974 நாளிட்ட பதில் கடிதத்தில், கிருஷ்ணா நதிநீர் பற்றிய நடுவர் மன்றத் தீர்ப்பில் சில வரையறைகள் இருப்பதாலும், ஆந்திர மாநிலத் தேவைக்கே தண்ணீர் போதாதென்பதாலும், ஆந்திரத்திலிருந்து சென்னைக்கு தண்ணீர் கொடுக்க முடியாதென்று கூறியிருந்தார். இருப்பினும், மகாராஷ்டிரா, கர்நாடக மாநிலங்கள் அவர்களுடைய பங்கிலிருந்து சென்னை நகருக்கு தண்ணீர் கொடுத்தால் அந்தத் தண்ணீரை சென்னை நகருக்குக் கொண்டுபோக ஆந்திர மாநிலம் ஒத்துழைக்கும் என்று அவர் எழுதியிருந்தார். 20–11–1975 அன்று தமிழ்நாட்டின் அன்றைய முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள், மத்தியப் பாசன அமைச்சருக்கும் (திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள்) மகாராஷ்டிர, கர்நாடக, ஆந்திர மாநில முதலமைச்சர்களுக்கும் கிருஷ்ணா நதியிலிருந்து சென்னை மாநகருக்கு 15 டி.எம்.சி. தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று கடிதங்கள் அனுப்பினார். மத்தியப் பாசனத்துறை அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில், கிருஷ்ணா நதிநீர்ப் பிரச்சினைக்கான நடுவர் மன்றம் தன் தீர்ப்பை மறுபரிசீலனை செய்து கொண்டிருந்ததால் தமிழகத்தின் கோரிக்கையை நடுவர் மன்றத்தின் முன்வைத்து சென்னைக்கு குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்யும்படி வலியுறுத்தப்பட்டிருந்தது. 20–11–1975-ல் தமிழகத்தின் கோரிக்கையை வற்புறுத்தியவர்கள் 1969-ல் இதே முயற்சியை மேற்கொண்டிருந்திருப்பின் இன்றைய சென்னை நகரக் குடிநீர்ப் பிரச்சினையே ஏற்பட்டிருக்காது. ஆனால் அன்றைய மத்தியப் பாசனத்துறை அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள் கிருஷ்ணா ஆற்றுப் பிரச்சினையில் மத்திய அரசு ஒரு வாதியாக இல்லாததால் அதுபற்றி மத்திய அரசு நடுவர் மன்றத்திடம் ஏதும் கூறமுடியாதென்று 19–1–1976 அன்று பதில் அளித்தார். 25–11–1975 அன்று கர்நாடகத்தின் அன்றைய முதல்வர் மறைந்த திரு. தேவராஜ் அர்ஸ் அவர்கள், மற்ற இரண்டு மாநிலங்களும் அவர்களது பங்கிலிருந்து சென்னை நகரத் தேவைக்கு தண்ணீர் கொடுத்தால் கர்நாடகமும் கொடுக்கும் என்று பதில் அளித்தார். மகாராஷ்டிர முதல்வர் திரு. எஸ். பி. சவான் அவர்கள் சென்னை நகரக் குடிநீருக்கு மகாராஷ்டிரத்தின் பங்கிலிருந்து தண்ணீர் ஏதும் கொடுக்க முடியாதென்றும், கிருஷ்ணா [illegible] கோதாவரியிலிருந்து கூடுதலாக தண்ணீர் கொடுக்கப் பட்டால் [illegible] யோசிப்பதாகவும் 29–1–1976 அன்று பதில் அளித்தார்.





12. 1969-ல் நடுவர் மன்றத்தில் தமிழக அரசும் வாதியாக இடம் பெற்று தமிழகத்தின் சார்பாக தனது கருத்தைத் தெரிவிக்கத் தவறியதன் காரணமாக, பிரச்சினை குழப்பமடைந்து சென்னைக்கு கிருஷ்ணா நதிநீர் கிடைக்காது என்ற அச்சத்துக்கு சென்னை வாழ் மக்கள் ஆளாக்கப்பட்டனர். இந்நிலையில் 31–1–1976 அன்று தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவரின் ஆட்சி கொண்டுவரப்பட்டது. மகாராஷ்டிரம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மூன்று மாநிலங்களின் சம்மதத்தையும் பெற்று பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி.எம்.சி. தண்ணீர் சென்னை நகரக் குடிநீர்த் தேவைக்குக் கொடுக்கப் படுமென்று 15-2–1976 அன்று சென்னையில் அறிவித்தார்கள். இவ்வறிவிப்பையொட்டி இம்மூன்று மாநில அரசுகளும், தமிழக அரசும் 14-4-1976 அன்று ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டன. இந்த ஒப்பந்தத்தின்படி மூன்று மாநிலங்களும் கிருஷ்ணா நதிநீரில் தத்தம் பங்கிலிருந்து 5 டி.எம்.சி. வீதம் மொத்தம் 15 டி.எம்.சி. தண்ணீரை சென்னைக்குத் தருவதென்றும் இந்தத் தண்ணீரை எங்கிருந்து எடுப்பது, எப்படிக் கொண்டுசெல்வது போன்ற விவரங்களைப் பின்னர் பேச்சு வார்த்தை மூலம் தீர்மானிக்கலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. பின்னர் அதிகாரிகள் மட்டத்தில் நடந்த பேச்சுவார்த்தைகளின்போது குழாய்களின் மூலம்தான் சென்னைக்கு குடிநீர் கொண்டு செல்ல வேண்டுமென்று மகாராஷ்டிர அரசும், கர்நாடக அரசும் வற்புறுத்தின.

13. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தில் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர், மத்திய வேளாண்மை மற்றும் பாசனத்துறை அமைச்சர் தலைமையில் 27-10-1977 அன்று ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி ஜூலை முதல் அக்டோபர் வரையிலான காலஅளவில் ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து திறந்த காரை பூசப்பட்ட கால்வாய் மூலம் ஆண்டொன்றுக்கு 15 டி.எம்.சி. நீரை எடுத்துக்கொள்ள ஏற்பாடுகள் செய்து ஒப்புக் கொள்ளப்பட்டது.

14. வீராணம் திட்டம் கைவிடப்பட்டது ஏன்? நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின் சென்னைக்கு கிருஷ்ணா நதிநீரைக் கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து நடத்தி வந்த அதே நேரத்தில், ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக அரசால் துவக்கப்பட்டு நிறுத்தப்பட்ட வீராணம் திட்டத்தை பற்றியும் பரிசீலித்து முடிவு எடுக்க முழு முயற்சியில் ஈடுபட்டது. நாளொன்றுக்கு 40 மில்லியன் காலன் தண்ணீரை அதாவது ஆண்டொன்றுக்கு சுமார் 2.5 டி.எம்.சி. தண்ணீரை வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்கு குழாய் மூலம் கொண்டுவரும் வகையில் தீட்டப்பட்ட திட்டம் வீராணம் குடிநீர்த் திட்டமாகும். இத்திட்டத்திற்கான குழாய்கள் தயாரிக்கும் பணியும், அவற்றை பூமிக்குள் பதிக்கும் பணியும் துவக்கப்பட்டு 1975 ஆம் ஆண்டு அப்பணி இடையில் நிறுத்தப்பட்டுவிட்டது. 1975 ஆம் ஆண்டு சென்னையில் ஏற்பட்ட வறட்சியின்போது குடிநீர் [illegible]

திருவான்மியூரிலிருந்து வீராணம் திட்டத்திற்கு தயாரிக்கப்பட்ட குழாய்கள் மூலம் சோதனை அடிப்படையில் நீர் ஏற்றப்பட்ட போது (Pump) அழுத்தம் தாங்காமல் குழாய்களில் வெடிப்பு ஏற்பட்டது. இந்தத் திட்டத்துக்குத் தேவையான குழாய்களின் தரம் குறித்தும், எத்தகைய குழாய்களை உபயோகிக்கலாம் என்பது பற்றியும் ஆய்வு செய்து அறிக்கை தருவதற்காக சென்னை விஞ்ஞான தொழில் ஆராய்ச்சி நிலையத்தின் கீழுள்ள ''ஸ்டிரெக்சுரல் என்ஜினியரிங் ரிசர்ச் சென்டர்''-ன் இயக்குநராக இருந்த புரொபசர் ஜி. எஸ். ராமசாமி அவர்களை தலைவராகக் கொண்டு ஒரு தொழில் நுட்பக்குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு 1976 ஆம் ஆண்டு மே மாதம் தனது அறிக்கையை அரசுக்கு அளித்தது. இந்த அறிக்கையில் ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட 10 586 குழாய்களில் 6,000 குழாய்கள்தான் ஏற்கத்தக்கவை, மற்றவை பழுது பார்க்கப்பட்டு மறுபரிசோதனைக்கு உட்படுத்தப் பட வேண்டியவை என்றும், ஏற்கெனவே புதைக்கப்பட்ட குழாய்களை மீண்டும் தோண்டி எடுத்து சோதித்தபின்புதான்பயன்படுத்த வேண்டுமென்றும், வேக்ரீட் முறைப்படி தயாரிக்கும் குழாய்கள் தான் தொழில் நுட்ப ரீதியாக தரமானவை என்றும், ஆனால் இந்த முறைப்படி குழாய்கள் இந்தியாவில் எங்கும் தயாரிக்கப் படாததால், வேக்ரீட் நிறுவனம் இந்தக் குழாய்களின் தரத்திற்கு பொறுப்பேற்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(முற்பகல் 10–40)

15. வீராணம் திட்டத்தைப்பற்றி ஆய்வு செய்த பொது நிறுவனங்கள் குழு தனது 1977–79 ஆம் ஆண்டுக்கான 6-வது அறிக்கையில் இத்திட்டத்தைப் பற்றியும், திட்டம் துவக்கப் பட்டது முதல் செயல்பட்ட விதத்தைப் பற்றியும் கீழ்க்கண்டவாறு கடுமையாக விமர்சித்துள்ளது :

(1) இந்தத் திட்டத்திற்குத் தேவையான நீர் கிடைக்குமா என்பதையும், இந்த அளவு நீரை வாங்கி வழங்குவதற்கு வீராணம் ஏரிக்கு கொள்திறன் தொடர்ந்து இருக்குமா என்பதையும், ஒரு குறிப்பிட்ட காலத்திற்காவது வீராணம் ஏரி திட்டத்திற்குப் பயன் படுமா என்பதையும் (முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி அவர்களின்) அரசு முழுமையாக ஆய்வு செய்திருக்க வேண்டும்.

(2) கெட்டியாக்கப்பெற்ற கான்க்ரீட் குழாய் தயாரித்து பதித்தல் குறித்த ஒரு மாபெரும் ஒப்பந்தம் எவ்வகையிலும் தகுதியற்ற ஒரு நிறுவனத்திடம் ஒப்படைக்கப் பெற்று, பணிகள் சரியாக நிறைவேற்றப்படாமல் ஒரு குழப்பமான நிலை உருவாகி அரசுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது கிருஷ்ணா நதி நீரைப் பற்றிய ஒரு விளக்க அறிக்கையா அல்லது வீராணம் திட்டத்தைப் பற்றி படிக்கிறீர்களா?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்த விளக்க அறிக்கையின்படி இந்தக் குடிநீர்ப் பிரச்னையைப் பற்றியும் சேர்த்திருக்கிறார்கள் (குறுக்கீடு).

டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையின் மீது ஒரு விவாதத்திற்கு இந்த அவையிலே நிச்சயமாக ஏற்பாடு செய்யவேண்டும். ஏனென்றால், 1967 ஆம் ஆண்டிலிருந்து, அண்ணா காலத்திலிருந்து ஏதோ கிருஷ்ணா நதி நீர்த்திட்டத்திற்காக அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை என்பதைப் போல அண்ணா அவர்கள் அமைச்சரவையிலே இருந்த, என்னுடைய அமைச்சரவையிலே இருந்த நிதி அமைச்சர் அவர்கள் இன்றைக்குச் சொல்கிறார்கள். இவர்களை வைத்து சொல்ல வைத்திருக்கிறார்கள், பரவாயில்லை. எனவேதான் விவாதத்திற்குரிய அறிக்கையாக இது அமைந்து விட்ட காரணத்தால் தாங்கள் ஒரு விவாதத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய சார்பாக நான் படிக்கிறேன் என்று சொன்னேன். அவர்களுடைய குறிப்புக்களைத்தான் நான் இங்கே சொல்லிக்கொண்டு இருக்கிறேன். ஆக விவாதம் வேண்டுமென்று சொல்கிறபோது, இந்த அறிக்கையைப் படித்து முடித்த பிறகு—இன்று விவாதம் நடத்த முடியாது. இந்த அறிக்கையின் மீது இப்போது விவாதம் நடத்தமுடியாது. (குறுக்கீடு) ஆனால் இதன் மீது விவாதிக்க ஒருநாள் ஒதுக்கவேண்டும், நேரம் ஒதுக்க வேண்டும் என்று கேட்க உரிமையுண்டு. அதை அலுவல் ஆய்வுக் குழுதான் முடிவு செய்யவேண்டும்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப் : சார், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் படிக்கிற அறிக்கையிலே மத்திய அமைச்சர்கள் பெயில் ஆகிவிட்டார்கள், அதற்குப் பின்னால் வந்தவர்கள் பெயில் ஆகிவிட்டார்கள். . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர்கள் கருத்து, இதிலே நீங்கள் என்ன செய்ய முடியும் (குறுக்கீடுகள்).

டாக்டர் மு. கருணாநிதி : இந்த அறிக்கை ஒரு அரசாங்கத்தினுடைய அறிக்கையாக இல்லை. இது அண்ணா தி. மு. க. கட்சியினுடைய அறிக்கையாக இருக்கிற காரணத்தால் இதை எதிர்த்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் வெளி நடப்புச் செய்தனர்)

(குறுக்கீடுகள், கூச்சல் குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லோரும் அமைதியாக இருக்கவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அமைதியாக இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் தங்களுடைய உணர்வுகளுக்கு ஏற்ப நடக்கிறார்கள். நாம் நம்முடைய கடமையைச் செய்ய இருக்கிறோம். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய அறிக்கை இந்த அவையின் மீது வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த கிருஷ்ணா நதி நீர் பிரச்னையைப் பற்றி பல்வேறு பிரச்னைகள் பேசப்பட்டன. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் சில பேர் வீராணம் திட்டம் குறித்தும் கருத்துக்களை எடுத்துச் சொன்ன காரணத்தால், இந்த அறிக்கை மூலமாக நிலைமையை விளக்கிவிடுவது நல்லது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரும்பினார்கள். இந்த அறிக்கை மீது இப்போது விவாதம் நடத்த முடியாது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் தனியாக விவாதத்தை வைத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்க உரிமை இருக்கிறது. அதைப் பற்றி முடிவு செய்ய அலுவல் ஆய்வுக் குழு இருக்கிறது. ஆகவே அந்த அடிப்படையில் இப்போது நான் அறிக்கையை படித்து விடுகிறேன். அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்புவார்களானால், அது குறித்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் முடிவு எடுக்கலாம்.

(3) திட்டமிடுதல், வடிவமைத்தல், தயாரிப்பு முறை ஆகியவை பற்றிய நடைமுறை வரைபடங்களுக்கும், கலவை விகிதாச்சாரங்களுக்கும் துறையின் ஒப்புதல் அளிக்கப் பெறாமலேயே பணிகளைத் தொடங்கியது; Indian Standard specification தரத்தின்படி நீர் அழுத்தத்தைத் தாங்கும் சக்தி குழாய்களுக்கு இருப்பதை உறுதி செய்து கொள்ளத் தவறியது; குழாய்களின் மேலுறையில் விரிசல் ஏற்படாது இருப்பதை உறுதி செய்து கொள்ளத் தவறியது; ஆகிய முறைகேடுகள் நிகழ்ந்துள்ளன.

(4) மேலும், ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டிருக்கும் பல்வேறு சோதனைகளை நடத்தத் தவறியமை;

கான்க்ரீட் சோதனைக்கு எடுத்துக்கொள்ளப்பெறும் சோதனை சிலிண்டர்கள் குழாய்க் கான்க்ரீட் தயாரிக்கப்பெறும் நிலையிலேயே தயாரிக்கப் பெறுவதை உறுதி செய்துகொள்ளத் தவறியமை; கான்க்ரீட்டின் வலு எம். 450 தரத்தை எய்தவில்லை என்பது தெரிந்திருந்தும் குழாய் தயாரிப்பைத் தொடர்ந்து நடத்தியது, ஆகிய முறைகேடுகள் நிகழ்ந்துள்ளன.

(5) ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒப்பந்தக்காரருக்கு ஆதாயம் ஏற்படும் வகையிலேயே வடிவமைப்பிலும்; ஒப்பந்த நிபந்தனைகளிலும் மாறுதல்கள் செய்யப் பட்டுள்ளன என்பது குறித்து தனது அதிருப்தியைத் தெரிவிக்கிறது.





(6) மேலும் அவ்வறிக்கையில் இத்திட்டத்தில் செய்யப்பட்ட மற்றொரு தவறு பெருவாரியான தொகை ஒப்பந்தக்காரருக்குக் கொடுத்ததுதான் என்றும், அரசு இத்திட்டத்திற்கென்று ஒதுக்கிய மொத்தத் தொகையான ரூ. 16.55 கோடியில் திட்டத் தொடக்கத்திலேயே பொருளாகவும், முன் பணமாகவும் ஒப்பந்தக்காரருக்குக் கொடுத்தது ரூ. 13.25 கோடி என்றும், இது போன்று வேறு எந்த வேலைக்கும் ஒப்பந்தக்காரருக்கு இவ்வளவு பெருந்தொகையினை அளித்ததாக அரசின் வரலாற்றில் இல்லையென்றும் தெரிவித்துள்ளது.

இந்தக் குழு தனது அறிக்கையின் இறுதியில் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளது:—

''இத் திட்டத்தின் அனைத்து ஒப்பந்தங்களில் உள்ள ஒப்பந்த விதிகளும் சரியாக எம்மட்டத்திலும் ஆரம்பத்திலிருந்தே நிறைவேற்றப்படவில்லை. இதன் விளைவாக திட்டமே தோல்வியுற்றது. இந்தத் திட்டத்தை மறு முறையும் சரி செய்து உற்பத்தி செய்யப்பட்டுள்ள குழாய்களைச் சரிபார்த்து இந்தத் திட்டத்தை மேற்கொண்டு நடத்த இயலுமா என்பதும் ஒரு கேள்விக் குறியாகவே தெரிகின்றது. குழாய்களை உற்பத்தி செய்யும் முறை நம்நாட்டிற்கு உகந்ததாக இல்லாததினால் மறு முறையும் ''வாக்குவம்'' முறை செயல்படுத்த முடியுமா என்பதும் சந்தேகமாக உள்ளது. அவ்வாறே செயல்படுத்த முடியுமானால் கூட, இது வரையிலும் தயார் செய்த குழாய்களில் பெரும்அளவு உபயோகிக்க முடியாது என்று கூறப்பெறுகிறது. ஆகவே, இதற்கு மேலும் பல கோடி ரூபாய் செலவிட வேண்டி வரும். இத்திட்டம் வெற்றி பெறாததுடன், செலவிடப்பட்ட தொகை எவ்வளவு தேறுமென்பதற்கும் குழு தனது கருத்தைத் தெரிவிக்க இயலவில்லை.''

''சென்னைக்குக் குடிதண்ணீர் கொண்டு வரும் இம்முயற்சி பயன் அளிக்காததினால் காலம் தாழ்த்தப்பட்டு சென்னை குடிதண்ணீர் பிரச்சினை இன்னும் தீராமல் உள்ளது. எனவே அரசு இத்திட்டத்தை மேற்கொண்டு தொடர்ந்து நடத்துவது பற்றியோ அல்லது கைவிடுவது பற்றியோ உடனடியாக ஒரு முடிவிற்கு வரவேண்டும். சென்னை குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால், இத்திட்டத்தை மீண்டும் செயல்படுத்துவதற்கோ அல்லது வேறு திட்டத்தை உருவாக்குவதற்கோ அரசு உடனடியாக முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது''.

16. மேலும் உலக வங்கிக் குழு தனது பரிந்துரையில் இத்திட்டத்திற்குக் கடனுதவி செய்வதாயின் சிமெண்ட் குழாய்களுக்குப் பதில் உருக்குக் குழாய்களைத்தான் பயன்படுத்த வேண்டுமென்றும் நிபந்தனை விதித்தது. இவ்வாறு உருக்குக் குழாய்களைப் பயன்படுத்தினால் திட்டச் செலவு ரூ. 205 கோடியாகும் என்று மதிப்பிடப்பட்டது. இவ்வாறு 205 கோடி

ரூபாய் செலவில் சுமார் 2.5 டி.எம்.சி. தண்ணீரை மட்டுமே கொண்டு வரும் வீராணம் திட்டம் சிக்கனமற்றதெனக் கருதப் பட்டு கைவிடப்பட்டது. வீராணம் ஏரியில் இன்று குடிக்க ஒரு சொட்டு நீர் கூட இல்லையென்பதும் (சேறு கலந்த தண்ணீர் இரண்டடி அளவிற்கு உள்ளது) காவிரி நதியில் ஆண்டு முழுவதும் தண்ணீர் கிடைப்பது நிலையற்றதாகிவிட்டது என்பதும் சிந்திக்கத் தக்கது.

17. கட்டளைக் கால்வாய்த் திட்டம். இது தவிர வேறு சில மாற்றுத் திட்டங்களும் பரிசீலிக்கப்பட்டன. திருச்சி மாவட்டத்தில் காவிரி நதியில் கட்டளை அணைக் ட்டிற்கருகிலிருந்து சுமார் 203 கோடி ரூபாய் செலவில், 450 கி. மீ. நீளத்திற்குக் கால்வாய் வெட்டி நாளொன்றுக்கு 995 மி.லி. தண்ணீரை (சுமார் 13 டி.எம்.சி.) சென்னை மாநகருக்குக் கொண்டு வ்ருவதற்கான திட்டம் பரிசீலிக்கப்பட்டது. வீராணம் திட்டத்தைப்போல் உருக்குக் குழாய்களுக்கென்று கோடிக்கணக்கான ரூபாய்களை வெளி நாட்டுக்குக் கொடுக்காமல், கால்வாய் வெட்டுவதன் மூலம் மனித உழைப்பிற்காகச் செலவு செய்வதினால் இலட்சக் கணக்கான குடும்பங்களுக்கு வேலை கிடைக்கும் என்ற காரணத் தால் இந்த கட்டளைக் கால்வாய்த் திட்டத்தைப் பரிசீலிக்க விரும்பினோம். மேலும், வீராணம் திட்டத்தில் தண்ணீரைக் குழாய் ளின் வழியாக விசையேற்றம் (Pump) செய்வதன் மூலமே சென்னைக்குக் கொண்டுவர முடியும். ஆனால், கட்டளைக் கால்வாய்த் திட்டத்தில் நிலமட்ட வித்தியாசத்தின் காரணமாக ஈர்ப்புச் சக்தியினாலேயே (Gravity) தண்ணீர் தானாகக் கால்வாய் வழியே சென்னை வந்து சேரும். இத்திட்டம் பரிசீலிக் கப்பட்டபோது இதற்காக கர்நாடகத்திடமிருந்து அதிகத் தண்ணீர் கேட்டுத்தான் இதை நிறைவேற்ற வேண்டும் என்று உத்தேசிக்கப்படவில்லை. காவிரியிலிருந்து கிடைக்கும் தண்ணீரி லேயே சிறு பகுதியும், தமிழகத்திற்குள் காவிரிப் பகுதியில் பெய்யும் மழையையும், மற்ற ஆறுகளிலிருந்து வரும் நீரையும் கணக்கிட்டுத்தான் இத்திட்டத்தைப் பரிசீலித்தோம்.

(முற்பகல் 10-50)

ஆனால், இத் திட்டத்தினால் திருச்சி, தஞ்சாவூர் மாவட்ட காவிரி நதி நீர்ப்பாசன ஆயக்கட்டு நிலங்கள் பாதிக்குமென்று அம்மாவட்ட விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். தங்களது பிடிவாதம் நாட்டு நலனைவிடப் பெரிதென்று கருதும் ஒரு சில தலைவர்கள் இத் திட்டத்திற்கு கர்நாடகம் ஒப்புக்கொள்ளுமா, விவசாயிகள் அனுமதிப்பார்களா என்றெல்லாம் பேசி, சிக்கலை உருவாக்கி, இதையொரு விவாதப் பொருளாக்கி கர்நாடக மாநிலத்திற்கு யோசனையும் கூறினார்கள். இந்த கட்டளைக் கால்வாய்த் திட்டத்திற்கு யோசனை தந்தவரே பின்னால் உத்திர வாதம் தருவதற்கு மறுத்து விட்டார். இவ்வாறான சூழ்நிலை களில் இத் திட்டமும் கைவிடப்பட்டது.



600 008.
136048
V2;1,31 N83.51.3

18. கிருஷ்ணா நீர்த் திட்டம் பற்றி தொடர்ந்து கொண்ட முயற்சிகள். இவ்வாறு மாற்றுத் திட்டங்கள் பற்றி பரிசீலித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில், கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் பற்றியும் தொடர்ந்து ஆந்திரப் பிரதேச அரசுடன் இந்த அரசு பேச்சு வார்த்தைகள் நடத்தி வந்தது. ஆந்திரப் பிரதேச அப்போதைய முதலமைச்சர் டாக்டர் திரு. சென்னா ரெட்டி அவர்களும், நானும் 1‍—6—78 அன்று ஹைதராபாத்தில் இதுபற்றி பேச்சுவார்த்தை நடத்தினோம். இத் திட்டத்தை நடைமுறைப் படுத்த எடுத்த மறு முயற்சிக்கு டாக்டர் சென்னா ரெட்டி அவர்களுக்கு பெரும் பங்குண்டு. அவருடன் நான் நடத்திய பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு இத் திட்டத்தின் தொழில் நுட்ப சாத்தியக் கூறுகளைப் பரிசீலிப்பதற்காக ஆய்வு செய்யும் பணிகள் உடனடியாகத் தொடங்கப்பட வேண்டுமென்றும், இரு மாநிலங் களின் அதிகாரிகள் அடங்கிய தொடர்புக் குழு ஒன்று இந்த ஆய்வு பணியின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க வேண்டு மென்றும் இருதரப்பிலும் முடிவு செய்யப்பட்டது.

19. ஆந்திரப் பிரதேச அரசும், தமிழ்நாடு அரசும் இத் திட்டம் குறித்து மேற்கொண்ட ஆய்வில் இத் திட்டம் தொழில் நுட்ப ரீதியில் சாத்தியமானது என்பது உறுதிப்படுத்தப்பட்டது. ஆந்திரப் பிரதேச அரசின் அறிக்கை நவம்பர் 1982 ஆம் ஆண்டில் தமிழக அரசிற்குக் கிடைத்தது. இதையடுத்து, இத் திட்டத்த மேற்கொள்வதற்கான ஒப்பந்தம் ஏற்படுத்துவது பற்றி இருமாநில அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு வார்த்தைகள் நடந்தன. சென்னையில் ஆந்திர முன்னாள் முதல்வர் திரு. பவனம் வெங்கட்ராம் அவர்கள் தங்கள் அதிகாரிகளுடன் சென்னை வந்து என்னுடனும் நமது அதிகாரிகளுடனும் பேசி ஒரு முடிவு எடுக்கப்பட்டது.

20. கிருஷ்ணா நீர் ஒப்பந்தம் 18—4—83. இறுதியாக, 18—4—1983 அன்று ஐதராபாத்தில் ஆந்திர மாநில முதல மைச்சர், என் உடன் பிறப்பு மாண்புமிகு திரு. என். டி. ராமராவ் அவர்களிடம் நானும், சம்பந்தப்பட்ட அமைச்சர்களும், அதிகாரி களும் பேச்சுவார்த்தை நடத்தினோம். இக் கூட்டத்தில் சென்னைக்கு கிருஷ்ணா நதியிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டத்திற்கான ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சங்கள் கீழ்க்கண்டவையாகும்:—

(1) சென்னை குடிநீர் கால்வாய், ஆந்திரப் பிரதேசம், கடப்பா தாலுக்காவிலுள்ள சென்னமுக்கப்பள்ளி என்ற கிராமத்தின் அருகிலிருந்து வெட்டப்படும். ஸ்ரீசைலத்திலிருந்து சென்னமுக்கப்பள்ளி வரை தண்ணீர் கொண்டு வருவதற்குச் செய்ய வேண்டிய ஏற்பாடுகளை ஆந்திரப் பிரதேசம் முடிவு செய்யும்.

(2) சென்னமுக்கப்பள்ளியிலிருந்து பெண்ணாற்றில் உள்ள சோமசிலா நீர்த்தேக்கம் வரை தமிழ் நாட்டிற்காக ஒரு தனி கால்வாய் வெட்டப்

(3) தற்போது கட்டப்பட்டுவரும் இந்த சோமசிலா நீர்த்தேக்கம் சென்னை நகரக் குடிநீர்த் திட்டத்திற்கும் பயனளிக்கும் வகையில் விரிவாக்கப்படும்.

(4) சோமசிலா நீர்த்தேக்கத்திற்குக் கீழ், 54 டி. எம். சி. கொள்ளளவு உள்ள கண்டலேரு நீர்த்தேக்கம் அமைக்கப்படும். இந்நீர்த்தேக்கம் ஆந்திர மாநிலத்தில் பாசனத்திற்கு மட்டுமல்லாமல் சென்னை நகரக் குடிநீர்த் திட்டத்திற்கும் நீரை சேமித்து வைப்பதற்கு பயனுள்ளதாக இருக்கும்.

(5) கண்டலேரு நீர்த்தேக்கத்திலிருந்து தமிழ்நாடு—ஆந்திரப் பிரதேச எல்லை வரை ஆந்திர மாநிலத்தில் பாசனத்திற்கும், சென்னை நகரக் குடி நீர்த் திட்டத்திற்கும் பயனளிக்கும் வகையில் ஒரு கால்வாய் வெட்டப்படும்.

(6) ஆந்திரப் பிரதேசத்தின் எல்லைக்குள் சென்னை நகரக் குடிநீர் வழங்கும் திட்டக் கட்டுமானப் பணிகளை ஆந்திர அரசு நிறைவேற்றும். அப்பணிகளுக்கான செலவு, ஒவ்வொரு பணியினாலும் இரு மாநிலங்களும் அடையும் பயன்களின் விகிதாச்சாரப்படி பகிர்ந்து கொள்ளப்படும். இதே போல, இப்பணிகளைப் பராமரிப்பதற்கான செலவும் இதே விகிதாச்சாரப்படி பகிர்ந்து கொள்ளப்படும்.

(7) ஒவ்வொரு வருடமும் தமிழ்நாடு அரசால் வகுக்கப்பட்ட முறைப்படி வருடத்தில் 8 மாதங்களில் (நவம்பர், டிசம்பர், மே, ஜூன் நீங்கலாக) குறிப்பிட்ட அளவு தண்ணீரை ஆந்திர அரசு தமிழ்நாட்டின் எல்லையில் கொடுக்கும்.

(8) இப்படிக் கொடுக்கப் போகும் அளவு, வழியில் ஏற்படும் நீரிழப்பையும் சேர்த்து ஒரு வருடத்திற்கு 15 டி.எம்.சி. ஆகும். நீரிழப்பு ஒரு வருடத்திற்கு 3 டி. எம். சி.க்கு மேல் கணிக்கப்படாதென்றும் ஆந்திரப்பிரதேச அரசு ஒப்புக்கொண்டுள்ளது. நீரிழப்பு அதிகமாயின் அதை குறைக்க ஏற்படும் செலவை ஆந்திர பிரதேச அரசும், தமிழ்நாடு அரசும் ஏற்கெனவே வகுத்த முறையில் பகிர்ந்து கொள்ளும்.

(9) பணிகளை நிறைவேற்றும்போது நீரைக் கொண்டு வரும் கால்வாயின் தரைமட்டம், முழு நீர் மட்டம், முதலிய வற்றில் ஏதேனும் மாற்றம் தேவைப்பட்டால் இம்மாறுதல்கள் இரு மாநிலங்களின் அதிகாரிகள் அடங்கிய தொடர்புக் குழுவின் அனுமதியுடன் தான் நிறைவேற்றப்படும்.

(10) இத் தொடர்புக் குழு பணிகளின் முன்னேற்றத்தையும், பணிகள் முடிந்த பிறகு திட்டம் செயல்படும் முறையையும் கண்காணிக்கும்.

(11) இத் திட்டத்தின்படி கிடைக்கும் நீரை சென்னை நகரின் குடிநீர்த் தேவைக்குத் தவிர வேறு எதற்கும் தமிழ்நாடு அரசு பயன்படுத்தாது.





(12) இத் திட்டத்தை மூன்று முதல் ஆறு ஆண்டுகளில் முடிக்க முடியும் என்று இரு அரசுகளும் கருதுகின்றன.

(13) இதை விரைவாகவே நிறைவேற்றுவதற்கு தமிழ்நாடு அரசு பணிகளின் முன்னேற்றத்தைப் பொறுத்து முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டுக்கும் ரூ. 60 கோடி வரை ஆந்திர அரசுக்குக் கொடுக்க ஒப்புக்கொண்டுள்ளது.

(14) இந்த ஒப்பந்தம் காலவரம்பற்றது; நிரந்தரமானது.

21. ஆந்திர மாநிலத்தில் ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து
தமிழகத்தின் எல்லைவரை தண்ணீர் கொண்டு வருவதற்கு
354 கி. மீ. நீளத்திற்கு வாய்க்கால்கள் அமைக்கப்பட வேண்டி
யுள்ளன. இவை தவிர, சென்னை நகரக் குடிநீர் திட்டத்திற்கு
தமிழ்நாட்டின் எல்லைக்குள் பல வேலைகள் செய்ய வேண்டி
யுள்ளன. தமிழ்நாடு எல்லையிலிருந்து பூண்டி நீர்த்தேக்கம்
வரை 25 கி. மீ. நீளத்தில் ஒரு கால்வாயும், பூண்டி நீர்த்
தேக்கத்திலிருந்து, செம்பரம்பாக்கம் நீர்த்தேக்கம் வரை 25 கி.மீ.
நீளத்திற்கு மற்றொரு கால்வாயும் வெட்டப்பட வேண்டி
யுள்ளது. மேலும் கிருஷ்ணா நதியிலிருந்து பெறப்படும் நீரை
முறைப்படி சேமித்து வழங்க பூண்டி, புழலேரி, செம்பரம்பாக்கம்
இம்மூன்று நீர்த்தேக்கங்களிலும் நீர்மட்டத்தை 2 அடி உயர்த்து
வதோடு இத்தண்ணீரைச் சென்னை நகருக்குள் குடிநீர் உபயோகத்
திற்குப் பயன்படுத்த குழாய்கள் அமைப்பதும், மற்றும் வடிகால்
களை அமைப்பதும் அவசியம். இதற்குச் சுமார் ரூ. 236 கோடி
ஆகும் என்று மதிப்பிடப்படுகிறது. ஆந்திரப் பிரதேச எல்லைக்குள்
செய்யப்பட வேண்டிய வேலைகளுக்கு தமிழ்நாட்டின் பங்கு
இப்போது சுமார் ரூ. 2 0 கோடி இருக்கும் என்று மதிப்பிடப்
படுகிறது.

22. சென்னை நகரில் இன்னும் 20 ஆண்டுகளில் வளரும்
மக்கள் தொகையின் நீர் தேவையை முழு அளவில் சரிக்கட்ட
நாளொன்றுக்கு 1294 மில்லியன் லிட்டர் தண்ணீர் தேவைப்படும்
என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. தற்சமயம் கிடைக்கக் கூடிய
நீரின் அளவு 299 மில்லியன் லிட்டர்தான். நாளொன்றுக்குக்
கூடுதலாகத் தேவைப்படும் தண்ணீர் 995 மில்லியன் லிட்டர்.
ஏற்கெனவே வகுக்கப்பட்டு, வேலைகளும் தொடங்கப்பட்டு
கைவிடப்பட்ட வீராணம் திட்டம் நாளொன்றுக்கு 180 மில்லியன்
லிட்டரையே, அதுவும் நீரேற்றத்தின் மூலமாகத்தான் கொடுத்
திருக்கும். எனவே சென்னை நகருக்குத் தேவையான தண்ணீரை
நிரந்தரமாகப் பெறுவதற்கு கிருஷ்ணா ஆற்றிலிருந்து தண்ணீரைப்
பெறும் இத்திட்டமே சிறந்தது. ஆந்திரப் பிரதேச அரசுடன்
நிறைவேற்றப்பட்ட இந்த ஒப்பந்தம், இத்திட்டம் விரைவில்
செயல்படுத்தப்பட்டு சென்னைக்குக் குடிநீர் கிடைக்க வகை
செய்யும். அதேசமயம் ஆந்திரப் பிரதேசத்தின் பின்தங்கிய
பகுதிகளும் நீர்ப்பாசனத்தை விரிவுபடுத்துவதன் மூலம் பெரும்
பயனடையும். இத்திட்டத்தின் மூலம் இரு மாநிலங்களிலும்
பெருமளவில் வேலை வாய்ப்புகள் ஏற்படும். இந்தியாவிலேயே,
இருமாநிலங்களுக்கிடையே பரஸ்பர ஒத்துழைப்பின் மூலம் [illegible]

2. 1979ம் ஆண்டு நவம்பர் திங்களன்று மத்திய நீர்வளக் குழுத் தலைவர் தமிழக மற்றும் கேரள அதிகாரிகளுடன் நேரில் சென்று இவ்வணையை பார்வையிட்டனர். மேற்படி கட்டத்தில் பெரியாறு அணையைப் பலப்படுத்துவது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட வேண்டிய கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன. இம்முடிவுகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கீழ் வருமாறு—

**உடனடியாக மேற்கொள்ள வேண்டிய பணிகள்.**

(i) பெரியாறு அணையைப் பலப்படுத்த மேற்கொள்ள வேண்டிய பணிகள் யாவும் முடிவடையும் வரை இந்நீர்த்தேக்கத்தின் நீர்மட்ட அளவை தற்காலிகமாக 145 அடியிலிருந்து 136 அடிக்கு குறைக்கப்பட்டது.

(ii) அணையின் மேற்பகுதியில் சிமெண்ட் மூடி போன்ற அமைப்பு (RCC Capping) ஏற்படுத்த வேண்டும். ரூ. 131 இலட்சம் மதிப்பீட்டில் அணைக்கு RCC Capping அமைப்பது பற்றிய பணிகள் முடிவடைந்துவிட்டது.

(iii) 1.22 இலட்சம் கனஅடி அளவிற்கு மிகையாகாமல் கூடுதலான உபரி நீரை அணையின் மதகுகளின் மூலமாக வெளியேற்றுவதற்கான அமைப்பு (Spill way) ஏற்படுத்துதல்.

**இடைக்காலப் பணிகள்.**

அணையை கம்பிகளால் (Cable anchoring) ரூ. 48 இலட்சம் செலவில் பலப்படுத்தும் பணிகள் முடிந்துவிட்டன.

**நீண்டகாலப் பணிகள்.**

நிரந்தர நடவடிக்கைகளில் இரண்டு மாற்றுச் செயற்குறிப்புகள் பரிந்துரைக்கப்பட்டன. அவை தற்பொழுது இருக்கும் அணையின் பின்புறத்தை கான்கிரீட் சுவர் (Concrete backing) அமைத்துப் பலப்படுத்துதல் அல்லது தற்பொழுது இருக்கும் அணையின் கீழ் பகுதியில் ஒரு புதிய அணைகட்டுதல் இவ்விரண்டு மாற்றுச் செயற் குறிப்புகளில் அணையின் பின்பக்கத்தை கான்கிரீட் சுவர் அமைத்து அணையை பலப்படுத்தலாமென முடிவெடுக்கப்பட்டது. கான்கிரீட் முட்டுக்கொடுத்தல் பணிக்கான வடிவமைப்பிற்கு கேரள பொறியாளர்களின் இசைவு பெற்றவுடன் ரூ. 6·55 கோடி செலவில் இப்பணியை மேற்கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது. இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் இறுதியாக்கப்பட்டு செயல்படுத்துவதற்கான ஆரம்ப ஆய்வுப் பணிகள் தொடங்கப்பட்டு முன்னிலையில் உள்ளன.

மேலே கூறிய பணியை செயல்படுத்துவது சம்பந்தமாக ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு குடியிருப்பு இல்லமும், அலுவலகங்களும் மற்றும் பண்டக சாலைகளும் தேக்கடியிலும் உத்தமபாளையத்திலும் கட்டிடங்கள் கட்டுவதற்கென



ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டில் ரூ. 25·50 இலட்சத்திற்கு வகை செய்யப்பட்டுள்ளது. தேக்கடியில் பணியாளர்கள் குடியிருப்பு இல்லத்திற்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு முன்னிலையில் உள்ளன.

27-2-83 அன்று தலத்தினைப் பார்வையிட்ட கேரள அரசின் வருவாய் வாரியத்தின் செயலாளர் தேக்கடியில் பணியாளர் குடியிருப்புக் கட்டுவது பெரியாறு அணை குத்தகை ஒப்பந்தத்தினை மீறுவதாகும் எனக் கூறி. அவர் தந்த உத்தரவின்பேரில் இடுக்கி மாவட்டம் பீர்மேடு வட்டாட்சியர் மேற்கொள்ளப்பட்ட பணிக்கு ஆட்சேபம் தெரிவித்து பணியை நிறுத்தியுள்ளார் என பெரியாறு அணை சிறப்பு வட்டக் கண்காணிப்புப் பொறியாளர் தெரிவித்துள்ளார். இதற்கிணங்க. பெரியாறு அணையினை பலப்படுத்துவதற்காக தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. 1886 ஆம் ஆண்டில் இரு மாநிலங்களுக்கிடையே ஏற்பட்ட பெரியாறு அணை குத்தகை உடன்பாட்டின்படி, தேக்கடியில் பெரியாறு திட்டம் சம்பந்தமாக பாசனப் பணிகள் மற்றும் இதரப் பணிகளை மேற்கொள்ளுவதற்கு தமிழகத்திற்கு முழு உரிமை உண்டென்று இடுக்கி மாவட்ட ஆட்சியாளரை பெரியாறு அணை செயற்பொறியாளர் நேரில் கண்டு விளக்கிக்கூறியும் யாதொரு பயன் அளிக்கவில்லை.

ஆகவே மீண்டும் தமிழகப் பொறியாளர்கள் தேக்கடியிலுள்ள பணியாளர்களுக்கு குடியிருப்பு இல்லம் கட்டுவதற்கான பணிகளை தொடர்ந்து செயல்படுத்த அனுமதியளிக்கும்படி கேரள வருவாய்த்துறை/வாரியச் செயலாளருக்கு தக்க அறிவுரை வழங்குமாறு கேரள அரசு சம்பந்தப்பட்ட செயலாளர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. க. யாரமலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1979-ம் ஆண்டு ஏற்பட்ட இந்த ஒப்பந்தத்தில் ஏற்கனவே மத்திய நீர்வளக்குழுத் தலைவர் அவர்கள் இந்த அணைக்கு உடனடியாக ஆபத்து ஏதுவும் இல்லை என்று உறுதியாக கூறியிருக்கிறார்கள். இருந்தாலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கான்கிரீட் பேக்கிங், ஆர். சி. சி. கேப்பிங், கேபிள் ஆங்கரிங், என்ற 3 வேலைகளை செய்ய வேண்டும் என்று அதில் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே 2 வேலைகள் ஆர்.சி.சி. கேப்பிங், கேபிள் ஆங்கரிங் இது எல்லாம் முடிக்கப்பட்டு இருப்பதாக நம்முடைய அமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கிற அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே கடைசி கட்டமாக இருக்கிற கான்க்ரீட் பேக்கிங் முடிந்துவிட்டால் மீண்டும் 152 அடிக்கு தண்ணீரை உயர்த்த வேண்டும் என்ற நிலையில் அவர்கள் இதை செய்துவிடவில்லை. செய்துவிட்டால் இப்போது [illegible] குறைந்து இருக்கிற இடைக்கும் தண்ணீரை வைத்து அவர்கள் மின்சார உற்பத்தி

நாளில் பேசி உருவாக்கப்பட்டு, இரு மாநில மக்களுக்கும் ஒரே நேரத்தில் சம அளவில் பயன்பெறும் திட்டம் இது ஒன்றுதான் என்பதில் சந்தேகமில்லை.

23. இவ்வொப்பந்தம் ஏற்படுவதற்குக் காரணமாயிருந்த பாரதப் பிரதமர் அவர்களுக்கு தமிழக, குறிப்பாக சென்னை வாழ் மக்களும், தமிழக அரசும் பெரிதும் நன்றி கூறிக்கொள்ளுகின்றோம். கர்நாடகம், மகாராஷ்டிரம், ஆந்திரம் ஆகிய இம் மூன்று மாநிலங்களையும் அவர்கள் அன்று (15-2-1976) சம்மதிக்கச் செய்ததினாலேயே இன்று இவ்வொப்பந்தம் உருவாகியுள்ளது என்பதையும் இந்நேரத்தில் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். மகாராஷ்டிரா, கர்நாடக, ஆந்திர மாநில அரசுகளுக்கு நமது நன்றி உரித்தாகுக. அவர்கள் சம்மதம் தராதிருப்பின் இவ்வொப்பந்தம் ஏற்பட்டிருக்குமா என்பது சந்தேகமே! இப்பேச்சுவார்த்தைகளில் தமிழக அரசின் தரப்பில் கலந்துகொண்ட மின்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், தொழிலாளர் நல அமைச்சர் மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம், தலைமைச் செயலாளர் (பொறுப்பு) திரு. சொக்கலிங்கம், பொதுப் பணித் துறைச் செயலாளர் திரு. மாதவ சர்மா, சட்டத் துறைச் செயலாளர் திரு. வடிவேலு, தலைமைப் பொறியாளர் திரு. மோகன கிருஷ்ணன், எனது செயலாளர் திரு. எம். பரமசிவம் முதலானவர்களுக்கும், ஆந்திர அரசின் தரப்பில் கலந்து கொண்ட ஆந்திர மாநில நிதியமைச்சர் மாண்புமிகு திரு. பாஸ்கர ராவ், பாசன அமைச்சர் மாண்புமிகு திரு. ஸ்ரீநிவாசலு ரெட்டி, தலைமைச் செயலாளர் திரு. இராமன், பாசனத் துறைச் செயலாளர் திரு. நடராஜன், நிதித் துறைச் செயலாளர் திரு மாதவராவ், முன்னாள் பாசனச் செயலாளர் திரு. ராஜா ராவ், சட்டத் துறைச் செயலாளர் திரு ராவ், தலைமைப் பொறியாளர் திரு. ராஜேந்திரகுமார் முதலானோர்க்கும் தமிழகத்தின் சார்பில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறுதியாக, பேச்சு வார்த்தைகளில் அவ்வப்போது ஏற்படும் சிறு பிரச்சினைகளைப் பரந்த மனப்பான்மையுடன் தீர்த்து ஒப்பந்தம் ஏற்பட வாய்ப்பளித்த என்றும் எனது அருமை உடன்பிறப்பான ஆந்திர முதல்வர் மாண்புமிகு திரு. என். டி. ராமராவ் அவர்களுக்கு என் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும், தமிழக மக்களின் சார்பிலு நன்றியையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஒருவேளை என்னை விடச் சிறப்பாக வேறு யாராவது இந்த ஒப்பந்தத்தை செய்ய முடிந்திருக்கலாம். எனினும் என்னை வாழவைக்கும் தமிழகத் தாய்மார்களின், பெரியோர்களின், சென்னைவாழ் மக்களின் நீண்டகாலத் தேவையான குடிநீர்ப் பிரச்சினைக்கு அவசர, அவசிய நோக்கோடு என்னால் முடிந்த அளவு எனது கடமையை அண்ணா வழியில், என்னை இந்நிலையில் வைத்துள்ள தமிழகத்திற்குச் செய்து முடித்துள்ளேன். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு என்னை ஆளாக்கிய அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும், தமிழக மக்களுக்கும் மீண்டும் ஒருமுறை எனது வணக்கத்தைக் காணிக்கையாக்குகிறேன். வாழ்க அண்ணா நாமம்.





## 7. கவன ஈர்ப்பு.

### பெரியாறு அணையைப் பலப்படுத்துதல்

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முதல் கவன ஈர்ப்பு, மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப் படுகிறது.

அடுத்து திருவாளர்கள் ப. நெடுமாறன், க. பாரமலை, என். வி. என். சோமு, இல. பலராமன், என். எஸ். வி. சித்தன் ஆகியோர் ஒரே பொருள் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

(முற்பகல் 11-00)

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தேக்கடி பெரியார் அணைப் பகுதியில் நடைபெற்றுவரும் மராமத்து வேலைகளுக்கு கேரள அரசு தடைவிதித்திருப்பது குறித்தும் அணையின் உயரத்தை உயர்த்த வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

மதுரை மற்றும் இராமநாதபுரத்திலுள்ள 68,000 ஹெக்டேர் நிலங்களுக்கு பாசன வசதியளிக்கும்பொருட்டு, கேரளத்தில் மேற்கு நோக்கி பாயும் பெரியாறு ஆற்றின் நீரை கிழக்கே திருப்பிவிடுவதற்காக இவ்வாற்றின் குறுக்கே பெரியாறு அணை ஒன்று 1895-ம் ஆண்டில் கட்டப்பட்டது. இவ்வணை தமிழகத்துக்குச் சொந்தமானது. 1979 ம் ஆண்டில் இவ்வணைக்கு பெருத்த ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று கேரள செய்தித்தாளில் வெளியான அறிக்கையின் காரணமாக கேரள அரசு பெரியாறு அணையைப் பலப்படுத்த உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தமிழக அரசை கேட்டுக்கொண்டது. இதன்பொருட்டு பெரியாறு அணையை நேரில் கண்டு பார்வையிட்ட பிறகு இவ்வணையை பலப்படுத்த தமிழக அரசு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் எவையென அறிவுறுத்துமாறு மத்திய நீர் வளக் குழுவின் தலைவரைக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

செய்து கொண்டிருக்கிறார்கள். அது தடைப்பட்டு விடுமோ என்ற அச்சத்தின் காரணமாக இதை தடுத்து நிறுத்துகிறார்களோ என்ற அச்சம் இன்றைக்கு மக்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ஏற்கனவே சொல்லப்பட்டு இருக்கிற அந்த முடிவில் இந்த ஆர்.சி.சி. கேப்பிங் முடிந்துவிட்டால் 145 அடிக்கு மீண்டும் உயர்த்தலாம் என்ற முடிவு இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே நான் கேட்டுக்கொள்வது, இந்த மூன்றாவது ஐட்டமான இந்த வேலை நடைபெற்றுவிட்டால் உடனடியாக 145 அடிக்கு உயர்த்துவதற்கு இப்போது வருகின்ற மழைக் காலங்களில் நீரை தேக்கி வைத்துக் கொள்ளும் அளவுக்கு-உதவிட அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே மிகக் கவனமாக அரசின் சார்பில் தேவையான குறிப்புகளையும் விளக்கங்களையும் கொடுத்து இருக்கிறோம். 6.55 கோடி ரூபாய் செலவில் கான்க்ரீட் முட்டுக் கொடுக்கக்கூடிய ஒரு பணியை முடித்துவிடுவோமானால் அணை புதிய பலம் பெற்று ஒரு புதிய அணைக்கு உண்டான சக்தியோடு இருக்கும் என்ற அடிப்படையில் கேரள அரசுத்துறை அதிகாரிகளோடும் தலைமைப் பொறியாளரிடமும் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களுடைய ஒப்புதல் எல்லாம் பெற்றதற்குப் பிறகுதான் டெண்டர் எல்லாம் நாம் கேட்டு அதையும் முடிவு செய்து பணியைத் துவக்குகிற நேரத்தில் எதிர்பாராத விதமாக அங்கே இருக்கிற அலுவலர்களுடைய குடியிருப்புகளைக் கட்டுவதற்கு நாம் பணியை மேற்கொண்ட நேரத்தில்தான் அவர்கள் தலையிட்டு இருக்கிறார்கள். எனவே அணை கட்டக் கூடாது என்றோ, அல்லது அதைக் கட்டுவதில் தங்களுடைய உரிமைகள் பாதிக்கப்படுகின்றன என்றோ கேரள அரசு கருத்து தெரிவிக்கவில்லை. எனவேதான் இதை அமைதியான முறையில் திரும்பவும் நாம் பேச்சுவார்த்தை மூலம் தொடர்பு கொண்டு அலுவலர்கள் தங்குவதற்காக குடியிருப்புகள் கட்டுகின்ற அந்தப் பணியைத் துவக்கவேண்டும் என்று டெண்டர் எல்லாம் முடிவு செய்து பணியை துவக்குகின்ற நேரத்தில் இது ஏற்பட்டு இருக்கிற காரணத்தால் நாம் வேறு சர்ச்சைக்குரிய விஷயங்களைப் பற்றி பேசாமல் நிச்சயமாக அவர்களுடைய ஒப்புதலை மீண்டும் பெற்று பணியைத் துவக்க முடியும். காரணம் பூர்வாங்கமாக எல்லா ஒப்புதலும் பெற்றுத்தான் நாம் இந்தப் பணியைத் துவக்கியிருக்கிறோம். [துவங்குகின்ற நிலைதான் இது. அதற்கு நேரடியாக சில நடவடிக்கைகளை எல்லாம் மேற்கொண்டிருக்கிறோம். நிச்சயமாக அணையினுடைய பணிகள் துவங்கும் என்று அரசு கருதுகிறது.

திரு. என். வி. என். சோமு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேரள அரசு வருவாய்த்துறை செயலாளர் பெரியார் அணை கட்டுகின்ற இடத்தைப் பார்வையிடுகின்ற நேரத்திலே அவரே வேலையை நிறுத்தும்படி உத்தரவிட்டு



இருப்பதாகவும் விவர அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. வருவாய்த்துறை அதிகாரி நமது அரசுக்குத் தெரிவிக்காமல் இப்படி ஒரு உத்தரவு போடுவதை நமது அரசு கடுமையாக எதிர்த்ததா என்பதையும் பெரியார் அணையின் நீர் மட்ட அளவு 136 அடிக்கு குறைக்கப்பட்டதன் காரணமாக கேரளாவிலுள்ள இடுக்கி அணைக்கு தண்ணீரைக் கொடுக்கவேண்டும் என்பதுதான் காரணம் என்று விவசாயப் பெருமக்கள் கருதுவதால் உடனடியாக நீர்மட்டத்தை 145 அடிக்கு உயர்த்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு நடவடிக்கைக்கும் நாம் காரணம் கற்பித்துக்கொண்டிருக்க முடியாது என்று கருதுகிறேன். ஒரு செய்தி கேரளப் பத்திரிக்கையில் வந்தது. பெரியார் அணை பலவீனம் அடைந்து இருக்கிறது, கசிவு இருக்கிறது, அதன் காரணமாக பல்வேறு பகுதிகளுக்கு ஆபத்து ஏற்படலாம் என்று ஒரு செய்தி வந்தது. அதற்குப் பிறகு தமிழகத்தினுடைய தலைமைப் பொறியாளர், கேரளாவிலுள்ள நீர்ப்பாசனத்துறை தலைமைப் பொறியாளர், மத்திய நீர்வளக் குழுவைச் சேர்ந்தவர்கள் எல்லாம் போய் அதைப் பார்த்து முத்தரப்பு அளவிலே உட்கார்ந்து பேசி முதல் கட்டமாக இந்த இந்தப் பணிகளை மேற்கொண்டால் அணை ஓரளவுக்கு பலமாக இருக்கும், அதாவது தற்காலிகமாக அணையினுடைய கொள்ளளவினுடைய அந்த அடி உயரத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டும். உடனடியாக கான்கிரீட் முட்டுக்கொடுக்கக்கூடிய பணியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த 2 விதமான யோசனையை அவர்கள் சொன்னார்கள். முதலாவது யோசனையை நாம் உடனடியாக நிறைவேற்றினோம். அடுத்து உடனடியாக கேரள அரசு சம்மதம் எல்லாம் கொடுத்து அவர்கள் உட்கார்ந்து பேசி அதற்கான மதிப்புகள் எல்லாம் தயார் செய்து தான் 6.55 கோடி ரூபாய் செலவில் கான்கிரீட் முட்டுக் கொடுக்கக்கூடிய பணிகளுக்கு அவர்களும் ஒப்புதல் கொடுத்து இருக்கிறார்கள். அது முடிந்தவுடனே நிச்சயமாக அணையினுடைய பழைய உயரத்திற்கு நாம் நீரை தேக்கி வைத்துக்கொள்ள முடியும். அதற்கு கேரள அரசும் ஒப்புதல் கொடுத்து இருக்கிறது, எனவே அவர்களுக்கு வேறு ஒரு நோக்கம் இருக்குமானால் அந்த ஒப்புதல் கொடுத்திருக்க வேண்டிய இல்லை. எனவே தமிழக அரசு அதைக் கடுமையாகக் கண்டிக்க வேண்டிய அவசியமில்லை, கனிவாகவே நாம் அதைப் பற்றிப் பேசி காரியத்தை இப்போது சாத்தியமாக்கிக் கொண்டுவருகிறோம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பெரியாறு அணையானது 152 அடி உயரத்திலே இருக்க வேண்டும். இன்றைக்கு அது 136 அடியாகத்தான் இருக்கிறது. பிறகு 145 அடி. அதற்கு அப்புறம் இறுதி நிலை 152 அடி. இன்றைக்கு மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களிலே அண்மைக் காலங்களிலே அணையினுடைய உயரம்

குறைக்கப்பட்ட காரணத்தினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பணியாளர்களுக்கு வீடு கட்டுகிற பிரச்சினையில் இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். கொடுத்திருக்கிற விவர அறிக்கையிலே 3 வது பத்தியிலே 1.22 இலட்சம் கன அடி அளவுக்கு மிகையானால் கூடுதலான உபரிநீரை மதகுகள் மூலமாக வெளியேற்றுவதற்கு ஸ்பில்வேக்கள் ஏற்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பணியை விரைவாக மேற்கொண்டு நாங்கள் விரும்புவது எல்லாம் வருகிற விவசாயத்திலாவது தண்ணீர் தேங்குகின்ற நேரத்திலே அணையை உயர்த்தி விவசாயிகள் பயன்படுத்திக்கொண்டு ஓரளவுக்கு திருப்தி அடைகிற முறையிலே முயற்சிகளை விரைவாக எடுத்துக்கொண்டு முடிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சம்பவம் எதிர்பாராத விதமாக நடந்திருக்கிறது. ஒப்பந்தம் போடுகிறபோதோ புதிதாக உட்கார்ந்து பேசுகிறபோதோ எவ்வளவு கோடி ரூபாய் செலவு செய்து கான்கிரீட் முட்டுக்கொடுத்து அணையின் பலத்தை ஸ்திரப்படுத்திக் கொண்டு மீண்டும் பழைய அளவிற்கே கொண்டு செல்ல வேண்டுமென்று சொன்னபோதுகூட கேரள அரசின் தரப்பிலே ஆட்சேபணை சொல்லப்படவில்லை. இது வேறு ஏதோ எதிர்பாராத சம்பவமாக வருவாய்த்துறை செயலாளர் அங்கு சென்றபோது ஒப்பந்தப்படி இந்தக் குடியிருப்புகள் கட்ட வேண்டிய ஷரத்துக்கள் இல்லை என்று அவர் கருத்துத்தெரிவித்திருக்கிறார். பிறகு நாம் பேசி அணைப் பணிகளை நிறைவேற்றவேண்டுமானால் குடியிருப்புக்கு அவசியமிருக்கிறது, அலுவலர்கள் இங்கே தங்கி வேலை பார்க்க வேண்டியிருக்கிறது, இல்லையென்றால் கரையின் இன்னொரு பகுதியான மூனாறு பகுதியிலிருந்து வந்து வந்து செல்வது என்பது முடியாத காரியம் என்று சொல்லி தனியாக அவர்களுக்கு விளக்கியிருக்கிறோம். இப்போது அந்தத் தரப்பிலிருந்து பெரிய ஆட்சேபணை சொல்லவில்லை என்ற காரணத்தினால் 3 வது கட்டப் பணி விரைவாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஸ்பில்வேக்கள் வேலைகள் பொறுத்தவரையில் ஓரளவுக்கு பணியை ஆரம்பித்திருக்கிறோம். அதையும் விரைவாகச் செய்து பழைய உரிமைகளை நிலைநாட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(ஆ) தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் பல்வேறு விதித்துறைகள் சட்ட முன்வடிவு 1982. (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல்—பல்வேறு விதித்துறைகள் சட்ட



முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

8. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் பல்வேறு விதித்துறைகள் சட்ட முன்வடிவு 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.—

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல்—பல்வேறு விதித்துறைகள் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".

திரு. அ. இரகுமான்கான்: மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குகின்ற விதத்தில் இந்த மசோதா கொண்டுவரப்படுகிறது. திராவிட முன்னேற்றக் கழகம் இந்த அவையில் எதிர்க்கட்சியாக இருந்தாலும் நிச்சயமாக இதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறது. நாங்கள் மனப்பூர்வமாக இந்த மசோதாவை வரவேற்கிறோம். ஆனால் அந்த மசோதாவை வரவேற்கிற அதே நேரத்திலே இதிலே உள்ள குறைபாடுகளையும் சுட்டிக் காட்டுவது ஜனநாயகத்திலே எதிர்க்கட்சியின் கடமையாகும். அதனாலேயே இந்த மசோதாவின் நோக்கத்தை நாங்கள் குறை சொல்வதாக ஆளுங்கட்சித் தரப்பிலே எடுத்துக்கொள்ளக் கூடாது. இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து தமிழகத்திலே மாபெரும் போராட்டத்தை நடத்தியதை இங்கே உள்ள மன்ற உறுப்பினர்கள் எல்லாம் அறிவார்கள். சங்கத் தமிழே உன்னை சாகவிடமாட்டேன் என்று சபதம் மேற்கொண்ட சாரங்கபாணி சாம்பலான சம்பவங்கள், இளமையில் தலைசாய்ந்த இராசேந்திரனின் இன்பத் தமிழைக் காப்பாற்றுவதற்கு இன்னுயிர் ஈந்த சம்பவங்கள், துப்பாக்கிக் குண்டுகளின் துந்துபி முழக்கத்திற்கு மத்தியில் எப்பக்கம் வரும், எத்தனை பட்டாளம் கட்டி வரும் என்று போர்ப்பரணி பாடி தமிழக வீதிகளில் தமிழைக் காப்பதற்கு தங்கள் இன்னுயிரை ஈந்த சம்பவங்கள், சிறைச்சாலை சித்திரவதை அனுபவித்தாலும்

(முற்பகல் 11-10)

சிங்காரத் தமிழ் சீரழிவதை அனுமதிக்க மாட்டோம் என்று பல போராட்டங்களை ஏற்ற சம்பவங்கள் எல்லாம் இப்போது நெஞ்சங்களில் நிழலாடுகின்றன. ஆனால் அந்தத் தமிழைப் பாதுகாக்கிற போராட்டத்தில் தங்களை வதைத்துக்கொண்டவர்கள்,

---

* 1982 ஆம் ஆண்டு செப்டம்பர் 10-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

சிரமங்களை உள்ளடக்கிக் கொண்டவர்கள், சிறைவாசம் அனுபவித்தவர்கள், உயிர் நீத்தவர்களுக்கு எல்லாம் அரசு உதவித்தொகை வழங்க வேண்டுமென்ற திட்டத்தை எங்களுடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருந்தபோது கொண்டுவந்தார்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக கட்டபாம்மன் பிறந்த நாட்டிலே சில எட்டப்பர்களும் பிறந்ததைப் போல, சில நபர்கள் அப்படி உதவித் தொகை கொடுப்பது தவறானது என்றும், சட்டத்திற்குப் புறம்பானது என்றும் சொல்லி சென்னை உயர்நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்தார்கள். ஆனால் உயர்நீதிமன்றம் அந்தமாதிரி சிறை சென்றவர்களுக்கு, உயிர் நீத்தவர்களுக்கு உதவித்தொகை அரசு வழங்குவது சட்டவிதிகளுக்குப் புறம்பானது அல்ல என்று தீர்ப்பு வழங்கியது. ஆனாலும் இவர்கள் விடுவதாக இல்லை. சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனார்கள். அந்த சுப்ரீம் கோர்ட் ஒரு தீர்ப்பை வழங்கியது. மாநில சர்க்கார் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து, தமிழைக் காப்பதற்கு சிறைச்சாலை சென்றவர்களுக்கெல்லாம் உதவித் தொகை வழங்குவது அரசியல் சட்டத்திற்குப் புறம்பானது என்று ஒரு தீர்ப்பைக் கொடுத்தார்கள். அந்தத் தீர்ப்பைச் சொல்கிறபோது நீதிபதிகள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அரசியல் சட்டத்தினுடைய 351வது பிரிவு தெளிவாகச் சொல்கிறது.

It shall be the duy of the union to promote the spread of Hindi language to develop it so that it may serve as medium of expression for all the elements of the composite culture of India.

இந்தியாவில் முரண்பாடுகள் அல்ல. வேறுபட்ட கலாச்சாரங்கள் ஒரு எக்ஸ்பிரஷனாக ஒரு மொழி மீடியமாக இருக்கிற இந்தி எல்லாவிதத்திலும் வளர்க்கப்பட வேண்டும். அந்த இந்தி முன்னேற்றப்பட வேண்டும். பரப்பப்பட வேண்டும். ஆகவே இந்தியை வளர்ப்பதும், இந்தியைப் பரப்புவதும் மத்திய அரசாங்கத்தினுடைய கடமை. 'இட் ஷேல் பி தி டியூட்டி ஆப் தி யூனியன் என்று தெளிவாக அந்த தீர்ப்பிலே கோடிட்டுக்காட்டி, இந்தப் பிரிவு அரசியல் சட்டம் 351 சொல்கிறது. ஆகவே சிறை சென்றவர்களுக்கு, இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து, தமிழைப் பாதுகாக்கச் சென்றவர்களுக்கு எல்லாம் அரசாங்கம் உதவித் தொகை கொடுப்பது அரசியல் சட்டத்திற்கு புறம்பானது என்று துரதிர்ஷ்டவசமாக இந்த நாட்டினுடைய சுப்ரீம் கோர்ட் ஒரு தவறான தீர்ப்பை வழங்கி விட்டது. அப்படிப்பட்ட தவறான தீர்ப்பை வழங்கிவிட்ட காரணத்தாலே தமிழகத்திலே சிறை சென்றவர்களுக்கு எல்லாம் அந்த உதவித் தொகை திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் முயற்சித்தும் கூட நிறைவேற்ற முடியாத நிலைமைகள் ஏற்பட்டன. ஆனால் இப்போது இங்கே தமிழ்மொழியைப் பாதுகாப்பவர்கள், தமிழ்ப் பண்பாட்டை பாதுகாப்பவர்கள். அதிலே ஆர்வம் காட்டியவர்கள், இந்த பணியிலே வீரம் காட்டி உயிர் நீத்தவர்கள், சிறை சென்றவர்கள் என்று வாசகம் சேர்க்கப் படாவிட்டாலும், மொழி, பண்பாடு, தமிழ் உணர்வு இவைகளில் ஆர்வம் காட்டியவர்கள் இவர்களுக்கு எல்லாம், அவர்களின்



குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கெல்லாம் 'டிபென்டன்ட்' என்று ஆங்கிலத்திலே சொல்வார்களே, இவர்களுக்கெல்லாம் உதவித் தொகை ரூபாய் 150 கொடுக்கிற விதத்திலே அல்லது 10 ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் மானியம் வழங்குகிற விதத்திலே இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதிலே ஒன்றை இந்த அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன் உதவித் தொகை 150 ரூபாய் என்பது போதாது. காரணம் இன்றைக்கு விலைவாசி எல்லாம் கடுமையாக ஏறியிருக்கிறது. ஒரு புறத்திலே வறட்சி இருக்கிறது, இப்படிப்பட்ட சூழ்நிலையில் 150 ரூபாயில் குடும்பம் நடத்துவதென்பது இயலாத காரியம். ஆனால் அதே நேரத்தில் உங்களுக்குத் தெரியும். அரசவை கவிஞர்கள் என்றும் ராஜ நர்த்தகி என்றும், அதைப்போல அரசுக் கலைஞர்கள் என்றும் அவர்களுக்கு 1000 ரூபாய்க்கு மேலே ஹானரேரியமாக இந்த அரசு தருகிறது. வைஜயந்திமாலா அவர்கள் பம்பாயிலே இருக்கிறார்கள். அவர் அரசவை கலைஞராகக் கருதப்பட்டு ஆயிரம் ரூபாய்க்கு மேலே கொடுக்கப்படுகிறது. அதேபோல பாலமுரளி கிருஷ்ணாவிற்கு ஆயிரம் ரூபாய்க்கு மேலே கொடுக்கிறோம். இன்னும் பலகலைஞர்களுக்கும் கொடுக்கிறோம் ஆனால் தமிழைக் காப்பதற்காக சிறை சென்றவர்களுக்கு, உயிர் நீத்தவர்களுக்கு, அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு இந்த 150ரூபாய் என்று வைத்திருப்பது மிகவும் குறைவானது. குறைந்தது ரூ. 400 ஆவது அல்லது ரூ.500 ஆவது கொடுக்கின்ற விதத்தில் இந்த அரசு அதைக் கவனிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப் போலவே, இன்னொன்றையும் இங்கே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். புலமைப் பரிசு என்று ஒன்று வைத்திருக்கிறார்கள். அதிலே ஒரு கருத்து சொல்லப்படுகிறது. அது என்ன? அவர்களுடைய 'பினான்ஷியல் கண்டிஷன்'—வருமானம், வருடத்திற்கு ரூ. 5,000—க்கு மேலே போய்விட்டால், புலமைப் பரிசு அவர்களுக்குத் தரப்பட மாட்டாது. யாருக்கு அந்தப் புலமைப் பரிசு என்றால் கலைஞர்கள் எழுத்தாளர்கள், தமிழ் ஆர்வம் உடையவர்கள்' தமிழ் அறிஞர்கள், ஆராய்ச்சித் துறையிலே ஈடுபாடுடைய மாணவர்கள், அதைப் போலவே, இந்தமாதிரி தமிழ்த் துறையிலே ஈடுபட்டவர்களுக்கெல்லாம் ஆண்டு வருமானம் ரூ. 5,000,-க்குக் குறைவாக இருந்தால்தான் புலமைப் பரிசு ரூ. 5,000 தரப்படும் என்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. நீங்கள் கொடுப்பது புலமைப் பரிசு. புலமைப் பரிசுக்கும் தனி நபருடைய வருமானத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இடையாது. புலமையிலே போய், மாத வருமானமோ, வருடக் கணக்கோ, 'இன்கம் சீலிங்' வருமான வரம்பு வைப்பது தவறான அணுகு முறையாகும். புலமைக்காகத்தான் இந்தப் பரிசு தரப்படுகிறது. எனவே, வருமான வரம்பு இருக்கக் கூடாது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு கருத்தையும் இந்த மசோதாவிலே சொல்லியிருக்கிறார்கள். புலமைப் பரிசைப் பெறுவதாக இருந்தாலும் அல்லது தியாகிகள் குடும்பத்தவர்கள் உதவித் தொகையைப் பெறுவதாக இருந்தாலும் 3 மாதங்கள் அவர்கள் தமிழ்நாட்டிலே ஆப்

சென்ட்டாகி விடுவார்களானால், தமிழ்நாட்டிலே இந்தக் கவிஞர்களோ, எழுத்தாளர்களோ, தியாகிக் குடும்பங்களோ 3 மாதங்கள் தொடர்ந்து இல்லையென்றால் அவர்களுக்கு இந்தப் பரிசு ரத்து செய்யப்படும் என்று இந்த மசோதாவில் குறிப்பிடப்படுகிறது. 3 மாதங்கள் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது 3 மாதங்கள் கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தமிழ்நாட்டிலே இல்லையென்றால் அவர்களுக்கு எல்லாம் பரிசு இல்லை, அவர்களுக்கெல்லாம் உதவித் தொகை இல்லையென்று சொல்கிறீர்களே அந்த நேரத்தில் உங்களது அரசவைக் கலைஞர் வைஜயந்திமாலா அவர்கள் பர்மனென்ட்டாக பம்பாயிலேதானே குடியிருக்கிறார். தமிழ்நாட்டிலே இல்லையே. பம்பாயிலேயே நிரந்தரமாக இருக்கிறார்; தமிழ்நாட்டிலே குடியிருப்பே கிடையாது. அவருக்கு மட்டும் மாதம் ரூ. 1,000 ஹாணரோரியம் தருகிறீர்கள். இன்கம் சீலிங் கிடையாது. ஆனால, அதே நேரத்திலே இங்கே இருக்கக் கூடிய தமிழைக் காப்பதற்காக உயிர்நீத்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வேலையை ஒட்டி வெளியூர் போகலாம்; கல்வித் துறை சம்பந்தமாக வெளியூர் போகலாம்; அல்லது வியாபார ரீதியாக வெளியூர் போகலாம்; அல்லது வயதான காலத்திலே தங்களுடைய பிள்ளைகள், மற்றவர்களுடைய ஆதரவை நாடி வெளியூர் போகலாம். ஆகவே, தொடர்ந்து 3 மாத காலம் அவர்கள் தமிழ்நாட்டிலே இல்லையென்றால் அந்த உதவித் தொகை அல்லது பரிசுத் தொகை ரத்து செய்யப்படும் என்பது எந்தவிதத்திலும் நியாயமாகாது.

அடுத்து, 3 மாதங்கள் அவர்கள் இல்லையென்பதை எப்படி கணக்கெடுப்பார்கள் அதற்கு என்ன ஸ்கேல் வைத்திருக்கிறார்கள். அட்டென்டன்ஸ் மெயின்டெயின் செய்வார்களா? பாதுகாப்பது யார்? வழக்கமாக, இந்த ஆட்சியிலே, ரூ. 10, ரூ. 20 லஞ்சம் கொடுத்துவிட்டால், அவர்களுடைய சக்திக்கு தகுந்தபடி, அது பரிசீலிக்கப்பட்டு, போலி சர்ட்டிபிகேட் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்குமா, இருக்காதா? ஆகையால் இந்தப் பிரிவை அகற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். இதிலே இருக்கக்கூடிய தியாகி என்றால் யார் என்ற டெபனிஷனைப் பார்த்தீர்களானால் அதிலே சொல்லியிருக்கிறார்கள், தமிழ்ப் பண்பாட்டைப் பாதுகாப்பவர்கள், தமிழ் மொழியில் ஆர்வம் உடையவர்கள், தமிழ் மொழியில் சான்றாண்மையைக் காட்டுபவர்கள், இதைப் போலவே தமிழ் மொழிக்காக உயிர் நீத்தவர்கள் என்று போடப்பட்டிருக்கிறது. சரி, அதை நான் வரவேற்கிறேன். ஆனால், அதே நேரத்தில், அரசியல் உள்நோக்கத்தோடு இதிலே நீங்கள் சிலரை தமிழ் அறிஞர்களாக இருந்தும்கூட தமிழ் அறிஞர்கள் அல்ல; தமிழ் அறிவு படைத்தவர்கள் அல்ல; தமிழ் ஆர்வம் படைத்தவர்கள் அல்ல என்று சொல்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. தமிழ் அறிஞர்களிடத்திலே, தமிழ் உணர்வு பெற்றவரிடத்திலே பல கருத்து வேறுபாடுகள் கூட இருக்கலாம்



நாவலரும் தமிழ் அறிஞர்தான்; அதற்காக அவர் சொல்கின்ற எல்லாக் கருத்துகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. நாவலர் பார்க்கலாம், நான் சொல்கின்ற கருத்தை அவர் ஏற்றுக்கொள்ளவில்லையே, அந்தத் தமிழறிஞர் ஏற்றுக் கொள்ளவில்லையே, ஆகையினாலே, அவர் தமிழ் அறிஞர் பிரிவிலே வரமாட்டார் தமிழ் ஆர்வம் உடையவர் என்ற பிரிவிலே வரமாட்டார், தமிழ்ப் பண்பாடு தெரிந்தவர்கள் என்ற பிரிவிலே வரமாட்டார்கள் என்று அவர் முடிவு கட்டி விட்டால் உண்மையிலேயே தமிழறிவு படைத்த, தமிழ்ப் பண்பாட்டைப் பாதுகாக்கும், தமிழ் ஆர்வம் பெற்றிருப்பவர்களுக்குக் கூட அந்த வாய்ப்பு கிடைக்காமல், ஒரு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சர்க்காரின் விருப்பு வெறுப்புகளுக்குத் தகுந்தபடி செயல்படுகின்ற ஒருவருக்கு அந்தப் பரிசும் 150 ரூபாயும் போய்விடுகின்ற காரியமாக இருந்துவிடக் கூடாது; அதற்கான அபாயம் இதிலே இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

அதைப்போலவே, இந்த சர்க்காருக்கு லாலி பாடுகின்ற சில தமிழ்ப் புலவர்கள், தமிழறிஞர்கள் அல்லது தமிழ் கற்காவிட்டாலும் தமிழ் கற்றதுபோன்ற பாவனையில் இருப்பவர்களுக்கெல்லாம் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை வளர்ப்பதற்கான ஒரு சாதனமாக இந்த சர்க்காருக்கு லாலி பாடுபவர்கள், இந்தச் சர்க்கார் செய்கின்ற தப்புகளை சரிதான் என்று கவிதை வடித்துக் கொடுப்பவர்கள், இப்படிப் பட்டவர்களுக்கு இந்தப் பரிசுகளும், உதவித் தொகைகளும் போய்விடுகின்ற சூழ்நிலைகள் இருந்துவிடக் கூடாது என்பதை இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்,

அதைப்போலவே இன்னொன்றையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். நிச்சயமாக தமிழைப் பாதுகாப்பதைப் போலவே தமிழர்களையும் நாம் பாதுகாக்க வேண்டிய கட்டாயத்திலே இருக்கிறோம். நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். தமிழர்கள் இல்லாவிட்டால் தமிழே கிடையாது; இராமன் இல்லாமல் கம்பனுடைய காவியமே இல்லை. ஆகவே, தமிழர்கள் இருந்தாக வேண்டும். பிற மாநிலங்களுக்கு மருத்துவக் கல்லூரியாக இருந்தாலும் என்ஜினியரிங் கல்லூரியாக இருந்தாலும் நாம் இட ஒதுக்கீடு செய்கிறோம். யாருக்காக? தமிழறிஞர்களைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக சட்டம் கொண்டு வருகிறீர்கள். ஆனால் இட ஒதுக்கீடு யாருக்குச் செய்யப்படுகிறது? மருத்துவக் கல்லூரிக்கு மைசூரில் ஒதுக்கப்பட வேண்டிய ஒரு இடத்தை யாருக்கு ஒதுக்கியிருக்கிறீர்கள்? இதுபற்றி ஏற்கனவே இந்த அவையில் குற்றச் சாட்டைச் சொல்லுகின்ற நேரத்தில், இன்னொருவரின் பெயரும்

இருக்கிறது; கேட்டால் சொல்கிறேன் என்று சொன்னேன். ஒரு மலையாளிக்கு ஒதுக்கியிருக்கிறீர்கள், ஆனால் தமிழனுக்கு ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். மைசூர் மருத்துவக் கல்லூரிக்கு ஒரு மலையாளிக்கு ஒதுக்கி இருக்கிறீர்களே, அது என்ன நியாயம் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் திரு. அரங்கநாயகம் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியுமோ தெரியாதோ எனக்குத் தெரியவில்லை. எஞ்ஜினியரிங் கல்லூரிக்கு ஆந்திரா விற்கு இடம் ஒதுக்கப்படுகிறது. நாம் தமிழருக்குத்தான் இடம் ஒதுக்க வேண்டும். ஆனால் அந்த இட ஒதுக்கீடு யாருக்குப் போய்ச் சேருகிறது என்றால், தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட ஆந்திராவைச் சேர்ந்த ஒரு ஆள், இங்கே உள்ள கல்விநிலையத்தில் அவர் வேலை பார்க்கிறார். அவருடைய நேட்டிவிட்டி ஆந்திரா தான், அவருக்கு அந்த இட ஒதுக்கீடு தரப்பட்டிருக்கிறது. தமிழ் அறிஞர்களைப் பாதுகாப்பதற்காக 150 ரூபாய் தருகிறோம் என்று சொல்லிவிட்டு, தமிழ் ஆர்வம் உடையவர்களுக்குத் தருகிறோம் என்று சொல்லிவிட்டு, தமிழர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய இடத்தை ஆந்திராக்காரருக்கும், தமிழர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய இடத்தை மலையாளிக்கும் ஒதுக்கக்கூடிய அளவிற்கு தமிழ் உணர்வு படைத்த முதல் அமைச்சர் இருக்கலாமா, தமிழ் உணர்வு படைத்த நாவலர் இருக்கலாமா? அப்படிப் பட்ட நிலையில் இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே இன்னொன்றையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இது மசோதாவிற்குச் சம்பந்தம் இல்லை என்று அமைச்சர் நாவலர் அவர்கள் கருதக்கூடாது. கண்ணகி கோயில் இன்றைக்கு இருக்கிறது; மங்களாதேவி கோயில்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த மசோதாவின் மீது உறுப்பினரவர்கள் பேசி முடிக்க வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : நான் சொல்ல விரும்புவது தமிழைக் காக்க வேண்டும்; தமிழனைக் காக்க வேண்டும்; தமிழகத்தைக் காக்கவேண்டும். இந்த மூன்றும் வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு போன்றது. ஒன்றைவிட்டு ஒன்று செய்ய முடியாது. ஆகவே, நான் இர்ரெலவண்டாகப் பேசவில்லை. அரசாங்கத்தின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன். இது பொதுப் பிரச்னை; தமிழர்களின் பிரச்னை. எனவே, அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுதான் அதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மங்களாதேவி கோவிலைப் பற்றி ஏற்கனவே பேசினோம். தமிழ்நாட்டின் எல்லையிலே இருக்கிறது. கேரளாவில் ஃபார்ஸ்ட் மினிஸ்டர் நூருதீன் என்று கருதுகிறேன், அவர் சொல்லியிருக்கிறார், எங்களுக்குத்தான் இந்தக் கோயில் சொந்தம், கேரளாவிற்குத்தான் சொந்தம், சித்திரா பவுர்ணமிக்கு



வரக்கூடியவர்களுக்கு, தமிழர்களுக்கு வருவதற்கு வாய்ப்புகூட இல்லை என்று தடுத்திருக்கிறார்கள். ஆனால் அதேநேரத்தில் சேத்தி தொலைபேசியிலே பேசியதாகத் தகவல் கிடைத்திருக் கிறது. திரு. சேத்தி பேசினாலும் சரி, யார் பேசினாலும் சரி, எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவல்களின் அடிப்படையில் சொல்கிறேன், என்னுடைய ஏரியாவைச் சேர்ந்த பகுதிதான்; கம்பம் போன்ற பகுதியைச் சேர்ந்ததுதான்; அங்கேயிருந்து தகவல் தெரிவித்திருக்கிறார்கள். அங்கே உள்ளே நுழைய முடியாத அளவிற்கு சிக்கல்கள், கேரளா போலீஸ் எல்லை யிலே பாதுகாப்பாக, கேரளாவிற்குப் பாதுகாப்பாக இருந்து தமிழ்நாட்டு பக்தர்களைத் தடுப்பதற்காக எல்லையிலே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. உள்ளே நுழைய முடியாது. இன்றிரவு, 26 ஆம் தேதியாகிய இன்றிரவு வழக்கம்போல் சித்திரா பவுர்ணமி விழா அந்தப் பகுதியில் கொண்டாடப் படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தப் பிரச்னைகளெல்லாம் இதிலே வரவில்லை. இந்த மசோதாவில் பேசி முடிக்க வேண்டும்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இந்த ஒரு கண்ணகி கோவில் விவகாரத்தை சட்டசபையில் பேசினார்கள். உடனே பெல் துணைத் தலைவர் பாண்டியன் அவர்கள் என்று சேரளத்திலே அடித்து உட்கார வைத்துவிட்டார்கள் சொல்வார்கள்...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைப்பற்றி நீங்கள் பயப்பட வேண்டாம். நான் பார்த்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் ; இன்னும் சொல்லப்போனால், நம்முடைய இடத்திலே நம்முடைய கோவிலுக்கு நம் பக்தர்கள் பணம் கொடுத்துப் பார்க்க வேண்டும். பாஸ் சிஸ்டம் வைத்திருக்கிறார்கள். ஆக அதையெல்லாம் அரசாங்கம் கவனிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். காரணம்—ஏற்கனவே கச்சத் தீவை நாம் பறிகொடுத்திருக் கிறோம், தேவிகுளம், பீர்மேடை பறிகொடுத்துவிட்டோம். ஆக பல்வேறு இடங்களை நாம் பறிகொடுத்துவிட்டோம். நம்முடைய சொந்த பூமியில், நம்முடைய கோவிலில் நம்முடைய பக்தர்கள் பணம் கொடுத்து பார்ப்பது சரியல்ல. இதை அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்னொன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஆங்கிலத்தில் எடுக்கப்பட்டு வெற்றிகர காந்தி சினிமாப்படம் மாக ஓடிக் கொண்டிருக்கிறது. அண்மையில் தேசிய நிகழ்ச்சியில் அந்த காந்தி படத்தைப் பார்த்தேன். டில்லியிலே இருக்கக் கூடிய இந்தி வெறியர்கள் இந்தி மொழிக்காகப் போராடு கிறார்கள். டி. வி. ஸ்டேஷன் இங்கேயிருக்கிறது. டில்லியிலே ஒலிப்பரபக்கூடிய காந்தி சினிமாவை இந்தியிலே காட்டு

கிறார்கள். நான் கேட்கிறேன்—எங்களுடைய தாய் மொழியிலே இதைக் காண்பிக்கக் கூடாதா? தமிழைப் பாது காக்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிற இந்த சர்க்கார் இங்கே ஒரு செய்தித் துறை இருக்கிறது. தனியாக இதற்கான ஏற்பாடு செய்யவேண்டாமா என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தியாவினுடைய அரசியல் சட்டத்திலே, இந்திதான் இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக வரவேண்டும், இந்தி நாடு முழுவதும் பரப்பப்படவேண்டும், இந்தியை நாடு முழுவதும் வளர்க்கவேண்டும் என்று தெளிவாகச் சொல்லியிருக்கின்ற அரசியல் சட்டத்தினுடைய அந்தப் பிரிவை மாற்றவேண்டும் என்று சொன்னபோது, இதைக் கண்டிக்கின்ற விதத்தில், வங்கக்கடல் ஓரத்திலே உறங்கிக்கொண்டிருக்கின்ற வரலாற்றுத் தலைவர், பேரறிஞர் அண்ணா அவர்கள் இதைத் தீயிட்டுப் பொசுக்கினார்கள். இந்திய அரசியல் நிர்ணய சபையில் தலைவர்கள் சேத் கோவிந்ததாஸ், புருஷோத்தமதாஸ் அவர்கள் இந்திதான் இந்தியாவினுடைய ஆட்சிமொழியாக வரவேண்டு மென்று சொன்னார்கள். அதற்கு இந்தியாவிலே ஆட்சிமொழி யாக இருப்பதற்கு தகுதி உங்களுடைய இந்திக்கு இருக்குமானால் அது எங்களுடைய அன்னைத் தமிழ்த்தாய் மொழிக்குத் தான் தமிழுக்குத் தான் உண்டு என்று வர்தாடினார்கள்.

காஞ்சிபுரம் கோவிலில் இருக்கக்கூடிய யானைக்கு வடகலை நாமம் போடுவதா அல்லது தென்கலை நாமம் போடுவதா என்பது போன்ற விஷயம் அல்ல இது. இந்தியாவினுடைய தலைவர்கள் அபுல்கலாம் ஆசாத் போன்றவர்கள் துரதிருஷ்ட வசமாக....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த மசோதாவைப் பற்றிப் பேசுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : ஆகையால் அந்த இந்தி ஆதிக் கத்தைத் தடுப்பதற்காக நாம் எல்லாவிதத்திலும் முயற்சி செய்யவேண்டும். நேருவின் வாக்குறுதியை சட்ட வடிவம் ஆக்குகின்ற விதத்திலே ஏற்கனவே அரசு ஒரு தீர்மானம் கொண்டுவரவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. தலைவரவர் களே, தமிழ்க் கலாச்சாரம் பாதுகாக்கப்படவேண்டும், தமிழ் மொழி பாதுகாக்கப்பட வேண்டும். தமிழ் பயிற்சி மொழியாகக் கல்லூரியிலே இருக்கிறது. ஆனால் அவர் களுக்கு கொடுக்கப்படுகிற ஸ்டைபண்ட் ரூ. 150 தான் பி. யூ. சி. இல் படிக்கின்றவர்களுக்கும் ரூ. 150, பி. எல். படிக்கிறவர்களுக்கும் ரூ. 150 தான். இது என்ன நியாயம்? பாரதிதாசன் சொல்லியிருக்கிறார் — ஒரு பெண் தன்னுடைய கணவன் எப்படி இருக்க வேண்டுமென்று சொல்கின்றாளாம் — 'தமிழ் கற்ற அத்தானைத் தான் மணக்கவேண்டுமென்று விரும்பு வதாக' பாரதிதாசன் அவர்கள் சொல்கிறார்கள். மங்கை



ருத்தி தருகிற சுகமும் எங்கள் மாத்தமிழுக்கு இல்லையென்றார். ஆனால் நாவலர் அவர்கள் மேடையில் அற்புதமாக முழங்கு றார். ஆனால் தமிழ்ப் பயிற்சி மொழியாக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு ரூ. 150/– ஸ்டைபெண்டாகக் கொடுப்பது நியாய மில்லை என்று சொல்லி, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. துரைமுருகன் : தவறானதாக வந்துவிடப்போகிறது என்பதற்காகத்தான் சொல்கிறேன். மங்களா தேவியைப் பற்றி மக்கள் மத்தியிலே எப்படி வரும் என்று சொல்கிறே னென்றால்.. (குறுக்கீடுகள்) நாவலரும் நீங்களும் ஜாக்கிரதை யாக இருக்க வேண்டும். பாண்டியனுக்கு கண்ணகி பிடிக்க வில்லை.. (குறுக்கீடுகள்).

(முற்பகல் 11–30).

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் தமிழ் மொழிபால் இருக்க வேண்டிய பற்றைப் பற்றியும் இந்த மொழிக்கு நாம் தர வேண்டிய முக்கியத்துவததைப் பற்றியும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான் ஒரு செய்தியை இங்கே சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். இந்த மன்ற உறுப்பினர்களின் நல்லாசியோடும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களது வாழ்த்துக்களோடும் டெல்லி மாநகரத்தில் நடை பெற்ற ஒரு கருத்தரங்கிலே நான் மூன்று நாட்கள் கலந்து கொண்டேன். முதல் முறையாக இதுவரையில் வரலாற்றிலே இல்லாத அளவிற்கு தமிழில்தான் நாங்கள் பேசுவோம் என்று வாதாடி அந்தக் கருத்தரங்கிலே முதல் முறையாக தமிழிலே பேசி, என்னைத் தொடர்ந்து அந்தந்த தென் மாநிலத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவரவர்கள் மொழியிலே பேசி, தமிழ் மொழியிலேதான் நாங்கள் பேசுவோம் என்பதற்கு அவர்கள் ஒத்துக்கொண்டு உடனடியாக மொழி பெயர்ப்பு வசதியை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அந்தக் கருத்தரங்கின் மூலமாக நாம் அங்கே இருக்கிறவர்களுக்கு மொழிப் பற்றிலே யாருக்கும் நாம் சளைத்தவர்கள் அல்ல, தமிழிலேதான் பேசு வோம் என்ற உணர்வைக் கூட டெல்லி மாநகரத்திலே நாங்கள் சொல்லிவிட்டு வந்திருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதே அவையில் ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஜெயராமன் அவர்களும் நானும் டெல்லிக்கு ஐந்தாண்டுத் திட்டங்களின் பிரச்னைகள் சம்பந்தமாக சட்ட மன்றத்தின் சார்பாக அனுப்பப்பட்டபோது வெங்கட்ராமன் அவர்கள் தலைமை வகித்தார்கள். தமிழிலே பேசக்கூடாது என்று முன்னமே மறுத்தார்கள். பிறகு நாங்கள் அதை

எதிர்த்து தமிழிலே பேச ஏற்பாடு செய்யப்பட்டு நாங்கள் பேசினோம் என்ற அந்தப் பழைய சம்பவத்தையும் சேர்த்துச் சொன்னால் நாங்களும் இதிலே அக்கறை உடையவர்கள் என்பது தெரியும்.

திரு. என். வரதராஜன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழி வளர்ச்சி, தமிழ் பண்பாடு வளர்ச்சி, இதற்காக இன்னுயிரைக் கொடுத்து இழந்தோர்கள் குடும்பங்களுக்கு உதவித் தொகையை வழங்க வகை செய்யும் இந்த சட்டமுன்வடிவின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இன்று தமிழ் மொழியைப்பாதுகாக்கவேண்டும், அதை வளர்க்கவேண்டும் என்று உழைத்து பாடுபட்டு உயிர் நீத்த தியாகிகளுக்கு நிதி அளிக்க, நிதி உதவி அளிக்க இந்தச் சட்டம் வகை செய்கிறது. எனவே அதை நான் வரவேற்கிறேன். அதேநேரத்தில் அப்படிப்பட்ட நிதி அளிக்கும்போது அரசு மிக உஷாராக இருந்து, கண்காணித்து இந்தப் பட்டியலைத் தயாரிக்க வேண்டும் என்பதை நான் எடுத்துச்சொல்லியாக வேண்டும். ஏன் என்றால், இன்றைக்கு தியாகிகள் பட்டியல் தயார் செய்கிறபோது நமக்கு இருக்கிற சங்கடங்கள் எல்லாம் தெரியும். ஆகவே அப்படிப்பட்ட ஒரு பட்டியல் தயார் செய்கிறபோது அதிலே கண்காணிப்பு, உஷார் தன்மைகள் இருக்கவேண்டும் என்று நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, இந்தச்சட்டமுன்வடிவிலே இந்த எழுத்துத் துறையிலே ஆற்றல் மிகுந்தவர்கள், புலமை பெற்றவர்களுக்கு உதவித் தொகை வழங்கவேண்டுமென்று எடுத்துச்சொல்லப் பட்டிருக்கிறது. இது மிகவும் வரவேற்கத்தகுந்தது. நம்முடைய தமிழ் மொழியை பல்வேறு துறைகளிலே ஆற்றல் மிக்கதாக இன்று வளர்த்துக்கொண்டு இருக்கின்ற மாணவர்கள், ஆசிரியப் பெருமக்கள் இன்னும் பல அறிஞர்களுக்கு இந்த உதவித் தொகையை வழங்கவேண்டும். அதை வழங்குகிறபோது வெறும் கலை இலக்கிய வடிவத்தில் மட்டும் நாம் இதை பார்க்கக்கூடாது. இன்று வளர்ந்து வருகிற விஞ்ஞான யுகத்தில் தொழில் வளர்ச்சி பலவிதமான கருத்து வளர்ச்சிகள் தத்துவ வளர்ச்சியிலே இன்றையதினம் மாணவர்களும், பேராசிரியர்களும் ஆர்வம் கொண்டு அதிலே ஆய்வு செய்து அதிலே பல வெற்றி களைக் கண்டு வருகிறார்கள். புதியபுதிய தொழில் கண்டு பிடிப்புகளைகூட செய்து அதிலே வெற்றி பெற்றிருக்கிறார்கள். மொழி வளர்ச்சியிலே அப்படிப்பட்ட முயற்சியை இன்றைய தினம் மேற்கொண்டு வருகிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் இந்தப் பரிசு கிடைக்கிற முறையிலே நம்முடைய ஆய்வு இருக்கவேண்டும். நம்முடைய உதவித் தொகை அந்த விதத்தில் கிடைக்க அதற்காக குழுக்கள் அமைக்கவேண்டும். அந்தக் குழுக்களின் மூலமாக கவனமாகப் பரிசீலிக்கவேண்டும். இப்படிப்பட்ட முன் முயற்சிகளை எடுத்துக்கொள்ளக்கூடிய மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஊக்கத்தொகை வழங்குவதிலே முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்.



ஆண்டு வருமானம் 5 ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்டால் அவர்களுக்கு இந்த உதவித்தொகை கொடுக்க இயலாது என்று சொல்கிறார்கள். சாதாரணமாக பேராசிரியர்களோ அல்லது பல்வேறு துறையைச் சேர்ந்தவர்களோ இந்த வருவாயை இன்றையதினம் பெறமுடியும். அவர்களுக்கு ஊக்கத்தொகை கொடுக்கத் தான் இந்தப் பணத்தை கொடுப்பதாக சொல்கிறார்கள். அவர்களுடைய ஆய்வுக்கும் அவர்களுடைய ஊக்கப் பணிகளுக்கும் இந்த ஊக்கத்தொகை உதவிடவேண்டும். அவர்களுடைய வறுமையைக் கணக்கிட்டு நாம் இந்தத் தொகையை கொடுக்கவில்லை. இந்த வரம்பு என்பது இப்படிப்பட்டவர்களுக்கு தேவையில்லை என்று நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது ஒன்று. இந்தச் சட்டமுன்வடிவையொட்டி சில கருத்துக்கள் அவையிலே வருவது இயற்கை. ஆனால் இன்று காலம் காலமாக முடிந்துபோன ஒன்றை எழுப்பி சர்ச்சைகளாக் அதை உருவாக்கி அண்டைய மாநில மக்களுக்கும் நமக்கும் தகராறுகள் உண்டாக்கக்கூடிய சிக்கல்கள் வந்துவிடக்கூடாது. ஒரு கட்டத்தில் நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஒன்றை இந்த அவையிலே சொன்னதன் காரணமாக அது கேரளாவிலே எதிரொலித்து அதற்குப் பின்னாலே இந்த அவையிலே வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் அந்த நோக்கத்தோடு நான் சொல்லவில்லை என்று தெளிவாக உரைத்தார்கள். ஏன் என்றால் நம்முடைய நாட்டினுடைய பல பகுதிகளில் இருக்கக்கூடிய மக்களை ஒருவரோடு ஒருவர் மோதவிடுவதற்கு சில தீய சக்திகள் முயற்சி செய்து கொண்டிருக்கிற காலம். அண்டை மாநிலங்களில் இருந்து — குறிப்பாக ஆந்திராவில் இருந்து நாம் தற்போது கிருஷ்ணா நதி நீர் பெற இருக்கிறோம். காவிரி நீர் கருநாடகத்தில் இருந்து அதிகம் பெறவேண்டும் என்று முயற்சிக்கிறோம். இன்றைக்கு கொண்டுவரப்பட்ட ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலம் நாம் பார்த்தோம் — பெரியார் நீர்த் தேக்கத்தில் அதிக நீர் சேமித்து வைத்து எடுத்து வருவதற்கான சலுகையை கேரள அரசிடம் இருந்து எதிர்பார்க்கிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் மீண்டும் தேவிகுளம், பீர்மேடு பிரச்னையைக் கிளப்புவது சரியல்ல. மாநில மொழி அடிப்படையில் 1956 ஆம் ஆண்டு பிரிக்கப்பட்டபோது அது கேரள மநிலத்திற்கு சேரவேண்டும் என்று சொல்லப்பட்டு விட்டது. அப்படிப்பட்ட பிரச்னைகளை மீண்டும் மீண்டும் எழுப்புவது சரியானதாக இருக்காது. அது மேலும் மேலும் சர்ச்சைகளை உருவாக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இங்கே கவலையோடு ஒரு பிரச்னையை நான் தெரிவிக்க விரும்புகிறேன். கண்ணகி கோவிலைப் பற்றி ஒரு தகராறு தற்போது ஏற்பட்டு இருக்கிறது. அது அவ்வளவு நல்லதல்ல. அழகானதும் அல்ல. அமைதி ஏற்படவேண்டும் என்று நாம் அனைவரும் விரும்பவேண்டிய ஒரு செயலாக அது இருக்கிறது. அந்தக் கோவிலுக்கு யார் வேண்டுமானாலும் வந்து வழிபட

லாம். அதற்குள்ளே செல்வதற்கு கட்டணங்கள் விதிக்கப்பட மாட்டாது என்று கூட கேரள அரசு அறிவித்து இருக்கிறது. அதிலே அவர்களுடைய பிரச்சினை என்ன, அவர்களுடைய வேறு விதமான உரிமைகள் என்ன என்பதில் அரசு தலையிடலாம். அது குறித்து கலந்து பேசலாம். அதற்காக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வரலாம். அப்படிப்பட்ட நிலையில் நாம் செல்ல வேண்டுமே தவிர சர்ச்சையை வளர்க்கும் நிலையை உருவாக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். இதில் மிகவும் கவன மாக நாம் இருக்கவேண்டும். அண்டைமாநிலங்களோடு நாம் உறவைப் பலப்படுத்துகின்ற நேரத்தில், உரிமைகளையும் பாது காத்துக்கொள்வதிலும் கவனமாக இருக்கவேண்டும்.

இந்தச் சட்ட முன்வடிவின் மீது நான் ஒன்றை நினைவு படுத்த விரும்புகிறேன். தமிழ் நாட்டில் தமிழ் வளர்ப்போரை, அதிலே திறமை பெற்றோரை நாம் ஊக்குவிக்க உதவித் தொகை வழங்குகிறபோது கல்லூரிகளில் சப்ஜெக்ட்டுகளை தமிழில் படிக்கும் மாணவர்களுக்கு கொடுக்கும் உதவித் தொகை போதாது என்று தமிழக மாணவர்கள் குரல் கொடுக்கும் அவல நிலை இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதில், உதவித் தொகை கொடுப்பதில் இன்னும் கொஞ்சம் தாராளமாக இருக்கவேண்டும் என்று எடுத்துச் சொல்லி, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று அமர்கிறேன்.

*திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ் மொழியை அல்லது தமிழ் பண்பாட்டைப் பேணிக் காப்பதில் ஒப்பற்ற ஆர்வத்தைக் காட்டும் முயற்சியில் தங்கள் இன்னுயிரை இழந்தோரின் குடும்பங்களுக்கு உதவித் தொகை அல்லது மானியம் வழங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்யவும், தமிழ் மொழியில் சிறந்த புலமையுடையோருக்கு உதவித் தொகை அல்லது மானியம் வழங்குவதற்கான ஏற் பாட்டைச்செய்யவும், தமிழ் மொழி வளர்ச்சி அல்லது தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியைப் பேணிக்காக்கும் பேரார்வத்தில் தங்களது துணிவை அல்லது சான்றாண்மையைப் புலப்படுத்தி யோருக்கு உதவித் தொகை அளித்தல் அல்லது மானியம் வழங்குதல் என்ற சிறந்த காரியத்தைச் செய்துமுடிக்க இருக்கக் கூடிய வகையிலே இந்த மசோதா இந்த அவையிலே கொண்டு வரப்பட்டு இருக்கிறது. இந்த மசோதாவின் நோக்கங்கள் நல்ல நோக்கங்களாக இருக்கின்றன என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெளிவாக எடுத்துரைக்க விரும்புகிறேன்.

அதே நேரத்தில், இந்த மசோதாவில் குறிப்பிட்டு இருக்கி[illegible] காரியங்களைச் செய்து முடிப்பதற்கு தமிழக அரசு மிகவு[illegible] எச்சரிக்கையாகவும் கவனத்தோடும் இருக்க வேண்டும். இந்[illegible] உதவித் தொகை வழங்கக்கூடிய பொறுப்பை அந்த வகை[illegible] நிறைவேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் [illegible] கேட்டுக்கொள்கிறேன்.





தமிழ் மொழியைப் பாதுகாக்கவேண்டும், பண்பாட்டை வளர்க்கவேண்டும் என்ற லட்சியத்தை நிறைவேற்றக்கூடிய நேரத்தில், நம்முடைய தமிழகத்தில் இன்றைக்கு தமிழ் ஆட்சி மொழியாக இருக்கும் இந்த நேரத்தில், இன்றைக்கும் கல்லூரி களில் போதனா மொழியாக ஆங்கிலம் பெருவாரியான கல்லூரி களில் இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழை போதனா மொழியாக எடுத்துக் கொண்டு கல்லூரி களில் படிக்கும் மாணவர்களுக்கு, அவர்களுக்கு தொழில் கல்வி அல்லது மருத்துவக் கல்வி போன்ற பாடங்களை மேற்கொண்டு படிப்பதற்கு சிரமங்கள், இன்னல்கள் ஏற்படுகின்றன. இம் மாதிரியான தொழில் கல்வியிலே, மருத்துவக் கல்வி போன்ற வற்றிலே அதற்குத் தேவையான பாடப் புத்தகங்கள் மற்று வைகள் இன்றையதினம் தமிழிலே தயாரித்துக் கொடுப்பதில் சிரமங்கள் இருக்கின்றன என்பதையும் நாம் உணரவேண்டும். ஆகவே, அதன் காரணமாக ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாக உயர்பட்டப்படிப்புகளில் அந்த மாணவர்கள் படிக்க வேண்டிய அவல நிலை இருக்கிறது. இந்த நிலை இருப்பதன் காரணமாக கிராமப்புறங்களிலும் தற்போது நர்சரி பள்ளிகள் என்று ஆங்கிலத்தைப் பாடமொழியாக வைத்து பள்ளிகள் ஆங்காங்கு துவங்கப்படுகின்ற பேரார்வமும், போக்குகளும் தமிழகமெங்கும் பெருகி வருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-40)

ஆகவே, நாம் அறிவித்திருக்கிற கொள்கையை ஆரம்பத்தி லிருந்தே முழுமையாக நிறைவேற்றுவதற்கான வழிவகைகளை செய்ய வேண்டியது அவசியம் என்பதால் அதை சிறு குழந்தை களிடத்திலிருந்து தோற்றுவிக்க வேண்டும். இன்றைக்கு சிறு குழந்தைகளிடத்தில் ஆங்கிலத்தை போதனா மொழியாகக் கொண்டு பயிற்சி அளித்து வருகின்ற சூழ்நிலை வளர்ந்து வருகிறது; அதை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் கல்லூரிகளிலும் முழுமையாக தமிழ் பயிற்சி மொழியாக அங்கீகரிக்கப்பட்டு, அதன் மூலமாக விஞ்ஞானப் பாடங்கள், தொழில் நுட்ப கல்லூரிகளில் நடைபெறுகிற பயிற்சிகள் ஆகியவற்றை முழுமையாக தமிழ் மொழியிலேயே நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதன் மூலமும், மேலும் நம்முடைய மொழி வளர்ச்சிக்கு உத்தரவு தம் அளிக்கப்படுவதன் மூலமும் தகுந்த நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும். அது இத்திட்டத்திற்கு பேருதவியாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. இரா. கருப்பையா] [1983 ஏப்ரல் 26

இம்மாதிரியான உதவித் தொகை வழங்குவதன் மூலம் புல
மையை வளர்ப்பதற்கு, தமிழ் பண்பாட்டை வளர்ப்பதற்கு,
அதன் மூலம் சிறந்த நல்லவர்களை உருவாக்க வேண்டும்
என்பதற்காக போதிய ஆக்கமும் ஊக்கமும் காட்ட வேண்டு
மென்பது நம்முடைய கொள்கை. இந்த கொள்கை அரசாங்கத
திற்கு இருக்கிறது என்று கூறும்போது, இதற்காக நாம் ஒரு
வருமான வரம்பை நிர்ணயித்து, அதற்குக் கீழே இருக்கக்
கூடியவர்களுக்குத்தான் இந்த உதவித்தொகை என்று கூறக்
கூடிய நேரத்தில் இது ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டு,
ஏழையாக இருக்கக்கூடியவர்களுக்கு, தமிழ்ப் புலமை பெற்றிருக்
கிறவர்களுக்கு வழங்குகிறார்கள் என்ற உணர்வை ஏற்படுத்தும்.
யாராக இருந்தாலும் சரி, மொழிப்பற்று, மொழி ஆர்வம்.
தமிழ் பண்பாடு ஆகியவற்றை பேணிக் காப்பதில் எந்த முயற்சி
யில் யார் யார் ஈடுபட்டு இருந்தாலும் சரி அவர்களைப்
போற்றிப் பாதுகாக்க வேண்டியது நம்முடைய கடமை என்ற
உணர்வோடு அதற்கு எந்தவிதமான வருமான வரம்போ,
தடையோ இல்லாமல் இந்த மசோதா அமைய வேண்டுமென்று
கூற விரும்புகிறேன்.

அடுத்து நான் கூற விரும்புவது, இந்தமாதிரி உதவித் தொகை
வழங்குவதற்கு தகுதி நிர்ணயித்து, அந்தத் தகுதியைப் பற்று
இருக்கக்கூடியவர்கள் அந்தத் தொகையைப் பெறுவதற்கான
ஏற்பாடுகளைச் செய்வதற்கு தகுதியாளர்களைக் கொண்டு,
அறிஞர்களைக் கொண்டு ஒரு குழு அமைக்க வேண்டும். அதன்
மூலமாக நாம் என்ன கருத்தை நிறைவேற்ற வேண்டுமென்று
விரும்புகிறோமோ அந்தப் பொறுப்பை அந்தக் குழுவிடம்
ஒப்படைத்து, அந்தக் குழுவின் மூலமாக விருப்பு வெறுப்பு
களுக்கு அப்பாற்பட்டு அதை நாம் நிறைவேற்ற வேண்டிய
முறையிலே காரியங்களைச் செய்யவேண்டும் எந்த அளவுக்கு
இந்த தமிழ் மொழியிலே புலமை, ஆர்வம் கொண்டிருக்
கிறார்கள், சான்றாண்மை பெற்றிருக்கிறார்கள், அறிவாளியாக
இருக்கிறார்கள் என்று ஆராய்ந்து முடிவு செய்ய முழுமையான
முறையிலே குழு அமைக்கப்பட்டு அதன் மூலமாக இந்த உதவித்
தொகையை வழங்கக்கூடிய பொறுப்பை ஒப்படைக்க வேண்டும்
என்றும் அதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்றும்
கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி.
வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு
மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று பேரவையினுடைய
விவாதத்திற்காக வைக்கப்பட்டுள்ள, தமிழ் மொழிக்கு
ஆக்கம் தேடுபவர்களுக்கு ஓய்வு ஊதியம் அளிப்பதற்காக
கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டமுன்வடிவை மாண்புமிகு
உறுப்பினர்கள் முழு மனத்தோடு வரவேற்று, சீரிய பரிந்துரைகள்
சிலவற்றையும் நல்கி, இதனை ஆதரித்திருப்பதற்காக



1983 ஏப்ரல் 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட ஒரு சட்ட முன்வடிவு
கொண்டுவரப்பட்டு, அது சட்டமாக்கப்பட வேண்டும் என்ற
எண்ணம் இந்த அரசுக்கு நீண்ட நெடுங்காலமாகவே இருந்து
அது இன்று நிறைவேறப்போகிறது என்பதிலே நான் தனி
பூரிப்பும் பெருமையையும் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அதை மிகமகிழ்வோடு வரவேற்று
இருப்பதற்கு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். மாண்புமிகு
உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் அதை வரவேற்றிருக்
கிறார்கள் என்றாலும், 'மகிழ்வோடு' அதை நிறுத்தியிருப்
பார்களேயானால் மிக நன்றாக இருந்திருக்கும். ஒரு நாள்
குற்றச்சாட்டை சொல்லாமல் விட்டு விட்டு வேறு வகையிலே,
வேறு நிலைமையிலே எடுத்துரைத்திருக்கலாம் என்று விட்டிருப்
பார்களேயானால் மிகவும் பெருமகிழ்ச்சியுடையவனாக
இருப்பேன். இருந்தாலும் எல்லோரும் வரவேற்றிருப்பதற்காக
என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் மொழியினுடைய வளர்ச்சிக்கும், தமிழ்ப்பண்பாட்டை
கட்டிக் காக்கவும் வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும்
செய்வதிலே இன்றைய அரசு முனைந்து இருக்கிறது என்பதை
இந்த மன்றம் மிக நன்றாக அறியும். தமிழ் மொழியை பல்வேறு
வகை களிலே ஆக்கம் பெறச் செய்ய வேண்டும், அதற்குத்
தேவைப்படுகிற ஊக்கம் தருகிற பல்வேறு நிலைகளை
உருவாக்கவும், தமிழ் வளர்ச்சித் துறை என்ற ஒரு துறையைக்
கொண்டு அதன்மூலம் தமிழை வளர்க்கவும், தமிழ்ப் பண்பாடு
களை வளர்க்கவும், பழம்பெரும் போற்றக்கூடிய பண்டிதர்
களுக்கு ஆக்கம் தரவும் பல பணிகளைச் செய்து வருகிறோம்.
அப்படி தமிழ் வளர்ச்சித் துறை ஒன்று தனியாக இயங்கி
வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

தமிழ் மொழியில் திறமையும், ஆர்வமும் இருந்துவரும்
இளைஞர்களுக்குஅந்தத் திறமையையும், ஆர்வத்தையும் வளர்க்க
ஊக்கம் அளிக்க வேண்டும் என்பது இந்தச் சட்டமுன்வடிவின்
முக்கிய நோக்கமாகும். தமிழுக்கு பெரும் தொண்டாற்றியவர்கள்
அதிலும் குறிப்பாக, தமிழினுடைய ஆற்றல் நிலை கருதி,
அது என்றைக்கும் நின்று நிலை பெறவேண்டும் என்று கருதி,
அதற்காக சிறைத்தண்டனையை ஏற்று, பல கொடுமைகளுக்கு
ஆளாகி, தங்களை முழுமையாக அர்ப்பணித்து, தங்களுடைய
இன்னுயிரையும் நீக்க முன்வந்தவர்களும், அவர்களுடைய
குடும்பமும்; அது மட்டுமல்லாமல், தமிழ் மொழியின்பால் உள்ள
ஆர்வத்தால் அல்லது தமிழ் மொழி வளர்ச்சியைப் பாதுகாக்க
அல்லது தமிழ் பண்பாட்டைக் காத்திட தங்கள் துணிவையும்,
சான்றாண்மையையும் மிகச் சிறப்பான முறையில் வெளிப்
படுத்திய ஒவ்வொருவருக்கும் உதவித் தொகை வழங்குவது
அல்லது மானியம் அளிப்பது அல்லது இரண்டையும் வழங்குவது
என்பதற்காக வழி செய்கிற வகையில் இந்தச் சட்ட முன்வடிவு

கொண்டுவரப்பட்டிருக்கிறது. தமிழையும், தமிழ்ப பண்பாட்டையும் வளர்ப்பதில் சிறந்த ஆர்வம் காட்டியவர்களை நம்பியிருப்பவர்களுக்கும் தமிழ்மொழியின்பால் அதிக ஆர்வம் காட்டுவதில் அல்லது தமிழ் வளர்ச்சியைப் பாதுகாப்பதில் அல்லது தமிழ்ப் பண்பாட்டைக் கட்டிக் காப்பதில் இன்னுயிர் நீத்தவர்களை நம்பியிருப்பவர்களுக்கும் உதவித் தொகை அல்லது மானியம் அல்லது இவை இரண்டையும் வழங்கவும் இந்தச் சட்ட முன்வடிவு வகை செய்திருக்கிறது. தமிழில் ஆன்ற புலமையை வெளிப்படுத்துகின்ற மாணவர்களுக்கும், தமிழில் பேரார்வம் காட்டுகின்ற ஆசிரியர்களுக்கும், தன்னிகரற்ற புலவர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் ஊக்கம் அளிக்க வேண்டும் என்பதுதான் இந்தச் சட்ட முன்வடிவின் முக்கிய நோக்கமாகும்.

நீண்ட நெடுங்காலமாக தமிழை கற்று ஆய்ந்து, தமிழை வளர்க்க அரும்பெரும் பாடுபட்டு வந்த இப்போது நலிந்திருக்கின்ற புலவர் பெருமக்களுக்கு வேறு பல வகைகளிலேயும் நம் ஊக்கம் அளித்து வருகிறோம். தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலமாக கலைமாமணி பட்டம் வழங்கப்படுவது; அவர்களுக்கு பொற்பதக்கங்கள் வழங்குவது போன்ற பணிகள் ஒரு பக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அது மட்டும் அல்லாமல் தமிழ்தென்றல் திரு. வி. க. அவர்களுடைய பெயராலே ஆண்டுதோறும் 10 ஆயிரம் ரூபாய் பரிசை ஒரு சிறந்த தமிழ் பேரறிஞருக்கு அளிபபது என்று முடிவு எடுத்து, அதுவும் சென்ற ஆண்டிலிருந்து தொடர்ந்து தரப்பட்டு வருகிற பாங்கினையும் இந்த அவை நன்கு அறியும். தமிழ் மொழி வளர ஆக்கம் தந்து, ஊக்கம் தந்து, அரியணைகளிலே மட்டும் வாழ்ந்து கொண்டிருந்த தமிழை குடிசையில் உள்ளவர்களுக்கும் கற்பிக்கும் வகையில், பண்டிதர்கள் மட்டுமே புரிந்து கொண்டிருந்த தமிழை பாமரர்களும் புரிந்துக் கொள்ளக்கூடிய வகையில் தமிழுக்கு உயிரோட்டம் தந்து, வீழ்ச்சி பெற்றிருந்த தமிழ் நல் எழுச்சி பெறவேண்டும், எல்லோருக்கும் நன்மை பயக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அரும்பாடு பட்ட பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயராலும் 10 ஆயிரம் ரூபாய் பெறுமான நிதி ஒன்றை ஏற்படுத்தி அறிஞர் அண்ணா அவர்களுடைய அழகு தமிழை பரப்புகின்றவர்களுக்கு இந்த பத்தாயிரம் ரூபாய் வழங்குகின்ற ஒரு திட்டமும் நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

அது மட்டும் அல்லாமல் இந்தக் காலத்தில் வாழ்ந்து வருகின்ற கவிஞர்களை வாழவைக்கவும், அவர்களுக்கு ஊக்கம் அளிக்கவும், பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் வழியில் காலத்திற்கேற்ற, நாட்டினுடைய மேம்பாட்டிற்கேற்ற கருத்துக்களை வழங்கிவரும் பாடல்களை இயற்றும், அவருடைய பரம்பரையின் கீழ் இருப்பவர்களில் மிகச் சிறந்த கவித் தொண்டாற்றியவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் பரிசளித்து கௌரவிப்பது என்ற ஒரு திட்டம் 4, 5 ஆண்டுகளுக்கு முன்பே தயாரிக்கப்பெற்று வழங்கப்பட்டு



வருகிறது. அதிலே மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான்
அவர்கள் சொல்லியதுமாதிரி, கட்சி வேறுபாடு அல்லது வேறு
எந்த வேறுபாட்டையும் அடிப்படையாக வைக்காமல், உள்ள
படியே தமிழ் மொழியை வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்தை
யார் கொண்டிருக்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் அந்தப்
பரிசை வழங்குவதுதான் பெருமையையும் பூரிப்பையும் அளிக்
கின்ற செயலாகும் என்று அந்த வகையிலேதான் அளித்துக்
கொண்டு வருகிறோம். அப்படி அளிக்கப்பட்ட அந்த பட்டியலை
கேட்டிருப்பார்களேயானால், அதில் மிகச் சிறப்பாக நீங்கள்
காணலாம்,

(முற்பகல் 11-50)

பாரதிதாசனுக்கு மிகச்சிறந்த தொண்டராக சீடராக
இருந்த வாணிதாசன் இந்தப் பரிசைப் பெற்றிருக்கிறார்.
சுரதா அவர்கள் இந்தப் பரிசைப் பெற்றிருக்கிறார். பட்டுக்
கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் குடும்பத்ினருக்கும்
அவர் சிறந்த தமிழ் தொண்டு ஆற்றினார் என்று கூட இந்த
10 ஆயிரம் ரூபாய் பாரதிதாசன் விருது வழங்கப்பட்டிருக்கிறது.
அருமாதிரி திரு வி.க.வினுடைய விருது திருக்குறள்
முனுசாமியார் அவர்களுக்கும வழங்கப்பட்டிருக்கிறது. இப்படி
சிறந்த தமிழ் பெரும் புலவர்களை காப்பாற்றிக்கொண்டு
வருகிறோம். அது தவிர நலிந்த தமிழ்ப் புலவர்களுக்கு அவர்
களுடைய வாழ்க்கையை செம்மையுற நடத்தவேண்டும் என்று
250 ரூபாய் ஓய்வு ஊதியம் தருகின்ற ஒரு திட்டம் தமிழ்
வளர்ச்சித்துறை சார்பாக கிட்டத்தட்ட 400, 500க்கு மேற்பட்ட
தமிழ் பெரும் புலவர்கள் தனியாக பெற்றுக்கொண்டு
வருகிறார்கள். ஆனால் இந்தச் சட்டம் தமிழுக்காக பாடுபட்டு
தங்களுடைய இன் உயிரையும் பொருட்டடுத்தாமல் தங்களுடைய
உடமை, மற்ற இழப்புகளையெல்லாம் பொருட்படுத்தாமல்
தங்களை ஒப்படைத்தவர்களுக்கு நாம் மரியாதை
செய்கிறோம், மதிப்பு அளிக்கிறோம் என்பது மட்டும் அல்லாமல்
அவர்களுக்கு ஊக்கம் தருகின்ற வகையில் இந்த உதவித்
தொகை மைய வேண்டும் என்று உதவித் தொகையும் மாத
ஓய்வு ஊதியத் தொகையும் அல்லது மானியம் அல்லது
இரண்டையும் வழங்க ஏற்பாடு செய்கின்ற அளவுக்கு இந்தச்
சட்டமுன்வடிவு கொண்டு வரப்பெற்று இருக்கிறது. நாட்டுப்பற்று
கொண்டு நாட்டுப்பற்றுக்காக உழைத்தவர்களை எவ்வளவுக்கு
எவ்வளவு மதிக்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு தாய்
மொழி பற்றுக்கொண்டு தாய் மொழிக்காக பாடுபடுகிறவர்
களுக்கு நாம் முழு ஆதரவும், முழு ஒத்துழைப்பும் தரவேண்டி
யிருக்கிறது. ஆகவே நாட்டுக்காக உழைத்து, நாட்டு விடுதலைப்
போராட்டங்களில் எல்லாம் ஈடுபட்டு நாட்டுக்கு உரிமை,
விடுதலை முழங்கவேண்டும் என்று புரட்சிகளில் பாடுபட்டவர்
களுக்கு ஏற்கனவே நாம் இப்படிப்பட்ட ஓய்வு ஊதியங்களை
கிட்டத்தட்ட 6 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களுக்கு மாதந்

தோறும் வழங்கிக்கொண்டு வருகிறோம். அதைப்போன்று தாய் நாட்டுப் பற்று எவ்வளவுக்கு எவ்வளவு முக்கியமோ, அவ்வளவுக்கு அவ்வளவு தாய் மொழிப் பற்றும் அமைகிறது. ஆக தாய் மொழிப் பற்று தான் தாய் நாட்டுப் பற்றுக்கு அடிப்படையாக அமைகிறது என்பதை தமிழ் தந்தை திரு.வி.க. அவர்கள் அடிக்கடி வற்புறுத்தி வந்ததை நாம் நன்கு அறிவோம். அது மட்டும் அல்லாமல் மொழி எவ்வளவு சிறப்புற காப்பாற்றப்பட வேண்டியது என்பதை நாம் நன்கு உணருகிறோம். மனிதன் கண்டுபிடித்த கருவிகள் என்று நாம் பார்க்கிறபோது மனிதன் காட்டுமிராண்டி காலத்திலிருந்து நகர்ந்து நாகரீகம் பெறுகிற நிலைக்கு வருகிறபோது அவன் கண்டுபிடித்த கருவிகளில் மிகத் தலையான கருவியாக நாம் கருதப்பட வேண்டியது மொழிதான். அவன் எவ்வளவோ கண்டுபிடித்து வந்திருக்கிறான் என்றாலும் கூட தலையாய கருவி மொழிதான். மொழிதான் சிந்தனையை வெளிப்படுத்தும், மொழிதான் சொல்லை வெளிப்படுத்தும், மொழிதான் செயலுக்கு ஆதாரமாக விளங்குகிறது. மொழிதான் நாகரீகத்தை வளர்க்கிறது. மொழிதான் பண்பாட்டை வளர்க்கிறது. மொழிதான் 2 ஆயிரம், 3 ஆயிரம், 4 ஆயிரம் ஆண்டு காலத்திற்கு முன்னால் இருக்கக்கூடிய அறிஞர்களுடைய அரும் பெரும் கருத்துக்களை கொண்டு வந்து வைக்கிறது. மொழியை மட்டும் மனிதன் கண்டுபிடிக்காமல் போயிருப்பானானால் அத்தனை பேரும் காட்டுமிராண்டிகளா இருந்து இருக்கவேண்டுமே தவிர, விலங்கு இனங்களோடு சேர்ந்து இருக்கவேண்டுமே தவிர அத்தனைக்கும் அடிப்படைக் காரணம் மொழிதான். ஆகவே மனிதன் கண்டுபிடித்த கருவிகளில் தலையாய கருவி, முதன்மையான கருவி, சிந்தனையை வளர்த்த கருவி எண்ணங்களை வளர்க்க காரணமாக இருந்த கருவி, நாகரீகத்திற்கு தூண்டுகோலாக இருந்த கருவி, பண்பாட்டை வளர்க்கக் காரணமாக இருந்த கருவி, கலையினை வளர்த்த கருவி, அறிவியலை வளர்த்த கருவி, வளர்க்கும்படி தூண்டுகிற கருவி, பிறரை சிந்திக்கும் படி செய்கிற கருவி அத்தனைக்கும் அடிப்படை மொழிதான். ஆகவே மொழிக்கு தனிப் பற்றையும் மற்றைய நிலைகளையும் வைத்திருக்கிறார்கள். தமிழ் பெரும் புலவர்கள் எல்லாம் எந்த அளவுக்கு இதிலே பற்றுகொண்டு விளங்கி வந்திருக்கிறார்கள் என்பதை எல்லாம் நன்கு அறிவோம். வால்ட் விட்மேன் என்ற அமெரிக்க நாட்டில் ஒரு பெரும் கவிஞர் மிகச் சிறப்புற எழுதும்போது வளர்ந்த ஒரு நாட்டில் எழுத்து பாழ்பட்டாலும் கூட நாம் புதுபித்துக்கொள்ளலாம். ஒரு நாடே அழிந்து போனாலும் கூட அந்த நாட்டை புதுப்பித்துக் கொள்ளலாம். ஒரு நகரமே அழிந்து போனாலும் கூட அந்த நகரத்தை புதிதாக பொலிவுற்றதாக நாம் ஆக்கிக் கொள்ளலாம். கட்டிடங்கள் இடிந்து போனாலும், புதுப்பித்துக் கொள்ளலாம். பாலங்கள், சாலைகள் மற்றவைகள் அழிந்துபோனாலும் கூடபுதுப்பித்துக் கொள்ளலாம். உடைமைகள், உடைகள், நகை நட்டுகள் எல்லாம் போய் விட்டாலும் கூட நாம் புதுப்பித்துக் கொள்ளலாம்; ஆனால் வாழ்ந்து வளர்ந்து நாகரீக செம்மைகொண்டு பண்பாடு கொண்டு மக்களால் பாராட்டிய ஒரு பெரும் மொழி வீழ்ந்து படுமானால் அதைக் கவனிக்காமல்



போய்விடுவோமானால் மறுபடியும் பழைய நிலைக்கு அந்த மொழியைக் கொண்டு வந்து சேர்ப்பது என்பது அவ்வளவு எளிதான ஒன்று அல்ல. மற்றதை எதையும் புதுப்பித்துக் கொள்ளலாம். ஆனால் மொழியை புதுப்பித்துக் கொள்ள முடியாது என்று அமெரிக்க நாட்டு மிகப்பெரும் கவிஞராக விளங்கிய வால்ட் விட்மேன் ஒரு இடத்தில் மிக அழகுபெற எடுத்துச் சொன்னார். அப்படி நாம் பார்க்கிறபோது சாக்கரட்டீஸ், பிளாட்டோ, பெரிகிளீஸ், டெமஸ்தினிஸ் இவர்கள் எல்லாம் பேசிய கிரேக்க மொழி இன்றைக்கு பேசப்படவில்லை. கிரேக்க நாட்டில் இருக்கிற மொழிக்கும் சாக்கரட்டீஸ் பேசிய கிரேக்க மொழிக்கும் சம்பந்தம் இல்லை. இப்போது ரோம் நாட்டில் கூட ஜூலியஸ் சீஸர், ஆண்டோணி போன்றவர்கள் எல்லாம் பேசிய மொழிக்கும் இப்போது இருக்கின்ற, அங்கு பேசப்படுகின்ற ரோமானிய மொழிக்கும் சம்பந்தம் இல்லை. ஆக, லத்தின் மொழி ஆகட்டும், கிரேக்க மொழி ஆகட்டும் ஒரு காலத்தில் பேசப்பட்டு சிறந்த சிந்தனையை எடுத்துச் சொல்லிய அந்த 2 மொழிகளும் கால வெள்ளத்திலே அழிக்கப்பட்டு, இப்படி ஏட்டு வழக்கோடு இருக்கிறதே தவிர அதிலே இலக்கியங்கள் இருக்கின்றன, சாஸ்திரங்கள் இருக்கின்றன, அறிவியல்கள் இருக்கின்றனவே தவிர அன்றாடம் பேசுகின்ற அந்தத் தகுதியை அந்த 2 மொழிகளும் இழந்துவிட்டன. இன்னமும் சொல்லப்போனால் இயேசுநாதர் பேசிய ஹீப்ரு மொழிகூட இப்போது பேச்சு வழக்கிலே இல்லாமல் போய்விட்டது. அதை எப்படியாவது புதுப்பிக்க வேண்டும் என்பதற்காக இஸ்ரேல் நாடு ஐக்கிய நாடுகள் சபையின் உதவியின் பேரில் 30 ஆண்டுக்காலமாக அந்த மொழியைப் புதுப்பிக்கப் பார்க்கிறார்கள். ஆனால் பழைய நிலைக்கு அந்த மொழியைக் கொண்டுவர முடியுமா என்ற ஐயப்பாடு இருக்கிறது. சமஸ்கிருதம் என்றைக்குமே பேசப்பட்ட மொழியல்ல. அது என்றைக்குமே அறிஞர் பெருமக்கள் பேசுவதற்குப் பயன்படுத்தப்பட்ட மொழியாகத்தான் இருந்தது. சமஸ்கிருதம் என்றாலே நன்றாகச் செய்யப்பட்டது என்றுதான் பொருள். கிருதம் என்றால் செய்யப்பட்டது, சமஸ்கிருதம் என்றால் நன்றாகச் செய்யப்பட்டது என்று பொருள். நன்றாகச் செய்யப்படாத ஒரு நிலை இருந்தால்தான் நன்றாக செய்யப்பட்டது என்ற ஒரு நிலை வருமே தவிர எடுத்த எடுப்பிலேயே நன்றாகச் செய்யப்பட்ட ஒரு நிலை வராது. ஆகவே அறிஞர் பெருமக்கள் மற்றவர்கள் உபநிஷத்துக்கள், வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள், இவற்றைப்பற்றி பேசுவதற்கு மட்டுமே உருவாக்கப்பட்ட மொழியே தவிர கடைத் தெருவிலே இருப்பவர்கள், வீட்டுத் திண்ணையிலே உட்கார்ந்திருக்கிறவர்கள், வீட்டிலே இருப்பவர்கள் ஒருநாளும் வடமொழியைப் பேசியதாக வரலாறே இடையாது. தமிழ் மொழி ஒன்றுதான் ஏட்டு வழக்கிலேயும் பேச்சு வழக்கிலேயும் இருந்து வருகிறது....

திரு. துரைமுருகன்: வடமொழி பேச்சு வழக்கற்றுப் போன ஒரு மொழி. தமிழ் உயர்தனிச் செம்மொழியாக இருக்கிறது என்று நாவலர் அவர்கள் சொன்னது காதுக்கு இனிமையாக

இருக்கிறது. ஆனால் உங்கள் அமைச்சரவையிலே இருக்கிற மாண்புமிகு அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் இந்த சமஸ்கிருதத்தை நாங்கள் படிக்க வேண்டாம் என்று 30 ஆண்டுக் காலம் இப்படி அதன்மீது ஒரு கெட்ட எண்ணத்தை ஏற்படுத்தி விட்டோம்; அதற்காக வருந்துகிறோம் என்று சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அப்படி கழகம் ஒரு தீர்மானம் போடவில்லை. கழகத்திற்கு அப்படிப்பட்ட எண்ணமும் இல்லை, அதிலே இருக்கிறவர்கள் யாருக்கும் இல்லை. ஆகவே தனிப்பட்ட கருத்தாக இருக்கலாம். ஆகவே தனிப்பட்டு அவரவர்கள் சொல்கிற உணர்வுகள், கருத்துக்களையெல்லாம் ஜெனரலைஸ் பண்ணக்கூடாது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையும் அல்ல, பெரும்பாலோருடைய கொள்கையும் அல்ல, எந்தக் கொள்கையை ஏற்கெனவே வற்புறுத்தி வந்தோமோ அதிலே கடுகளவும் மாறவில்லை, இம்மியளவும் மாறவில்லை, எள்ளளவும் மாறவில்லை. அடிக்கடி நான் சொல்வதை திரு. துரைமுருகன் திருப்பித்திருப்பிச் சொல்வார். என் மூக்களவுக்கு மாறவில்லை முனையளவிற்கு மாறவில்லை என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால் மொழியினுடைய தன்மைகள் காப்பாற்றப் படவேண்டும் என்பதில் நாம் உன்னிப்பாக இருப்பதன் காரணமாக இன்றுவரையில் ஏட்டு வழக்கு, பேச்சு வழக்கு இரண்டிலேயுமே இருக்கிற கிளாஸிக்கல் லாங்குவேஜ் என்று சொல்லப்படுவதிலே தமிழ் மொழி மட்டுந்தான் அந்தப் பெருமையைப் பெற்றிருக்கிறதே தவிர ஹீப்ரு மொழி, லத்தீன் மொழி, கிரேக்க மொழி, சமஸ்கிருத மொழி இவையெல்லாம் பேச்சு வழக்கற்றுப் போய் விட்டன. சீன மொழி பழம் பெரும் மொழிதான். ஆனால் வடகோடி சீனன் பேசுவதை தென்கோடி சீனன் புரிந்துகொள்ள முடியாது. தென் கோடி சீனன் பேசுவதை வடகோடி சீனன் புரிந்து கொள்ள முடியாது. 2 சீனர்களும் எழுத்து மூலமாகவேதான்புரிந்து கொள்வார்களே தவிர அவர்களுடைய உச்சரிப்பு பல ஆண்டுக் காலமாக மாறிவிட்டது. ஆனால் தமிழ் இன்றைக்கு உயிரோடு இருப்பதற்குக் காரணம் அதைக் கட்டிக்காத்து வளர்த்துவந்த புலவர் பெருமக்களும், இலக்கண வரம்பு கெடாது கட்டிக் காத்து இலக்கணச் செம்மை காப்பாற்றப்பட்டு வந்த காரணத்தினால் தொல்காப்பியனார் தமிழைக்கூட இன்றைக்கு நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. அதிலே தாராளமாக லைசென்ஸ்கள், உரிமங்கள் வழங்கியிருப்பார்களானால் சங்க காலத் தமிழை நாம் இன்றைக்கு புரிந்து கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கும். இந்தப் பெரும் பணியைச் செய்தவர்களான இலக்கணப் பேராசிரியர்களை பாராட்ட வேண்டும், உரையாசிரியர்கள் பெருமக்களை நாம் பாராட்ட வேண்டும். அப்படி கட்டுக் கோப்புக்குள் காப்பாற்றிக் கொண்டு வந்ததன் காரணமாகத்தான் தொல்காப்பியத்தை, திருக்குறளை, அகநானூற்றை, புறநானூற்றை 1983 ஆம் ஆண்டு தெரிந்து கொள்ள முடிகிறது. மொழியைக் காப்பாற்றுவது என்பது



எவ்வளவு முக்கியமானது என்பதற்காக, மொழியை வளர்ப்பது எவ்வளவு முக்கியமானது என்பதற்காக மொழிக்காக தங்களை ஈவதிலே எவ்வளவு முக்கியம் இருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன். ஆகவே தமிழ் மொழிக்காகப் பாடுபட்டவர்கள், தமிழைக் காப்பதற்கான தன்மைகளிலே தங்களுடைய இனிய உயிரைக் கூட ஈந்து அதன் மூலமாக மக்களுக்கு உணர்ச்சியை ஊட்டிய காரணத்தினால் அதன் காரணமாக தமிழ் மொழியைக் காப்பாற்ற முனையும்பொழுது சிறைத்தண்டனை ஏற்பட்டாலும் கூட அதைத் தாங்கிக் கொள்கிற வலிவு பெற்றவர்கள் ஆகிய அத்தனை பேர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்பட வேண்டுமென்ற முறையிலே நல்ல எண்ணத்தோடு கொண்டு வரப்பட்டது. மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள், பேசிய உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் முழு மனதோடு வரவேற்றிருப்பதற்காக நான் மகிழ்ச்சியோடு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் 150 ரூபாய் போதுமா என்று கேட்டார்கள். நாம் 150 ரூபாய் ஓய்வூதியம் தருவோம். 5 ஆயிரத்திற்கு மேற்படாத அளவிற்கு அவர்களுக்கு மானியம் தரலாம். இரண்டும் தரலாம், அவர்களுடைய தகுதி, திறமையைப் பொறுத்து. 150 ரூபாய் என்று வைத்து இருப்பதற்குக் காரணமே தியாகிகளுக்கே 150 ரூபாய் ஓய்வூதியத் தொகை என்று அறிவித்திருக்கிறோம். அதே அடிப்படையிலே இதிலே ஈடுபட்டவர்களுக்கும் 150 ரூபாய் என்று வைத்திருக்கிறோம்.

(நண்பகல் 12–00)

ஆனால் முதலிலே சொன்னதைப்போல 400, 500-க்கு மேற்பட்ட புலவர் மக்களுக்கு நலிந்தவர்கள் என்ற முறையிலே தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பாக 250 ரூபாய் கொடுத்துக் கொண்டு வருகிறோம். நான் முதலிலே சொன்னதைப் போல 10 ஆயிரம் தந்து கொண்டு வருகிறோம். 5 ஆயிரம் ரூபாய் என்று உச்சவரம்பு எடுக்கப்பட்டு விட்டது அமெண்ட்மெண்ட் மூலமாக என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே 5 ஆயிரம் ரூபாய் என்று இன்னும் சட்டத்திலே இருக்கிறது. ஆனால் இப்போது அண்மையில்—5 ஆயிரம் ரூபாய் என்ற உச்சவரம்பு இருந்தது—ஒரு அறிவிப்பின் மூலமாக அந்த 5 ஆயிரம் என்ற உச்சவரம்பு வேண்டாம் என்று எடுத்ததைப் போல, இந்தச் சட்டத்திற்கு நாம் அமெண்ட்மெண்ட் கொடுத்திருக்கிறோம். திருத்தம் வருகிற போது நிலைமைகள் மாறும். மாண்புமிகு ரகுமான்கான் அவர்களும் மற்றவர்களும் கூட வற்புறுத்தினார்கள். 5 ஆயிரம் ரூபாய் என்று உச்சவரம்பு வேண்டாம் என்று திருத்தத்தின் மூலம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே விதிமுறைகள் வருகின்ற போது மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய சீரிய கருத்துக்கள் மனதிலே கொள்ளப்பட்டு, அவைகள் நடைமுறைப்படுத்தப்படும். அதிலே ஏதாவது சிக்கல்கள், மற்றவைகள் ஏற்படுமேயானால் அவ்வப்போது திருத்தம் செய்து, சட்ட முன்வடிவினுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அரசு ஆயத்தமாக இருக்கிறது. இதிலே அரசியல் மாச்சரியமோ, கட்சி மாச்சரியமோ இல்லை. மொழிக்காக பாடுபட்டவர்கள் இப்போது [illegible]

டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1983 ஏப்ரல் 26

கட்சியில் வேண்டுமானாலும் இருக்கலாம். எல்லாக் கட்சிகளிலும் இருக்கிறார்கள். அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சியிலே இருக்கிறார்கள். எல்லைப் போராட்டத்திலே ஈடுபட்டவர்கள் எல்லாம் கூட தமிழரசு கழகத்திலே இருக்கிறார்கள். காந்தி காமராஜ் தேசிய காங்கிரசிலே இருக்கிறார்கள். தமிழிற்காகப் பாடுபட்டவர்கள் எந்தக் கட்சியிலே இருந்தாலும் அதுபற்றி கவலையில்லை, சில பேர்கள் இப்போது காங்கிரசிலே கூட சேர்ந்திருக்கிறார்கள். அங்கேயிருந்து பல பேர்கள் இங்கே வந்திருக்கிறார்கள். ஆகவே கட்சி வேறுபாடு கருதாமல் அவர்கள் பாடுபட்ட நிலைமையை, அவர்கள் ஏற்றுக் கொண்ட பொறுப்பையும், அடிப்படையாக வைத்து இந்த ஓய்வூதியம், மற்றதை வழங்க வேண்டுமென்று இருக்கிறதே தவிர ஒரு தனிப்பட்ட கட்சிக்காக என்று அல்ல. ஒரு பெரிய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நீண்ட நாட்களாக கனவாக இருந்த கொள்கை இன்றைக்கு நிறைவேறுகிறது என்பதிலே நமக்கெல்லாம் மகிழ்ச்சி ஏற்படுகிறது. இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்துப் பேசிய உறுப்பினர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த 150 ரூபாய் உதவித் தொகை பெற வேண்டுமென்றால் அந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் மூன்று மாதத்திற்கு வெளியூர் போய்விட்டால் வாங்க முடியாது என்று போட்டிருப்பது சரியல்ல. காரணம் அதை நாம் கணக்கிடுவதற்கு அளவுகோல் கிடையாது. சில காரியங்களை முன்னிட்டு அவர்கள் வெளியூர் போக வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எனவே தியாகிகள் பென்ஷனில், ஃப்ரீடம் பைட்டர்ஸ் உதவித் தொகையில் அப்படிப்பட்ட புரொவிஷன் இல்லை. எனவே இதை எடுத்துவிட வேண்டுமென்று அரசாங்கத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, வெளியூர் போகிறவர்கள் அமெரிக்காவிற்கும், மலேஷியாவிற்கும். சிங்கப்பூருக்கும் போய் இரண்டு. மூன்று மாதங்கள் இருந்துவிட்டு தமிழ்நாட்டிற்கு திரும்பி வருகிறார்கள் என்றால் அவர்களுடைய தன்மை என்ன? தமிழ்நாட்டை விட்டே வெளிநாடுகளுக்கு போய், அங்கேயே நின்றுவிடுகிறவர்களுக்கு தமிழகத்தின் சார்பாக உதவி தரப்பட வேண்டுமா என்பது தான் பிரச்னையாக இருக்கிறது, நடைமுறையிலே அதனுடைய சிக்கல்கள் எப்படி வருகிறது என்பதைப் பார்த்து, மாண்புமிகு ரகுமான்கான் கூறுவதைப்போல நடைமுறையிலே வருகிறபோது, விதிமுறைகளை வகுக்கிறபோது சிக்கல்கள் ஏற்படுமேயானால், அந்தச் சிக்கல்களை அவ்வப்போது எடுப்பதற்கான முயற்சியிலே அரசு முயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1983 ஏப்ரல் 26]

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் மொழி வளர்ச்சி பற்றி இந்தச் சட்டமுன்வடிவு ஆய்விற்கு பதில் அளிக்கிறபோது சொன்னார்கள். மனிதன் உருவாக்கிய கருவிகளில் மிக உயர்ந்தது மொழி. அது செயல், சிந்தனையுடைய பூரண வடிவம் என்று சொன்னார்கள். அந்த வளர்ச்சியிலே, அதனுடைய ஆற்றலிலே மொழிகளிலே வித்தியாசம் இருக்கிறது. நான் நிதியமைச்சரை கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம்— இந்த நாட்டிலே இருக்கிற அல்லது உலகத்திலே இருக்கிற 600 கோடி மக்கள் சமுதாயத்தை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். விஞ்ஞானத்திலே மிக உயர்ந்த நிலையை எட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பன்மொழிகளிலே பேசிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் மொழி அதைவிடச் சிறந்ததாக இருந்தாலும், இந்த மொழிகளை சகோதர மொழி என்று தமிழ் மொழி கருதுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அல்லது நம்முடைய அண்டை மாநிலங்களில் இருக்கிற மொழிகள் நமக்கு அபபாற்பட்டு எதிரிகளாக இருக்கக்கூடிய மொழியென்று தமிழ் மொழி கருதுகிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன். இதனுடைய விளக்கம் மிக முக்கியமானது என நான் கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மொழியை மதிப்பது வேறு; மொழியை திறனாய்வு செய்வது வேறு. நான் சொன்னது மொழியை திறனாய்வு செய்தேனே தவிர உலகத்திலே மூவாயிரத்து சில்லறை மொழிகள் இருக்கின்றன. இந்தக் கணக்கு இப்போது எடுக்கப்பட்ட சென்சஸ் படி வருகிறது. இந்தியாவிலே மட்டும் 590-க்கு மேற்பட்ட மொழிகள் இருக்கின்றன. அதிலே அரசியல் அமைப்புச் சட்டத்திலே ஏற்றுக்கொள்ளப்பட்ட மொழிகள் 15. ஆகவே காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்று சொல்வார்கள். அந்தந்த மொழிகளுக்கு உரியவர்களுக்கு அந்தந்த மொழி சிறந்த மொழியாகத்தான் இருக்கும். ஆனால், மதிப்பதைப் பொறுத்தவரையிலும் கிஞ்சிற்றும் யாரும் மாறுபாடு கொள்ளக்கூடாது; அந்தந்த மொழி இருக்க வேண்டிய இடத்திலே அந்தந்த மொழி இருக்கவேண்டும்; ஒரு மொழிக்கு உரிய இடத்திலே இன்னொரு மொழி வந்து ஆக்கிரமிக்கும் போது, ஆதிக்கம் செலுத்தும் போதுதான் மொழிக்கு உரியவர்களும், ஆதிக்கம் செலுத்துகிற மொழியைத் தள்ளி வைக்கவோ புறக்கணிக்கவோ அகற்றவோ முடிகின்றதே தவிர, அவரவர்களுக்குரிய உரிமைகளை அவரவர்கள் காப்பாற்ற வேண்டுமென்பதிலே கருத்து வேற்றுமை இடையாது.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் கண்ணகி கோயிலைப் பற்றிப் பேசினார்கள். கண்ணகி கோயிலுக்குச் சென்று பரம்பரையான முறையில் வழிபாடு செய்வதற்கு தமிழ்நாட்டிலிருந்து செல்லவிருக்கும் பிரமுகர்கள், பக்தர்கள் ஆகியோருக்கு போதிய பாதுகாப்பு நல்குவதற்கும், தேவையான ஏற்பாடு

களைச் செய்வதற்கும் மாண்புமிகு தமிழக முதல்வரிடமிருந்து கேரள முதலமைச்சருக்கு வேண்டுகோள் விடுத்து தந்தி அனுப்பப்பட்டது. தமிழக அரசின் தலைமைச் செயலாளரிடமிருந்து கேரள அரசின் தலைமைச் செயலாளருக்கு இதுபற்றி கடிதம் அனுப்பப்பட்டது. கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு தமிழகத்திலிருந்து கண்ணகி கோயில் செல்பவர்களுக்கு வசதி, பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதாக கேரள அரசிலிருந்து பதில் தந்தி வந்திருக்கிறது. பழைய பாரம்பரிய முறைப்படிதான் வழிபாடு செய்யவேண்டும்; புதிதாக சிலை ஏதும் வைக்கப்படக் கூடாது; மைக், ஜெனரேட்டர் போன்ற கருவிகள் பயன்படுத்தப் படக் கூடாது; கோயில் பகுதியிலுள்ள காட்டில் யாரும் இரவில் தங்கக் கூடாது என்பதாகும். மேற்கூறியவற்றில் 3-வது, 4—வது நிபந்தனைகளை விதிப்பது சரியானதல்ல என்றும், பக்திப் பாடல்கள் பாட மைக் வசதி, ஜெனரேட்டர் வசதி தேவையென்றும், கோயிலில் இரவில் தங்கக் கூடாது என்பது பாதுகாப்பானதல்ல; காட்டுப் பகுதியில் உடனே திரும்ப முடியாது என்றும் கூறி மீண்டும் தந்தி அனுப்பப்பட்டிருக்கிறது. கேரள அரசினர் போதிய வசதி அளிப்பார்கள் என்று நாம் கருதுகிறோம். மத்திய அரசினுடைய உள்துறை அமைச்சர் அவர்கள் கூட—பாராளுமன்ற உறுப்பினர்கள் முறையிட்டதன் பேரிலே, தக்க பாதுகாப்புக்களை தமிழகத்திலிருந்து செல்கின்றவர்களுக்கு அளிக்க வேண்டுமென்று கேரள அரசுக்கு தாம் அறிவுறுத்தியிருப்பதாக, மாண்புமிகு சேத்தி அவர்கள் டெல்லியிலே கூறியிருப்பது காலைப் பத்திரிகையிலே வந்திருக்கிறது. ஆகவே, எத்தகைய இடஞ்சலும் இல்லாமல், இடையூறும் இல்லாமல், இந்தப் பாதுகாப்பினை கேரள அரசு அளிக்கும், அவர்கள் கொடுத்திருக்கிற உறுதியின் அடிப்படையில் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு மாற்று சபாநாயகர் அவர்களே, அமைச்சருடைய விளக்கம் தெளிவாக இருந்தது. திருவிதாங்கூர் சமஸ்தானத்திலே மலையாள மொழி ஆதிக்கத்திலிருந்து தமிழ் மொழி பேசுகின்ற மக்களுடைய உரிமையையும் பெருமையையும் நிலைநாட்டுவதற்காக மொழிப் போரிலும், அதன் அடிப்படையிலே நிலப் போரிலும் தியாகம் புரிந்தவர்கள் தியாகிகள் என்பதை நாம் ஏற்கனவே வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தின்பொழுதே அறிவித்தோம். அவர்கள் இந்தப் பயனைப் பெறுவதற்குரிய ஏற்பாடுகளை நமது அரசு செய்வதற்கான வழிமுறைகளும் விதி முறைகளும் அதிலே இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு சிலபல அதிகாரங்களை நமக்குத் தந்திருக்கிறது; இதிலேயும் குறிப்பிடப்பட்டிருக்கிறது; அதற்கேற்றபடி விதிமுறைகளை மாற்றுவதற்கான உரிமைகளையும் நாம் பெற்றிருக்கிறோம். விதிமுறைகள் வருகின்றபொழுது, மாண்புமிகு உறுப்பினர்





கூறுவது போன்ற கருத்துக்கள் அவைகளில் இடம் பெறும் விதிமுறைகள் வகுத்ததற்குப்பிறகு அவையினுடைய உறுப்பினர். களுக்கு அதனுடைய முழு விவரங்களும் அனுப்பி வைக்கப்படும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்): பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல், பலவேறு விதித்துறைகள் 'சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 47/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்): பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

In clause 3, for Sub-clauses (3) and (4), substitute the following clause, namely;—

"(3) The Government may sanction scholarships not exceeding five thousand rupees in such number of instalments and in such manner, as may be prescribed to—

(i) students who have exhibited conspicuous talents or marked skill in Tamil language;

(ii) teachers who have evinced notable interest to the preservation and growth of Tamil language;

(iii) poets and writers of outstanding merit in Tamil language; and

(iv) persons engaged in research work in Tamil language or Tamil culture."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 4

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்) பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 4 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

In clause 4, - -

(1) in sub-clause (4), — —

(a) for items (i) and (ii), substitute the following item, namely:—

(i) the remarkable skill or conspicuous talent in the Tamil language exhibited by the applicant or the martyr, as the case may be;"

(b) renumber items (iii) to (vii) as items (ii) to (vi), respectively;

(2) in sub-clause (5), for the words "the financial position of the applicant and such other factors", substitute the words "such factors.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 4, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

(பிற்பகல் 12–10)

பிரிவுகள் 5, 6 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 7

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்) பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 7 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.

THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN: Sir, I move—

For, Clause 7, substitute the following Clause, namely;

"7 Cancellation of pension, etc., sanctioned on misrepresentation or fraud, etc.



If the Government are satisfied either on a reference made to them in this behalf, or otherwise that— —

(a) any pension, grant or scholarship sanctioned under this Act has been obtained by misrepresentation or fraud; or

(b) any pension, grant or scholarship has been sanctioned to any person under this Act under a mistake of fact; then the Government, may, by order in writing, cancel the pension grant or scholarship, as the case may be, so sanctioned.

Provided that no such order shall be made except after giving the person affected a reasonable opportunity of making his representations."

திருத்தம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 7, திருத்தப்பெற்றப்படி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 8, 9 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்): பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 1 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

THE HON. DR. V.R. NEDUNCHEHIYAN Sir, I move that—

'In clause 1, in sub clause (1), for the figures "1982", substitute the figures "1983"

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, திருத்தப்பெற்றப்படி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்): பேரவை முன்னுள்ள கேள்வி.—

"முகப்புரை சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

THE HON. DR. V.R. NEDUNCHEZHIYAN: Sir, I move that—

In the enacting formula, for the words "Thirty third Year" substitute the words "Thirty fourth Year,

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.—

''தமிழ்நாடு 1982–ஆம் ஆண்டு தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல்–பல்வேறு விதித்துறைகள் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 47/1982), திருத்தப்பெற்றபடி'' நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/1983)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் —

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு **(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 31/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, முதலில் இந்தச் சட்டத்தை என் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் இரு கை ஏந்தி வரவேற்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டம் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், மலைசாதியினருக்கும், பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்பதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். அதுகூட அனைத்துக் கட்சித் தலைவர்களும் கடந்த மாதம் 13-ஆம் தேதி கூடி எடுத்த முடிவுக்கிணங்க இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில், இந்தச் சட்டம் எவ்வளவு அத்தியாவசியமானது என்பதோடு, இந்தச் சட்டத்தோடு, இந்த விதியோடு,

---

**1983ம் ஆண்டு ஏப்ரல் 19ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





எவ்வளவு விரைவாக இந்தத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதை இந்த மாமன்றம் நன்கு அறியும். 2, 3 நாட்களுக்கு முன்னால் கூட, நம்முடைய முதலமைச்சர் கூட, இதே மாமன்றத்தில் பேசுகின்றபோது, இதுகுறித்து கருத்து தெரிவிக்கின்றபோது, வரும் ஜூலையில் நிச்சயமாக 100-க்கும் மேற்பட்ட தமிழ்நாட்டில் இருக்கின்ற முனிசிபாலிட்டித் தேர்தல் நடத்தப்படும் என்ற வாக்குறுதியையும் தந்திருக்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில் நாம் இந்தச் சட்டத்தைக் கையாளுகின்ற முறையைப் பார்த்தால், எனக்கு அச்சமாகத்தான் இருக்கிறது. நான் அமைச்சரவர்களுடைய மேலான கவனத்திற்கு கொண்டு வருவது 1920 ஆம் ஆண்டு சட்டத்தில் 7-வது பிரிவை திருத்துவதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதிலே 'In every Municipality the State Government shall, by no ificat on, from time to time, reserve for the members of the Scheduled Castes and Scheduled Trib s, such number of wards not exceeding 18 per cent of the total number of wards in that municipality and 15 per cent for women. என்று சொல்லப்பட்டிருக்கிறது. அங்கு கூட இந்த இட ஒதுக்கீட்டிற்கு இந்த அரசு தான் காரணம் என்று கருதியிருந்தேன். ஆனால் பெண்களுக்கும், ஹரிஜனங்களுக்கும், மலை ஜாதியினருக்கும், இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற சட்டத் திருத்தத்தை, கலைஞர் ஆட்சிக் காலத்திலே கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டுள்ளேன். அந்தத் திருத்தம் கூட 1973-ல் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆக Amendmen of Section (3) of District Municipalities Act. 1920 - அதிலே இந்த 3-வது பிரிவு திருத்தத்தை அப்போது கலைஞர் ஆட்சிக் காலத்தில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால்—'In every Municipality, the State Government shall, by notification from time to time reserve for the members of the Scheduled Castes and Scheduled Trib s and women' என்று ஹரிஜனங்களுக்கும், பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று 1973-ல் கலைஞர் ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்டது. இதிலே நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்றால், கொஞ்சம் 'என்ஹான்ஸ்' பண்ணியிருக்கிறீர்கள். அதிலே கூட 'நாட் எக்சீடிங் 18%. 15%—மேலே கொடுக்க மாட்டீர்களா? 18 சதவீதம் உறுதியாகத் தருவீர்களா? அந்த உறுதியை நம்முடைய அமைச்சரவர்கள் பதிலிலே தருவார்களா? (குறுக்கீடுகள்).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்): உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் 5 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட நேரத்திற்குள் உறுப்பினர்கள் தங்களுடைய பேச்சை முடித்துக் கொண்டால் தான், சபையை நடத்த முடியும். இந்த விவாதத்தை ஒரு மணிக்குள் முடித்தாக வேண்டும். ஆகவே நீங்கள் 5 நிமிடத்திற்குள் பேசி முடியுங்கள்.

திரு ப.பொன்னுரங்கம்: என்னப்பா, பேசவேண்டாமென்றால் பேசாமல் இருந்துவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, உறுப்பினர், அதுவும் இந்தச் சட்டமன்றத்திலே பேசக்கூடாத வார்த்தையை, வெளியிலே பேசுவது போன்று உறுப்பினர் இங்கே சபாநாயகராக யார் உட்கார்ந்திருந்தாலும், பேசியிருக்கிறார். அவர்களுக்குரிய மரியாதையை நாம் கொடுக்கவேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.கோபால்); அவைக்குத் தலைமை தாங்குபவரை அவ்வாறு அழைக்கக் கூடாது. மாண்புமிகு தலைவர் அவர்களே என்று அழைப்பது தான் முறை.

திரு. ப. பொன்னுரங்கம்: ஆக 1973-லே, இந்தச் சட்டத்தின் பிரிவிலே, கலைஞர் அவர்கள் காலத்திலே பெண்களுக்கும் ஹரிஜனங்களுக்கும், மலைஜாதியினருக்கும் இட ஒதுக்கீடு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்."

(பிற்பகல் 12-20)

அதுமட்டுமல்ல, இங்கே செக்சன் 3 "In every Municipality the State Government shall notify from time to time....From time to time' என்று சொல்கிறார்கள். சேர்மன் ஆனாலும் சரி, வார்டு கவுன்சிலராக இருந்தாலும் சரி, அந்தந்த நேரத்திற்கு மாற்ற முடியுமா? நான் கேட்கிறேன். from time to time-மா, அல்லது from term to term--மா? 1920 ஆக்ட்டிலே அப்படி from time to time என்றுஇருக்கிறது, அதை நாங்கள் என்ன செய்வது என்று சொல்லலாம். எங்கப்பா ஜிட்டு வைத்திருந்தார் என்பதற்காக நான் அப்படி இருக்க வேண்டுமா? 'Why don't you change it?, நீங்கள் பதில் சொல்லும்போது சொல்லவேண்டும். அரிசனங்கள் தான் இதிலே இருக்கவேண்டுமென்று ஒரு டெர்ம் வரைக்கும் from term to term அது வரைக்கும் டைம் டு டைம் என்று போட்டிருக்கிறீர்கள். அதைப் பாருங்கள். அடுத்து நீங்கள் சப்-செக்சன் 3, 3 (ஏ) அண்ட் 4 'The following shall be substituted' என்று சொல்லிவிட்டு அதோடு விட்டுவிட்டு 4 என்று வருகிறார்கள். அப்படியானால் 3 (ஏ) என்ன ஆயிற்று? முன்னாலே சொல்லும்போது, 3, 3 (ஏ) என்று போட்டிருக்கிறார்கள். 'What about 3-A?' அதைக் காணவில்லை. இப்படி கன்பியூஸ் செய்தால் இது எப்படி இருக்கும் என்று பாருங்கள், பில் கொண்டு வருவதிலேகூட ஒரு கன்பியூஸன். அப்படி இந்த பில் கன்பியூசாக இருக்கும்போது அதிலே ஒரு குழப்பம் வந்து கோர்டுக்குப்போகிறேன் என்று சொல்லுகின்ற அளவிற்குக் குழம்பிப் போய் இருக்கிறார்கள். அதனால்தான் இதை நீங்கள் தெளிவாகச் சொல்லவேண்டும் நான் அமைச்சர் அவர்களுக்குச் சொல்கிறேன்.



3-A-Notexceeding 25% நீங்கள் இதை ஏன் மறைத்திருக்கிறீர்கள் என்பதை நான் சொல்கிறேன். இதற்கு ஒரு விளக்கம் சொல்வதற்கு உங்களால் முடியவில்லை. இதை என்ன செய்வது என்று தெரியாமல் 3(ஏ) வை நீங்கள் காலி செய்து விட்டீர்கள். அதிலே ஒரு பெரிய குழப்பம். அதைத் தெளிவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இங்கே நீங்கள் சொல்கின்ற காரணங்கள், இங்கிலீஷ் பில்லை டிரான்ஸ்லேட் பண்ணுகிறார்கள். ரொம்ப பெக்குலியர். தமிழிலே டிரான்ஸ்லேட் பண்ணியிருக்கிறார்கள். ரிசர்வேஷனைப் பற்றி, ரொம்ப அருமையான டிரான்ஸ்லேசன். இதிலே 7 (ஏ)-வை அமைச்சர் அவர்கள் பார்க்க வேண்டும். ஆனால் நகராட்சித் தேர்தல் பதவி மகளிருக்காக ஒதுக்கப்பட்டிருந்தால் மகளிராக இல்லாத நபர் வேறு எவரும் என்று போட்டிருக்கிறார்கள். யார், மகளிராக இல்லாதவர் என்றால், அலியா? அப்படியா போடுவது? இதை எப்படிப் போடவேண்டும் என்றால், அரிசனங்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களிலே அரிசனங்கள் அல்லாதவர்கள் என்று போடுவது வழக்கம், அது என்னவென்றால் அரிசன அல்லாதவர் என்று சொல்கிறபோது பல ஜாதிகள், செட்டியார், நாடார், முதலியார், கிறிஸ்டியன், முஸ்லீம், என்ற பல ஜாதிக்காரர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தான் அரிசனங்கள் அல்லாதார் என்று போடவேண்டும். ஆகவே இதைப்போன்ற கன்பியூஸ்ட் ஆக டிரான்ஸ்லேட் கூட சரியாகச் செய்யவில்லை. எனவே இப்படிப்பட்ட நிலைமையிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு புதுக்குழப்பம், நீங்கள் தேர்தலைச் சீக்கிரம் நடத்தப் போகிறீர்களா, இல்லையா. ஏன் என்றால் இந்த மன்றத்திலே ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. நான் அதை அமைச்சருக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். உள்ளாட்சி மன்றங்களில் பெண்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் போதிய பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும். பெண்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்பட்டவர்களுக்கும் போதிய பிரதிநிதித்துவம் இருக்கவேண்டுமென்ற விருப்பத்தின் அடிப்படையில் இந்த இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதிலே பிற்பட்டவர்கள் யார்? இதற்கு வேறு நீங்கள் புரளவிட்டு பண்ணப்போகிறீர்களா? ஏன் என்றால் அண்மையிலே கூட இந்த அரசினுடைய பரிசீலனையில் இருப்பதாக. மீனவர்களுக்கு 10 சதவீதம் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லும்போது இதையும் கன்சிடர் பண்ணப்போகிறோம், சுவே தேர்தலைத் தள்ளிப் போடப்போகிறோம் என்று சொல்லப்போகிறீர்களா? சொன்னவர் யார் என்றால் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள். இதே மன்றத்திலே நாளைக்கு முன்னாலே For Scheduled Caste, Scheduled Tribe, Women and backward class என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இதிலே என்ன குழப்பம்

தேர்தலைச் சீக்கிரமாக் நடத்தப்போகிறீர்களா இல்லையா? தேர்தலைத் தள்ளிப் போடுவதற்காக இப்படி எல்லாம் நீங்கள் முன்கூட்டியே பீடிகையைப் போடுகிறீர்கள் என்ற அச்சம் நாட்டு மக்கள் மத்தியிலே நிலவுகிறது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்கள் இந்தப் பிரச்சினை பற்றி விவாதிக்கின்ற நேரத்தில் அவருடைய உரையின் ஆரம்பத்தில் இருந்து இதுவரையில், தேர்தலைத் தள்ளிப் போடப்போகிறீர்களா என்று திருப்பித் திருப்பிக் கேட்டார்கள். அப்படிப்பட்ட விருப்பம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கோ அல்லது பொன்னுரங்கம் அவர்களுக்கோ இருக்கிறதா என்பதை இந்த மாமன்றத்திலே தயவுசெய்து அறிவிக்கவேண்டும். ஏனென்றால், ஏற்கனவே 2-3 நாட்களுக்கு முன்பாகவே, முதலமைச்சர் அவர்கள் தெளிவாக இங்கே இந்த மாமன்றத்திலே தெரிவித்து இருக்கிறார்கள். ஜூலை மாதத்தில் தேர்தலை நிச்சயம் நடத்தியே தீருவோம் என்று சொல்லிய பின்னாலும் இப்படிப்பட்ட சந்தேகமான பார்வைகள் அல்லது அந்த எண்ணங்கள் வருவதற்கு அவசியம் இல்லை. ஆகவே தயவு செய்து உங்களுடைய கருத்துக்களை எப்படித் தேர்தல் நடத்த வேண்டும் என்று முறைப்படி எடுத்துச் சொன்னால், இந்த மாமன்றத்திற்குப் பேருதவியாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும் என்று பேரணி நடத்தியவர்கள் நாங்கள். அமைச்சராக இருக்கும் தாங்கள் தான் ஒவ்வொரு ஆண்டும் விரைவாகத் தேர்தல் வரும் என்று அடிக்கடி சொல்லிக் கொண்டு இருக்கிறீர்கள். இப்போது நீங்களும் முதலமைச்சரும் பேசியிருக்கிறீர்களோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனல் சட்டமன்றத்தில் முதலமைச்சர் பேசியிருப்பதாக 'அண்ணா' பத்திரிக்கையில் வந்து இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது).

திரு. பி. முகமது இஸ்மாயில்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்திருத்த முன்வடிவில் நடைபெறுகின்ற விவாதத்தில் பங்குபெற்று என்னுடைய சில கருத்துக்களை இந்த அவையின் முன் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்திருத்த முன்வடிவை நான் எதிர்க்கவில்லை. ஆனால், இது தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்படுவதற்கான முயற்சிகளை செய்வதற்கு நாங்கள் எதிர்க்கிறோம் இந்தச் சந்தர்ப்பத்தில் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் இந்தத் திருத்தம் நிறைவேறுவதாக இருந்தால், நகரசபைகளுக்குத் தேர்தல் தள்ளி வைக்கப்படும் என்ற அச்சம் எங்களுக்கு ஏற்படுகிறது. மார்ச் திங்கள் 13 ஆம் தேதி நடைபெற்ற சர்வ கட்சி கூட்டத்தில் அத்தனை தலைவர்களும் தெரிவித்த கருத்து, ஏற்கனவே இருக்கின்ற சட்டத்தின் அடிப்படையில் தேர்தலை நடத்தி விடலாம் என்பதாகும்.





ஆனால் இங்கே அதற்கு நேர்மாறாகச் சட்டத்திருத்தம் செய்யப்பட்டு அந்தத் திருத்தத்தின் வாயிலாக ஆதிதிராவிடர்களுக்கும், பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்து, அதன் பிறகு தேர்தல் நடத்தலாம் என்ற முடிவிற்கு அரசு வந்திருப்பதாகத் தெரிகிறது. இத்தகைய சட்டத்திருத்தத்தைச் செய்கிறபோது, பஞ்சாயத்து தேர்தலுக்கு வழக்குகள் வந்ததைப்போல் இதற்கும் நிச்சயமாக வழக்குகள் நீதிமன்றத்தில் வருவதற்கான வாய்ப்புகள் உண்டு. அதன் காரணமாக பல்லாண்டுகாலம் நீதிமன்றத்தில் தேக்க நிலை ஏற்பட்டு விடுமோ என்ற அச்ச உணர்வு எங்களுக்கு ஏற்படுகிறது.

அது மட்டுமல்லாமல், ஒரு வேளை அத்தகைய நிலையேற்பட்டால், பழைய சட்டத்தின் அடிப்படையில் நிச்சயமாக இந்தத் தேர்தலை நடத்துவோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதிலே எனக்கு ஏற்பட்டு இருக்கின்ற சந்தேகம், ஏற்கனவே இருக்கின்ற சட்டத்தை நீங்கள் மாற்றி அமைத்த பிறகு ஏற்கனவே இருந்த சட்டம் மாய்ந்து போய் விடுகிறது என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும்.

காரணம், புதிய ஷரத்து இடம் பெற்று விடுகிறது. புதிய சட்டம் இடம் பெற்ற பிறகு பழைய சட்டத்தின் அடிப்படையில் எப்படி தேர்தலை நடத்துவது? ஒரு வேளை நடத்துவதற்கு அரசு முன்வந்ததாக இருந்தால் கூட புதிய திருத்தச்சட்டத்தின் வாயிலாக புதிய உரிமைகளைப் பெற்றவர்கள் புதிய சட்டத்தின் அடிப்படையில் அந்தத்தேர்தலை நடத்தவேண்டும் என்று வலியுறுத்துவதற்கு வாய்ப்பு உண்டு, பழைய சட்டம் ஏற்கனவே செத்துவிட்ட ஒரு சட்டம் அதன் அடிப்படையிற் தேர்தல் நடத்துவதாக அரசு முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கிறது. அதைத் தடைசெய்யவேண்டும் என்று அவர்கள் நீதிமன்றத்திற்கு வழக்கு எடுத்துச்செல்ல வாய்ப்பு உண்டு. எனவே இந்த நிலையைப் பார்த்தால், இந்தச் சட்டத்திருத்தம் கொண்டு வந்த பிறகு தான் தேர்தலை நடத்துவது என்று அரசு முடிவு செய்வதாக இருந்தால் நிச்சயமாக பல காலம் தேர்தல் நடத்துவது நின்றுபோகக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

ஒரு வேளை அரசின் எண்ணம் அதுவாக இருந்தால் அதை வெளிப்படையாகக் கூறிவிடவேண்டும். அரசு தேர்தலை நடத்த வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டு இருந்தால், நாங்கள் முதலில் வலியுறுத்தியதுபோல், இருக்கின்ற சட்டத்தின் அடிப்படையில் இந்தத்தேர்தலை நடத்திவிடலாம். அதற்குப் பிறகு [illegible] அவகாசம் கிடைக்கும். அந்தச் சமயத்தை வைத்தும் [illegible] கொண்டு, எத்தனை திருத்தங்களை வேண்டுமானாலும் [illegible] செய்வதற்கு சரியான சந்தர்ப்பம் கிடைக்கும். ஆகவே, இந்த திருத்த மசோதாவை இப்போதே வலியுறுத்

[திரு. பி. முகமது இஸ்மாயில்] [1983 ஏப்ரல் 26

தாமல், அதைத் தள்ளிப் போடவேண்டிய நிலையை எடுத்து, ஏற்கனவே மரியாதைக்குரிய காங்கிரஸ உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் தந்திருக்கிற, இதைச் செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்ற திருத்தத்தை ஏற்று' இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் செலக்ட் கமிட்டி பரிசீலிக்கவேண்டிய பல்வேறு விவரங்கள் இதில் இருப்பதாக நான் உணர்கிறேன். காரணம், நான் பார்க்கின்ற சிலகுறைபாடுகள் இங்கு திருத்த சட்டமுன்வடிவில் 7 பி, போன்ற பரோவிசோவில் இருக்கிறது. அந்த ப்ரோவிசோ அடிப்படையில் யார்யாருக்கு நாம் இட ஒதுக்கீடு செய்கிறோமோ அவர்களைத் தவிர ஏனையோர் அங்கே போட்டியிடமுடியாது என்று தடைஇருக்கிறது.

(பிற்பகல் 12-30)

அதேபோன்று இதிலே செக்ஷன் 7 (3) (4) அதிலே இருக்கிற வார்டு பிரிவினையைப் பொறுத்தவரையில் அத்தகைய தடை இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி என்றால் அரசாங்கத்தின் எண்ணம் அங்கே ஒருவேளை போதுமான அளவிற்கு ஆதிதிராவிடர்களும், பெண்களும் போட்டியிடுவதற்கு முன் வராமல் இருந்தால், அந்த இடத்தில் அந்தப் பகுதியைச் சார்ந்த வேறு யாருக்காவது போட்டியிடுவதற்கு எண்ணம் இருந்தால் அவர்களுக்கு அந்த இடத்தை அளிக்கின்ற உத்தேசம் இருக்கிறதா இல்லையா என்ற விவரம் தெரியவில்லை. ஆகவே, செலக்ட் கமிட்டிக்கு இதை அனுப்ப வேண்டும் என்பதற்கு இது ஒரு காரணம்.

இன்னொன்று, இந்த 7 (ஈ) லே ரிசர்வேஷன் ஒருமுறை செய்த பிறகு, 5 ஆண்டுகளுக்குப் பிறகு சுழல் முறையில் ரிசர்வேஷன் வரும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அப்படி சுழல் முறையில் வரும் என்று சொல்கிறபோது, ஏற்கெனவே 7 (பி)—7(சி.1)லே இந்தச் சட்டத்திலே சொல்லப்பட்டபோது, எங்கே ஆதி திராவிடர்களுடைய மொத்த ஜனத்தொகையின் விகிதாசாரம் அதிகமாக இருக்கிறதோ அதை வைத்து ஒதுக்கப்படவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தகுந்த விளக்கம் அளிக்கப்படாத முறையில், இதிலே, சுழல் முறையில் இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்கிற முறையில் வைத்து விட்டு, நாளை நகராட்சி தேர்வு என்கிற போது இந்த 7(சி-1)இல் இருக்கிற அமைப்பைக் காட்டி, ஏற்கெனவே எங்கே அதிகமான விகிதாசாரத்தில் ஆதி திராவிடர்களும், பெண்களும் இருக்கிறார்களோ அந்த அடிப்படையில்தான் செய்யவேண்டும் என்று வலியுறுத்துவதற்கு இதில் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இதற்கு தகுந்த விளக்கம் தேவைப்படுகிறது.



1983 ஏப்ரல் 26] [திரு. பி. முகமது இஸ்மாயில்]

ஒரு முறை இட ஒதுக்கீடு செய்து தேர்தல் நடைபெற்ற பிறகு, அந்த நகரசபைகள் நீங்கலாக எஞ்சியிருக்கின்ற நகரசபைகளுக்கு, எங்கே அதிகமான விகிதாசாரத்தில் ஆதி திராவிடர்களும் பெண்களும் இருக்கிறார்களோ அந்த அடிப்படையில் பிறகு ஒதுக்கீடு செய்ய வேண்டும், அந்த சுழல் முறை வரும்போது என்று விரிவாக விளக்கம் இருந்தால் அந்த முறைகேடும் தவறும் ஏற்பட முடியாது. ஆகவே, அதைக் கருத்தில் கொண்டு, (முன்வடிக்கப்பெற்ற) இந்தச் சட்டத்திருத்தத்தில் இன்னும் சில ஆராய்ச்சி தேவைப்படுகிற காரணத்தால், அதை செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நகராட்சித் தேர்தல் சட்டமுன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பினை தந்தமைக்காக நன்றிக் கூறிக் கொள்கிறேன்.

ஜனநாயகத்தின் ஊற்றுக்கண் என்று சொல்லப்படுவது இந்த ஊராட்சிகளும், நகராட்சிகளும் தான். அந்த ஊராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தான் மக்களை அன்றாடம் சந்தித்து, அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றுகிற ஒரு வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட நகராட்சிகளிலும், ஊராட்சிகளிலும் தேர்தலிலே போட்டி போடுபவர்கள் எல்லா மதத்தினராகவும், எல்லா ஜாதியினராகவும் இருக்கலாம் என்ற நிலைமை இருந்தாலும் ஆதிதிராவிடர் மக்களும், பழங்குடி மக்களும், பெண்களும் இதில் தலைவர்களாக வரமுடியுமா என்றால் நிச்சயமாக இதுவரையில் இது நடைமுறையில் இல்லை. அப்படி எங்காவது ஒரு சில இடங்களில், ஆதிதிராவிடர்களோ அல்லது பெண்களோ தலைவர்களாக இருக்கிறார்கள் என்று சொன்னாலும், அவைகள் எல்லாம் ஆச்சரியப்படத் தக்க அளவில் தான் இதுவரையில் இருந்து வருகிறது.

ஆனால் இந்த ஆதிதிராவிட மக்களுக்கும், பழங்குடி மக்களுக்கும், பெண்களுக்கும் ஒரு குறிப்பிட்ட இட ஒதுக்கீடு செய்து, அவர்களுக்கு சட்டப்பூர்வமான பாதுகாப்பைக் கொடுத்து, அந்தந்த இடங்களிலே அவர்கள் நகராட்சிகளிலும், ஊராட்சிகளிலும் தலைவர்களாக வரவேண்டும் என்று புரட்சிகரமான ஒரு முறை இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் தான் முதன் முதலில் இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வந்து, இந்தியாவிற்கே ஒரு முன்மாதிரியாக காட்டியளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஊராட்சியிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் தாழ்த்தப் பட்டவர்களுக்கும், பழங்குடிமக்களுக்கும், பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்து தேர்தல்கள் நடத்த வேண்டும் என்று ஒரு சட்டத்திருத்தம் முன்பே கொண்டு வந்தபோது, அந்தச் சட்டத் திருத்தம் செல்லாது என்று, இங்கே இருக்கிற சில பிற்போக்கு சக்திகள் கோர்ட்டுக்குச் சென்று, அந்தத் தேர்தலை நடத்த முடியாமல் செய்துவிட்டார்கள். நகராட்சிகளிலேயும் அதுபோன்ற சட்டத்தை இப்போது இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. அப்படியே இந்தச் சட்டத்தை எதிர்த்தும் கூட சில பேர் கோர்ட்டுக்கு போகக்கூடும். அப்படிப் போனாலும், நாங்கள் பழைய சட்டத்தின் அடிப்படையிலேயே தேர்தல் நடத்துவோம் என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருப்பது உள்ளபடியே தேர்தல் நடத்துவதில் இந்த அரசு எவ்வளவு அக்கறையோடு இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்கு ஒரு சான்றாக உள்ளது.

இந்தச் சட்டத்திலே தலைவர்களுடைய இட ஒதுக்கீடு செய்யும் போது, மாநிலத்தை ஒரு யூனிட்டாக வைத்திருக் கிறார்கள். அப்படி வைக்காமல், ஒவ்வொரு மாவட்டத்தையும் ஒரு யூனிட்டாக வைத்தால் அங்கேயிருக்கிற விகிதாசாரத்தில், ஆதிதிராவிட மக்களுக்கும் பழங்குடிமக்களுக்கும், பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்ய வாய்ப்பு ஏற்படும். இந்த ரொட்டேஷன் முறையில் ஒரு முறை முடிந்த பிறகு அடுத்த முறை அந்த நகராட்சியில் குறைந்தது ஒரு 3 பருவ காலம் அதாவது 15 ஆண்டு காலம் அங்கே மற்ற ஜாதிக்காரர்களுக்கு வாய்ப்பு கொடுக்கின்ற வகையில் இந்த சட்டத் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

அடுத்து, தாழ்த்தப்பட்ட பழங்குடி பெண்களிலே அங்கே நகராட்சித் தலைவர்களாக வருகின்றவர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருப்பதைப் போல ஒரு ஊதியத்தை நம் தந்தாக வேண்டும். அப்போது தான் அவர்கள் தவறு செய்யாமல் பணியாற்றக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும்.

அடுத்து, இங்கே எந்த எந்த நகராட்சிகள் பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் ஒதுக்கப் பட்டிருக்கிறன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே அறிவிப்பார்களா என்று கேட்டு இந்த சட்டத் திருத்தத்தை வரவேற்று அமைகிறேன், நன்றி, வணக்கம்,

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, 1983-ம் ஆண்டு நகராட்சிகள் திருத்த சட்ட முன்வடிவை வரவேற்று ஒருசில கருத்துக்களை சொல்ல விழை கிறேன். கடந்த சில நாட்களுக்கு முன்னால் நமது முதலமைச்சர் அவர்கள் இந்த சட்டமன்றத்திலே [illegible] மாதம் எப்படி இருப்பினும் தமிழ்நாட்டில் நகராட்சிகளுக்கு தேர்தல் நடைபெறும்





என்று சொன்னார்கள். இந்தச் சட்டமுன்வடிவு ஆனது நிறைவேற்றப்பட்டால் அதை உறுதி செய்திட வேண்டும். அதுதான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய வற்புறுத்தல். இந்த சட்ட முன்வடிவை பார்க்கும்போது கூட இதிலே காரண விளக்கங்கள் சொல்லியிருக்கிறார்கள். 1983-ம் ஆண்டு மார்ச் திங்கள் 13-ம் நாள் அன்று நடைபெற்ற அனைத்து கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்து நகராட்சிகள் உள்ள வார்டுகளில் நகர் மன்றத் தலைவர்கள் பதவிகளிலும் தாழ்த்தப்பட்ட மற்றும் மலை வாழ் மக்களுக்கு 18 விழுக்காடு மிகாமலும், பெண்களுக்கு 15 விழுக்காடு மிகாமலும் தனி இட ஒதுக்கீடு செய்து அதன் பிறகு நகராட்சிகள் தேர்தல்கள் நடத்தலாம் என்று அரசு முடிவு எடுத்துள்ளது. என்று காரண விளக்கம் இருக்கிறது. அதற்கு நான் விளக்கம் சொல்ல வேண்டியிருக்கிறது. அந்த அனைத்துக் கட்சிக் கூட்டமே இந்தப் பொதுக் கருத்தில் ஒன்றைச் சொன்னார்கள். இட ஒதுக்கீட்டில் எங்களுக்கு எந்தவிதமான கருத்துவித்தியாசமும் இல்லை, அந்த இட ஒதுக்கீடு செய்கிறபோது இந்த தேர்தல் தள்ளிப்போகக்கூடாது என்ற பொதுவான கருத்தை அந்த அனைத்துக் கட்சி கூட்டம் வற்புறுத்தியது. நான் இன்று வற்புறுத்த விரும்புவதும் அதைத்தான். ஆகவே இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றியதற்குப் பின்னால் தேர்தல் தள்ளிப் போய்விடக்கூடாது, ஜூலை மாதத்திற்குள் நடத்துவது என்ற வாக்குறுதியை நிறைவேற்றிட வேண்டும். இதிலே கூட இன்னும் ஒன்று இப்போது நகராட்சிகளுக்குக்கொண்டு வந்து இருக்கிறோம். பிறகு மாநகராட்சிகள் இருக்கிறதே அதற்கு இப்படிப்பட்ட சட்டத் திருத்தங்கள் எப்போது வரும்? இவற்றுக்கும் ஒரேயடி யாகக் கொண்டு வந்தால் உபயோகமாக இருக்குமே. இதற்கு மேல் சொல்லவிரும்புவது ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்களுக்கான சட்டம் இன்று உச்ச நீதிமன்றத்தில் தடை யாக இருக்கிறது. அந்தத் தடையை நீக்க அரசு எடுத்து இருக்கக்கூடிய நடவடிக்கை என்ன என்பதை இந்த மன்றத்தில் இன்னும் தெளிவுபடுத்தினால் இன்னும் உதவியாக இருக்கும். நாம் இந்த தேர்தல் நடத்துவதற்கு உரிய முயற்சியில் இன்னும் 3 மாத கால அளவிற்குள் ஈடுபடவேண்டும். கிட்டத்தட்ட 1969-ம் ஆண்டு என்று என்னுடைய நினைவு, அப்போது தான் ஊராட்சி மன்றங்களுக்கு நகராட்சி மன்றங்களுக்கு மக்கள் தேர்தலில் வாக்களித்தார்கள். கிட்டத்தட்ட 13 ஆண்டுக்காலம் இந்தத் தமிழ் நாட்டில் அப்படிப்பட்ட தேர்தல்கள் நடைபெறாமல் தள்ளி போட்டு வந்து இருக்கின்றன. நம்முடைய அரசின் சார்பாக சில சமயங்களில் பலவற்றிற்கு, மேற்கு வங்கத்தை உதாரணமாக காட்டுவது உண்டு. நான் இதற்கும் உங்களுக்கு உதாரணமாக காட்டவிரும்புகிறேன். 1977-ம் ஆண்டு நாம் வெற்றிப்பெற்று வந்ததைப் போலவே மேற்கு மேற்கு வங்கத்திலும் ஒரு இடதுசாரி அரசு தோன்றியது. 1978-ம் ஆண்டு அவர்கள் தேர்தலை நடத்தினார்கள். 5 ஆண்டு முடிந்த அடுத்து [illegible] இன்னும் ஒரு முறை தேர்தல் நடத்துவ [illegible]

போகிறார்கள். ஆகவே தேர்தலை நடத்துவதற்கான முன் முயற்சியை அரசு தள்ளிப்போடக்கூடாது. நிலைமை மிக மோசமான சூழ்நிலையில் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பலவிதமான நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி மன்றங்கள் போன்றவை களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லாத தால் மிகப் பெரிய சிரமங்களை இன்று தாங்க வேண்டியிருக்கிறது என்று நான் சொல்லவிரும்புகிறேன். ஆகவே, சட்ட முன்வடிவைக் கொண்டு வந்ததை நான் வற்புறுத்துகிறபோது இதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

அடுத்து, நான் சொல்ல விரும்புவது, நல்ல திருத்தங்கள் எல்லாம் இந்த சட்ட முன்வடிவிலே இருக்கின்றன. அதாவது, மாநிலத்தை ஒரு யூனிட்டாக வைக்க வேண்டும் என்ற இந்தச் சட்டதிருத்தங்கள் சரியானது. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள் மாவட்டத்தை ஒரு யூனிட்டாக வைக்கலாம் என்று சொன்னார்கள். அப்படி வைத்தால் நாம் 18 சதவீதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், 15 சதவீதம் பெண்களுக்கும் ஒதுக்குவதிலே சிக்கல் ஏற்படும். ஆகவே ஒரு மாநிலத்தை யூனிட்டாக வைத்து இருப்பதுதான் சரியானது.

அடுத்து, இன்றைய தினம் சூழல் முறையில் இந்தத் தலைவர் பதவி இருக்கும் என்பதும், தொகுதிகள் மாறும் என்பதும் வந்து இருக்கின்றன. அதுவும் சிறப்பானது தான். அவ்வாறு எது அதற்கு அடுத்து சான்ஸ் இருக்கிறதோ அப்படிப்பட்ட நகராட்சி களுக்கு அது மாற்றப்படும் என்பதும் ஒரு சிறப்பானது. முன் வடிவில் இருக்கக்கூடிய திருத்தங்கள் சரியானது தான், வரவேற்கத் தகுந்தது தான்.

(பிற்பகல் 12–40)

ஆகவே, நிறைவேற்றுகிறபோது இன்று நிலைமை எவ்வாறு இருக்கிறது என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு என்னுடைய ஊரிலே உள்ள சில பிரச்சினைகளைக் கூட இந்தச் சட்டமுன்வடிவிலே சொல்லவேண்டியிருக்கிறது. திண்டுக்கல் போன்ற பெரிய நகரத்திற்கு 10 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகம் நடைபெறுகிறது. 36 வார்டுகள் அங்கே இருக்கின்றன. அந்த வார்டுகளில் தண்ணீருக்காக 10 நாட்கள் காத்திருக்கவேண்டுமென்றால் என்ன நிலைமை என்று புரியும். 15 லாரிகள் இருந்தால்தான் தண்ணீர் விநியோகிக்க முடியும் என்று சொன்னார்கள். 1 வார்டுக்கு 2 ஆழ்குழாய்க் கிணறுகள் இருந்தால்தான் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று சொல்கிறார்கள். அவ்வாறு பிரச்சினைகள் மிகச் சிக்கலாக இருக்கின்ற நேரத்திலே, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பும் இல்லை. சில அதிகாரிகள் காரியங்களை நிறை வேற்றினால் சர்க்கார் நினைக்கக்கூடியதைக்கூட நிறைவேற்ற முடியாது என்ற அளவுக்கு சிக்கல் ஏற்படுகிறது [illegible]





இருக்கிறது. லாரியை நாம் ஒரு வார்டுக்கு அனுப்பினால் அது [illegible] வேறு வார்டுக்குப் போய்க் கொண்டிருக்கிறது. போலீஸை ஏற்றி தான் அனுப்ப வேண்டிய நிலைமை ஏற்பட்ட காட்சியைப் பார்க்கிறோம். தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு மிக முக்கிய மானது. பக்கத்திலே 4,5 மைல்களுக்கு அப்பாலே இருக்கக் கூடிய தனியார் கேணிகளைக் கூட நாம் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு லாரிகள் மூலமாகத் தண்ணீர் சப்ளை செய்யவேண்டி யிருக்கிறது. மதுரையில் ஓடுகிற வைகை அணை மதுரைக்குச் சிறு உதவி செய்கிறது. அந்த அணையிலே பேரணை ஒன்று இருக்கிறது. அதன் மூலமாக முன்னோடித் திட்டமாக திண்டுக்கல் நகரத்திற்கு நிறைவேற்றுவதற்கு இன்று வற்புறுத்திக்கொண்டிருக் கிறார்கள். இந்தப் பிரச்சினைகளை நகராட்சிகள் செய்திட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் செய்திட வேண்டும். 3 மாத காலத்திற்குள்ளாகத் தேர்தல் நடத்த வேண்டிய எல்லா முன் முயற்சிகளையும் அரசு செய்ய வேண்டும். எப்படி முதலமைச்சர் வாக்குறுதி அளித்தார் களோ அதைப்போலவே உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களும் இந்தச் சட்டமுன்வடிவிற்குப் பதில் அளிக்கிறபோது கொடுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

திரு. பொ. உத்திராபதி: மாற்றுத் தலைவர் அவர்களே, 1983 ஆம் வருடம் நகராட்சி திருத்த சட்டத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஆதரித்துப் பேசுகிறேன். ஆதரித்துப் பேசுகின்றபோது நகராட்சித் தேர்தலை ஜூலை மாதம் நடத்து வதாக முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். இந்த நகராட்சி, பேரூராட்சி, கிராமங்களிலே உள்ள ஊராட்சி மன்றங்களுக்கெல்லாம் 18 சதவீதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் 15 சதவீதம் பெண்களுக்கும், என்று ஒதுக்கியிருப்பது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ச்சியாகச் சொல்லி வந்தது தான். இதை பாதும் நாங்கள் அதை ஆதரிக்கிறோம். ஆனால் இப்போது இத்தனை சதவீதம் என்று ஒதுக்கி பேரூராட்சித் தேர்தலை, ஊராட்சித் தேர்தலை அறிவிக்கிறபோது சில நபர்கள் நீதிமன்றத்திற்கு சென்று தடையை வாங்கினார்கள். இன்றைக்கு [illegible] கோர்ட்டிற்குச் சென்று தடையை வாங்கி இருக்கிறார்கள். ஆனால் முதலமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, நகராட்சிகளுக்குத் தேர்தல் என்று சொல்கிறபோது அந்தச் சட்டத்தை எதிர்த்து யாராவது வழக்குமன்றத்திற்குச் சென்று தடைவாங்கினாலும் விடாமல் பழையமுறைப்படி தேர்தலை நடத்துவோம் என்று வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். இப்படித்தான் சொல்கிறார்கள். [illegible] தேர்தலை நிறுத்தி [illegible] மறுபடியும் சட்டத்தைத் [illegible] தேர்தல் நடக்குமா என்பது [illegible]
[illegible]

இந்த 12 ஆண்டுக்காலமாக தொடர்ச்சியாகப் பார்த்தோமானால் பஞ்சாயத்துக்களைக் கலைத்த பின்னால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாததன் காரணமாகக் குறைபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. குறிப்பாகக் குடிநீர்ப் பிரச்சினை, எல்லா மாவட்டங்களிலும் வறட்சி நிவாரண ஆலோசனைக்குழு கூட்டம் நடத்தப்பட்டு முக்கியமாகக் குடிநீருக்கு முக்கியத்துவம் கொடுத்து நிறைவேற்றவேண்டுமென்று சொன்னார்கள். ஒரு வாரத்திலே அதிகாரிகள் கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் சென்றார்கள். ஏதோ வேகமாக வேலை நடைபெறுகிறது என்று காட்சியளித்தது. ஆனால் இரண்டு தினங்களுக்கு முன்னாலே நான் தொகுதிக்குச் சென்றிருந்தேன், கைப்பம்புகள் ரிப்பேர் செய்யப்படாமலே இருக்கின்றன. திருத்துறைப்பூண்டி யூனியனிலே நான் இரண்டு தினங்கள் சுற்றுப்பயணம் செய்தபோது, அதைப்பற்றிச் சொன்னபோது அதிகாரிகளைக் கேட்டால் பணம் கொடுக்கவில்லை, அந்தப் பஞ்சாயத்திலிருந்து பணம் கொடுத்தால் நாங்கள் செய்வோம் என்று சொல்கிறார்கள். கிராமங்களிலே இன்றைக்குக் குடிநீர்ப் பிரச்சினை வேகமாக வளர்ந்துவருகிறது. அதைப்போலவே மின்சாரம். இங்கே அமைச்சர் சொல்கிறார்களே தவிர கிராமங்களிலே போய்ப் பார்த்தால் மின்சார சப்ளையே கிடையாது. இன்றைக்கு ரோடுகள் இருக்கின்றன. சென்னை நகரை எடுத்துக்கொண்டால் மாம்பலம் போன்ற இடங்களில் குண்டும் குழியுமாக இருக்கின்றன இவைகளையெல்லாம் மக்களுக்கு வசதியாகச் செய்யவேண்டுமென்றால் அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை, குறிப்பாக முதலமைச்சர் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுகிற அளவிற்கு நகராட்சித் தேர்தல்களை நடத்த வேண்டும். சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கிற தடைகளை மிக வேகமாக நமது அமைச்சர் அவர்களும், தமிழக அரசும் நீக்கவேண்டும். உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதற்கும் தமிழக அரசும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நமது முதலமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுகிற அளவிற்கு, உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் நடத்தி முடிப்போம் என்று தன்னுடைய பதிலாகச் சொல்ல வேண்டும். எந்தத் தடை வந்தாலும் அதை நீக்குவோம், இந்த தேர்தல்களை நடத்துவோம் என்று அமைச்சர் அவர்கள் தேர்தல்களை நடத்தி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகளை விரைவில் உருவாக்க வேண்டும், அந்த அளவிற்கு வாக்குறுதியை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. க.பாரமலை; மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிமுகப் படுத்தியிருக்கிற மாவட்ட நகராட்சிகள் திருத்த சட்டமுன்வடிவை வரவேற்று ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் [illegible] போல இந்தச் சட்டத்திருத்தம் [illegible]





ஒத்திவைப்பதற்குக் காரணமாக அமைந்து விடக்கூடாது என்பது தான் எங்களுடைய கவலையே தவிர இந்தச் சட்டத்தினுடைய நோக்கத்தை நிச்சயமாக நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த ஒதுக்கீட்டைப் பொறுத்த வரையில் அரிசனங்களுக்கு 18 சதவீதம் செய்ததும், மாதர்களுக்கு செய்ததும் இந்தச் சட்டத்திலே வகை செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் எங்களுக்கிருக்கிற பயமெல்லாம் இந்த ஆட்சி அரிசனங்களுக்கு இரண்டு முக்கியமான சட்டங்களை நிறைவேற்றி அவர்களுக்கு நல்ல வாய்ப்பைத் தந்தது. ஆனாலும் அந்தச் சட்டம் அமல் செய்யப்படாமல் இருக்கிறதால் அந்த பலனை அரிசனங்கள் அனுபவிக்கமுடியவில்லை. குறிப்பாக கிராம நிர்வாக அதிகாரிகள் 12 ஆயிரம் பேரை நேரடியாகத் தேர்ந்தெடுத்து அதிலே 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கி, ஏறக்குறைய 2 ஆயிரம் கிராம நிர்வாக அதிகாரிகளாக வருவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திய சட்டம், இன்றைக்கு வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறதால் அதனுடைய பலனைத் தாழ்த்தப்பட்ட மக்கள் அனுபவிக்கமுடியவில்லை. அதைப்போலவே பஞ்சாயத்து ஒன்றியங்களில் தலைவர்கள் வருவதற்கான சட்டத்தைப் போட்டு, அதுவும் நீதிமன்றத்திலே இருக்கிறதால் அந்தப் பலனை அரிசனங்கள் அனுபவிக்க முடியாத நிலை இருக்கிறது. இப்போது மிக நீண்ட நாட்களாக மக்கள் மத்தியிலே இருக்கிற வேண்டுகோளை ஏற்கிற வகையிலே நகராட்சி மன்றத் தலைவர்களில் 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கி சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்: ஆனால் இந்தச் சட்டம் நிறைவேறி அந்த பகுதி அரிசனங்கள் வருவதற்கு வாய்ப்பு ஏற்படுமா என்று பார்க்கிறபோது தான் எங்களுக்கு ஒரு அச்சம் ஏற்படுகிறது. இன்றைக்கு அரிசனங்களுடைய நிலைமை எப்படி இருக்கிறது. என்று சொன்னால் 'பெக்கர்ஸ் சிட்டிங் ஆன் தி கோல்டன் பிரிட்ஜ்' என்று சொல்வார்கள். அதைப்போலவே நல்ல சட்டங்களைப் போட்டும், அனுபவிக்க முடியாமல் இருக்கிறார்கள், அரிசனங்கள் என்று சொல்கிறபோது இந்த சட்டத்தையாவது நிறைவேற்றி அதனுடைய பலனை அவர்கள் அனுபவிக்கிற வகையிலே தக்க ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவேண்டும். அந்த வகையிலே இந்தச் சட்டத்தை எதிர்த்து கோர்ட்டுகளில் செல்வதற்கு பல்வேறு நபர்கள் முயற்சிக்க கூடும். எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்லது நாங்கள் சொன்னால் கேட்பார்கள் என்று நினைப்பவர்கள் எல்லாம் இதை எதிர்த்துவழக்குமன்றத்திற்குப்போகாமல் இருப்பதற்கு நாங்கள் முழு முயற்சி எடுத்துக்கொள்வோம் என்ற உறுதியை நான் இந்த அரசிற்குச் சொல்ல விரும்புகிறேன். அதைப்போலவே இந்த மன்றத்திலே இருக்கிற அனைத்துக் கட்சித் தலைவர்களும் தங்களுக்கு இருக்கிற செல்வாக்கைப் பயன்படுத்தி இந்த நல்ல சட்டத்தை எதிர்த்து நீதிமன்றங்களுக்குச் செல்லாமல் இந்த சட்டத்தை விரைவாக அமுல் செய்து [illegible] அரசுக்கு [illegible] இருக்கவேண்டுமென்று [illegible] இந்நேரத்தில் விடுக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த சட்டத்தினுடைய 7 (இ) என்ற பிரிவிலே 'டியூரேஷன் ஆப் தி ரிசர்வேஷன்' என்பதிலே ஐந்து ஆண்டுகளுக்கு தான் இருக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஐந்து ஆண்டுகளுக்குப்பின்னாலே புதியதாக சட்டம் ரிசர்வேஷன் செய்யப்படுமானால் ரொட்டேஷனாக இருக்கவேண்டுமென்று கருத்து தான் தொனிக்கிறது. ஆகவே நான் கேட்டுக்கொள்வது ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னாலே இந்த சட்டம் நீட்டிக்கப்படலாம் அல்லது விடப்படலாம் என்று கருத்து தொனிக்கிறதாலே ரிசர்வேஷன் என்பது உறுதியானது. ஆனால் ரொட்டேஷன் என்பது தான் தீர்மானிக்கப்பட வேண்டியது என்ற கருத்து தொனிக்கிற வகையிலே இந்த வார்த்தைகளைப் போட வேண்டுமென்று அமைச்சர்அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ரிசர்வேஷனில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பொதுமக்களுக்கும் உள்ள ஜனத்தொகை எண்ணிக்கையுடைய விகிதாச்சாரத்தின் அடிப்படையிலே எங்கே அரிசனங்கள் அதிகமாக இருக்கிறார்களோ அங்கேரிசர்வேஷன் என்றுசொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ரிசர்வேஷன் செய்கிறபோது ஒட்டுமொத்தமாக ஒரு பகுதியிலே அதிகமாக இருக்கிறார்கள்என்ற வகையில் அதிகமான தலைவர்கள் ஒரு பகுதியிலே வந்து, ஒரு பகுதியில் வராமல் இருந்து விடாமல் இது பரவலாவதற்கு ஏதாவது செய்யப்படுமா என்று கேட்டுக்கொண்டு, இந்த மசோதாவை வரவேற்று அமர்கிறேன்.

(பிற்பகல் 12-50)

திரு.எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கின்ற 1983-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததற்காக அரசாங்கத்தை நான் பாராட்டுறேன். இது மிக முக்கியமான ஒரு சட்டம் கடந்த 35 ஆண்டுகளாகத் தமிழகத்திலே, இதைத் துணிவோடு செய்கின்ற நிலைமை இல்லாமல் இருந்ததற்காக நான் வருத்தப்பட்டதுண்டு. ஆகவே, இந்த நிலைமையிலே அரசாங்கம் எடுத்த முடிவை நான் பாராட்டுகின்றேன். ஆனால், ஒன்றை இந்தச் சமயத்திலே அரசாங்கத்திற்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு ஆளுங் கட்சியைச் சேர்ந்த திரு. சின்னசாமி ஒரு யோசனையைச் சொன்னார்கள். மாநிலத்தையே ஒரு யூனிட்டாக வைத்துக் கொள்வோம் என்று இருப்பதை, மாவட்ட ரீதியாக ஒரு யூனிட்டாகச் செய்தால் நல்லது என்று சொன்னார்கள். அதில் சில சட்டச் சிக்கல்கள் வரும் என்று அமைச்சர் அவர்கள் நிச்சயமாகச் சொல்வார்கள். இந்தச் சட்டத் திருத்தத்திற்கே, சட்டச் சிக்கல்கள் வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியனுக்கே செய்தவர்கள்—எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும் சரி; நான் அதற்கு அப்பாற்பட்டு இதைப் பற்றிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த ஒரு இந்து



சமுதாயம்; இந்து சமுதாயம் ஒரு பொது சமுதாயம். இந்தச் சமுதாயத்தைச் சீர்திருத்த வேண்டுமென்று வாழ்ந்த அம்பேத்கார், 1919-ஆம் ஆண்டு முதல், அவர் மரித்துப் போகின்ற வரையில், 1956-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6-ஆம் தேதி வரையில், போராடிப் போராடி, இந்து சமுதாயத்திற்கு நல்லதொரு வேண்டுகோளை விட்டார். அவர் 1936-ஆம் ஆண்டு சொன்னார்; 'நான் இந்துவாகப் பிறந்தது என்னுடைய குற்றம் அல்ல; என் பெற்றோர்கள் குற்றம் அல்ல. நான் இந்துவாகப் பிறந்து விட்டேன். ஆனால், இந்து சமுதாயத்தின் கொடுமை, நான் பிறந்த காலம் முதல், நான் பட்டதாரி ஆகியும், இன்று வரை நான் அனுபவிக்கின்றேன். ஆகவே, சுதந்திரம் வந்த பிறகு அவர் ஒரு ஒழுங்கு முறையான சட்டத்தைக் கொண்டுவர பணி செய்தார், அது, 20 ஆண்டு காலம் இந்து சமுதாயத்திற்கு வேண்டுகோள் விடுத்தும் பலன் தராமல் போய், கடைசியில், அவர் இலட்சக் கணக்கான மக்களோடு புத்தமதத்தில் போய்ச் சேர்ந்தார். ஏன், இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், அருமைத் தலைவர் இஸ்மாயில் அவர்கள், இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று சொன்னார்கள். ஏன் அனுப்ப வேண்டு ? எதற்கு அனுப்ப வேண்டும்?

அதுமட்டுமல்ல, மாண்புமிகு பாரமலை சொன்னதைப்போல எத்தனை சட்டங்கள், இந்த நலிந்த பிரிவினருக்கு, பின்தங்கிய பிரிவினருக்கு இருந்தும், காலக்கணக்கான உரிமை மறுக்கப்பட்ட நேரத்தில், தைரியமாக இச்சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிற பொழுது, மேலும் காலம் கடத்திச் செய்வது நல்லதல்ல. இரக்க மனப்பான்மை சட்டச் சிக்கல்களைக் கொண்டு வரக் கூடாது. அவர்களுக்குக் கொடுக்கின்றபொழுது, அதைக் குறிப்பிட்ட காலத்திலே கொடுப்பதுதான் நல்லது என்ற முறையிலே செய்ய வேண்டுமென்பதைத்தான் நான் வேண்டுகோளாக இந்தச் சபையிலே சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பாரமலை சொன்னதைப் போல எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, தொழிலாளர் நன்மையிலோ, இந்தத் தாழ்ந்த சமுதாய மக்கள் நன்மையிலோ முன்கூட்டி, வழிகாட்டுகின்ற ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள்-பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா, மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி போன்றவர்கள் எப்போதுமே இந்தத் துணிவான காரியங்களுக்கு உடந்தையாக முன்னின்று வழிகாட்டிச் சொல்லியிருப்பதை இந்த அவையிலே எல்லோரும் அறிவார்கள். இத்தனை பீடிகையும் நான் ஏன் சொல்கிறேன் என்றால், அரசாங்கம் சட்டத்தைக் கொண்டு வந்து விட்டபிறகு, யாரோ ஒருவர் சொல்வதற்காகக் காலதாமதம் காட்டி நிலவுகின்ற நிலைமை வந்து விடுமோ என்ற அச்சம் எனக்கு இருப்பதால் தான் அரசாங்கம் தெளிவாகச் சட்டத்தைக் கொண்டு வந்தால் போதாது, சட்டத்தை அமுல் நடத்துவதற்குத் தைரியமாக முன்வரவேண்டுமென்று அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எல். இளையபெருமாள்] [1983 ஏப்ரல் 26

ஒரே பாவச்சுமையைக் கண்டு அரசாங்கம் பயந்து விடக்கூடாது
முதலமைச்சரவர்கள் நிச்சயமாகப் பயப்பட மாட்டார்கள்.
மக்களிடம் உங்களுக்கு அதிகமாக நம்பிக்கை இருக்கிறது என்று
ஆளுங்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் சொல்லுகிறீர்கள்.
மக்கள் உங்கள் பக்கம் என்று சொல்லுகிறீர்கள். அந்த
நிலைமை உங்களுக்கு இருக்கின்றபொழுது இதில் பின்வாங்க
வேண்டிய அவசியமே இல்லை. எனவே, பழைய முறையில்
செய்யக்கூடாது; புதிய முறையில் செய்யப்பட வேண்டும், இதை
செலக்ட் கமிட்டிக்கு விடக்கூடாது. முதலமைச்சரவர்கள் எப்படி
எல்லாக் கட்சிக்காரர்களையும் ஒன்று கூட்டி ஒரு நிலைமையைச்
செய்தார்களோ, அப்படி இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட
பிறகும் எல்லாக் கட்சி நண்பர்களையும் கூப்பிட்டுப் பேச
வேண்டும். யாரெல்லாம், ஒன்றியத் தேர்தல்கள், பஞ்சாயத்து
போர்டு தேர்தல்கள் சம்பந்தமாகக் கோர்ட்டுக்குச் சென்றிருக்கி
றார்கள் என்பதை அரசாங்கம் நினைத்தால் கண்டு பிடித்துவிட
முடியும். அது தனிப்பட்ட நபரா அல்லது கட்சி நபரா என்று
அரசாங்கம் கண்டுபிடிக்க முடியும். அப்படிச் செய்ய வேண்டு
மென்று கேட்டு, இந்தச் சட்டத்தை வரவேற்று, அமர்கிறேன்,
வணக்கம்.

[பிற்பகல் 1-00]

* திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு மாற்று சபாநாயகர்
அவர்களே, நகராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான
சட்ட முன்வடிவு இங்கே அளிக்கப்பட்டிருக்கிறது. அதனை
வரவேற்று, காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி சார்பிலே
ஒன்றிரண்டு சொற்களைச் சொல்ல நான் விரும்புகிறேன்.

அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்களுமாகக் கூடி
எடுத்த முடிவுகளினுடைய அடிப்படையிலே இங்கே இந்தச் சட்ட
முன்வடிவு வைக்கப்பட்டிருக்கிறது. ஜனநாயகத்திலே தேர்ந்
தெடுக்கப்பட்ட மக்களுடைய பிரதிநிதிகள் எல்லாப் பகுதிகளிலே
யும் தங்களுடைய கடமைகளைச் செய்வதற்கான சூழ்நிலை
இனியாவது வரவேண்டுமென்று நாம் நம்புகிறோம். ஏனென்றால்
13 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது, நகராட்சிகளுக்குத்
தேர்தல் வந்து. இன்று 13 வயது இளைஞனாக இருக்கின்ற
ஒருவன் நகர மன்றத் தேர்தல் எப்படி நடந்திருக்கும் என்றுகூட
தெரியாத அளவிற்கு, அவர்கள் பாடங்களிலே மட்டும் படிக்கின்ற
அளவிற்கு, நகராட்சித் தேர்தல் நேரிலே பார்க்க முடியாத ஒரு
அபூர்வப் பொருளாகி விட்டது நமக்கு. இனி இந்தச் சட்டம்
வந்ததற்குப் பின்னாலே கூட, ஜூலை மாதத்திலே அது நடை
பெற வேண்டுமென்று சொல்கிற எண்ணம் அமைச்சரவர்களுக்கும்
இருக்கிறது, முதலமைச்சரவர்களுக்கும் இருக்கிறது என்று
நம்புவோமாக. இங்கே கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்ட
முன்வடிவு, ஆதிதிராவிட, பழங்குடி மக்களுக்கும், மகளிருக்கும்,



1983 ஏப்ரல் 26] [திரு. குமரி அனந்தன்]

முக்கியத்துவம், பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்பதற்
காக வந்திருக்கிறது. இதனை நிச்சயமாக நாம் வரவேற்கிறோம்.
ஆனால் வரவேற்கின்ற அதே நேரத்தில் இதுவே ஒரு காரண
மாக, ஜூலைத் தேர்தலை மேலும் தள்ளிப் போடக்கூடாது
என்பது தான். அப்படித் தள்ளிப் போடக் கூடாது என்ற முயற்சி
யிலே எல்லோரும் ஈடுபட வேண்டுமென்று எனக்கு முன்னால்
பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் சொன்னார்கள்.
அதிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள்
அவர்கள் சொன்னபோது காங்கிரஸ் கட்சி பிரிந்ததற்குப்
பின்னால், எந்தக் காங்கிரசில் இருக்கிறாரோ தெரியாது, அவர்
ஒருவர் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள்
என்று சொன்னார்கள். நான் ஒன்றை மட்டும் இப்போது தெளிவு
படுத்திவிட்டால் நல்லது என்று நினைக்கின்றேன். தெளிவு
படுத்தியதற்குப் பின்னாலே கூட அவர் எங்களைப் போன்று
நடத்திக்கொண்டிருக்கிறவர்கள் காங்கிரசில் இல்லை என்பதைத்
தெளிவு படுத்துகிறேன். ஏனென்றால், அதிலே ஏதோ ஒரு
ஐயம் மற்றவர்களுக்கு வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான்.
இன்று ஜனநாயகத்தினுடைய இரண்டே இரண்டு இழைகள்தான்
நம்மை தாங்கி பிடித்துக் கொண்டிருக்கின்றன. பாராளு மன்ற
உறுப்பினர்களாக இருக்கின்றவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக
இருக்கின்றவர்கள்—ஆக—இந்த இரண்டு இழைகளிலேதான்
ஜனநாயகம் இன்று தொங்கிக் கொண்டிருக்கின்றது. அதுவும்
மாநிலத்தைப் பொறுத்தவரையில், ஊராட்சியிலே, நகராட்சி
யிலே, இங்கே தேர்தல் இல்லாத இடங்களிலே, மக்கள் பிரதி
நிதிகள் இல்லாத காரணத்தினாலே, சட்டமன்ற உறுப்பினர்களே
மற்றவர்களுடைய வேலைகளை நீங்கள் ஏன் செய்யவில்லை என்று
மக்கள் கேட்டு, ஒரே ஒரு சட்டமன்ற உறுப்பினர்-ஜனநாயகத்தின்
பிரதிநிதியாக இருந்து கொண்டிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினரே
எல்லாக் காரியங்களையும் செய்ய முடியவில்லை என்று சொல்லு
கின்ற எண்ணம் பரவலாக நாட்டிலே வளர்ந்து கொண்டி
ருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, இவர் என்ன செய்தார்,
என்ன செய்தார் என்று சொல்கிற நிலை இருக்கிறது. எவ்வளவு
தூரத்திற்குக் கடமைகளைப் பாடுபட்டு, தொகுதியிலே சுற்றுப்
பயணம் செய்தும் பல நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று
விரும்புகின்ற சட்டமன்ற உறுப்பினர்களைக் கூட, அங்கே
நகராட்சியிலே வார்டுகளில் தேர்தல் நடைபெற்று, மக்களுடைய
பிரதிநிதிகள் இல்லாத காரணத்தாலே, இவர்களை மட்டுமே
எதிர்பார்க்கின்ற காரணத்தினால், அந்த எதிர்பார்ப்புக்கு ஈடு
கொடுக்க முடியாமல் சட்டமன்ற உறுப்பினர்கள் திணறு
கிறார்கள்.

அமைச்சர் பெருமக்கள், செயலாளர்கள் இல்லாமல், மாவட்ட
ஆட்சித் தலைவர்கள் இல்லாமல், தாசில்தார்கள் இல்லாமல்,
ஆர்.ஐ.க்கள் இல்லாமல் எப்படித் தங்களுடைய நிர்வாகத்தை
நடத்த முடியாதோ, செம்மையாகப் பணிகளை நிறைவேற்ற
முடியாதோ, அதைப்போலவே, ஒரு சட்டமன்ற உறுப்பினர்,

[திரு. எல். இளையபெருமாள்] [1983 ஏப்ரல் 26

அது போல, சர்வ கட்சித் தலைவர்களிடம், சட்ட ரீதியாகச் சொல்லவில்லை, ஒரு வேண்டுகோளாக நான் சொல்ல விரும்பு கிறேன், அவர்களைக் கட்டாயப்படுத்துகின்ற விதத்தில் சொல்லவில்லை, மனிதாபிமான முறையிலே சொல்கிறேன், 3,000 ஆண்டுகளாக இந்தச் சமுதாயத்தின் நிலைமையை எண்ணிப் பார்த்தாவது, கட்சித் தலைவர்கள், தங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க வேண்டும். இந்தச் சட்டத்தை எதிர்த்து கோர்ட்டுக்குச் செல்லுகின்ற ஒரு அவல நிலையை உருவாக்க வேண்டாமென்று அவர்கள் மன்றத்திலும் பேசவேண்டும், வெளியிலும் சொல்ல வேண்டுமென்று ஒரு வேண்டுகோள் விடுக்கக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அது மட்டுமல்ல, சென்ற காலங்களில், இயற்றப்பட்ட சட்டங்களில் கூட இந்தச் சட்டம் மட்டுமல்ல, அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் நமக்கு நல்லதொரு நிலைமையைச் செய்யும் பொழுது கூட, அரசியல் காரணமோ அல்லது தங்களுடைய எண்ணத்தின் காரணத்தினாலோ கூட நீதிக்கும், நேர்மைக்கும், ஒழுங்குக்கும் விரோதமாகச் செய்பவர்கள் யாராக இருந்தாலும் அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அல்லது தனிப்பட்ட நபர்களாக இருந்தாலும் அது சம்பந்தமாகப் பெரு முயற்சியை எல்லாக் கட்சித் தலைவர்களும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதை வேண்டுகோளாக வைக்கின்றேன்.

மாநில யூனிட்டாக இருப்பதைவிட மாவட்ட யூனிட்டாக இருந்தால் நல்லது என்று நான் நம்புகிறேன். இதிலே சிக்கல்கள் வரலாம். எதிலேதான் சிக்கல் வராது? ஏனென்றால் தமிழ கத்தைப் பொறுத்தவரைக்கும் தென்னார்க்காடு மாவட்டம் ஆதிதிராவிடர்களினுடைய நிலைமையிலே நம்பர் ஒன்றாக இருக்கிறது. அதற்கடுத்து வட ஆர்க்காடு, சேலம், செங்கல்பட்டு, மதுரை ஆகிய இந்த ஐந்து ஜில்லாக்களில்தான் ஆதிதிராவிடர்கள் மலைவாழ் மக்கள், அதிகப்படியான பாபுலேஷன் இருக்கிறார்கள். எனக்குள்ள பயமெல்லாம் புதுக்கோட்டை ஜில்லா இருக்கிறது. ஒரு சிறிய மாவட்டமாக இருக்கிறது. அங்கு என்ன நிலைமை ஆகுமோ? ஏனென்றால் சத்துணவுத் திட்டத்தில் உத்தியோகம் கொடுத்தோம். அந்த உத்தியோகத்தில் இதுபோன்ற பங்கு என்று நான் கேட்டபொழுதுகூட முதலமைச்சரவர்கள் 19 கொடுப்பேன் என்று சொன்னார்கள். ஆனால் சில ஜில்லாக் களில் கிடைக்க முடியாத நிலைமை போய்விட்டது. இதை யெல்லாம் அரசாங்கம் உன்னிப்பாகக் கவனித்து, மாவட்டம் என்று வருவதில் என்ன சிக்கல் என்று கண்டுபிடித்து, சிக்கல்கள் இருந்தால் சட்ட வல்லுநர்களைக் கொண்டு அதைத் தீர்க்க முடியுமா என்று யோசிக்க வேண்டும்.



1983 ஏப்ரல் 26]

திரு. என். சங்கரய்யா: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள், இந்தச் சட்ட முன் வடிவை எதிர்த்து எந்த அரசியல் கட்சியின் செல்வாக்குள்ள வர்களும் கோர்ட்டுக்குப் போகாமல் வேண்டுகோளாக வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் அறிகிறேன், அவருடைய கட்சியைச் சார்ந்த ஒருவர் சுப்ரீம் கோர்ட்டிலே, இந்தப் பஞ்சாயத்துத் தேர்தல் சம்பந்தமான ரிசர்வேஷன் சம்பந்தமாகப் போயிருக்கிறார்கள் என்று தெரிகிறது. தயவு செய்து அவர்கள் தங்களுடைய செல்வாக்கைப் பயன் படுத்தி, அதையெல்லாம் வாபஸ் வாங்குவதற்கு ஏற்பாடு செய் வார்களா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அருமைச் சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் சொன்னதிலே, உண்மையிலேயே அவர் காங்கிரஸ் உறுப்பினர் என்ற லிஸ்டிலே இல்லை என்பதை இப்பொழுது தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், முன்பு காங்கிரஸாக இருந்தாலும், காங்கிரஸ் பிளவுபட்டு பிறகு அவரவர்கள் ஒரு காங்கிரஸாக ஏற்றுச் சென்று விட்டதால் இன்று நான் இருக்கின்ற காங்கிரசில் இருக்கிறாரா என்று வெரிஃபை செய்யும்பொழுது நிச்சயமாகப் பார்த்தேன், எனக்குத் தகவல் கிடைக்கவில்லை என்று சொல்வதோடு, அவர்கள் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் நிச்சயமாக அவர்களை வேண்டிக்கொள்வேன், உங்களை வேண்டுவதைவிட அவர்களிடம் என் சக்திக்கு முடிந்த அளவிற்கு வேண்டுகோள் விடுவேன்; அவர்களை நேரில் சந்திப்பேன்; கேட்டுக்கொள்வேன் என்ற உறுதியையும் நான் நிச்சயமாகச் சொல்லக் கடமைப்பட்டி ருக்கிறேன்.

கடைசியாக நான் சொல்ல விரும்புவது என்ன வென்றால், இந்தத் தேர்தலை எக்காரணத்தைக் கொண்டும் ஒத்திப்போடக் கூடாது; முதலமைச்சரவர்கள் இவ்வளவு தைரியமாகச் செய்த பிறகு இதிலே யாரோ போவார்கள் என்று நினைத்து சும்மா இருந்துவிடக்கூடாது. நிச்சயமாகப் போகத்தான் செய்வார்கள். நாம் எத்தனை வேண்டுகோள்களை விடுத்தாலும், இதில் யார் மீதும் குற்றம் இல்லை. இது இந்து மதத்தின் மீது குற்றம்; இந்து சமுதாயத்தினுடைய குற்றம். இன்னும் இந்து சமுதாயத் திலே இந்தியன் என்ற எண்ணமோ, மனிதன் என்ற எண்ணமோ முழுமையாக வராத பாவச் சுமை இருக்கிறது. படியாத மக்கள் நல்லவர்கள்; படித்த பிறகு கல்லூரிகளில் ஜாதி உணர்ச்சிகள் அதிகம் வந்திருப்பது அரசாங்கத்திற்கு என்னைவிட நன்றாகக் குறிப்புகள் தெரியும்.

ஆகவே, இந்தச் சட்டத்தில், நாம் பழையபடி நடத்துவது என்பது, அதாவது அவர்களுக்கு ஒதுக்கீடு இல்லாமல், பெண் களுக்கு ஒதுக்கீடு இல்லாமல், மலைவாழ் மக்களுக்கு ஒதுக்கீடு இல்லாமல் அப்படியும் நடத்தலாம் என்று, ஓட்டு வாங்குகின்ற

[திரு. குமரி அனந்தன்] [1983 ஏப்ரல் 26

நகராட்சித் தலைவர், நகராட்சிகளிலே இருக்கின்ற வார்டுகளி
னுடைய உறுப்பினர், பேரூராட்சி மன்றத்தினுடைய தலைவர்
இவர்கள் இல்லாமல் தங்களுடைய கடமைகளையும், மக்களுக்காக
ஆற்றுகின்ற பணிகளையும் செய்ய முடியாது. அவர்கள் எல்லாம்
இல்லாதபோது ஒரு மனிதரே தாக்குப்பிடிக்க முடியாத ஒரு சூழ்
நிலையை உருவாக்கி, ஜனநாயகத்தின் மீது வெறுப்பு
ஏற்படுகின்ற அளவிற்கு ஆகிவிடுமோ என்று அஞ்சுகின்ற காரணத்
தினாலேயே உடனடியாகத் தேர்தல் நடத்துவதற்கான உரிய
முயற்சிகளிலே ஈடுபடவேண்டுமே தவிர, இந்தச் சட்டத்
திருத்தத்தை வைத்துக் கொண்டு தேர்தலையே தள்ளிப்
போடும் முயற்சியில் ஈடுபடலாகாது. ஆதி திராவிடர்களுக்கும்,
பழங்குடியினருக்கும், பெண்களுக்கும் நிச்சயமாக இட ஒதுக்கீடு
செய்ய வேண்டுமென்பதை நாம் வரவேற்கிறோம். நம்மைப்
பொறுத்தவரையில், யாராவது வழக்கு மன்றத்திற்குப் போவார்
களேயானால், அதனை நிச்சயமாகத் தடுப்பதற்கு உரிய முயற்சி
களிலே ஈடுபடுவோம். ஆனால், இரண்டையும் வைத்துக் கொண்டு
சில திரைப்படங்களிலே பார்க்கின்றோமே, எதிரிலே இருக்கின்ற
வர்கள் வீசுகின்ற கத்தி தன்மீது படக்கூடாது என்பதற்காக, ஒரு
குழந்தையைத் தூக்கி வைத்துக்கொண்டிருக்கிற காட்சிகளைப்
பார்க்கிறோமே, அந்தக் குழந்தையாக இந்தச் சட்ட முன்வடிவு
வந்துவிடக்கூடாது. இதைக் காரணம் காட்டி, அந்தத் தேர்தலைத்
தள்ளிப் போடக்கூடாது. அந்த நிலை ஏற்படாமல் இருக்க
வேண்டும் என்பதைத்தான் எங்களுடைய கட்சியின் சார்பிலே
நான் அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறேன். மாண்புமிகு
உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், அவர்களை வழி
நடத்திச் செல்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும்,
இதில் உறுதியாக இருந்து, மகளிருக்கும், ஆதிதிராவிடர், பழங்
குடியினருக்கும், பிரதிநிதித்துவம் கொடுக்கின்ற அந்தச் சட்ட முன்
வடிவ இங்கே கொண்டு வந்ததற்காகவும், எல்லாவற்றிற்கும்
மேலாக ஜனநாயகத்தின் உயிர்த்துடிப்பாக இருக்கின்ற இந்தத்
தேர்தல்களையெல்லாம் உடனே' ஜூலைக்கு மேலும் தள்ளிப்
போடாமல் இருப்பதற்கும் அதனை வரவேற்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே,
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களால், நகராட்சி
களுக்கு, தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களுக்கும் பெண்
களுக்கும் இட ஒதுக்கீட்டை ஊர்ஜிதம் செய்து இங்கே கொண்டு
வந்திருக்கின்ற இந்த மசோதாவை ஆதரித்து, குடியரசுக் கட்சி
யின் சார்பாக நான் வரவேற்கிறேன். அதோடு இது ஒரு மிகப்
பெரிய சமுதாய மாற்றத்திற்கான சிறப்புத் திட்டம் என்பதை
அனைத்துக் கட்சிகளும் இங்கே எடுத்துரைத்து, அதற்கான
ஒத்துழைப்பையும் தர உறுதி அளித்தமைக்கு, இந்த மக்களின்
சார்பாக அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கும்
என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டி
ருக்கிறேன். இந்தத் தேர்தலிலே தாழ்த்தப்பட்ட மலைவாழ்
மக்களுக்கும் பெண்களுக்கும் ஒதுக்கீடுகளைக் கொண்டு



1983 ஏப்ரல் 26] [திரு. ஜி. மூர்த்தி]

வந்திருக்கின்ற இந்த அரசுக்கும், புரட்சிகரமான திட்டத்தைத்
தீட்டிய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு
அமைச்சர் அவர்களுக்கும், இந்தத் தமிழக அரசுக்கும் தாழ்த்தப்
பட்ட மக்களின் சார்பாகவும் என்னுடைய சார்பாகவும்
நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இட ஒதுக்கீட்டை
எதிர்த்து எந்தக் கட்சியும் நாங்கள் எதிர்க்கத் தயாராக இல்லை
என்று இங்கே உறுதியளித்த அனைத்துக் கட்சிக்காரர்களையும்
இந்த நாடு வாழ்த்துகிறது என்பதையும் இந்த நேரத்திலே நான்
தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, சென்ற முறை இதே
தேர்தல் இட ஒதுக்கீடு வருகிறபோது அதை எதிர்த்து நின்று

வழக்கு மன்றத்திற்குச் சென்ற அருமைக் காங்கிரஸ் நண்பர்கள்
இப்போது சற்று உஷாராக இருந்து இந்த நேரத்திலே யாரையும்
அப்படிப்பட்ட எண்ணங்களுக்குத் தூண்டிவிடாமல் அவர்களைத்
தடுத்து நிறுத்துகின்ற தனிப் பொறுப்பையும் அவர்கள் ஏற்றுக்
கொள்ள வேண்டும் என்று வேண்டுகோளை நான் அவர்களுக்குத்
தனிப்பட்ட முறையிலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டி
ருக்கிறேன். இந்தத் தேர்தலை நடத்துவதிலே எவ்வளவு பெரிய
சிரமம் இருந்தாலும், எப்பேர்ப்பட்ட சட்டச் சிக்கல்கள் இருந்
தாலும், அவைகளை எல்லாம் தூக்கி எறிந்து இந்த மக்களுக்காக
இந்த ரிசர்வேசனோடு நடத்த வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். அது மாத்திரம் அல்ல, இந்த மக்களுக்கு
இப்பேர்ப்பட்ட இட ஒதுக்கீட்டைத் தருகிறோம் என்று இன்றைய
தினம் ஆளுகின்ற சர்க்கார் சொல்லியிருப்பதை இந்த நாடு
வரவேற்கிறது. அதிலே கொஞ்சம்கூட மாறுபடாமல், எந்த
நிலையிலும் அதனை மாற்றிக் கொள்ளாமல் ஒரு சிலரின்
எதிர்ப்புக்கு அது ஆளாக்கப்படுமேயானாலும் கூட அந்த
எதிர்ப்பைச் சமாளித்து இந்த மக்களுக்காக இட ஒதுக்கீடு தருவ
திலே இந்த அரசு ஆணித்தரமாக இருந்து தேர்தலை நடத்த
வேண்டும் என்று சொல்லி, இந்த மசோதாவை குடியரசுக்
கட்சியின் சார்பாக வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, நமது
குடியரசுக் கட்சியைச் சேர்ந்த அருமைச் சகோதரர் பேசுகின்ற
போது சொன்னார்கள், காங்கிரஸ்காரர்கள் தூண்டிவிட்டார்கள்
என்று. இனிமேல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று
சொன்னார்கள். தயவுசெய்து அவர்கள் சட்டத்தைப் படிக்க
வேண்டும். அவர்கள் சட்ட வல்லுநரும்கூட. இப்போது
கொண்டு வந்திருக்கிற சட்டத்திலே மிகத் தெளிவாக அவர்கள்
மலைவாழ் மக்களுக்கோ, தாழ்த்தப்பட்ட மக்களுக்கோ,
மகளிருக்கோ கொடுப்பதிலே எங்கே அவர்கள் எண்ணிக்கை
அதிகமாக இருக்கிறதோ அங்கே கொண்டு வருவது என்று
தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல்
பாதுகாப்பும் அரசாங்கம் சொல்லி இருக்கிறது. சுழல் முறையிலே
கொண்டு வருவோம் என்று இரண்டு நிலைமைகளைச் சொல்லி
யிருக்கிறார்கள். ஆனால் பஞ்சாயத்துக்களில் என்று வருகின்ற

போது அந்த அளவிலே செய்வோம் என்று தெளிவாக விளக்கம் இல்லாமல் போய்விட்டது. ஆகவேதான் படித்த சகோதரராக இருப்பவர்கள் அதைப் புரிந்து கொண்டு—தூண்டிவிடுவது யாராக இருந்தாலும் குற்றவாளிகள் தான். அதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை—ஆனால் சட்டத்திலே விளக்கம் சரியாக இல்லாததால் ஒரு தனிப்பட்ட மனிதன் தன்னுடைய உரிமையை இந்த ஜனநாயகத்திலே காபந்து செய்து கொள்கின்ற முறையிலே அவர்கள் சென்று இருக்கிறார்களே ஒழிய, அவர்கள் சட்டத்திலே விளக்கம் கொடுத்த இடத்திலே அது சரியாக இல்லை என்பதை வழக்கறிஞருக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற 1983 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சி சட்டமுன்வடிவை ஆதரித்து திரர்விட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒருசில கருத்துக்களை நான் சொல்ல முன்வருகிறேன். இன்றையதினம் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் ஜூலை மாதம் மாநகராட்சிகளுடைய தேர்தலை நடத்துவதற்கு உறுதி பூண்டு இருப்பதாக இந்த அவையிலே சொல்லியிருக்கிறார்கள். 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13 ஆம் நாளன்று எல்லா அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் ஒருமித்த கருத்தோடு இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வருகிறோம் என்ற அடிப்படையிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் 18 சதவீதம் என்றும், பெண்களுக்கு 15 சதவீதம் என்றும், அவர்கள் எங்கெங்கு அதிகமாக வாழ்கிறார்களோ அந்த அடிப்படையிலே அவர்களுக்கு இடம் ஒதுக்குவது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம், இந்தச் சட்டத்தை நீங்கள் கொண்டுவந்து தேர்தலை நடத்துவோம் என்று சொன்னீர்களே, அந்த நேரத்திலே நாங்கள் அதை வரவேற்று இருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெளிவுபடுத்துவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். நீங்கள் எடுத்த முடிவுக்குப் பிறகு அரசியல் கட்சிகள் என்று தேர்தல் வருமோ என்று எதிர்பார்த்திருந்தார்கள். பல ஆண்டுகாலமாக ஏமாந்தார்கள். அதைப்போலவே தாழ்த்தப்பட்ட மக்களும், மலைவாழ் மக்களும், பெண்களும் தங்களுக்கு என்று தனிப் பிரதிநிதித்துவம் வருகிறது என்று யார் யார் போட்டியிடுவோம், யார் யார் நகரமன்ற உறுப்பினராக வருவோம் என்று அவர்களும் பல ஆண்டுகாலம் எண்ணிக்கொண்டு பிறகு அவர்களும் ஏமாந்திருக்கிறார்கள்.



(பிற்பகல் 1–10)

ஆனால் இன்று இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு இறுதி முடிவு என்ற முறையில் இருக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அப்படித்தான் இருக்கும் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட எது எப்படியிருந்தாலும், யார் எதைச் சொன்னாலும், தேர்தலை நான் ஜூலை மாதத்தில் நடத்துவேன் என்று உறுதி கொடுத்துள்ளார்கள். அந்த உறுதிமொழியின் அடிப்படையில்தான் ஆதிதிராவிட மக்களும், பழங்குடி, மலைவாழ் மக்களும், பெண்களும் நமக்கும் விரைவில் பிரதிநிதித்துவம் கிடைக்க இருக்கிறது என்று மகிழ்ச்சியோடு தேர்தலை எதிர்நோக்கிக்கொண்டு இருக்கிறார்கள். மார்கழி மாதத்தில் குடுகுடுப்பைக்காரன் வருவான், ஒவ்வொரு வீட்டு வாசலுக்கும் வந்து நல்லகாலம் பொறக்குது, நல்லகாலம் பொறக்குது என்று சொல்வான். இப்படி மாதம் பூராவும் சொல்லிவிட்டு, கடைசியில் வீட்டுக்கு வந்து ஏதாகிலும் கொடுங்கள் என்று கேட்பான். அதைப்போல இந்த அரசு பல்லாண்டுக்காலமாக நாங்கள் தேர்தலை நடத்துவோம், நடத்துவோம் என்று சொல்லிவந்துவிட்டு, இன்றைக்கு இறுதிக்கட்டத்திற்கு வந்து இருக்கிறது. ஆகவே, இந்தச்சட்ட முன்வடிவை இறுதியாக நிறைவேற்றுகிற இந்த நேரத்தில் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஒதுக்கீடுகள் அரசிதழ் [illegible] வெளியிடப்படும். அப்படி வெளியிட்டபிறகு அதன்மீது [illegible] வருகின்ற ஆட்சேபணைகளை அரசு மறுபரிசீலனை செய்து அதை இறுதியாக்கும். அப்படி இறுதியாக்கிய நிலையில் எல்லா அரசியல் கட்சிகளையும் கலந்தாலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடைசியில் ஏதேனும் சந்தேகங்கள் இருந்தாலும் அதைத் தீர்த்துக்கொள்ள இது உதவியாக இருக்கும். புதிய சட்டம் வருகிறபோது சில சிக்கல்கள் வரலாம். ஆனால் பழகப்பழக அது சரியாகிப்போய்விடும். இன்றைக்கு இந்த மாநிலத்தை ஒரு யூனிட்டாக வைத்துக்கொண்டு செய்து இருக்கிறீர்கள். அதை மாவட்டத்திற்கு ஒரு யூனிட் என்று வைத்துக்கொள்ள வேண்டும் என்று [illegible] கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள் என்று வலியுறுத்திச் சொல்லி, திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பில் இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான சட்ட முன்வடிவை இன்றைக்கு இந்த அவை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, இங்கே இருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளும் அதிலே பங்கேற்று இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று இருக்கிறார்கள். அதற்காக முதற்கண் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, பஞ்சாயத்துத் தேர்தலிலும் இதுபோன்ற ஒதுக்கீடுகள் ஆதிதிராவிடர்கள், பழங்குடி மக்கள், மலைவாழ் மக்கள் [illegible] 18 சதவீதம் இடஒதுக்கீடுகளைச் செய்தும், அதே [illegible] பெண்களுக்கு [illegible] மன்றங்களிலும், [illegible]

ஒன்றியங்களிலும் ஒதுக்கீடுகள் 15 சதவீதம் இடங்கள் என்றும் ஒதுக்கப்பட்டு அதற்குரிய சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அதேபோல் உள்ளாட்சி மன்றத் தேர்தலைப் பொறுத்தவரையில் ஒரு புதிய முறைப்படி, சட்டப்படி 18 வயதான ஆணுக்கும், பெண்ணுக்கும் வாக்குரிமை அளிக்கும் சட்டமும் இதே மன்றத்தில் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது ஆகவே இவைகளையெல்லாம் ஒருமனதாக நீங்கள் வரவேற்று நிறைவேற்றிக்கொடுத்திருக்கிறீர்கள். அதேபோன்று நகராட்சிக்கும் நாம் சட்டத்தைக் கொண்டுவந்து இருக்கிறோம். இதிலே ஒருமித்த கருத்தை இங்கே இருக்கும் எல்லா அரசியல் கட்சிகளும் தெரிவித்திருக்கிறார்கள். 13—3—83 அன்று அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க கூட்டினோம். அதிலே எல்லா அரசியல் கட்சிகளும் இதனை ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். அதிலே எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லை. ஆனால் அதேநேரத்தில் தேர்தல் மட்டும் சீக்கிரம் நடத்தவேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். ஆனால் இந்த அரசினுடைய கொள்கையைத் தெரிவிக்க விரும்புகிறேன். எங்களுடைய கொள்கை எல்லாம் இட ஒதுக்கீடு ஆதிதிராவிட மக்கள், பழங்குடி மக்கள், மலைவாழ் மக்களுக்குத் தேவை. அதைப்போன்று பெண்களுக்குத் தனி ஒதுக்கீடு தேவை. ஆகவே எங்களுடைய கொள்கையை நிறைவேற்றுகின்ற வகையில் ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். அதற்கும் உங்களுடைய ஒத்துழைப்பை, வரவேற்பை, பாராட்டைக் கொடுத்திருக்கிறீர்கள். அதற்காக மீண்டும் மீண்டும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனாலும்கூட ஒரு சிலருக்கு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. தனி இட ஒதுக்கீடு செய்துவிட்டோம். பஞ்சாயத்துத் தேர்தலுக்குத் தனி இட ஒதுக்கீடு செய்த காரணத்தால் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று வழக்குப்போட்டு, தடை பெற்றுவிட்டார்கள். வழக்குகள் போட்டு, தடை பெற்றுவிட்டதால் தேர்தல் நிறுத்தப்பட்டது. அதற்குமேல் உச்சநீதிமன்றத்திற்குச் சில மனுக்கள் சென்றிருக்கின்றன ஆகவே பஞ்சாயத்துத் தேர்தல் ஏற்பட்ட நிலை நகராட்சித் தேர்தலிலும் வந்துவிட்டால் என்ன செய்வது என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது.

அது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே தெரிவித்திருக்கிறார்கள். ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து தனி இட ஒதுக்கீடு நகராட்சிகளில் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கும்போது யாராவது வழக்குப்போட்டு தடை பெற்றால் பழைய சட்டத்தின் அடிப்படையில் தேர்தலை நடத்துவோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். நான் இன்னும் [illegible] அறிவிப்பைத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.





நாளைக்கு பழைய சட்டத்தைக் கொண்டுவந்து தேர்தலை நடத்துகின்றபோது ''நீங்கள் புதிய சட்டத்தைக் கொண்டு வந்தீர்கள். அதன்படி ஏன் நடத்தவில்லை; தடை பெற்றிருக்கிறார்கள் என்பதால் பழைய சட்டத்திற்கு வந்திருக்கிறீர்கள்'' என்று சொல்லி யாராவது அதற்கு தடை வாங்கிவிட்டால் என்ன செய்வது என்ற சந்தேகத்திற்கு நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி வந்தால் சட்டமன்றக் கூட்டத்தையே இந்தக்கென்று கூட்டி, இங்கே முடிவு எடுக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏனென்றால் நாளைக்கு யாரும் அரசாங்கம் இப்படிச் செய்தது, அப்படி செய்தது, இந்த இட ஒதுக்கீட்டைக் கொண்டுவந்த காரணத்தால் தடை வாங்கினார்கள் அல்லது இந்த அரசாங்கம் தேர்தலைக் கண்டு பயப்படுகிறது என்ற எண்ணம் யாருக்கும் தேவை இல்லை. எவ்வளவு சீக்கிரமாகத் தேர்தலை நடத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக நடத்த சட்டத்தைக் கொண்டு வந்து தகுந்த நடவடிக்கை எடுக்கிறோம்.

நேற்று நேற்றைக்கு முன்தினம் பல்வேறு பத்திரிகைகளில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கூட சந்தேகங்களை எழுப்பியிருக்கிறார்கள். ஜூலை மாதம் தேர்தல் வரும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஜூலைமாதம் என்றால் 1983 ஜூலையா, 1984 ஜூலையா என்று கேட்டிருக்கிறார்கள். இப்போது நடப்பது ஏப்ரல் 1983. ஆகவே 1983 ஜூலைதான். அதில் சந்தேகம் இல்லை. ஜூலை என்றால் 1984 ஜூலை என்று சொல்லவில்லை. ஆகையால் 1983 ஜூலையில் தேர்தல் நடைபெறும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். 1984 ஜூலையில் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குத் தமிழ்நாட்டில் 98 நகராட்சிகள் இருக்கின்றன. அந்த 98 நகராட்சிகளில் இப்போது நாம் தேர்தல் நடத்தப் போவது 91 நகராட்சிகளுக்குத்தான். 7 நகராட்சிகள் இந்தத் தேர்தலிலிருந்து விடுபடுகின்றன. திருச்சி, திருநெல்வேலி, சேலம் [illegible] நகராட்சிகளை எல்லாம் மாநகராட்சிகளாக மாற்ற [illegible] அடுத்த கூட்டத் தொடரில் கொண்டுவரப் [illegible] அதற்காக ஆய்வு அறிக்கைகள் தயாராக [illegible] ஆகையால் 7 நகராட்சிகள் விடப்பட்டிருக்கின்றன. [illegible] சேலம் மாவட்டத்தில் சேலம், சூரமங்கலம் [illegible] நகராட்சிகளும், திருச்சி மாவட்டத்தில் திருச்சி, பொன்மலை [illegible] நகராட்சிகளும் திருநெல்வேலி மாவட்டத்தில் [illegible] மேலப்பாளையம், பாளையங்கோட்டை [illegible] இந்த 7 நகராட்சிகள் நீங்கலாக மீதமுள்ள 91 நகராட்சிகளுக்கும் தேர்தலை நடத்த இருக்கிறோம்.

[திரு. ப. குழந்தைவேலு] [1983 ஏப்ரல் 26

மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் இதை
ஏற்கெனவே 1973 ஆம் ஆண்டிலேயே கலைஞர் ஆட்சியிலேயே
தாங்கள் திருத்தமாகக் கொண்டுவந்தோம் என்று சொன்னார்கள்.
நான தெரிவித்துக்கொள்ள விரும்புவது. இப்போது இருப்பது
1920 ஆம் ஆண்டு நகராட்சிகள் சட்டம். இந்தச் சட்டத்தில
ஏற்கெனவே இப்படிப்பட்ட இட ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்
கின்றன. அந்தச் சட்டத்தின் அடிப்படையில் உண்மையிலேயே
கலைஞர் அவர்களுக்கு நல்ல எண்ணம் இருந்திருக்குமானால்
நான் பாராட்டுகிறேன். ஆனால் சில தொகுதி ஒதுக்கீடுகள்தான்
இங்கே இருக்கக்கூடிய நகராட்சிகளுக்கும் செய்திருக்கிறோம்.
நகராட்சித் தேர்தலுக்கு ஆதிதிராவிட மக்களும், பழங்குடி
மக்களும் வரவேண்டும் என்ற அடிப்படையில் இட ஒதுக்கீடு
இந்தச் சட்டத்தில் செய்யப்பட்டிருக்கிறது. முதலிலே இருந்த
சட்டத்தில் வார்டுகள் மட்டுமே வந்திருந்தன. இப்போது ஆதி
திராவிட மக்களும், பழங்குடி மக்களும் நகராட்சித் தலைவராக,
தலைவியராக வரக்கூடிய வாய்ப்பினை இந்தச் சட்டத்தின் மூலம்
கொண்டுவந்திருக்கிறோம்.

(பிற்பகல் 1–20)

இப்படிப்பட்ட இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததன்
காரணமாக, இன்று ஆதிதிராவிட மக்களுக்கு 18 சதவீதம்
இடங்களை நாம் ஒதுக்கீடு செய்ததன் மூலமாக 16 நகராட்சிகள்
ஆதிதிராவிட பழங்குடி மலைவாழ் மக்களுக்குப் போய் சேருகிறது
பெண்களுக்கு என்று 15 சதவீத இடங்களை ஒதுக்கீடு செய்ததன
மூலமாகத் தமிழகத்திலிருக்கிற 13 நகராட்சிகள பெண்களுக்காக
ஒதுக்கப்படுகிறது. ஆகவே, அவைகளை ஒதுக்குகின்ற நேரத்தில்
எங்கெங்கே பாபுலேஷன் அடிப்படையில், பெண்களின் ஜனத்
தொகை அதிகமாக இருக்கிறதோ, அந்த வார்டுகள் எல்லாம்
வரிசையாக எடுத்துக்கொண்டு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதே
போல ஆதிதிராவிட மக்கள் எந்தெந்த நகராட்சிகளிலே அதிக
மாக இருக்கிறார்களோ அவைகளையெல்லாம் வரிசைப்படுத்தி
16 நகராட்சிகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

ஆகவே இதை எல்லாம் செய்வதற்கு ஸ்டேட்–மாநிலத்தை
யூனிட்டாக வைக்காமல் மாவட்டத்தை யூனிட்டாக வைத்துக்
கொண்டால், இந்த 18 சதவீத ஒதுக்கீட்டையும், 15 சதவீத
ஒதுக்கீட்டையும் முழுமையாகத் தர இயலாது. காரணம் ஒரு
மாவட்டத்திலே இரண்டு நகராட்சிகள் இருக்கக்கூடும். அப்படிப்
பட்ட மாவட்டங்கள் இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல
வேண்டுமென்றால் புதுக்கோட்டை மாவட்டத்திலே இரண்டு
நகராட்சிகள்–புதுக்கோட்டை ஒன்று. அறந்தாங்கி இன்னொன்று.
ஆகவே இப்படி இரண்டு நகராட்சிகள் இருக்கக்கூடிய இடத்திலே
18 சதவீதம் பகிர்ந்து அளித்தால், அந்த ஜனத்தொகை அடிப்
படையில், ஒரு நகராட்சி கூட கிடைக்காத நிலைமை
[illegible]விடும். ஆகவேதான் மாநிலத்தை யூனிட்டாக எடுத்துக்
[illegible] அங்கே வரக்கூடிய தலைவர்களுக்கு, தலைவிகளுக்கு
[illegible] ஒதுக்கீடு செய்திருக்கிறோம்.



1983 ஏப்ரல் 26] [திரு. ப குழந்தைவேலு]

அதே நேரத்தில் வார்டுகளைப்பிரிக்கின்றபோது நகராட்சிகளை
யூனிட்டாக எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஒரு நகராட்சியிலே
50 வார்டுகள் என்று சொன்னால், அதிலே ஆதிதிராவிட பழங்
குடி மக்களுக்கு 18 சதவீதமும், 15 சதவீதம் இடங்கள் பெண்
களுக்கென்றும் இட ஒதுக்கீடு செய்திருக்கிறோம். இங்கே நான் குறிப்
பிட விரும்புவது, இதிலே யாருக்கும் சந்தேகம தேவையில்லை.
ஏனென்றால் இந்தத் தேர்தல்களை நடத்துவார்களா? நடத்த
மாட்டார்களா என்று சந்தேகக் கண்கள் இருக்கின்றன. அப்படிப்
பட்ட பார்வைகூட இந்த மன்றத்திற்குத் தேவையில்லை என்று
பணிவோடு தெரிவித்துக்கொளகிறேன். இன்று நாம் அந்தத்
தேர்தல் வேலைகளை நடத்துவதற்காகப் பல கால வரையீடுகள்
செய்திருக்கிறோம். அந்தக் கால வரையீடுகளை இங்கே குறிப்
பிட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நகராட்சி, உள்ளாட்சித் தேர்தல்களில் பதவிகளில்
எவ்வளவு ஒதுக்கீடு செய்வது–மே மாத இறுதிக்குள்ளாக செய்ய
வேண்டும். 1981 ஆம் ஆண்டு நகராட்சிகளின் வார்டுகளில்
மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் புத்தகம் வெளியிடுதல்–மே
மாதம் இறுதிக்குள்ளாக, வார்டு பிரிவுகளைச் செய்து பல்வேறு
இடங்களில் தனி இட ஒதுக்கீடு செய்வது–ஜூன் மாதம் முதல்
வாரத்திற்குள்ளாக, தேர்தலை நடத்தப்பட வேண்டிய நாள்
ஜூலைக் கடைசி அல்லது ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்திற்குள்ளாக.

குறிப்பிட்ட தேதி, பின்னாலே தேர்தல் காலத்திலே கண்டிப்
பாக அறிவிக்கப்படும். ஜூலை மாதக் கடைசியில் அல்லது ஆகஸ்ட்
மாத முதல் வாரத்திற்குள்ளாக இந்தத் தேர்தல்கள் நடத்தப்பட
வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம். ஆகவே
அந்த எண்ணத்திற்கேற்ப இந்தத் தேர்தல்களை நடத்துவதற்கு
இங்கே இருக்கக்கூடிய அத்தனை அரசியல் கட்சிகளும்
ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்
கொள்கிறேன். அதேபோல இன்று நகராட்சிகளிலே உள்ள
மொத்த வார்டுகள் 2,452. அதிலே ஆதிதிராவிட பழங்குடி
மக்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய இடங்கள் 441. அதேபோல
பெண்களுக்காக ஒதுக்கப்பட வேண்டிய இடங்கள் 367. ஆகவே
அவைகளையும் நாங்கள் செய்திருக்கிறோம். அதுபோக 1981
ஜனத்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் வார்டுகள் அதிக
மாகக்கூடிய சூழ்நிலையும் இருக்கின்றது. அப்படி அதிகரிக்கின்ற
சூழ்நிலை ஏற்பட்டால் அதற்கேற்ற முறையிலே, அவற்றின்
ஒதுக்கீடுகளில், பெண்களுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும்
அதிகமாகப் போகிறது. இருக்கின்ற நிலைமையை மட்டும்
எடுத்துச் சொன்னேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

[illegible] அந்தத் திருத்தமாக இவைகளை
[illegible] தேர்தலை நடத்துவதற்குச் சட்டமும்
[illegible] நோக்கில் இன்னொரு அறிவிப்பையும்
[illegible] கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு

உறுப்பினர் சின்னசாமி அவர்கள் கூடக் கேட்டார்கள். எந்தெந்த
நகராட்சிகளில் ஆதிதிராவிட மக்களுக்கும், பழங்குடி மக்களுக்கும்
இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது, பெண்களுக்கெ [illegible]
எந்தெந்த நகராட்சிகளில் இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்
கிறது என்று கேள்வி கேட்டார்கள்.

ஆதித்திராவிட மக்களுக்காக 16 நகராட்சிகளை நாம்
ஒதுக்கியிருக்கிறோம். அவை,(1) நெல்லிக்குப்பம், (2) ராணிப்
பேட்டை, (3) உதகமண்டலம், (4) குன்னூர், (5) அரக்கோணம்
(6) சீர்காழி, (7) சங்கரன்கோயில், (8) புளியங்குடி, (9) ஆத்தூர்
(சேலம்), (10) ஆம்பூர் (வடாற்காடு), (11) பல்லாவரம், (12) தாரா
புரம், (13) திருவள்ளூர், (14) துறையூர், (15) கடையநல்லூர்,
(16) தாம்பரம்.

அதேபோன்று பெண்களுக்காக ஒதுக்கப்படுகின்ற நகராட்சி
களில், (1) தென்காசி, (2) ஸ்ரீவில்லிபுத்தூர், (3) வாணியம்பாடி,
(4) நாகப்பட்டிணம், (5) குளித்தலை, (6) வாலாஜாப்பேட்டை,
(7) திருவாடானை, (8) நாகர்கோவில், (9) செங்கோட்டை,
(10) ஆரணி, (11) பரமக்குடி, (12) மயிலாடுதுறை, (13) தேவக்
கோட்டை (குறுக்கீடு).

திரு. பி. முகமது இஸ்மாயில்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலை
வரவர்களே, அமைச்சர் அவர்கள் சில நகரசபைகள், இந்தந்த
நகரசபைகள் இட ஒதுக்கீடு செய்யப்படும் என்று இந்த மன்றத்
தில் அறிவித்துக்கொண்டு இருக்கிறார்கள். செக்ஷன் 7(ஏ)-யில்
குறிப்பிட்டு இருப்பது நோட்டிபிகேஷன் வழியாக இந்தந்த
நகரசபைகள் இட ஒதுக்கீடு செய்யப்படுமென்பது அறிவிக்கப்படும்,
அறிவித்த பின்னால் 15 தினங்கள் அவகாசம் அளித்து
ஆட்சேபணை ஏதாவது இருந்தால் தருவிக்கப்படும். ஆட்சேப
ணையை ஏற்றுக்கொள்வதாக இருந்தால் மீண்டும் திருத்தங்கள்
செய்யப்படும், அப்படித் திருத்தங்கள் செய்வதாக இருந்தால்
மீண்டும் அதற்கு எதிர்ப்பு ஆட்சேபணை தெரிவிப்பதற்கு மீண்டும்
15 தினங்கள் அவகாசம் தரப்படும் என்று எல்லாம் சொல்லப்
பட்டு இருக்கிறதே; இப்போது அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்
தில் அறிவிக்கின்றபோது இதையே ஆட்சேபணை தருவதற்கு
ஆரம்பச் செய்தியாக நாங்கள் ஏற்றுக்கொள்வதா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத்துணைத்
தலைவரவர்களே, நான் அறிவித்தது இந்த மாமன்றத்தில் [illegible]
கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எல்லாம் இவை [illegible]
வேண்டுமென்ற காரணத்திற்காக நான் அறிவித்தேன் (குறுக்கீடு)
எப்படி வந்தாலும் நோட்டிபிகேஷனில் இதுதான் வரப்போகிறது.
நோட்டிபிகேஷன் கண்டிப்பாக வரும். இதுவே நோட்டிபிகேஷன்
அல்ல. ஆகவே உங்களுக்குத் தெரிவிக்க வேண்டும்
[illegible] காகத்தான் நீங்கள் எல்லாம் முன்னெச்சரிக்கையாக
[illegible] வேண்டும் என்கின்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில்
[illegible] வைகளை எல்லாம் நான் சொன்னேனே தவிர வேறு
[illegible] ஆகவே இந்தத் தேர்தலை குறிப்பிட்ட கால சட்டத்தில்



நாம் நடத்துவதற்குத் தயாராக இருக்கிறோம். ஆகவே இந்தச்
சட்ட [illegible] களை எல்லாம் ஏற்றுக்கொண்டு தங்களுடைய
கருத்துக்களைத் தெரிவித்த அனைத்துக்கட்சித் தலைவர்களுக்கும்
என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் இந்த நேரத்தில்
தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்தச் சட்டமுன்வடிவை
ஏற்குமாறு மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்
கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது முன்
எச்சரிக்கை என்ற வார்த்தையைச் சொன்ன உடனே எங்களுக்குப்
பயமும் வந்துவிட்டது. அப்படி இருந்தாலும் பரவாயில்லை.
சட்ட ரீதியாக அதை நாம் அனுபவித்துத்தான் ஆகவேண்டும்.
ஆனால் 1920 ஆம் ஆண்டு மாநகராட்சிகள் சட்டப்படி, அந்நியர்
இந்த நாட்டை ஆண்ட காலத்தில் சென்னைக்கு சுழல்
முறையில் இந்தச் சமுதாய மக்கள் வரமுடியாது என்ற நிலையில்
குறிப்பிட்டு ஒவ்வொரு சமுதாயம் வந்தால் இந்த மக்கள் வர
முடியும். எளிய மக்கள் அல்லது தீண்டாமைக் கொடுமையால்
இருக்கின்ற மக்கள் என்ற ஒரு நல்ல எண்ணத்தில் கொடுக்கப்
பட்டது. இப்போது அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல எண்ணத்தில்
அறிவித்திருக்கிறார்கள். பல மாநகராட்சிகள் உருகின்றபோது
இதே நிலைமையை உத்தேசித்தும் அந்த மாநகராட்சிகளிலும்
இந்த நிலைமையை உருவாக்க அரசு முன்வந்து ஆவன செய்யுமா
என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தம் நகராட்சிகளைப்
பொறுத்து, கொண்டு வந்து இருக்கிறோம். மாநகராட்சிகளுக்கு
என்று இன்று தனியான சட்டங்கள் இருக்கின்றன. மதுரை
மாநகராட்சிக்குத் தனிச்சட்டம், கோவை மாநகராட்சிக்குத் தனிச்
சட்டம், சென்னை மாநகராட்சிக்குத் தனிச் சட்டம் இப்படி 3
சட்டங்கள் இருக்கின்றன. ஆகவே இன்னும் 3 மாநகராட்சிகளை
நாம் கொண்டு வரயிருக்கிறோம். 6 மாநகராட்சிகளையும்
ஒன்றாகச் சேர்த்து ஒரு 'கார்ப்பரேஷன்ஸ் ஆக்ட்'-ஒரே சட்டமாக
நாம் கொண்டுவர இருக்கிறோம். அப்படிக் கொண்டு வருகிற
நேரத்தில் இதுபோன்ற திருத்தங்களை அதிலே செய்ய இருக்
கிறோம்.

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள்
Reservation for Scheduled castes and Scheduled tribes and women
எந்த எந்த இடம் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் நான்
தெரிந்து கொள்ள விரும்புவது என்ன என்றால் எந்த இடத்தை
எல்லாம் கணக்கு எடுத்து ஆண்களை விடப் பெண்கள் அதிகமாக
இருக்கிறார்கள் என்று அறிவித்திருக்கிறார்களா? [illegible]
[illegible] [illegible] அதிகமாக [illegible] ஆகமாகிறி
கிறார்கள் என்று [illegible] அதிகமாக [illegible]
கிறார்களா? [illegible] எடுத்து [illegible] இப்படி அறிவித்திருக்
[illegible] என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த 1981ம் ஆண்டு ஜனத்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் எந்த எந்த நகராட்சிகளில் ஆதிதிராவிட மக்கள் அதிகமாக இருக்கிறார்களோ அவர்களை வரிசைப் படுத்தி நாம் கொண்டு வந்து இருக்கிறோம். அதே போல்பெண்கள் எந்தெந்த நகராட்சிகளில் அதிகமாக இருக்கிறார்களோ அந்த சதவீத அடிப்படையில் தான் நாம் இவைகளைப் போட்டு இருக்கிறோம். ஆகவே இதுவும் கூட சுழல் முறையில் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நகராட்சிகள் மாற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:—

"தமிழ்நாடு 1983-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு— (சட்டமன்றப்பேரவை சட்டமுன்வடிவு எண். 31/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1983ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண். 31/1983) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(பிற்பகல் 1-30.)

5. அறிவிப்புகள் —(தொடர்ச்சி)

(இ) மதிப்பீட்டுக்குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, சட்ட விதிகள் ஆய்வுக்குழு ஆகியவற்றுக்கு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: சட்டமன்ற மேலவைத் தலைவரிடமிருந்து கீழ்க்கண்ட செய்திகள் வரப்பெற்றுள்ளன:—

1983–84 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்:—

1. திரு. பா. ரா. தாமஸ்,
2. திரு. ஆர். டி. கோபால்.



3. திரு. எஸ். முத்துசாமி
4. திரு. பி. முனுசாமி
5. திரு. எஸ். ஆறுமுகம்.

1983–84 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.—

1. திரு. ஏ. ஆர். தாமோதரன்
2. திரு. சி. இராமலிங்கம்
3. திரு. எஸ். ஆர். இராதா
4. திரு. ஆ. நல்லசிவன்
5. திரு. ம. சுந்தரலிங்கம்

1983–84 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்:—

1. திரு. காருவெட்டி கண்ணப்பன்
2. டாக்டர் இரா. ஜனார்த்தனம்
3. திரு. க. இராமமூர்த்தி
4. திரு. கி. ராஜு லெட்சுமிகாந்தன்
5. திரு. ம. சங்கரலிங்கம்

1983–84 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவை சட்ட விதிகள் ஆய்வுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

1. திரு. வலம்புரி ஜான்
2. செல்வி ஆ. வீ. ராஜ் [illegible]
3. திரு. ஏ. ஜே. தாஸ்
4. திரு. ஏ. என். வெங்கடேசன்
5. திரு. ஜே. எம். மீரான் [illegible]

அடுத்து இரண்டு சட்ட முன்வடிவுகளும் [illegible] எடுத்துக்கொள்ளப்படும்.

தில்லை நடராசர் கோயில் நிர்வாகம்—

*திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு சட்டப் பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நடராசர் கோயில்
என்பது வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்து மிகச் சிறப்பாக
இந்தியாவிலே உள்ள சைவர்கள் அனைவராலும் போற்றப்படுகிற
கோயிலாகும். அந்தக் கோயிலுக்குள்ள சொத்து மதிப்பு
அமைச்சர் அவர்கள் சில நாட்களுக்கு முன்பு கொடுத்த தகவல்
பிரகாரம் 4 கோடி ரூபாய்க்கு மேல் பெறுமானமுள்ளது.
அந்த 4 கோடி ரூபாய்க்கு மேல் பெறுமானமுள்ள சொத்தில்
அங்கேயுள்ள விலைமதிக்கமுடியாத சிலைகள் கணக்கிடப்
பட்டனவா என்பது எனக்குத் தெரியாது. காரணம் அண்மை
யிலே டெல்லியில் அணி சேரா நாடுகள் மாநாடு நடந்தபொழுது
தமிழ்நாட்டின் ஒப்பற்ற புராதன சிலைகள் அங்கு வைக்கப்பட்டு
அதைப் பல்வேறு உலக நாட்டார்கள் கண்டு வியந்ததாக
கேள்விப்பட்டேன். அப்படி டில்லியில் வைக்க தமிழ்நாடு அரசு
கேட்டபோது தில்லை நடராசர் கோயிலிலுள்ள தீட்சிதர்கள்
அங்குள்ள மிகச் சிறப்பான அந்தச் சிலைகளைக் கொடுக்க மறுத்து
விட்டார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். அந்த சிலைகளின்
மதிப்பு மாத்திரம்பல கோடி ரூபாய்க்கு மேல் இருக்கும் 4 கோடி
ரூபாய்க்கு மேல் பெறுமானமுள்ள சொத்து மாத்திரமல்லாமல்
அந்தக் கோயிலுக்கு இந்தியாவிலேயும் இலங்கையிலேயும் சுமார்
ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் சொந்தமாக இருக்
கின்றன. அங்கே உள்ள நகைகள் எல்லாம் விலை மதிக்கமுடியாத
நகைகள் ஆகும். வரலாற்றுச் சிறப்புமிக்க நகைகள் ஆகும். அந்தக்
கோயிலில் என்ன நடக்கிறது என்பதே கொஞ்ச காலம்வரை
தெரியாமல் ரகசியமாகவே இருந்தது. அதனால் கோர்ட்டிலே
சரியான தகவலைக்கூட அரசு சார்பிலே சொல்லமுடியாமல்
இருந்தது. ஆனால் இன்றைய தினம் தீட்சிதர்களே 5, 6
பேர்கள்—சாதாரண—தீட்சிதர்கள் அல்ல, இந்த சிதம்பரம் தில்லை
நடராசர் கோயிலுடைய பொது சபாநாயகர் நிர்வாகத்திலே
தலைவராக இருந்தவர்கள், துணைத் தலைவராக இருந்தவர்கள்,
செயலாளராக இருந்தவர்கள், நிர்வாக உறுப்பினர்களாக
இருந்தவர்கள் அத்தனை பேர்களும் நம்முடைய தமிழக
அரசிற்கும் இந்தியப் பேரரசிற்கும், பெரியவர் சங்கராச்சாரி
யாருக்கும் எழுத்துமூலம் அந்தக் கோயிலின் உள்ளே நடக்கிற
நிர்வாகச் சீர்கேடுகளைப்பற்றி தெளிவாக எழுதிக் கொடுத்திருக்
கிறார்கள். மாறுபட்ட சூழ்நிலையில் தொடர்ந்து அந்தக்
கோயிலில் ஏதோ ஒரு தீவுபோல் நாட்டிலே நிலவுகின்ற
சட்டங்களுக்கும் இயற்கை நீதிக்கும் நாகரீகத்திற்கும் முரணான
ஒரு சர்வாதிகாரமான நிர்வாகம் நடக்கவேண்டுமா என்பதை
யோசிக்கவேண்டிய காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது.
குறிப்பாக அந்த தீட்சிதர்கள் கொடுத்த பட்டியல் பிரகாரம்
சாதாரண களவு, திட்டமிட்டு களவு அல்லது கொள்ளை
போன்றவை தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன.
கோயிலில் உள்ள கோபுரத்திலே 1958 ஆம் ஆண்டு ஐப்பசி
மாதம் சுமார் 30 மதிப்புள்ள தாமரைப்பூ போல் தங்கத்
தகடுகள் காணாமல் போய்விட்டது என்று சொன்னார்கள்.
சம்பந்தமாக கோர்ட்டிலே வழக்கு நடந்தது. சாதாரண



கோயிலில் கலசத்தில் தங்க ஓடு வேயப்பட்ட கூறை மீது இருந்த
கலசத்தில் இருந்த பூக்கள் மட்டுமா காணாமல் போய்விட்டன?
நடராசருடைய பக்கத்திலே உள்ள சிவகாமியம்மன் கையிலே
உள்ள நகை களவுபோவதும், திரு நடராசருடைய குஞ்சிதபாதம்
தூக்கியதிருவடி என்று சொல்லப்படுகிற திருவடியிலே சங்கராச்
யாரால் கொடுக்கப்பட்ட வைரக்கற்கள் 4 காணாமல்
போவதும், நடராசருக்குப் பக்கத்திலே உள்ள மற்றொரு
கடவுளின் அரைஞாண் கயிறு காணாமல் போவதும்
பாண்டியநாயகம் அம்மன் கழுத்திலே உள்ள மாங்கல்யம் காணா
மல் போவதும் மிகச் சாதாரண குற்றங்கள் என்று யாரும்
கருதமாட்டார்கள். தீட்சிதர்கள் இந்த களவுபோன பட்டியலை
அரசுக்குக் கொடுத்தபோது மறுப்பதாக நினைத்துக்கொண்டு
8-4-82-இல் நிலை பொது தீட்சிதர்களுடைய செயலாளராக
இருந்த வை. சு. நடவசபாபதி ஒரு அறிக்கைவிட்டார். அந்த
அறிக்கையிலேகூட அவர் சொல்வது 10 நாட்களுக்கு முன்னால்
பாண்டியநாயகம் அம்பாள் கழுத்திலே இருந்த திருமாங்கல்யம்
களவு போய்விட்டதாகச் சொல்வது பொய். அந்த அம்பாள்
திருமாங்கல்யம் செப்புக் கம்பியிலே கோர்க்கப்பட்டு சுமார்
இரண்டு கிராம் எடையுள்ளது காணவில்லை என்று சொல்
லுறார்களே தவிர வேறில்லை. வார்த்தைகள் தான் வித்தியாம்,
களவு போனதை ஒப்புக்கொள்கிறார்கள். அதைப்போல ஆறு
மாதங்களுக்கு முன்பு சிற்சபையிலேயுள்ள சிவகாமி அம்மன் கை
யிலே உள்ள பவுன் ஒடாணி களவு போய்விட்டது என்று
சொல்வது பொய், சுமார் [illegible] பவுன் எடையுள்ள பழமையான
இணைப்பு ஒடாணி மிகச் சிறியதாக இருந்ததால் அறுந்து
மாலையோடு சேர்ந்து தவறிவிட்டது என்று சொல்கிறார்கள்.
இங்கேயும் களவுபோய்விட்டதை அவர்கள் மறைமுகமாக ஒத்துக்
கொள்கிறார்கள்.

அங்கே நடராசர் கோவிலுக்குப் பக்கத்திலே ஒரு கிணறு
இருக்கிறது. அந்த கிணற்று தண்ணீரை எடுத்துதான் கடவுள்
களுக்கு எல்லாம் அபிஷேகம் செய்கிறார்கள். அவ்வளவு புனித
மான நீர். அந்த கிணற்றிலே பக்தர்கள் ஒரு ரூபாய், எட்டணா,
பத்து பைசா போன்ற நாணயங்களை அங்கே போடுகிறபோது
அதை இரவு நேரங்களில் சிலபேர்கள் தீட்சிதர்கள் ஆட்களை
வைத்து மூழ்கி அந்த நாணயங்களை எடுத்து துணிகளிலே கட்டி
அதை பங்கு போட்டுக்கொள்கிறார்கள். அப்போது ஒரு
தீட்சிதர் நள்ளிரவிலே கண்டுபிடித்து விடுகிறார். கண்டுபிடித்த
தீட்சிதர் சபாநாயகர் பொது தீட்சிதர் சபையிலே தீமசான்னதை,
உண்மையிலே நிர்வாகம் திறமையாக இருக்குமானால் தீட்சிதர்
கள் அதை கண்டிக்கவேண்டும். கண்டிப்பதற்கு மாறாக எந்த
தீட்சிதர் இதுமாதிரி கண்டுபிடித்துச் சொன்னாரோ அந்த
தீட்சிதரை கோவிலுக்குள்ளே துரத்தி, துரத்தி அடித்து
இரத்த காயமாக்கியிருக்கிறார்கள். அந்த தாக்குதலுக்குள்ளான
தீட்சிதர் போலீசில் புகார் செய்திருக்கிறார். இதைச் சாதாரண
களவு என்று எப்படி சொல்ல முடியும்? திட்டமிட்டு, கிணற்றிலே
மூழ்கி, காசுகளை எடுக்கிற இவர்களிடம் எப்படி விலை மதிக்க
முடியாத நகைகளை, சரபோஜி மன்னர் கொடுத்த நகைகளை

மேலும், இக்கோயிலில் நந்தனார் திருவுருவப்படமும், மண்டபமும் பராமரிக்கப்படாமல் சீரழிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அதுவும் வரலாற்றை மறைப்பதாகும். அது மட்டுமல்ல, கல்வெட்டுக்களையும் மறைக்கிறார்கள். உதாரணமாக, 1905—ல் கோர்ட்டே தீர்ப்பளித்திருக்கிறது. தீட்சிதர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதற்கு கோயிலிலே இருக்கிற வைணவச் சிலைகளை ஒரே இரவில் மாற்றிவிட்டு, சைவச் சிலைகளை வைத்து மாற்றி விட்டார்கள் என்று 1905 ஆம் ஆண்டு, நீதிபதிசுப்பிரமணியம் அவர்களும் பென்சனும் தீர்ப்பளித்திருக்கிறார்கள்.

தொழுநோய் பிடித்தவர் அர்ச்சனை செய்யக் கூடாது என்பது விதி. தொழு நோய் பிடித்தவர் அர்ச்சனை செய்கிறார். நாம் புகார் செய்தால், அதைப் பரிசோதிப்பதற்கு வழிமுறைகள் இல்லை. இன்னொன்று, பால்ய விவாகம். அங்கே கல்யாணம் பண்ணினால்தான் அர்ச்சனை செய்யலாம். அர்ச்சனை செய்தால் தான் தினம் ஜீவனம் கிடைக்கும். அந்த நிலையில் வேறு சொத்து இல்லாத தீட்சிதர்கள் 10 வயது, 13 வயது உள்ளவர்கள், திருமணம் செய்ய வேண்டிய கட்டாய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மூன்று நாட்களுக்கு முன்பு, இந்தியாவில் வெளியாகும் 'டுடே' என்ற ஆங்கில வெளியீட்டின் பத்திரிகை நிருபர் சிதம்பரத்திலே தேடித் தேடிப் பார்க்கிறார், தில்லை நடராஜ தீட்சிதர் மகன் 12 வயது. லேட் வை. சிற்சபேச தீட்சிதர் குமாரி சுபாஷிணி வயது 10 —இருவருக்கும் திருமணம் நடந்திருக்கிறது. அதுபோல, லேட் வை. சிற்சபேச தீட்சிதர் மகன் ராஜி—13 வயது—அவருக்கும் ஞா.ரா. சபாநடேச தீட்சிதர் குமாரி வயது 10—இவருக்கும் பால்ய விவாகம் நடக்கிறது. காரணம், விவாகம் நடந்தால்தான் அங்கே அர்ச்சனைக்கு போகமுடியும். அர்ச்சனைக்குப் போனால்தான் சாப்பாடு கிடைக்கும். இந்த அவலநிலை ஏன்?

அமைச்சர் அவர்கள் அருமையான தகவல்கள் சிலவற்றைச் சொல்லியுள்ளார்கள். ரூ. 3 இலட்சம் பெறுமானமுள்ள தங்க நகைகளை, கணக்குகளில் காட்டப்படாததை, கண்டு பிடித்ததாகச் சொன்னார்கள். இது சம்பந்தமாக சர்க்காருக்குத் தகவல் கொடுத்த நடராஜர் குஞ்சிதபாத தீட்சிதரை சர்க்காருக்கு ஏன் தகவல் கொடுத்தாய் என்று சொல்லி, ரூ.5 அபராதம் விதித்து, அவர் கட்ட மறுத்து, அதனால் தீட்சிதர்களால் அவர் ஜாதி பிரஷ்டம் செய்யப்பட்டிருக்கிறார். (மணியடிக்கப்பெற்றது).

இந்த நிர்வாகத்திலே, நிர்வாக அதிகாரி போடாததனால் என்ன கஷ்டம் என்று சொன்னால், அநீதி இழைக்கப்பட்ட ஏழை தீட்சிதர்களால் ரிட் பெட்டிஷன் போட முடியாத நிலையிருக்கிறது. நிர்வாக அதிகாரி இருந்தால் ரிட் போடலாம். இன்னொன்று, 100 ஆண்டுகளாக நிர்வாக அதிகாரி போட்டார்களா? போடவில்லையே என்று சொல்கிறார்களே தவிர, ஏற்கனவே, 9 ஆம் நூற்றாண்டு, 10 ஆம் நூற்றாண்டு, 11, 12, 13, 14, 15 ஆம் நூற்றாண்டு, என்று கிட்டத்தட்ட 1,000 ஆண்டுகளாகப்



பல்வேறு மன்னர்கள் நிர்வாக அதிகாரிகளைப் போட்டிருக்கிறார்கள். அந்த இ. ஓ.க்களுடைய பெயர்களை வேண்டுமானால் சொல்கிறேன், காளிங்கராயன், சோழக் கோன், தென்னவன்பிரம்மராயன், ஜெயதுங்க பல்லவராயன், தில்லை அம்பல பல்லவராயன்—ஏன் செஞ்சியை ஆண்ட கிருஷ்ணப்ப நாயக்கர் கூட தன் பிரதிநிதியை போட்டிருக்கிறார். ஆயிரம் ஆண்டுகளாக, நிர்வாகம் சரியாக நடக்க, இ. ஓ.க்களைப் போட்டிருக்கிறார்கள்—மாற்றிப் போட்டிருக்கிறார்கள். இப்பொழுது கூட பஞ்சபூதம் என்று சொல்லப்படுகிற எல்லா கோயில்களுக்கும் நிர்வாக அதிகாரிகள் உண்டு. நடராஜர் கோயிலைத் தவிர நடராஜர் கோயில் ஆகாசத்தை பிரதிபலிப்பதாக சொல்லப்படுகிறதே. அங்கு இ. ஓ. இல்லை. காஞ்சியிலுள்ள காமாட்சி கோயிலுக்கு இ. ஓ. போடப்பட்டிருக்கிறது. மதுரையிலுள்ள மீனாட்சி கோயிலுக்கு இ. ஓ. போடப்பட்டிருக்கிறபோது, இங்கு மாத்திரம் ஏன் இ. ஓ. போடக்கூடாது. இ. ஓ., போடுங்கள் என்று எழுத்து மூலமாக தீட்சிதர்கள் இப்பொழுது பெட்டிஷன் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கனவே கொடுக்கவில்லை. சர்க்காருக்குப் போதிய ஆதாரம் இருப்பதால் நிர்வாக அதிகாரியைப் போடுவதற்கு முன்வர வேண்டும். அப்பொழுதுதான் பல்வேறு நிர்வாகச் சீர்கேடுகள் சரியாக்கப்படும் என்று கூறி மாண்புமிகு அமைச்சரவர்கள் எடுக்கப்போகும் சரியான நடவடிக்கைகளை அறிவிக்குமாறு கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல கோடி ரூபாய் சொத்துள்ள சிதம்பரம் நடராஜர் கோயிலை அறநிலையத் துறையின் கீழ் கொண்டு வர வேண்டுமென்று வலியுறுத்துவதற்காக நான் இந்த நேரத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்று இந்தக் கோயில் ஒருசில தீட்சிதர்களின் தனி சாம்ராஜ்யமாகவே இருக்கிறது. இந்தக் கோயிலைப் பொறுத்தவரையில் அதில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது; வாழ்க்கை நடத்துவதற்கு போதுமான ஊதியம் கிடையாது. வேலையை விட்டுச் சென்றால் ஓய்வு ஊதியம்கூடக் கிடையாது. மற்ற அறநிலையத் துறையின் கீழ் உள்ள கோவில்களில் வேலை செய்யும் சிப்பந்திகளுக்கு இருக்கின்ற பாதுகாப்போ, அவர்களுக்குக் கிடைக்கின்ற ஊதியமோ அல்லது ஓய்வூதியமோ இல்லாத முறையில் தமிழகத்தில் ஒரு கோயிலில், அதுவும் பல கோடிக் கணக்கான ரூபாய் சொத்துக்கள் உள்ள கோயிலில் இருக்க வேண்டுமா என்று நாம் தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டும்.

இன்று இந்தக் கோயிலை அறநிலையத் துறையின் கீழ் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய சட்டம் கொண்டு வரவேண்டுமென்றால் அரசு அதற்காகச் சட்டம் கொண்டு வருவதற்குத் தயங்கக்கூடாது. அதற்கு முன் வர வேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்தி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய சேதுபதி மன்னன் கொடுத்த நகைகளை, திப்புசுல்தான் கொடுத்த நகைகளை, வேறு சோழர் காலத்து மன்னர்கள் கொடுத்த நகைகளை ஒப்படைக்கமுடியுமென்று இந்த மன்றத்தின் உறுப்பினர்களை கேட்க விரும்புகிறேன். இன்னொன்று, நாங்கள்தான் தீட்சிதர்கள், அர்ச்சகர்களும் நாங்களே, தர்மகர்த்தர்க்களும் நாங்களே என்று சொல்கிறார்கள். தாராளமாக இருக்கட்டும். அந்த கோவிலுக்கு வருகின்றவர்கள் தட்சணை என்ற பெயரிலே கொஞ்சம் கொடுக்கிறார்கள். அதை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் ஆண்டவனுக்கு கொடுக்கிற காணிக்கையை கூட அவர்களே எடுத்துக் கொள்கிறார்கள். காணிக்கைக்கு என்று தனியாக உண்டியல் வைக்கக் கூடாது என்று வாதாடுகிறார்கள். அண்மையிலே சில மாதங்களுக்கு முன்பு ஒரு பக்தர் அந்த நடராஜருடைய பஞ்சாட்சர படியிலே ஒரு ஆயிரப்பவுன்—அவர்களுடைய கணக்குப்படி அது அரை பவுன்—ஆனால் எங்களுக்கு வந்த தகவல்படி ஒரு பவுன்—பதுமையை வைத்ததற்கு அன்றையதினம் பூஜையிலே இன்சார்ஜாக இருந்தவர் எடுத்து வீட்டிற்கு கொண்டு போய் விட்டார். தகவல் கிடைத்தவுடன் பொது தீட்சிதர் சபையிலே கேட்டபோது எனக்கு கிடைத்த சொத்து, அதிலே சுவாமிக்கு சம்பந்தமில்லை என்று சொல்லி வாதாடி, பலபேர் இது நியாயமில்லை என்று சொன்ன பிற்பாடு, அந்த தீட்சிதர் நான்கிலே ஒரு பங்கை எனக்கு கொடுங்கள், மூன்று பங்கை வேண்டுமானால் கோவிலுக்கு கொடுக்கிறேன் என்று சொல்கிறார். காணிக்கைக்கும், தட்சணைக்கும் அவர்களுக்கு வித்தியாசம் தெரியவில்லை என்று சொல்கிறார்கள். இதற்கெல்லாம் தான் குற்றவாளி எப்படி நீதிபதியாக இருக்கமுடியும். எது காணிக்கை, எது தட்சணை என்பதற்கு உண்டியலை தனியாக வைத்திருந்தால் தெரியும், ஆகவே இதைக் கண்டுபிடிப்பதற்கு நமக்கு ஒரு நிர்வாக அதிகாரி தேவைப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் தீட்சிதர்கள் வசூலுக்கு கணக்கை காட்டுவதே இல்லை. சாதாரணமாக மாரியம்மன் கோவில் திருவிழாவானாலும் கூட கிராமத்திலே உள்ளவர்கள் கடந்த ஆண்டிலே நன்கொடை வசூல் செய்த பட்டியலைக் காட்டி, யார், யார் கொடுத்தார்கள்? எவ்வளவு எவ்வளவு கொடுத்தார்கள் என்ன செலவு என்று காட்டி தான் அடுத்த வருஷத்திற்கு நிதி வசூல் செய்வார்கள். இந்த தீட்சிதர்கள் ஒரு வருஷம் கூட அரசிற்கு கணக்கு காட்டியதில்லை. வருஷத்தில் இரண்டு தடவைகள். ஆனி திருமஞ்சனத்தின் போதும், திருவாதிரையின் போதும் 40, 40 நாட்கள்—ஒரு வட்டமென்றால் 20 நாட்கள். இரண்டு, இரண்டு வட்டம்—மொத்தம் 80 நாட்கள். ஒரு ஆண்டிற்கு வருகிற பக்தர்களிடம் காணிக்கையாக வாங்குவதை ஏலம் இடுவது பழக்கம். ஒரு வட்டத்திற்கு 6,000 முதல் 9,000 ரூபாய் வரையில் வருமானம் வருவது பழக்கம். இந்த வட்டக் கணக்கு ஆண்டிற்கு சுமார் 35 ஆயிரம் ரூபாய் வருவதை கணக்கிலே காட்டுவதில்லை. ஆனால் அதிலே ஆச்சரியம் என்னவென்றால், கடந்த ஆண்டு சர்க்கார் நமது கோவிலை எடுத்துக் கொள்வதாகச் சொல்கிறார்கள். சர்க்காரை எதிர்த்து வழக்கு நடத்த வேண்டும். சுப்ரீம் கோர்ட்டிற்கு போகவேண்டியிருந்தாலும் இருக்குமென்றுச் சொல்லி, இந்த நடராஜர் கோவில் சரித்திரத்திலேயே ஏற்படாத அளவிற்கு



ஆனித் திருமஞ்சனம், திருவாதிரை இரண்டு விழாக்களுக்கும் 40, 40 நாட்களுக்கு ஏலம் விட்டு வசூலிப்பதோடு எக்ஸ்ட்ராவாக 10 வட்டம் 200 நாட்களுக்கு குத்தகை விட்டு, ஒரு லட்சம் ரூபாயை அவர்கள் வசூலித்து வைத்திருக்கிறார்கள். இது நியாயம்தானா என்று கேட்க விரும்புகிறேன்.

கோவிலைச் சுற்றியுள்ள தென்னை மரங்களை மிகக் குறைந்த குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள். கோவிலுக்கு சொத்தில்லை யென்று ஒரு காலத்தில் கோர்ட்டிலே சொன்னார்கள்; இன்றைய தினம் ஆயிரம் ஏக்கர்களுக்கு மேல் நிலம் இருக்கிறது. இலங்கையிலும், இந்தியாவிலும் சொத்துக்கள் இருக்கின்றன என்று தமிழக அரசு கண்டுபிடித்து நிலங்களை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்; அதிலேயிருந்து வருமானம் 32 ஆயிரத்து சொச்சம் பாங்குகளில் போட்டிருக்கிறோம்; செக்கை வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொன்னால், சொத்தை ஏற்க தீட்சிதர்கள் மறுக்கிறார்கள் என்று சொன்னால் இவர்கள் எப்படி தர்மகர்த்தாவாக இருக்க முடியும்? எப்படி நல்ல நிர்வாகிகளாகவும் அர்ச்சகர்களாகவும் இருக்க முடியும்? தர்மகர்த்தாவாக இருக்க முடியாது என்பதுதான் என்னுடைய வாதம். அந்தக் கோயிலில் பொதுச் சுகாதாரம் மிகவும் கெட்டுவிட்டது. பக்தர்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லை. 3 மாதத்திற்கு முன்பு ஒரு மாதம் கடைசி வெள்ளிக் கிழமை ஒரு ... செஷன்ஸ் நீதிபதி மனைவியுடன் வந்தபொழுது தில்லை அம்மன் கோயிலுக்கு எதிர் புறத்திலேயே அந்த செஷன்ஸ் ஜட்ஜ் மனைவியினுடைய தாலி செயின் அறுக்கப்பட்டது.

[பிற்பகல் 1—40]

அது மாத்திரமல்ல, வைணவமும், சைவமும் ஒன்று என்பதை வலியுறுத்த அரியையும், சிவனையும் ஒரே இடத்திலிருந்து நாம் வணங்கலாம். அதுதான் நடராஜர் கோயிலிலே முக்கியமான அம்சம் என்று சொல்லப்பட்ட அந்த இடத்தில், கோவிந்தராஜ பெருமாளுக்கு திவ்ய பிரபந்தம் பாடினால், உடனே தீட்சிதர்கள், தமிழிலே சொல்கிற திவ்ய பிரபந்தம் காதிலே விழக்கூடாது என்று மணியை அடிக்கிறார்கள்.

இன்னொன்று தீட்சிதர்கள் சரித்திரச் சான்றுகளை மறைக்கிறார்கள், கல்வெட்டுக்களை மறைக்கிறார்கள். குறிப்பாக ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர் அமைச்சர் அவர்களுக்கும், அரசுக்கும் ... கொடுத்திருக்கிறார்கள். நந்தனார் தெற்கு கோயில் வாயிற்படியாக வந்ததாக வரலாறு. ஆகவும். அதன் காரணமாக, தெற்கு கோயில் வாயிற்படியை அடைத்து விடுகின்றனர், ஒரு சமுதாயத்தை இழிவுபடுத்துவதாக இருக்கின்றது. அவ்வாயிற்படியைத் திறக்கவேண்டுமென்று பொதுமக்கள் முறையிட்டும், நேரில் கேட்டும் இதுவரையில் வாயிற்படியை திறக்கவில்லை. இது தீண்டாமையை நினைவூட்டுவதாகும்.

இன்று இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சொல்ல வேண்டியிருக்கிறது. அது என்னவென்றால், அறநிலையத் துறையின் இம், நிர்வாக அதிகாரிகளின் மேற்பார்வையிலுள்ள கோயில்கள் தமிழகத்தில் மாரியம்மன் கோயிலிலிருந்து கன்னியாகுமரி அம்மன் கோயில் வரையில் பல ஆலயங்களின் ஆண்டுக்காண்டு வருமானம் வளர்ந்து வருவதும், பக்தர்களின் எண்ணிக்கை பெருகி வருவதும் மறுக்க முடியாத உண்மையாக இருக்கிறது.

ஆகவே, இந்த நேரத்திலே இந்தக் கோவிலுக்குச் சேர்ந்த ஏறக்குறைய ஆயிரம் ஏக்கர்களுக்கு மேல் நிலம் இருக்கிறது. இந்த நிலங்களில் வேலை செய்யும் ஏழை விவசாயிகளுக்குக் குத்தகைக்குக் கொடுக்கவும், அவர்களுக்கு நியாயமான முறையில் பாதுகாப்பு கொடுக்கவும் அறநிலையத் துறை நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

இந்தக் கோயில் சம்பந்தமாகச் சட்டம் கொண்டு வரும் நேரத்தில், இந்த நிலங்களில் வேலை செய்து கொண்டிருக்கின்ற விவசாயிகளைப் பொறுத்தவரையில் ஒரு நியாயமான குத்தகைக்கு அந்த நிலங்களைக் கொடுக்கவும், விவசாயிகள் சம்பந்தமாகத் தமிழகத்தில் உள்ள சட்டங்களை அவர்களுக்குப் பொருந்தும் வகையில் செய்யவும் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த நாட்டு மக்கள் முக்கியமாகக் கவனம் செலுத்த வேண்டிய ஒரு பிரச்சனை குறித்து ஒரு நெருக்கடியான நேரத்தில் என்னைக்கொண்டு வந்து நிறுத்தி, விளக்கம் அளிக்க வேண்டுமென்று என்னைப் பணித்திருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. சுவாமிநாதன் அவர்கள் பல கருத்துக்களை, அவர்கள் அந்த ஊரிலே இருக்கின்ற காரணத்தினாலேயும் நேரிலே அனுபவத்திலே அறிந்திருக்கின்ற காரணத்தினாலேயும் விளக்கமாகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால் நேரமில்லாத காரணத்தினாலே அந்த வேகமாகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவைகளையெல்லாம் பற்றி நான் விளக்குவதற்கு எனக்கு இப்பொழுது நேரமும் இல்லை; மேலும் வேகமாகச் சொல்ல ஆரம்பித்தால் விளக்கவும் முடியாது. ஆகவே, சுருக்கமாக இந்த விஷயத்தைப்பற்றி இந்த நாட்டு மக்கள் தெரிந்துகொள்ள வேண்டிய சில கருத்துக்களை மாத்திரம் தெரிவிக்க விரும்புகிறேன்.

சிதம்பரம் சபாநாயகர் ஆலயம் ஒரு அரசினுடைய நிர்வாகத்திற்குள்ளே வர வேண்டுமா, வேண்டாமா என்பதுதான் இன்றைக்கு இருக்கின்ற பிரச்சனை. இந்த நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றம், சட்டமன்றங்கள், குடியரசுத் தலைவர், இந்தியப் பிரதமர், முதலமைச்சர்கள், அமைச்சர்கள் என்று இப்படிப்பட்டவர்களெல்லாம் சேர்ந்து இந்த நாட்டை நிர்வகிக்கிறோமா அல்லது இன்னும் காட்டாட்சி தர்பார் நடத்திக்கொண்டிருப்பதற்கு அனுமதிக்கிறோமா என்பதற்கான விடை காண வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்.



இன்றைக்குக் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை என்று அழைக்கப்படுகிறதே, இந்த இந்தியத் துணைக் கண்டத்தில் இந்திய அரசியல் சட்டத்தின்படியும், அந்தந்த மாநிலங்களில் இயற்றப்படுகின்ற சட்டங்களின்படியும் நடைமுறைகள் நடைபெற்று வருகின்றன என்பதை நாம் அறிவோம்.

(பிற்பல் 1—50)

அதைப்போலவே தான் சமயத் துறையானாலும், அறநிலையத் துறையானாலும், ஆலய நிர்வாகமானாலும் சட்டங்கள் இயற்றப்பட்டு, அதற்குள்ளே கட்டுப்படுத்தப்பட்டு வருகிறார்கள்.

இன்றைக்கு நாம் நின்று பேசிக்கொண்டிருக்கிற இந்த செயிண்ட் ஜார்ஜ் கோட்டையை ஈஸ்ட் இந்தியா கம்பெனிக்காரர்கள் மூலம் வெள்ளைக்காரன் கட்டியது. இன்றைக்கு எந்த வெள்ளைக்காரனாவது இதை நான்தான் கட்டினேன்; எனக்குத்தான் சொந்தம் என்று சொன்னால், எப்படியோ, அப்படித்தான் இன்றைக்கு தில்லையிலே இருக்கின்ற தீட்சிதர்கள், அந்த சிதம்பரம் நடராஜர் ஆலயம் எங்களுக்குத்தான் சொந்தம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். வெள்ளைக்காரனாவது இந்த செயிண்ட் ஜார்ஜ் கோட்டையைக் கட்டினான். ஆனால் தீட்சிதர்கள் அந்த ஆலயத்தைக் கட்டவும் இல்லை, அதற்கு எந்த துணையும் செய்யவில்லை, எப்படியோ அதற்குள்ளே வந்து அர்ச்சகர்களாக, வழிபாடு செய்பவர்களாக வந்து அந்தப் பொறுப்பிலே இருக்கிறார்கள். ஆகவே, இன்றைக்கு இருக்கிற நிலைமையை அந்த ஆலயத்தைப் பற்றிய ஒரு ஆயிரம் ஆண்டு வரலாற்றைச் சுருக்கமாக உங்களுக்கு வரிசையாக நான் படித்து விடுகிறேன்.

1,500 ஆண்டுகளாக இதற்கு ஒரு வரலாறு இருக்கிறது. அதற்கு முன்னாலே இது பழமையான, தொன்மையான ஆலயமா என்பது விவாதத்திற்குரியது. ஆனால் நான் அதற்குள்ளே நுழைய விரும்பவில்லை. 1,500 ஆண்டுகளின் வரலாறு இன்றைக்கு நமக்கு கிடைக்கிறது. அங்கே கல்வெட்டுக்கள் இருக்கின்றன. முதல் ஆதித்த சோழன் 87;—907. அவன் கொங்கு மண்டலத்தை வென்று, அங்கிருந்து பொன் கொணர்ந்து வந்து, தில்லை சிற்றம்பல முகட்டை அப்பொன்னால் வேய்ந்த செய்தியை நம்பியாண்டான் நம்பி என்பவர் தான் இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதியில் கூறுகிறார். முதல் பராந்தக சோழன் 907–953. அவன் தில்லை சிற்றம்பலத்தைப் பொன் வேய்ந்து, உண்மையில் பொன்னம்பலமாக்கினான். உத்தம சோழன் 970-985. இவ்வரசனுடையபுதல்வர், மதுராந்தகன் கண்டராதித்த சோழன் என்பவன் ஐவர் அடங்கிய ஒரு குழுவுடன் அறநிலையங்களின்கணக்குகளை ஆராய்ந்து வந்தமை கல்வெட்டுகளால் புலனாகின்றது.

விக்கிரம சோழன் 1118—1136. இல்லை மாநகரில் இவன் ஆட்சிக் காலத்தில், ஆண்டுதோறும் உத்தரட்டாதி நாளில் பெருவிழா நிகழ்ந்தது என்று விக்கிரமச் சோழன் மெய்க்கீர்த்தி நூல் கூறுகிறது. இவர் தம் ஆட்சியில் 10—ஆம் ஆண்டில்,

தில்லை சிற்றம்பலத்து பெருமாளுக்கு புரிந்த அருந்தொண்டுகள் அங்கு கூறப்பட்டிருக்கின்றன. இதற்குப் பிறகு இரண்டாம் குலோத்துங்க சோழன் 1133—1150. தில்லையில் நாற்பெருந் தெருக்கள் அமைத்தும், பற்பல மண்டபங்கள் கட்டுவித்தும் சிறப்பித்தான். சிற்றம்பலத்தை பொன்னாலும், பல்வகை மணிகளாலும் அலங்கரித்துப் பணிபுரிந்தான். மேலும் பணி செய்திருக்கிறான்.

மூன்றாம் குலோத்துங்கச் சோழன் 1178—1218. தில்லையம்பதியில் பேரம்பலம் பொன் வேய்ந்தமையும், திருக்கோவில் முக மண்டபம் மூன்றாம் பிரகாரம் சிவகாமியம்மையின் கோவில் கோபுரம் எழுப்பப்பட்டமையும் இவனுடைய திருப்பணிகளாகும். இவ்வரலாற்றில் இதற்குப் பிறகுதான் விஜயநகர சாம்ராஜ்யம் வருகிறது. அவர்களுடைய கல்வெட்டுக்கள் இன்றைக்கும் இருக்கின்றன. அதிலே அந்த விஜயநகர சாம்ராஜ்யத்தினைக் குறித்து ஒரு மிகப் பெரிய ஆராய்ச்சியாளர் தம்முடைய மாநிலக் கல்லூரி பேராசிரியர் ஒருவர் அந்த கல்வெட்டுகளை ஆராய்ந்து ஒரு கருத்தைத் தெரிவிக்கிறார். Whether the intervention of the Government in the administration of the Nataraja temple like the one pointed out above is new or is there any precedent for Government controlling or supervising this temple administration in the past. This question is answered positively by inscriptions from the same Nataraja temple. During the Vijaya Nagar Rule of Tamil Country, the administration of this temple was controlled by Government through a representative who was given the status of a Minister. இப்படி ஆரம்பித்து அவர்கள் 1593 ஆம் ஆண்டு வரை நம்முடைய உறுப்பினர் சுவாமிநாதன் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல ஒவ்வொரு காலத்திலேயும், அதை நிர்வகிப்பதற்காக, யார் யாரை, அதிகாரிகளாக நியமித்தார்கள்? அதற்குக் கடைசியாக இதிலே பல ஒழுங்கீனங்கள் நடைபெற்றதைக் கண்டுபிடித்ததற்குப் பிறகு அவன் இறுதியாகவே, ஒரு ஆணையைப் போடுகிறான். In 1593 A.D. all these endowments were amalgamated itno one namely Kondaman yacan Kattalai in the same year. என்று இதற்குப் பிறகு வருகிறது. இதை எல்லாவற்றையும் சேர்த்து, இப்படி ஒரு 300 ஆண்டுகளுக்கு முன்னால் வரை, அல்லது 250 ஆண்டுகளுக்கு முன்னால் வரை, நம்முடைய மன்னர்கள் தொடர்ந்து அதற்குத் திருப்பணிகள் செய்திருக்கிறார்கள். அதைப் பார்த்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். நிர்வாகிகளை வைத்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு வெள்ளைக்காரர்கள் ஆட்சி ஏற்பட்டதற்கு பிறகு, அவர்கள் தலையிடாத காரணத்தினாலே, இதிலே யாரும் அக்கறைசெலுத்தவில்லை. எப்போது அக்கறை செலுத்துகிற நிலைமை ஏற்பட்டது என்றால், 'கரையான் புற்றெடுக்க, கருநாகம் குடிபுகுந்தது' என்பது பழமொழி. நான் இதைப் பழமொழியாகச் சொல்கிறேனே தவிர, இதை உவமானமாக மாத்திரம் எடுத்துக் கொள்ளுங்கள், உவமேயமாக அவர்களுக்கு இதை இணையாக்க வேண்டாம், நான் அவர்களை பாம்பு என்று சொன்னதாக



வந்துவிடும் ஆனால் உவமானத்திற்காகச்சொல்கிறேன். இப்படித் தமிழ் மன்னர்கள் உருவாக்கிய இந்த ஆலயத்திற்குள் இவர்கள் அந்தப் பொறுப்பிலே, வந்து எப்படியோ புகுந்து கொண்டிருக்கிறார்கள்.

அதிலே நமக்கு ஆட்சேபணையே கிடையாது. இன்றைக்கு இருக்கிற நடைமுறைகள்கூட ஆகமங்கள்படி அங்கே பூஜைகள் நடத்தப்படுவதில்லை. அவர்கள் இன்று ஒரு வைதீக முறையில் பூஜையை ஏற்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். அந்த பூஜைதான் நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே தீட்சிதர்கள் தில்லை மூவாயிரவர்கள் என்று தொடங்கி இன்றைக்கு 200 ஆக கரைந்து குறைந்து கொண்டிருக்கிறார்களே, அதற்குள்ளே நுழையவில்லை. அந்த உரிமையை அவர்களுக்கே விட்டுவிட அரசு தயாராக இருக்கிறது. அவர்களே வைத்துக்கொள்ளட்டும். அவர்களை நடைமுறைப்படுத்தட்டும். அவர்கள் அந்த பூஜையை, நைவேத்திய மு . றகளிலே எந்த முறைகளை அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்களோ அதற்குள் அரசு தலையிட விரும்ப வில்லை. ஆனால் இந்த நிர்வாகத்திற்குள்ளே, இந்த அரசு இந்த மக்கள் பிரதிநிதிகள் மக்களுக்காகப் பொறுப்பேற்றுக் கொண்டு இருப்பவர்கள் அதை கண்காணிக்கவேண்டுமா, வேண்டாமா என்று பார்த்தால் நண்டு கொழுத்தால் வளைக்குள்ளே இருக்காது என்று சொல்வார்கள், அதைப்போல ஒரு 100 ஆண்டுகளுக்கு முன்னாலேதான் நீதிமன்றத்திற்கு அந்தப் பிரச்னை வருகிறது. ஏன் வருகிறது என்றால் அங்கே தீட்சிதர்களுக்குள் அடிதடி, கலவரம், காவல்துறையே நுழைகிறது. அப்போது இருந்த ஆலய நிர்வாகஸ்தர்களுக்குள்ளே அடிதடி அதற்காக வருகிறது. முதல் வழக்கு 1885- ஆம் ஆண்டு. வழக்கு என்ன தெரியுமா? புண்ணியத்திற்கு உழுத மாட்டை பல்லைப் பிடித்துப் பதம் பார்ப்பது என்று பழமொழி உண்டு. சிதம்பரம் செட்டியார் என்பவர் ஒருவர் லட்சக்கணக்கிலே செலவு செய்து திருப்பணி செய்கிறார். ஆனால் திருப்பணி செய்கிறவரையே அவர்கள் பல்லைப் பிடித்துப் பதம் பார்க்கிறார்கள். இந்த தீட்சிதர்களுக்குள்ளே சண்டை ஏற்பட்டு அந்த சண்டையை வைத்துக்கொண்டு யார் அனுமதி தருவது, அவர்கள் அனுமதி தருவதா, நாங்கள் தருவதா என்கிற பிரச்னைகளிலே அந்தத் திருப்பணியை செய்யவிடாமல் தடுக்கிறார்கள். கலவரம் மூள்கிறது. போலீஸ் வந்து நுழைகிறது. லா அண்ட் ஆர்டர் பிரச்னை அங்கே வருகிறது. அதற்குப்பிறகு மாவட்ட நீதிமன்றத்திற்குப் போகிறார்கள். வெள்ளைக்காரன் நீதிபதி ஹோப் என்பவர் தீர்ப்பு அளிக்கிறார். ஒரு புண்ணியவான் வந்து திருப்பணியை நான் செய்கிறேன் என்று சொல்கிறபோது உங்களுக்குள்ளே ஏன் சண்டை போடுகிறீர்கள், உங்களுக்கு இந்த ஆலயத்திலே அவ்வளவு உரிமை எப்படி வந்தது என்று சொல்லி அவர் திருப்பணி செய்யலாம் என்று தீர்ப்பு அளிக்கிறார். அதற்குப் பிறகு இவர்களுக்குத்தான் பணம் இருக்கிறதே, கணக்கிலே காட்டாத பணம். ஏதோ இப்போது நாம் பேசிக் கொண்டு இருக்கிறோமே, இன்கம் டாக்ஸ் குறித்து, பிளாக் மணி, பிளாக் மணி என்று இதை இன்றைக்கும் ஆண்டவன் பெயராலே, சிதம்பரத்திலே அவர்கள் சட்டப்படி வைத்து

நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இன்றைக்கு லட்சக் கணக்கில் சில பேர்கள் பணத்தை செலவழித்துக் கொண்டிருக் கிறார்கள். கணக்கு கேட்கக்கூடாது என்று சொல்கிறார்கள். உடனே நீதிமன்றத்திற்குப் போகிறார்கள். 1885-லே ஜஸ்டிஸ் முத்துசாமி ஐயர் இந்தியாவினுடைய முதல் இந்திய உயர்நீதி மன்ற நீதிபதியும், இன்னொரு ஜஸ்டிஸ் ஷெப்பர்டு இரண்டு பேருமே அவர்களுக்கு உரிமையில்லை, இது பொதுக்கோயில் இதிலே நீங்கள் உரிமை கொண்டாடக்கூடாது என்று அவர் களுடைய அப்பீல் மனுவைத் தள்ளுபடி செய்கிறார்கள். அதற்குப் பிறகு 1887-லே போகிறார்கள். ஜஸ்டிஸ் பிராண்ட் அவர்களும்' ஜஸ்டிஸ் பார்க்கர் அவர்களும் தலையிட்டு அந்த தீர்ப்பை உறுதி செய்கிறார்கள். இப்படி இவர்களாகவே சண்டையைப் போட்டுக்கொண்டு அந்தச் சண்டையைத் தீர்ப்ப தற்கு நீதிமன்றத்திற்கு வருகிறபோதுதான் அது பொதுமக்கள் கவனத்திற்கு வருகிறது. அதற்குப் பிறகு இந்தப் பிரச்னை இந்த மாநிலத்திலே முதல் முறையாக மக்களுடைய பிரதிநிதி களாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்களே, நீதிக் கட்சியினர் அதிலே நம்முடைய பனகல் அரசர் அவர்கள் முதல் வராக இருக்கிறபோது இந்த அறநிலையங்களை எல்லாம் சேர்த்து நிர்வகிக்க வேண்டும் என்று ஒரு அறநிலைய போர்டு உருவாக்குகிறார்கள். மக்கள் ஆட்சி வருகிறது. அதனாலே தான் மக்களுடைய கண்காணிப்பு ஆலயத்திற்கும் அறநிலையத் திற்கும் வருகிறது. அதனுடைய முதல் வாரியத்தினுடைய தலைவராக சர் டி. சதாசிவ ஐயர் அவர்கள்தான் இந்த சிதம்பரம் ஆலயத்தை பற்றி ஒரு மிகப் பெரிய அறிக்கையைத் தருகிறார்கள். குறைபாடுகள் இருக்கின்றன. அதற்கு நிறைய சொத்துக்கள் இருக்கின்றன. அவர்கள் நீதிமன்றத்திலே போய் என்ன சொன்னார்கள் என்றால், எங்களுக்கு 250 ரூபாய்தான் வருமானம் வருகிறது. அதை வைத்துக்கொண்டு சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறோம். அது மாத்திரம் அல்ல. வேறு எந்த சொத்துமே கிடையாது என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு நம்முடைய தமிழகத்தினுடைய தென் ஆர்க்காடு, தஞ்சை போன்ற மாவட்டங்களில் சுமார் 400 கிராமங்களில் நிலங்கள் இருக்கின்றன. சுமார் 3 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. இவைகளின் வருமானங்களை எல்லாம் அவர்கள் வாங்குவதும் இல்லை. கணக்கிலே எடுத்துக்கொள்வதும் இல்லை. கணக்கிலே எடுத்துக்கொண்டால் யாருக்காவது கணக்கு காட்ட வேண்டுமே. அதனாலேதான் விட்டுவிட்டார்கள். அவர்கள் இந்த நிர்வாகத்திற்காக ஒரு திட்டம் வைத்திருக்கிறார்கள். அதை இறுதியிலே சொல்கிறேன். அதுதான் நம்முடைய உள்ளத்தை எல்லாம் கசக்கிப் பிழிகிற திட்டம். நாமும் மனிதர் களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோமே, சட்டமன்ற உறுப்பினர் களாக இருக்கிறோமே, சட்டமன்றத்திலே உட்கார்ந்துகொண்டு சட்டங்களை செய்துகொண்டு இருக்கிறோமே, என்று நம்முடைய உணர்ச்சிகளையே சோதிக்கின்ற பிரச்னை.

[பிற்பகல் 2-00]

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்; பேரவையின்முன் அனுமதி யோடு, அவையின் நேரம் 10 நிமிடம் நீட்டிக்கப்படுகிறது.



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: துணைத் தலைவர் அவர்களே, அப்படி அவர்கள் திட்டத்தை வைத்துக்கொண்டு, வருமானமே இல்லை என்று நீதிமன்றத்தில் சொன்னார்கள். அதற்குப் பிறகு சர் டி. சதாசிவ ஐயர் அவர்கள் 1925-ஆம் ஆண்டு முதல் வாரியத் தலைவராக இருந்தவர்கள்—அரசுக்கு அறிக்கை தயாரித்து அனுப்புகிறார். அரசு முடிவு எடுக்கிறது, இதை அரசின் அறநிலையத் துறையின் நிர்வாகத்தில் கொண்டுவர வேண்டும். உடனே அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். அதற்குப் பிறகு 1931-ல் தலைவராக இருக்கிற ஆர். சூரியராஜ் மற்றும் ஆணையர், ஆணையாளராக இருந்த பெருமகன் யார் என்றால் நாம் எல்லாம் பாராட்டிக் கொண்டு இருக்கிறோமே ரசிகமணி டி. கே. சிதம்பரநாதன் முதலியார் அவர்கள், இன்னொருவர் சீனிவாச்சாரியார், அவர்கள் தான் கமிஷனர்கள் அவர்கள் ரிப்போர்ட் அனுப்புகிறார்கள். அதையும் எதிர்க்கிறார்கள். அப்போது நம்முடைய போர்ட் அந்த தீட்சிதர்களைக் கேட்கிறது. அந்த தீட்சிதர்களிடத்தில் அந்த போர்ட், குறிப்பிட்டு இருக்கிற குற்றச்சாட்டுகளை, அனுப்பி பதில் கேட்கிறார்கள். மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, மன்ற உறுப்பினர்களே, இந்த நாட்டிலே வசிக்கின்ற ஆஸ்திக பெருமகன்களே, கடவுளை வணங்கிக்கொண்டு இருக்கிற பக்தர்களே, அவர்கள் சொல்கிற பதில் என்னவென்றால், அந்த சபாநாயகர் ஆலயம் என்பது எங்களுடைய ஆத்மார்த்த பூசைக்காக உரியது. அதிலே இருக்கின்ற அந்த லிங்கம் ஆகட்டும், அல்லது மற்ற எல்லா விக்ரஹங்களாகட்டும், எங்களுடையது. இதற்குள்ளே வந்து வணங்குவதற்கு இந்து சமூகம் அல்லது இந்து சமூகத்தில் உள்ள பிரிவினர்கள் யாருக்கும் இதிலே உரிமை இல்லை. தயவு செய்து இதைத் தெரிந்து கொள்ளவேண்டும். அது மட்டுமல்ல, இங்கே வந்து யாராவது வணங்குவது என்று சொன்னால், எங்களுடைய அனுமதிபெற்றுத்தான் உள்ளே வரவேண்டும். இந்திய குடியரசுத் தலைவராக இருந்தாலும் சரி, இந்தியப் பிரதம அமைச்சராக இருந்தாலும் சரி, ஏன் காஞ்சி பெரியவர் என்று வணக்கத்திற்குரிய நம்முடைய சங்கராச்சாரியாராக இருந்தாலும் சரி, அது யாராக இருந்தாலும் சரி, தருமபுரம் ஆதீனமாக இருந்தாலும் சரி, திருவாவடுதுறை ஆதீனமாக இருந்தாலும் சரி, அவர்கள் அந்த ஆலயத்திற்குள்ளே, போகவேண்டும் என்று சொன்னால், அவர்கள் அனுமதித்தால்தான் போக வேண்டும். இது எங்களுடைய சொந்த சொத்து இது எங்களுடைய ஆத்மார்த்தமான பூசைக்கு உரியது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த உண்மையை இன்றைக்கு யாருமே இந்த உலகத்திற்குச் சொல்லவில்லை. ஆனால் அன்று இருந்த போர்ட் அதை மறுத்து விட்டது. அவர்கள் ஆணை பிறப்பிக் கிறார்கள். அவர்கள் உடனே மாவட்ட நீதிமன்றத்திற்கு போகிறார்கள். மாவட்ட நீதிபதி கே. என். குப்புசாமி ஐயர். அந்த அறநிலையத் துறை போர்ட் எடுத்த முடிவு சரியானது என்று தீர்ப்பு அளிக்கிறார். உடனே ஹைகோர்ட் போகிறார்கள். பணம் இருக்கிறது, வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். [illegible] நீதிமன்றம். 1939 (3-4-39)ல் உயர்நீதிமன்றத்திலே [illegible] ஜஸ்டிஸ் வெங்கட்ரமண ராவ் அவர்களும், ஜஸ்டிஸ் [illegible]

என்ற வெள்ளைக்காரரும் இருந்து சொண்டு, அவர்களுக்கு உரிமை இல்லை. அந்த போர்ட் எடுக்கும் நடவடிக்கையை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம் என்று சொல்கிறார்கள். மீண்டும் அவர்கள் கட்டுப்பட மறுக்கிறார்கள். 50–51-லே திரு. டி. எம். சின்னையாபிள்ளை அவர்கள் வாரியத்தலைவர். அவர் மறுபடியும் அறிக்கை அனுப்புகிறார். அதையும் எதிர்க்கிறார்கள். அதற்குப் பிறகு தான் நோட்டிபிகேஷன் என்று சட்டப்படி எடுக்கிறார்கள். அதிலே அன்றைக்கு முதலமைச்சராக இருந்தவர் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் குமாரசாமி ராஜா அவர்கள். அவர் அந்த நோட்டிபிகேஷனை வெளியிட இருக்கிறார் என்று தெரிந்த உடனே சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் மூலம் முதலமைச்சரைப் பார்க்கவேண்டும் என்றுசொல்லியனுப்புகிறார்கள், முதலமைச்சர் பார்க்க மறுத்து விடுகிறார். நோட்டிபிகேஷன் வெளியிடப் பட்டது. அதை எதிர்த்தும் கோர்ட்டுக்குப் போனார்கள். இப்படி 1888–லே தொடங்கி 1951 வரை இந்த நீதி நம்முடைய நாட்டு மக்கள் பக்கமே நின்றது. இப்போது தான் அது தேய்கிறதோ என்னவோ நமக்குத் தெரியவில்லை. 1954-லே தீர்ப்பு அளிக்கிறார்கள். அவர்களுக்கு உரிமை உண்டு. எந்த அடிப்படையில் உரிமை உண்டு என்று சொல்கிறார்கள் என்றால் தீட்சிதர்கள் கூறியபடி நாங்கள் அதை வைத்துக்கொண்டு தான் பிழைப்பு நடத்திக்கொண்டு இருக்கிறோம். எங்களுக்கு ஆண்டு வருமானம் 3,000 ரு. தான். 250 ரு. என்பதிலிருந்துமாறி 3000 ரு. என்றுஒப்புக்கொள்கிறார்கள். அந்த நீதிபதி இதைப் பார்த்து, அனுதாபப்படுகிறார். 3,000 ரு. தானே வருகிறது, பாவம். அதை வைத்துக்கொண்டு அவர்கள் சாப்பிடட்டும். கொஞ்ச நாள் விட்டுப் பாருங்கள். சரியாக இல்லை என்று சொன்னால் பிறகு பாருங்கள் என்று சொல்கிறார் (குறுக்கீடு) 1952-ல் இப்படி ஒரு தீர்ப்பு வருகிறது. இதற்குப் பிறகு சுப்ரீம் கோர்ட்டுக்கு அரசாங்கம் செல்கிறது. 1954-லே என்ன நடந்ததோ என்னவோ தெரியவில்லை, அங்கே அட்டார்னி ஜெனரல் தாக்கீது கொடுத்து, நாங்கள் அதை பிரஸ் செய்ய வில்லை, அந்த நோட்டிபிகேஷனை வித்ட்ரா செய்து கொள் கிறோம் என்று வித்ட்ரா செய்து விட்டார்கள்.

1954–லே நமக்குப் பறிக்கப்பட்ட அந்தக் குழியில் இந்த தீட்சிதர்கள் தள்ளி, நமக்கு மேலே மண்ணைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு நாம் ஒரு தனி அதிகாரியை அதற்காக நியமித்து, அவர் இன்றைக்கு 3,000 ஏக்கர் நிலம் இருப்பதை இதுவரை கண்டுபிடித்திருக்கிறார். இதுவரை 40,000 ரூபாய் ஆண்டு வருமானம் என்று கண்டுபிடித்திருக்கிறார்.

இதற்கு மேலும் அவர்கள் 1976– ஆம் ஆண்டு ஒரு தீர்மானத்தைப் போட்டு அவர்களே சொல்கிறார்கள். இப்போது இந்த அரசாங்கம் கண்டுபிடித்திருக்கிற இந்த நிலங்களை எல்லாம் அவர்கள் வசூல் செய்யட்டும், வசூல் செய்து, அதில் இருக்கிற பணத்தை எங்களிடம் தரட்டும். இந்தச் செலவுகளுக்கு நாங்கள் வைத்துக்கொள்கிறோம் என்று அவர்கள் தீர்மானத்தைப்



போட்டிருக்கிறார்கள். ஆனால் 1925-ல் இன்றைக்கு எங்களுக்கு உரிமை இல்லை; இதை எடுக்கக்கூடாது என்று அரசாங்கத்திற்கு இதே தீட்சிதர்கள் அன்றைக்கு இருந்த முதலமைச் சொல்லுகிற இதே எங்களுக்கு இதிலே இருந்து விலக்கு சரிடம், ஆளுநரிடம் என்று கேட்டிருக்கிறார்கள். அன்றைக்கு கொடுங்கள் விதிவிலக்குக் கேட்கலாம், அரசாங்கத் அரசாங்கத்திடத்திலே உரிமை இருக்கிறது என்று அறிந்த அந்த உவர்கள் திற்கு எந்த தைரியமோ தெரியவில்லை, நீங்கள் யாருமே இன்றைக்கு இ.ஓ.வைப் போடக்கூடாது; என்ன வாங்கு தலையிடக்கூடாது, காடுக்கிறோம் என்று நீங்கள்கண்டுகொள்ளக்கூடாது. ஒறோம், இது எல்லா இந்துக்களுக்கும் உரிய கோயில் அல்ல என்று சொல் கிறார்கள்.

சைவர்களுக்கு எல்லாம் ஆலயம் என்றாலே சிதம்பரம் என்று தான் பொருள். வைஷ்ணவர்களுக்கு எல்லாம் ஆலயம் என்றால் திருவரங்கம் என்று பொருள். ஆனால் இந்த புண்ணியவான்கள் சைவர்களானாலும்சரி, வைஷ்ணவர்களானாலும் சரி, இந்துக்கள் ஆனாலும் சரி, எவர் ஆனாலும் சரி, அவர் அந்தக் கோவில் உள்ளே நுழையக்கூடாது. அப்படி நுழைவதாக இருந்தால் சட்டப்படி எங்கள் அனுமதி பெற்றுத்தான் நுழைய வேண்டும் என்று சொல்லி, எழுதி வைத்துக்கொண்டு இன்றைக்கு அந்த நிர்வாகத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த மாமன்றத்தின் மூலமாக இந்த நாட்டு மக்களை பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் என்ப தாலேயே ஏதோ அந்தக் கோவிலையே எடுத்துக்கொள்வதல்ல. இன்றைக்கு இருக்கிற இந்துசமய அறக்கட்டளையினுடைய அந்த சட்டவிதிகளின்படி அந்த நிர்வாகத்திற்கு நாம் ஒரு நிர்வாக அதிகாரியைப் போடுவோம். தீட்சிதர்களே அந்த ஆலயத்தில் பூஜை எல்லாம்செய்யலாம். அந்தசடங்குமுறையை மாற்றவில்லை. அது ஆகம முறைப்படி இருந்தாலும் சரி அல்லது வைதீக முறைப்படி நடந்தாலும் சரி, நாங்கள் அதற்குள்ளே தலையிட வில்லை. ஆனால் வருகிற இலட்சக்கணக்கான பணத்தை கண்காணிக்க வேண்டாமா, வேண்டாமா? அதன் விளைவாகத்தான் பல குற்றச்சாட்டுகள். கொள்ளையடிப்பது, திருடுவது என்று குற்றச்சாட்டுகள். அதை வெளியே உள்ள யாரும் சொல்ல இல்லை. அந்த தீட்சிதர்களுக்குள்ளே பொறுப்பிலே, மானேஜ் மெண்ட் ட்ரஸ்டியாக இருந்தவர்கள் சொல்கிறார்கள்.

இன்றைக்கு நாட்டிலே பால்ய மணத்தை தடுக்க சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தை மீறி அவர்கள் நடந்துகொண் டிருக்கிறார்கள் குற்றவாளிகளாக இருக்கிறார்கள். ஆனால் சட்டம் அவர்களிடத்திலே போக முடியவில்லை! இன்றைக்கு அவ்வளவு துணிச்சலாக கொண்டிருக்கிறார்கள் இந்த விதிகள்பெயராலே. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கையில் இருக்கிற இந்தப் பத்திரத்தை உங்கள் அனுமதியோடு சொல்

கிறேன். 1894—லே தான். எப்படி இந்த பொது தீட்சிதர்கள்
இதை நிர்வகிப்பது என்று விதிமுறைகளை உருவாக்கியிருக்
கிறார்கள். இதற்குள்ளே போய் படித்தால், நாம் எல்லாம்
நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகவேண்டும் அந்த அளவுக்கு
விஷயங்கள். அது வேறு பிரச்னை, நான் இதற்குள்ளே நுழைய
வில்லை. இந்த மன்றத்திலே ஒரு சட்ட முன்வடிவு வருகிறபோது
அதை எல்லாம் தெரிந்து கொள்ளலாம். ஆனால் மூன்று விஷயங்
களை இங்கே சொல்ல விரும்புகிறேன். இதற்கு வருமானமே
கிடையாது, நாங்கள் வசூல் செய்வதில்லை என்றுசொல்கிறார்கள்.
ஆனரரி விசிட்டர்ஸ் போடலாம் என்று ஹைகோர்ட்டில் ஸ்கீம்
இருக்கிறது. அதைப் பயன்படுத்தி ஜஸ்டிஸ் சதாசிவம்,
பொள்ளாச்சி மகாலிங்கம், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்
இளையபெருமாள், திருமதி சௌந்திரா கைலாசம் இப்படிப்
பட்ட பெரியவர்களைப் போட்டோம். அது ஹைகோர்ட்டில்
அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற ஸ்கீம். ஜஸ்டிஸ் வெங்கட
ரமண ராவ் உறுதிப்படுத்திய ஸ்கீம். அதைக்கூட முடியாது என்று
சொல்லி ஸ்டே வாங்கிவிட்டார்கள்.

இ. ஒ. போடலாமா என்று கேட்டோம். முடியாது என்று
சொல்லிவிட்டார்கள். ஒரு உயர்நீதி மன்ற நீதிபதி நீங்கள் இ.ஒ.
போடலாம், நோட்டீஸ் கொடுக்கலாம் என்று சொன்னார். மேலே
அப்பீல் பண்ணினார்கள். இரண்டு நீதிபதிகள் சேர்ந்து நீங்கள்
போடக்கூடாது என்று ஸ்டே பண்ணி விட்டார்கள். அது
இப்படியே இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு எதற்கு எடுத்தாலும்
தடை, தடை, தடை என்று இருக்கிற காரணத்தால் தான்
இன்றைக்கு காசி விஸ்வநாதர் ஆலயத்தை உத்தரப்பிரதேச
அரசாங்கம் எடுத்துக்கொண்டதைப்போல, ஆந்திராவிலே
வெங்கடேசப் பெருமாள் ஆலயத்தை எடுத்துக்கொண்டதைப்
போல, கேரளாவில் குருவாயூர் கிருஷ்ணன் கோவிலை எடுத்துக்
கொண்டதைப்போல இதற்கு என்று ஒரு தனிசட்ட முன்வடிவைக்
கொண்டுவந்து இந்த ஆலயத்தினுடைய நிர்வாகத்தை எடுத்துக்
கொள்ளவேண்டும் என்பதுதான் முடிவு. அதை மிகத் தெளிவாகப்
புரிந்துகொள்ள வேண்டும். பொதுமக்களுக்கும் உணர்த்தவேண்டும்.

ஏதோ கோவிலை எடுத்துக்கொள்கிறார்கள், அரசாங்கம்
எடுத்துக் கொள்கிறது என்றால் அரசாங்க அதிகாரிகள் அங்கே
போய் உட்கார்ந்து கொள்வதில்லை. அந்த காசி விஸ்வநாதர்
ஆலயத்திலே எப்படிப்பட்ட போர்டு போட்டிருக்கிறார்கள் என்று
பட்டியலை எல்லாம் வாங்கி வைத்திருக்கிறோம்.

(பிற்பகல் 2—10)

நான் அதற்குள்ளே நுழைய விரும்பவில்லை.
நாங்கள் வருமானமே வாங்குவதில்லை, காசே வாங்குவதில்லை ஆனால்
என்று சொல்லுகிறவர்கள், எப்படிப்பட்ட முறைகளிலே வாங்கு
கிறார்கள் என்பதைப் பற்றி எலலாம் இங்கே சொல்லியிருக்
கிறார்கள். பூசைக்கு கட்டணம் எப்படி வாங்குவது என்பது



ஒரு விதி, அதேபோல ரகசிய தரிசனம் பார்க்க ஒரு விதி. அதுவே
பணக்காரர்கள் வந்தால், அவர்களைக் கொண்டுபோய் தரிசனம்
காட்டினால் அவர்களிடத்திலே எப்படி கட்டணத்தை யார்
வாங்குவது அல்லது யார் அதனை பங்குப்போட்டுக் கொள்வது
என்று அதற்காக ஒரு விதி. நான் கடைசியாக சொல்லப்போவது—
இந்தத் தமிழ்நாட்டிலே விடுதலை பெற்ற இந்தியக் குடியரசின்
அரசியல் சாசனம் தான்—நம்மை எல்லாம் ஆண்டுக் கொண்டிருக்
கிறது என்று நாம் சொல்கிறோம்.

நாமெல்லாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம். அரசியல்
சட்டத்தின்படி அமைக்கப்பட்ட சட்டமன்றம்தான் மக்களை
ஆளுகின்றது என்று. ஆனால் சிதம்பரம் நடராஜர் ஆலயத்தைப்
பொறுத்த வரையில், அங்குள்ள தீட்சிதர்கள் தாம் நம்மை
ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் உருவாக்கிய
சிதம்பர ஆலயத்திற்குள்ளே கடைபிடிக்கவேண்டிய விதிகளில்
ஒன்று 33-வது விதி—'ஸ்வாமிதரிசனத்திற்காக வரும் சகல ஜனங்
களும் கனகசபையின் எல்லையைத் தாண்டி உள்ளே நின்று
கொண்டு, வேதம், சமஸ்கிருத ஸ்லோகம் தவிர மற்ற வேற்று
மொழிப் பாடல்களை பிறர்காதில் கேட்கும்படி ஸ்தோத்திரம்
செய்யக் கூடாது. அப்படி யாராவது செய்தால், கனகசபைக்கு
கீழே போய் ஸ்தோத்திரம் செய்யும்படி முறைக்காரர் உத்திரவு
செய்ய வேண்டியது' என்று இருக்கிறது.

தேவார திருவாசகங்களுக்கு அடி எடுத்துக் கொடுத்தது
அந்த சிதம்பரம் கோவிலிலேதான் என்று சொல்வார்கள்.
பெரிய புராணத்திற்கு அடி எடுத்துக் கொடுத்தது அந்தச்
சிதம்பரம் கோவிலிலேதான், ராஜ ராஜ சோழன் அந்தத் திருமறை
களை வெளியிலே எடுத்து வந்தது அந்த ஆலயத்திலிருந்து
தான் என்று சொல்வார்களே, அந்தச் சிதம்பரத்திலே,
சமஸ்கிருதத்தை தவிர— தமிழ் மாத்திரம் என்று வரவில்லை—
ஆய்வுசெய்து பார்க்கவேண்டும்—வேறு எந்த இந்திய மொழியிலும்
14 மொழிகளிலும், சமஸ்கிருதத்தை தவிர, வேறு எந்த
மொழியின் சத்தமுமே அந்தச் சபையிலே கேட்கக்கூடாது என்று
விதிகளை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த விதியின்படி
தான் நாம் நடக்கவேண்டும். இதுபோன்ற வேறு எத்தனையோ
விதிகள் எல்லாம் இருக்கின்றன. இப்படிப்பட்ட கட்டுப்பாட்டு
முறையினை வைத்துக்கொண்டு, இந்த நூற்றாண்டில், நாகரிக
காலத்தில், இந்தக் குடியரசு நாட்டிலே நம்மை நுழையவிட
மறுக்கிறார்கள். நாம் அவர்களைக் கண்காணிக்கக் கூடாது,
கணக்குக் கேட்கக் கூடாது என்று, நம்மை நுழையவிட மறுக்
கிறார்கள். அந்த ஆலயமே எங்களுடையதுதான் என்றும்
தனி சொந்தம் கூட கொண்டாடுகிறார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்னாலே திருப்பணி நடைபெற்று
குடமுழுக்கு நடைபெற்றபோது, அதற்கு செலவு செய்த செட்டி
நாட்டு அரசரையே அங்கே நுழையவிடவில்லை. தருமபுர
ஆதீனத்தை நுழையவிடவில்லை. பல ஆதீனப் பெரு
மக்களையும் விடவில்லை. இவைகளையெல்லாம் பார்த்துக்
கொண்டு, பொறுத்துக் கொண்டு, நம் ஆண்டவனை வணங்க
வேண்டும் என்று ஆத்திகப் பெரியவர்கள் எப்படி இவைகளை

யெல்லாம் அலட்சியப்படுத்துகிறார்களோ தெரியவில்லை. இவ்வளவுக்கும் பிறகு 40 லட்சம் ரூபாய் செலவிலே இப்போதும் திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த ஆலயத்தைக் காப்பாற்றுவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

அரசும் மற்றவர்களுமாக இதற்கு நிதி உதவி செய்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் இன்றைக்கு அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்வது, ஏற்றுக்கொள்வது என்றால் அந்த பூஜை முறைகளையோ, தீட்சிதர்களுக்கு இருக்கிற அந்தப் பூஜை செய்கிற உரிமைகளையோ, அந்தக் கால முறைகளிலோ நாம் மாற்றம் எதுவும் செய்யப்போவதில்லை. அதிலே கைவைக்கப் போவதும் இல்லை. ஆனால் அந்த ஆலயத்திற்கென வருவாய் தரக்கூடிய ஏராளமான சொத்துக்கள் இருக்கின்றன. அவை களைப் பட்டியல் போட்டு வைத்திருக்கிறோம். யார் யார் அந்தக் கட்டளைகளை விட்டிருக்கிறார்கள் என்று பெரிய பட்டியலே இருக்கிறது. நம்முடைய கொடைவள்ளல் மதிப்பிற்குரிய சென்னை பச்சையப்பன் முதலியார் போன்றோர் எல்லாம் பல பெரியவர்கள் எல்லாம் அந்தக் கட்டளைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். எவ்வளவோ நிலங்களும், சொத்துக்களும் இருக்கின்றன. அவைகளினுடைய வருமானங்கள் எல்லாம் வசூலிக்கப்படாமலேயே விட்டு வைத்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் பல முறைகளில் அவர்கள் காண்டிராக்ட் முறையையே வைத்து நடத்தி வருகிறார்கள். கடைகளை வாடகைக்கு குத்தகைக்கு விடுவது போக, நிலத்தை குத்தகைக்கு விடுவது போக, அந்த ஆலயத்திலே பக்தர்கள் கொண்டு வந்து செலுத்தும் காணிக்கைகளை கூட, அதை வசூல் செய்வதிலே கூட குத்தகை முறையை வைத்து நடத்தி வருகிறார்கள். அந்த முறைகளை எல்லாம் எடுத்து, நல்ல முறையில் அதற்கென்று தனியாக ஒரு சட்டத்தைப் போட்டு, நாகரீக உலகத்தின் ஜனநாயகத்தின் படி நம் முன்னோர்கள் அனுமதித்த முறையில் தான் ஆத்திகப் பெரியவர்களின் ஆகம முறைகளுக்கோ, ஆலய வழிபாட்டு முறைகளுக்கோ, ஆத்திக பூஜா முறைகளுக்கோ, எந்த விதமான குந்தகமும் இல்லாமல், அந்த நிர்வாகத்தை மட்டும் எடுத்துக் கொள்வதற்கு, அரசு தனியாக சட்டம் கொண்டு வந்து நிறைவேற்ற எண்ணியிருக்கிறது என்பதைக் கூறி முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 27-4-1983 காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 2.14 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.





10. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

2[illegible]. 1978-79 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்திறத் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் ஆறாம் ஆண்டறிக்கை (தமிழ்நாடு 1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின்) (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

207. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும் விடைகளும் (651 முதல் 900 வரை).

சென்னை-600 008.
136048